# பழந்தமிழர் நாகரிகம்

அல்லது

# தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து.

கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L.

ஓம்.

தமிழ்நெறி விளக்கப் பதிப்பக வெளியீடு-2

# பழந்தமிழர் நாகரிகம்

அல்லது

# தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து.

ஆசிரியர்:

திருவாளர். கா. சுப்பிரமணியபிள்ளை

**M. A. M. L.,** அவர்கள்;

அட்வகேட்,

(தாகூர் சட்ட விரிவுரையாளர்)

தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம்,

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

ஜூன் **1939**.

பதிப்புரிமையுடையது]

[விலை ரூ. **1** அ. **8**.

MANICKAVILAS PRESS, SHEVAPET, SALEM.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பதிப்புரை | ... ... | ரு-சா |
| முன்னுரை | ... ... | எ |
| அறிஞர்களின் ஆய்வுரைகள் | ... | கூ-உக |
| திருக்கோவையார் துறைவிளக்கம். | ... | 1-28 |
| பழந்தமிழர் நாகரிகம் - அல்லது - தொல்காப்பிய பொருளதிகாரக் கருத்து | | 1-160 |
| 1. அகத்திணையியல் | .... | 6 |
| 2. களவியல் | .... .... | 56 |
| 3. கற்பியல் | .... .... | 94 |
| 4. பொருளியல் | .... .... | 113 |
| 5. மெய்ப்பாட்டியல் | .... | 121 |
| 6. உவமவியல் | .... .... | 129 |
| 7. செய்யுளியல் | .... .... | 133 |
| 8. மரபியல் | .... .... | 140 |
| 9. புறத்திணையியல் | .... .... | 146 |
| பிழையும் திருத்தமும் | ... | I - VII |

# தமிழ் மொழி.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லைபறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

மனோன்மணீயம்.

---

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்குங் காணோம்;
பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்."

பாரதியார்.

ஓம்.

# பதிப்புரை.

"குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்." திருவள்ளுவர்.

தமிழ்நாடு மிகப்பழைமையானது. பழைய தமிழ்நாட்டில் தோன்றிய முது மக்களும் தமிழரே. அவர்கள்பேசிய மொழி தமிழ்; ஆதலின் தங்கள் நாட்டைத் தமிழ்நாடு என்றனர். தமிழர்களுக்கெனத் தனி வழக்க ஒழுக்கங்கள் இருந்தன. அவற்றைப் பழங்காலத்து இலக்கியங்களிற் காணலாம். அவ்விலக்கியங்களிற் றலைசிறந்து விளங்குவது **தொல்காப்பியம்**. அது, தோற்றத்தில் தமிழ் மொழியின் இலக்கணம் போன்றிருப்பினும் அதனினும் சிறந்த இலக்கியம் வேறெந்த மொழியிலும் இல்லை என்பது மிகையாகாது. அறிஞர். திரு. **பா. வே மாணிக்க நாய்க்கர் அவர்கள்** தொல்காப்பியம் என்பதற்குப் **பழங்காப்புச் சொல்** என்று பொருள் கண்டதன்றி அது பழந்தமிழரது நாகரிகங்கள் என்றும் அழிந்தொழியாது தமிழ் மொழி உள்ளளவும் உள்ளதாமாறு விளக்கஞ் செய்து கொண்டிருக்கும் "தொலை நோக்காடி" என்றும் விளக்கம் செய்துள்ளமை காண்க.

எவ்வகை நன் முயற்சிக்கும் உணர்ச்சியும் ஊக்கமும் தேவை. அத்தேவைக்குத் தங்கள் முன்னோரது நினைவும், அறிவும், ஆற்றலும் தெரியவேண்டுவது சிறப்பு. நம் முன்னோரது வாழ்க்கை வரலாறுகளைப் படித்துத் தெளிவது நம் முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணை செய்வதாகும். நம்மனோர் வரலாறுகளெல்லாம் சங்க இலக்கியங்களில் பரந்து கிடக்கின்

றன. அவை செய்யுள் வடிவத்திலிருப்பதாலும், அவற்றின் பழைய உரைகள் காலப்போக்கையொட்டி எழுதப்பட்டும், இக்காலத்தவர்களாகிய நம்மனோரில் கற்றோர்க்கன்றி ஏனையோர்க்கு எளிதின் விளங்கிப் பயன்படுதலின்மையானும் பயில்வாரின்றிப் பயனற்றுக் கிடக்கின்றன. ஆதலால் அவற்றைக் கூடிய வரை சுருக்கி எளிய உரை நடையில் எவ்வாறேனும் தெளிவுபடுத்தவேண்டுமென்பதும், தமிழர்க்கு இன்றியமையாத நெறிகளைப் புதுக்கியும், விளக்கியும் ஆவன செய்யவேண்டுமென்பதும் எம் **தமிழ்நெறி விளக்கப் பதிப்பகத்தின்** நோக்கங்களாம். இவ்வெமது நோக்கங்கள் இனிது நிறைவேறும் பொருட்டுப் '**பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து**' என்னுமிந்நூல் எமது பதிப்பகத்தின் இரண்டாவது வெளியீடாக வெளி வருகின்றது. தமிழர் நலங்கருதி உழைப்போர்க்கு இந்நூல் பெரிதும் உதவ வல்லது. அன்பர்கள் இந்நூலை ஆதரிப்பார்களாக.

இவ்வரியநூலை எழுதி எமக்கு எளிதின் அளித்த **உயர்திருவாளர். கா. சுப்பிரமணியம் பிள்ளை M.A M.L.** அவர்களுக்கும், அச்சுக்கு உதவியாக படி எழுதிக் கொடுத்த கெழுதகை நண்பரும், தமிழாசிரியருமான, திருவாளர் ப. ஜீவரத்தினம் பிள்ளை அவர்களுக்கும் இந்நூலின் அச்சுப் பிரதிகளை பார்த்துத் திருத்திக் கொடுத்த **திருவாளர். T. சுப்பராயசெட்டியார்** அவர்களுக்கும் இந்நூலைப்பற்றிய ஆய்வுரைகள் தந்துதவிய **அறிஞர்களுக்கும்** நன்றியறிதலுடையேன்.

தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம்,
செவ்வாய்பேட்டை, சேலம்.
பிரமாதி௵ வைகாசி௴

இங்ஙனம்,
**ஆ. மாணிக்கம்.**



உயர் திருவாளர்.

கா. சுப்பிரமணியம் பிள்ளை M. A., M. L.

அட்வகேட்,

தாகூர் சட்டவிரிவுரையாளர்.

# முன்னுரை.

நாகரிகம் படைத்த மக்களினத்தார் பிற யாவர் பாலுங் காணப்படாத அறிவு சான்ற உயரிய உள்ள நல்லொழுக்கம் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பழந் தமிழரிடமே நிலவிற்று என்பதை அங்கை நெல்லிபோற் காட்டக்கூடிய ஒரு தனிப் பெருஞ் சிறப்பு நூலாகிய தொல்காப்பியமானது இக் காலத்தில் எளிதிற் பொருள் விளங்கப் பெருமையால் அதன் சிறந்த கருத்துக்களனைத்தும் தமிழ் கற்பார் இனிதுணருமாறு இந் நூலியற்றப்பட்டது. இது தொல்காப்பியப் பெருநூலைக் கற்றறிவதற்கும் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்கஇலக்கியங்களை ஆய்ந்தறிதற்கும் தக்க தோற்றுவாயாக அமைந்துள்ளது. இதனைத் தமிழன்பர் யாவரும் பயன்படுத்தற் பொருட்டு அச்சூர்தி ஏற்றிய திருவாளர். சேலம் ஆ மாணிக்கஞ் செட்டியார் அவர்களுக்கு யான் என்றும் கடப்பாடுடையேன்.

அன்பன்,

கா. சுப்பிரமணியன்.

## தமிழின் இனிமை.

செந்நெல் மாற்றிய சோறும்—பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை,—கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்,
நன் மதுரஞ்செய் கிழங்கு—காணில்
நாவினித்திடும் அப்பம்,
உன்னை வளர்ப்பன தமிழா!—உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

## எங்கள் தமிழ்.

இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு.
தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில் (இனிமைத்)

தமிழ் எங்கள் உயிர் என்ப தாலே - வெல்லுந்
தாமுண்டு தமிழருக் கிப்புவி மேலே
தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன் றுமேல் தமிழ் நாடெங்கும் இருளாம்
தமிழுண்டு தமிழ் மக்க ளுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய் வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள் தட்டி ஆடு! - நல்ல
தமிழ் வெல்க வெல்க என் றே தினம் பாடு! (இனிமைத்)

# அறிஞர்களின் ஆய்வுரைகள்

M. S. PURNALINGAM PILLAI, B. A. L. T.
EMERITUS PROFESSOR IN ENGLISH.
BISHOP HEBER COLLEGE TRICHINOPOLY.

"KARPAHAM"
MUNNIRPALLAM B. O
TINNEVELLY S. INDIA

10—5—39.

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L. அவர்களாலாக்கப்பெற்ற **பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து** தமிழ் மக்களுக்கும் அபிமானிகளுக்கும் பெரும் விருந்தாகும். தொல்காப்பியத்தைத் தொட்டறியாத மக்களும் இதனைப்படித்து மூலத்தின் பெருஞ் சிறப்பை இலகுவாக அறியத்தக்க எளிய இனிய தமிழ் நடையிலமைத்திருப்பது கவனிக்கத்தக்கது. தமிழகத் தொன்மை, தொழிற்குலம், காதல்மணம், பெண்ணுருமை, ஆவணித்திங்களில் தமிழாண்டு பிறத்தல், மன்றம், கடவுள் வழிபாடு, உண்மைத்துறவு, இசைப் பெருக்கம், அறுவகைப் பார்ப்பனர், போர்முறை, வீரக்கல், வஞ்சி, பலவகைக்காஞ்சி, உள்ளுறையுவமம் ஆதியன நன்கு விளக்கப்பட்டுள. காளி, துர்க்கை, இந்திரன், கொடிநிலை, கந்தழி, வள்ளி, எற்பாடு, பயிர்ப்பு, பிரசாபத்தியம், விரிச்சி, எச்சம், தோல், அம்மை, காமக்கிழத்தியர், பரத்தையர், தேவதாசிகள் இவைபற்றிய குறிப்பும் ஆராய்ச்சியும் மெச்சத்தக்கன. வாயில்களாகக் கடமை பூண்டொழுகும் அந்தணர், அறிவர், பார்ப்பனரை உரையாசிரியர்கள் ஆரிய பிராமணரேயென்று வலிந்து பொருள் கொள்வதற்கு மூலவாதரவுண்டாவென்பது துலங்கவில்லை. பலவகை

களினுஞ் சிறந்த இப் புதுநூலைத் தமிழர் யாவரும் வாங்கிப்படித்தல் தமிழ்த்தாய்க்குரிய தொண்டாற்ற லே யாகும்.

நண்பர் எழுதியிருக்கும் திருக் கோவையார் துறைவிளக்கம் சற்று விரிவாக எழுதி வெளியிடப் படுதலைத் தமிழுலகம் எதிர்பார்க்கும்.

அன்பன்,

மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை.

---

கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவரும்
செந்தமிழ் புரவலரும் தமிழ் வேளும் ஆகிய

Rao Sahib
T. V. UMAMAHESWARAM PILLAI,
B. A. B L.
PLEADER.

KARUNTATTAMKUDI.
TANJORE.
11-5-39

தொல்காப்பியப் பொருளதிகாரக்கருத்து எனும் இந்நூல் தாகூர் சட்ட விரிவுரையாளர் திருவாளர். கா. சுப்பிரமணிய பிள்ளை M A., M. L அவர்களால் இயற்றப்பெற்றது. தொல்காப்பிய நூலின் பொருளி யல் பகுதியை யாதல் அதன் உரைநூல்களின் ஒட்ப நுட்பங்களையாதல் தமிழ் மக்களிற் பெரும் பாலர் கற்றுத் தெளிவடைய முடியாதவர்களாயிருக்கின்றனர்.

தமிழார்வம் மிகுந்துவரும் இற்றைநாளில், தொல் காப்பியத்துத் தமிழர் நாகரிகத்தின் மெய்ப்பண்புகளை தமிழராவார் நன்கு தெரிந்து கோடற்கு எளியநடை யில் இயற்றப்பெற்ற உரைநூல் மிகமிக இன்றியமை யாதிருக்கின்றது. இந்நூல் செவ்விய தமிழில், எளிய நடையில், விளக்கி எழுதப்பெற்றிருத்தலால், பலரும் கற்றுப் பயன்கொள்ள உதவியாயிருக்கும்.

* * * *

இந்நூலை இயற்றிய ஆசிரியர் நுண்மாண் நுழை புலனுடையவர். தமிழிலக்கண இலக்கியங்களையும், சமயக் கலைகளையும் துருவி ஆய்ந்து புலமை எய்திய வர். செந்தமிழ்த்தொண்டே வாழ்க்கைப்பயன் எனக் கருதி உழைப்பவர். இத்தகையினரின் அருந்துணை கொண்டு இதனை இயற்றுவித்த செல்வர் திருவாளர். ஆ. மாணிக்கம் செட்டியார் அவர்களின் தமிழ்த் தொண்டு, தமிழுலகு நன்றியுடன்போற்றுதற்குரியது.

தொல்காப்பிய நூலுள் காணப்பெறும் சில சூத்தி ரங்கள் இடைச் செருகல் எனவும், 'மாயோன்' 'வரு ணன்' என்ற சொற்கள் 'மாயோள்' 'வண்ணன்' என்று திருத்தம் பெறவேண்டுமெனவும் ஆசிரியர் கூறியவை கற்றுத் தெளிந்த புலவர்கள் ஆராய்தற் குரியன.

**த. வே. உமாமகேசுவரன்.**

---

**N M. VENKATASWAMI NATTAR,**
LECTURER IN TAMIL
ANNAMALAI UNIVERSITY
ANNAMALAINAGAR P. O.
CHIDAMBARAM

Date 13-5-1939.
Camp: Nadukkaveri.

திருநெறிச் செந்தமிழ்ச் செல்வர் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதிய 'பழந் தமிழர் நாகரிகம் - அல்லது - தொல்காப்பியப் பொரு ளதிகாரக் கருத்து' என்னும் உரைநூலை முழுதும் படித்து இன்புற்றேன். இந்நூல் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களின் பொருளை நுனித் துணர்ந்து செவ்விதின் எழுதப்பெற்றுளது; எளிய

இனிய உரைநடையான் இயன்றுளது; பொருளதி காரம் கற்பார்க்குப் பெரிதும் துணையாக உதவ வல்லது. பொருளதிகாரக்கருத்து முழுமையும் தெளிவுற ஆய்ந்து எழுதிய முதல் உரைநூல் இதுவேயாகும். திருக்கோவையாரின் துறை விளக்கம் இதற்கோர் அணிகலனும் பழந்தமிழர் நாகரிகம் என்னும் அரும் பெருஞ் செல்வத்தை எளிதில் அனைவரும் துய்க்குமாறு எடுத்து வழங்கிய இப்பேரறிவுப் பெருந்தகைக்குத் தமிழ்மக்கள் இயற்றும் கைம்மாறு என்னே! இத்தகைய சிறந்த நூற்களை வெளியிட்டுதவும் நன் முயற்சியை மேற்கொண்டுள்ள தமிழ்நெறி விளக்கப் பதிப்பகத் தலைவர் திரு ஆ மாணிக்கம் அவர்களின் தமிழ்ப்பற்றும், தண்ணளியும் பாராட்டற் குரியன.

ந. மு. வெங்கடசாமி நாட்டார்.

---

"HIMALAYA"
S. Anavaratavinayakam Pillai, M. A., L. T.
TYAGARAYANAGAR
MADRAS.
16-5-1939.

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எழுதிய பழந்தமிழர் நாகரிகம் என்னும் நூல் தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் கருத்தை விளக்க எழுந்ததாகும். தொல்காப்பியமும் அதன் உரைகளும் தமிழ் நன்கு கற்றார்க்கன்றி மற்றையோர்க்கு விளங்குவ தருமை. ஆதலால் இத்தகைய நூலொன்று வெளிவரின் அஃது அனைவரும் ஆவலோடேற்றுப் போற்றுந்தக்கதே. தொல்காப்பியம் கற்கும் ஆற்றலில்லாத தமிழ் மாணவர்க்கு இந்நூல் இன்றியமையாததாகும்; ஆற்றலுடையார்க்கும் இது தொல்காப்பியத்துள்ள

நுட்பங்களைத் தெரிந்து கொள்ளற்குப் பெரும்பயன் செய்வதாகும். ஆயினும் இந்நூலைத் திரு பிள்ளையவர்கள் இன்னும் எளிய தமிழ் நடையில் எழுதியிருக்கலாமென்று தோன்றுகிறது. நூலின் பிற்பகுதியில் அச்சுப்பிழைகள் பல காணப்படுகின்றன. அவை வராமற் காப்பது நூலைப் பதிப்பிப்போர்கடன்.

**S. அநவரத விநாயகம் பிள்ளை.**

---

சேலம் நகரக்காப்புக் கல்லூரி தலைமைத் தமிழ்ப் புலவரும், மதுரைத் தமிழ்ச்சங்க வித்வானும், கவிராஜ பண்டிதரும், ஆகிய

## ரா. திம்மப்ப ஐயர், அவர்கள்

எழுதியது.

தாகூர் சட்ட விரிவுரையாளரும், சிறந்த சைவசீலரும், தமிழ் வித்வானுமாகிய உயர்திரு, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M A., M. L எழுதியுள்ள 'பழந்தமிழர் நாகரிகம்' அல்லது, தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து எனப் பெரிய நூலை, எனது அன்புள்ள நண்பரும் செந்தமிழ்க் கலைவாணருமாகிய சைவ சீலர் உயர்திரு. ஆ. மாணிக்கஞ் செட்டியார் அவர்களால் தரப்பெற்று முற்றும் பார்வையிட்டேன். செந்தமிழ்க் கருவூலமாகிய தொல்காப்பியப் பொருளதிகாரத்துட் புகுந்து விஷயங்களைத் தெளிவுற வாராய்ந்து அவற்றை உரைநடையாக வமைத்துத் தரல் சாமானியராலாகக் கூடிய செயலன்றுமென்பதை தமிழ் கற்பாரெவரும் ஒரு சிறிதும் மறவாரென்பது தேற்றம். இதற்கு முன்னர்ச் (சில்லாண்டுகட்கு முன்) ராவ்சாகேப். மு. இராகவையங்கார், ஸ்ரீமத். வே.

முத்துச்சாமி ஐயர் (M. A., L. T.) ஆதிய பெரியோரால் இந்நூலுரை நடையாக வரையப்பெற்று வெளிவந்துளது. அகப்பொருளமைதி, புறப்பொருளிலக்கணம், பழங்காலத்துத் தமிழகத்து வழங்கிய நடைமுறை, தமிழரியல்பு, இல்லறமுறை, போர்நெறி, கடவுட்பான்மை முதலிய எத்துணையோ அரிய பெரிய விடயங்களை இந்நூலகத்தே இவர் எடுத்தெழுதியிருத்தல் மிகப் பொருத்தமாக உளது. இரண்டோரிடங்களில் நூலாசிரியர் தம் கருத்தைச் சிறிது வேறாகக் குறித்திருப்பினும், நூல் முற்றிலும் உள்ள பல நுண்மாண் கருத்துக்களைத் துருவியாய்ந்தெடுத்ததில் இவர் பொறித்திருப்பது சாலவும்பாராட்டற்பாலதாகும். இத்தகைய நூல் பல வெளியாமாறு தமிழன்பர்கள் இதனை வாங்கிப் படித்திவரை மேன்மேலு மூக்குவார்களாக.

இங்ஙனம்,

**ரா. திம்மப்ப ஐயர்,**

சண்முகநிலையம்,

சேலம்,
17—5—39

---

கோவை வழக்கறிஞரும்.
கோவைத் தமிழ்ச் சங்கத்தின் உதவித் தலைவருமாகிய,
சைவத் திருவாளர்,

## C. K. சுப்பிரமணிய முதலியார் B. A. B. L.

அவர்கள் எழுதியது.

பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து என்ற உரை நடை நூலை வாசிக்கவும் பேறு பெற்றேன். அதன் ஆசிரியர்

நண்பர். திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M. A., M. L. உரை நடை நூல்கள் எழுதுவதில் வன்மை வாய்ந்தவர்கள். தமது வழக்கம்போல் இந் நூலினைத் திறம்பட எளிய நடையில் எழுதி அரிய கருத்துக்களை விளக்கியுள்ளார்கள். கற்றோருக்கும் அரிதில் விளங்கும் பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியக் கருத்தானது இதனால் யாவர்க்கும் எளிதின் விளங்கும் என்பதில் ஐயமில்லை. எழுத்து, சொல், பொருள் என்ற முப்பெரும் பகுதிகளையுடைய தொல்காப்பியப் பேரிலக்கணக்கடலுட் பொருளிலக்கணமே பொருளாவது; பொருளின் பெருமையை இறையனாரகப் பொருளுரை இனிது விளக்கிற்று. பொருளிலக்கண அமைப்பு ஒன்றே ஏனை எந்த மொழிக்குமில்லாத பெருமையைத் தமிழுக்குக் கொடுப்பதாம் என்பது அறிஞர் கருத்து. இது ஆசிரியர் வகுத்தவம் முறையே அகத்திணையியல் முதலிய ஒன்பது இயல்களையும், தனித்தனி வகுத்து ஆசிரியர் கருத்துக்களைத் தொடர்பாகக் கதைப்போக்காகிய உரை நடையில் இனிது எடுத்து எழுதப்பட்டுள்ளது. அங்கங்கே பற்பல உரையாசிரியர்களின் கொள்கைகளும் நேரிய சீரிய முறையிற் சுருங்கக்காட்டிப் போதல் இதற்கு அழகு தருவதொன்றாம். நால்வகை நிலத்துக்குரிய பழந்தமிழரது தெய்வ வழிபாட்டினைப் பற்றி அகத்திணையியலில் கூறுவது சுவைதருவதொன்றாம். (பக்கம் 21-25). அகப்பொருளியலில் அகப்பொருட்டுறைகளின் நிகழ்ச்சிகளைப்பற்றி விவரணங்களும், உதாரணங்களும் செவ்வனே அமைந்துள்ளன. மெய்ப்பாட்டியலின் விரிந்த விவரணங்களும் உதாரணங்களும் திரு. பிள்ளையவர்களின் பரந்தகல்வி

யாராய்ச்சியினை வெளிப்படுக்கின்றன. உவமவியல், செய்யுளியல், மரபியல் என்பனவற்றின் வகுப்பு இலக்கணம் பயிலும் மாணவர்கட்குப் பெரிதும் துணை செய்வனவாம். விரித்தல் இலகுவில் அமைவுபடாத கற்பியல், களவியல் பகுதிகள் திரு. பிள்ளையவர்களிடம் எளிதின் அமைவுபடும் திறம் பாராட்டற்குரியது. பழந்தமிழர் நாகரிகமென்பவற்றுள் வழக்கொழிந்த பலவற்றைப் போலவே மீளாநிலையில் முற்றும் வழக்கொழிந்த புறத்திணையியற் பகுதிகள் முன்னைநாட் சரித ஆராய்ச்சிக்கு மிகவும் துணை செய்வன. தொல்காப்பியங் கற்போர்க்கு இந்நூல் துணை செய்வதோடு பழந்தமிழர் நாகரிகத்தினை அறியவும் துணை நிற்கின்றது. எனது அரிய நண்பர் திரு. பிள்ளை அவர்கள் இதனாற்றமிழுலகத்திற்குப் பேருதவி புரிந்துள்ளார். அவர்களது பலதிறப்பட்ட ஆராய்ச்சியுரைகளைப் படிக்க நேர்ந்தபோதெல்லாம் நான் மிகப் பயந்ததுண்டு. அவர்களது பரந்த கல்வியின் பயனை பேராராய்ச்சியின் சூழலுள் அகப்பட்ட என் போன்றார் இருந்தவிடந்தோன்றமாட்டாது திகைக்க நேர்வது இயல்புதானே. உயர்மதிற் கூடலினாய்ந்த வொண்டீந்தமிழின் துறைவாய் நுழையின் தன் வலிய தலைவனது தோள்களும் மெலியக்கூடியன என்று தோழன் கூற்றாகத் திருக்கோவையார் தீந்தமிழாராய்ச்சியினைப்பற்றி எடுத்துக்கூறுவது என் நினைவுக்கு பலகாலும் வருவதுண்டு. ஆனால் இவ்வுரை நடைநூலைப் படித்தபோது அந்தப் பயத்திற்கு இடமின்மை கண்டு மகிழ்ந்தேன். இந்நூல் நின்று நிலவித் தமிழ் உலகுக்குப் பயன்றருக. இதனை வெளிப்படுத்திய சேலம் செவ்வாய்ப்பேட்டைத் தமிழ்நெறி

விளக்கப் பதிப்பகத்தார்க்குத் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

சேக்கிழார் நிலையம்,
கோவை.
17—5—39

C. K. சுப்பிரமணியன்.

---

சிறந்த வழக்கறிஞரும்,
அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னைத்
தமிழ்ப் பேராசிரியருமாகிய,
திருவாளர்,
## S. சோமசுந்தர பாரதியார், M. A., B. L.
அவர்கள் எழுதியது.

சேலம், செவ்வாய்ப்பேட்டை, 'தமிழ் நெறி விளக்கப் பதிப்பக' வெளியீடான பழந்தமிழ் நாகரிகம் எனும் புதிய புத்தகத்தைப் படித்தேன். அதற்குப் பாயிரமொன்று தருமாறு பதிப்பகத்தாராற் பணிக்கப் பட்டேன். ஆங்கிலம் தமிழ் வழக்கு நூல்களிற் புலமை நிரம்பிப் பெறற்கரும்பட்டங்கள் பெற்று, தாகூர் நீதிநூல் விரிவுரையாளராய்ப் பலர் பாராட்டுக்கும் உரியராய்த் திகழும் பெரியார் - கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எழுதிய இப் புத்தகத்துக்கு எம்மனோர் கருத்துரை மிகையாகும். அளவாற் சிறிதாமிக்கட்டுரைநூல் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு அக்ன்று பொருண்மாண்ட நச்சினார்க்கினியர் உரைக்கடலைக்கடைந்து நீர்நீக்கி அள்ளற்குரியதைத் திரட்டியெடுத்த நவநீதம் எனில், அதன் அருமை தானே விளங்கும். ஆசிரியர் அரிதிற்கண்டு கூறும் பழந்தமிழர் முறைகளுக்கு ஏலாத சில சூத்திரங்

களுக்கியைய வேறுபாடமிருந் திருக்கவேண்டுமெனவிளக்கியும், அறவே பொருந்தாச் சில சூத்திரங்களைப் பிற்காலச் செருகலென விலக்கியும், தாமுணர்ந்த அரிய சித்தாந்த சைவக் கொள்கைகளைப் பல சூத்திரங்களிற் புதை பொருளாகக் கண்டு கூறியும், தற்காலத் தமிழர் அறியாத பழந்தமிழ் நாகரிகத் துறைகளை எளிதினறிந்து பயனுகருமாறு சுருங்கச்சொல்லியும் விளங்கவைக்கும் இக் கட்டுரையாசிரியரின் திறல் யாரும் வியத்திற்குரியது ஆற்றொழுக்காய், எளிய தமிழ்நடையில் வரலாற்று முறையாகப் பழமையைத் தெளியக்கூறுமிதனைக் கற்றாரும் மற்றோரும் படித்துக் களிப்பரெனக் கருதுகின்றேன். உலைவின்றித் தமிழ் நூற் கடலிற்றிளைக்கும் இதன் ஆசிரியரின் அருந் தமிழ்த்தொண்டு நின்று பயன் நன்று தருக.

மண்டபம், }<br>
19—5—39. }

S. S Bharathi.

---

**M. KANDASAMI MUDALIYAR,**
**B. A , M, R. A. S.**
SUPDT. OF DRAVIDIC STUDIES.
PACHAIYAPPA'S COLLEGE.
MEMBER. BOARD OF STUDIES OF THE
MADRAS & ANDHRA UNIVERSITIES.
CHARMAN OF THE BOARD OF STUDIES IN
KANNADA AND TAMIL (ANDHRA UNIVERSITY )

44 MULLA SAHIB
STREET

20-5-39.

சேலம செவ்வாய்ப்பேட்டை, தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம் திருவாளர். ஆ. மாணிக்கம் அவர்களுக்கு வணக்கம்.

செந்தமிழ்த் திருவாளராகிய பேராசிரியர், கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L. அவர்கள் எழுதிய "பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப்

பொருளதிகாரக் கருத்து'' என்னும் உரை நடை நூலைத் தாங்கள் அனுப்பியதற்கு நன்றியுடையேன்.

திருநெல்வேலி, காந்திமதிநாதம் பிள்ளை B. A. அவர்கள் பேராசிரியராகிய பிள்ளையவர்களை மகனாகப் பெற்றனர் என்று கூறுவதைவிட, பெற்றுத் தமிழர்க்குப் பெரும் பேறாகத் தந்தனர் என்பேன்.

பேராசிரியராகிய பிள்ளையவர்கள் தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிகளிலும் எம். ஏ. பட்டம் பெற்றவர். சட்டத்திலும் சிறந்த ஆராய்ச்சியாளராய்த் தாகூர் சட்ட விரிவுரை நிகழ்த்திப் பெரும் புகழ் எய்தினர். சட்ட கலாசாலையிலும் பேராசிரியராய்த் திகழ்ந்தனர். எப். எல். பரீட்சைக்கும் தமிழில் எம். ஏ. பரீட்சைக்கும் ஒரே ஆண்டில் சென்று தேர்ந்தனர்.

சட்டத்தில் பெரியதோர் ஆராய்ச்சியுள்ளதனாலும், இருமொழியில் வல்லமை பெற்றுள்ளதனாலும் பல காலத்திலுள்ள பல நாட்டினரின் நெஞ்சு நிலைகளையும் இலக்கணம், இலக்கியம், நாடகம், மொழி நூல் முதலியவைகளையும் மொழிவரலாறு, அரசியல் வரலாறு, முறை வரலாறு, கலை வளர்ச்சி வரலாறு, இலக்கிய ஆராய்ச்சி வரலாறு, கடவுள் தன்மைக் கருத்து வளர்ச்சி வரலாறு முதலிய பல திறப்பட்ட ஆராய்ச்சிகளையும் திறப்பட உணர்ந்தவராவர்.

இவ்வாராய்ச்சிகளைத் தனித்தனிப் பெட்டியில் அடைத்துவிடாமல் ஒருசேர அமைத்த திறத்தினாலே செந்தமிழ் நூல்களையும் ஆராயும் சிறப்புடையவராவர். இப்போது வெளிவந்துள்ளது 'பழைய தமிழரது நாகரிகம் இத்தகையது' என்று ஒருவாறு சுருக்கி விளக்கிக் காட்டுவதாகும். அடுத்த பதிப்பில் இது

மிகப் பெருநூலாக விளங்கிவரும் என்பது என் துணிபு மற்ற நூல்களாலும் அறியக்கிடக்கும் தமிழர் நாகரிகம் என்று குறிக்கப்படும் பல உண்மைகள் இந்த புத்த கத்தின் மற்ற பகுதிகளாகச் சேர்த்தல் நன்று. ஆங் கிலர்கள் தமிழைப்பற்றியும் தமிழரைப்பற்றியும் விய ந்து பாராட்டிய கருத்துக்களையும் இந்தப் புத்தகத்தில் இணைப்பாகச் சேர்த்தல் நலமாகும்.

சுருங்கிய அளவில் தொல்காப்பியத்தின் பொரு ளதிகாரப் பகுதியில் அமைந்த கருத்துக்களைத் தெளி வாக விளக்குகின்றபடியால் இந்தப் புத்தகம் B. A. மாணவர்களுக்குப் பாட புத்தகமாக வைப்பதற்கு உரியதாகும். பழைய செய்யுட் பகுதிகளையும் சில சில உரை நடை நூல்களையும் கற்றறிவதோடு இதனை யும் படித்துத் தொல்காப்பியனார் காலத்தில் தமிழர் மேம்பட்டிருந்த நிலைகளையும் B. A. மாணவர்கள் உணர்ந்து தெளிவது அறிவின் இன்பத்திற்கு இன்றி யமையாததாகும்.

**மோசூர். கந்தசாமி முதலியார்.**

---

சேலம் நகராக் காப்புக் கல்லூரித்
தலைமை ஆசிரியர்,

## திருவாளர். அ. இராமசாமி கவுண்டர், M. A., L. T. அவர்கள் எழுதியது.

தமிழ்த்தாயின் தவப்புலவர்களில் ஒருவராகிய திருவாளர். கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழு திய "பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பிய பொருளதிகாரக் கருத்து" என்னும் உரை நூலைப் படித்து இன்புற்றேன்.

தமிழ் நாட்டின் பழங்காலத்துப் பழக்க வழக்கங்கள், மக்களியல்பு, போர் நெறி, மணமுறை, இல்லற ஒழுக்கம், தெய்வ வழிபாடு முதலியவற்றை விளக்கும் நூல்களில் தொல்காப்பியமே தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. ஆனால், அந்நூல் எல்லோராலும் எளிதில் உணரற்பாலதன்று. அதன் உரையாசிரியர்களோ தத்தம் மதக்கொள்கைகளையும், பழக்கவழக்கங்களையுமே உரையிற் புகுத்திப் பற்பல விடங்களில் மூலத்துக்கு முற்றிலும் முரணான கருத்துக்களை எழுதிப் போந்தனர்.

திருவாளர் பிள்ளையவர்கள் தொல்காப்பியத்தின் நுண்பொருளைத் துருவி யாராய்ந்து தாம்கண்ட உண்மைகளை எல்லோரும் அறியும் வண்ணம் எளிய நடையில் இயற்றிய இந்நூல் தமிழர்க்கு ஓர் நல் விருந்தெனல் மிகையன்று.

நால்வகை நிலத்தின் தெய்வங்கள், தெய்வ வழிபாடு, அறுசமயம், அறுவகைப்பட்ட பார்ப்பனர், இசைப்பெருக்கம், எண்வகை மன்றல், மணப்பொருத்தம், பரத்தையர், போர் முறை, வீரக்கல் இவைகளைப்பற்றிய குறிப்பும் ஆராய்ச்சியும் போற்றத் தக்கன. பல துறைகளிலும் தமிழ்த்தொண்டாற்றும் இவ்வாசிரியர்க்கு எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரிவாராக.

சேலம்,
4—6—39

அ. இராமசுவாமி கவுண்டர்,
பிரின்சிபால், சேலம் காலேஜ்.

# தமிழ்ப் பேறு.

'இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்—
துன்பங்கள் நீங்கும், சுகம் வரும், நெஞ்சினில்
தூய்மை யுண்டாகிடும், வீரம் வரும்'.

பாரதிதாஸன் கவிதைகள்,

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்"

பாரதியார்.

"இந்தியா முழுமையும் ஒரே ஜனங்கமாக ஏற்படவேண்டுமானால் சென்னை ராஜதானிக்கு வெளியில் உள்ளவர்களும் தமிழ்ப்பாஷையைத் தெரிந்துக் கொள்ளவேண்டும்"

காந்தியார்.

"வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகம் தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்"

உமாபதி சிவம்.

---

"பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கும்"

இலக்கணக்கொத்து.

சேர்க்கை:—

## திருக்கோவையார்

# துறைவிளக்கம்.

தொல்காப்பியப் பொருளதிகார அகப் பொருட் சார்பான இயல்களில், துறை வரிசை கூறப்படாது, தலைவன் தலைவி முதலியோர் கிளவி (பேச்சு) நிகழும் இடங்களே தொகுக்குப்பட்டிருத்தலின், அவற்றைக் கற்பதற்கு முன், துறை வரிசையறிதல் அவசியம். திருச்சிற்றம்பலக் கோவையாருள் காணப்படும் துறை வரிசையைக் கற்றுக்கொள்ளுதல் போதிய, துணை புரிவதாகலின், அவ்வரிசைக் கருத்துக்களை இங்கே தொகுக்கின்றேன். அது, இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், இடந்தலைப்பாடு, மதியுடம் படுத்தல், இருவருமுள்வழியவன் வரவுணர்தல், முன்னுற வுணர்தல், நாணநாட்டம், நடுங்கநாட்டம், மடற்றிறம், குறைநயப்புக்கூறல், சேட்படை, பகற்குறி, இரவுக் குறி, ஒருவழித் தணத்தல், உடன் போக்கு, வரைவு முடுக்கம், வரைபொருட் பிரிதல், மணஞ்சிறப்புரைத் தல், ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணிவினைப்பிரிவு, வேந்தற்குற்றுழிப்பிரிவு, பொருள் வயிற்பிரிவு, பரத்தையிற்பிரிவு என்னும் பகுதிகளில் நானூறு துறை களாக விரியும். அவற்றை முறையே கீழ் வருவன வற்றால் அறிக.

## இயற்கைப் புணர்ச்சி

தலைவன் தலைவியை ஒரு பொழிலின் கண் முதவிற் **காண்டல்**, கண்ட பொருள் யாதென்று **ஐயுற்று ஆராய்தல்**, பின்னர் அது ஒரு மனிதப் பெண்ணெனத் **துணிதல்**, துணிந்தபின் அவளழகை **வியத்தல்**, ஆகிய நான்கு துறைகளும் தலைவி கருத்தையறிவதன் முன் நிகழ்வன. ஆதலின், அவை **கைக்கிளைத்திணைக் குரியன**. ஆண்பாற் கைக்கிளையே இங்குக் குறித்த நான்கு துறைகளையும் அடக்கி நிற்பது, பெண்பாற் கைக்கிளையும் உண்டு. தலைவி தலைவனைக் காண்டல் முதலியன செய்து கூறுங் கூற்று அதன் பாற்படும். பெரும் பாலும் ஆண் பாற் கைக்கிளையே நூல்களுட் காணப்படும்.

தலைவி தன்னைக் காதலிக்கிருள் என்று குறிப்பறிந்து தலைவன் கூறுஞ்சொற்கள் **உட்கோள்** என்னுந் துறையாம். தான் விரும்புந் தலைவிக்குத் தன்பால் நேசம் உண்டாகப் பணித்த தெய்வத்தைத் துதித்தல், **தெய்வம் மகிழ்தல்** எனப்படும். தலைவியைச் சேரக்கருதுதல், **புணர்ச்சி துணிதல** எனப்படும். உள்ளத்தாற் சேர்தல், மெய்பற்றிச் சேர்தல் என்ற இரண்டில் ஒன்று நிகழ்ந்தபின், அதன் இன்பத்தைத் தலைவன் வியத்தல், **கலவி யுரைத்தல்** ஆகும். சேர்வதற்கு முன் வேட்கை பற்றியும், சேர்ந்த பின் குணநலம் பற்றியும் இருவர்க்கும் அன்பு ஒத்திருத்தலைக் கூறுதல், **இருவயின் ஒத்தல்** எனப்படும். நாண மிகுதி பற்றிப் பேச்சு நிகழ்த்தாதிருந்த தலைவியின் இனிய சொல்லைக் கேட்கத் தலைவன் விரும்புவது, **கிளவி வேட்டல்** எனப்படும். கிளவியோ, புன்முறுவலோ தலைவி

நிகழ்த்த, அதன் நலத்தைப் பாராட்டுதல், **நலம் புனைந் துரைத்தல்** ஆகும்.

தலைவனும் தலைவியும் பிறர் அறியக் கூடாத களவொழுக்கம் கைக்கொண்டிருப்பதால், தலைவன் அது நீடிக்காதபடி தலைவியைப் பிரியக் கருதிக் குறிப்பாக **பிரிவுணர்த்தல்**, பிரியவேண்டுமே என்பது பற்றித் தலைவி வருந்த, அதனைத் தலைவன் அறிதலாகிய **பருவரலறிதல்**, அறிந்து பிரிவு எப்போதும் நிலைப்பதன்று, சிறிதுகாலமே யாம்படி இறை திருவருள் கூட்டுமென்று தலைவன் தேறுதல்கூறி **அருட்குணம் உரைத்தல்**, தன்னூர் தலைவி ஊருக்குப் பக்கத்தில் உள்ளதென்று இடமணித்துக்கூறி **வற்புறுத்தல்**, தலைவி தோழி கூட்டத்திற் சேரும் வரை, அவளுக்குப் பாதுகாவலாகச் சென்று **ஆடிடத்துய்த்தல்**, தலைவி தன் ஆயத்தொடு சேர்ந்த பின், அவளை மீட்டுங் காண முடியுமோ என்று எண்ணுதலாகிய **அருமையறிதல்**, தலைவிக்கு மிக நெருங்கிய நண்புடைய பாங்கி இன்னார் என்றறிதலாகிய **பாங்கியையறிதல்** ஆகிய இத் துறைகள் பலவும் இயற்கைப் புணர்ச்சி என்னும் பகுதியுளடங்கும்.

---

## பாங்கற் கூட்டம்

தலைவியைப் பிரிந்த தலைமகன் அவளை மறுபடி அடையக்கருதி, அது தன் பாங்கனால் முடியக் கூடுமென நினைந்து, **பாங்கனை நினைதல்**, பின்னர் தலைவனைக் கண்டு, அவன்பால் மெலிவு ஏற்பட்டிருத்தலைப் பார்த்து அதற்குக் காரணமென்னவென்று **பாங்கன்**

**வினாதல்,** பாங்கன் வினாவிற்கு விடையாகத் தலைவன் தலைவியைக் கண்ட செய்தியை அவனுக்குரைத்தலாகிய **உற்றதுரைத்தல்,** அதுகேட்டு தலைவனை நோக்கி அச்செயல் அவன் தலைமைக்குத் தகாதென்று பாங்கன் **கழறியுரைத்தல்,** அதனை மறுத்துரைப்பான் பாங்கனை நோக்கி என்னாற் காணப்பட்ட வடிவத்தை நீ கண்டால், இவ்வாறு சொல்லமாட்டாயென்று தலைவன் **கழற்றெதிர்மறுத்தல்,** தலைவன் கூறியது உண்மையாயினும், தலைவன் வருத்தத்திற்கது ஏதுவாயிற்றென்று பாங்கன் **கவன்றுரைத்தல்,** தலைவன் தனது வலிமைக் குறைமை மீட்டுமுரைத்தலாகிய **வலியழிவுரைத்தல்,** பாங்கன் தன் வருத்தத்தை நீக்க முயலாமை கண்டு **விதியோடு வெறுத்தல்,** பாங்கனும் தலைவனது தீராநோய் காரணமாகத் தன்வருத்தந் தெரிவித்தலாகிய **பாங்கனேர்ந்துரைத்தல்,** பின் பாங்கன் தலைவனுக்கு ஆறுதல் விளைத்தற் பொருட்டு, தலைவியின் இயல்பு, இடம் முதலியவற்றைப் பற்றிக் கேட்டலாகிய **இயலிடம் கேட்டல்,** தலைவன் தலைவியின் **இயலிடம்கூறல்,** இயலிடங்கேட்ட பாங்கன் தலைவியைத் தான்போய்ப் பார்த்து வருவதாகக்கூறித் தான் மீண்டு வரும்வரை தலைவன் ஆறுதலுற்றிருக்க வேண்டுமென்று **வற்புறுத்தல்,** தலைவன் குறிப்பித்த இடத்திற்குப் பாங்கன் செல்லுங்கால், தலைவியை அங்கே காணமுடியுமோ முடியாதோவென்று நினைந்து கூறலாகிய **குறிவழிச் சேறல்,** பாங்கன் தலைவி நிற்கும் இடம் அடைந்து தலைவனாற் காணப்பட்டவள் அவளேயென்று தெளிதலாகிய **குறிவழிக் காண்டல்,** தெளிந்து, அத்தன்மையான தலைவியைக்கண்டு தலைவன் மனவலியோடு மீண்டமைக்குப் பாங்கன் தலை

வனை வியந்துரைத்தல், தலைவியினிடம் நின்று மீண்ட பாங்கன் தலைவனிடம் தலைவியைத்தான் கண்டமை கூறல், தலைவியின் (அழகு) செவ்விசெப்பல், பின் தலைவன் தலைவி யிடத்திற்கேகல், தலைவி தலைவன் வருவானோ வென்று கவலுதலாகிய மின்னிடைமெலிதல், தலைவன் தலைவியைத் தான்கண்ட பொழிலைப்பார்த்து மகிழ்தலாகிய பொழில் கண்டுமகிழ்தல், தலைவியைத் தலைவன் கண்டு தன்னுயிர் அதுவென வியந்து கூறலாகிய உயிரேன வியத்தல், பொழிலகத்தே தலைவி தனியே நிற்றலைக்கண்டு மனத்தளர்வு நீங்கலாகிய தளர்வகன்றுரைத்தல், பின் தலைவியின் சொல்லைப்பெற வருந்துதலாகிய மொழிபெறவருந்தல், தலைவன் தன்னை வியப்பது கேட்டதலைவி நாணத்தால் முன் நில்லாது திரும்பித் தன் கண்ணைகளைக் கையால் மூடுதலாகிய நாணிக் கண் புதைத்தல், அதுகண்டு தலைவன் வருந்தியுரைத்தலாகிய கண்புதைக்க வருந்தல், தலைவி தன் நாண் மிகுதி பற்றி வருந்துதலாகிய நாண்விடவருந்தல், தலைவன் தலைவி பக்கம் சேர்தலாகிய மருங்கணைதல், தலைவி தனக்கு இன்றியமையா திருத்தலைத் தலைவன் கூறலாகிய இன்றியமையாமைகூறல், தலைவியை அவன் தோழி கூட்டத்திற் சேர்த்தலாகிய ஆயத்துய்த்தல், தலைவி சென்றபின் தலைவன் நின்று வருந்தல் என்னுந் துறைகளனைத்தும் அவற்றின் விரிவும் பாங்கற் கூட்டமென்னும் பகுதியுள் அடங்கும்.

---

## இடந்தலைப்பாடு.

பாங்கன் அறியத் தலைவியைக் கூடுதலில்லாமல் இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் தலைவன் தானே

சென்று தலைவியைக் கண்டுப் **பொழிலிடைச் சேறல்,** இடந் தலைப்பாடு என்னும் பகுதியாகும். பாங்கற் கூட்டம், அல்லது இடந்தலைப்பாடு அகப்பொருட் கோவை நூல்களுட் காணப்படும். அந் நூல்களில் இரண்டும் அமைப்பது வழக்கமில்லை. இடந்தலைப்பாட் டைக் குறிப்பதற்கு, பொழிலிடைச் சேறல் என்ற ஒரு துறைப்பாட்டே திருக்கோவையாருள் குறிக்கப் பட்டது. ஏனையன பாங்கற் கூட்டத்தின் பிற்பகு யிதிற் கண்டவாறு சேர்த்துக் கூறப்படும்.

---

## மதியுடம்படுத்தல்.

இயற்கைப் புணர்ச்சியினும், பாங்கற் கூட்டத்தி னும், அல்லது இடந்தலைப் பாட்டினும் தலைவியைக் கண்டு சேர்ந்தத் தலைமகன், பிறகு தலைவியை மணத் தல் நன்று அவ்வாறு செய்யாது களவொழுக்கத் தை நீட்டிக்க விரும்பி, தலைவியின் பாங்கிக்குத் தன் கருத்தறிவித்து அவளது அறிவு தன்செயலுக்கு உடன்படும்படி செய்தல், மதியுடம்படுத்தலெனப் படும் பகுதியாகும். பாங்கியினிடம் செல்ல விரும்பு தலாகிய **பாங்கியிடைச் சேறல்,** அதன் முதற் றுறையாகும். அப்படிச் செல்லுங்காலை, தலைவியும் பாங்கியும் ஒருங்கு நிற்பது கண்டு, தோழிக்குத் தன் கருத்தைக் குறிப்பாக அறிவிப்பான் உன்னுதல், **குறையுறத்துணிதல்** எனப்படும். குறையுறுவான் இருவரையும் பார்த்து, இங்கே ஒரு மதயானை வரக் கண்டீர்களா வென்று கேட்டல், **வேழம் வினுதல்** எனப்படும். மான்வந்ததுண்டாவென்று கேட்டல், **கலைமான் வினுதல்** என்னுந் துறையாகும். நும்மூர்

க்கு வழி யாதென வினுதல், வழிவினுதல் ஆகும், நும்மூர் யாதென்று கேட்டல், **பதிவினுதல்** எனப்படும் அவர்கள் **பெயர் வினுதல்** அனையதோர் துறையே. பெண்டிரிருவரும்யாதும் பேசாதபோது, **மொழிபெறுது வருந்தல்** என்னுந் துறை ஏற்படும். அவர்கட்குத் தழையாடை கொடுத்தல், **கருத்தறிவித்தல்** என்பதன் பாற்படும். உங்கள் சிறிய இடை கண்ணுக்குத் தெரியவில்லை யென்பான் **இடைவினுதல்** என்னும் கருத்தறிவித்தலின் பாற்படும் மற்ெறாருதுறையாகும்.

---

## இருவருமுள்வழி யவன் வரவுணர்தல்

இருவருமிருக்குமிடத்தில் வந்து தலைவனுரைத்த மாற்றங்களை நினைந்து பாங்கி, இவன் தலைவியைக் காதலிக்கிறுன் போலும் என **ஐயுறுதல்** அவன் கருத்து இன்னதே யென்று துணிதலாகிய **அறிவு நாடல்** என்ற இரண்டு துறையும் இருவரும் உள்வழி அவன் வரஉணர்தல் எனற பகுதியின் பாற்படும்.

---

## முன்னுறவுணர்தல்.

பாங்கி தலைவன் தனது வாட்டமுரைப்பத் தலைவி வாடுதலைக் கண்டு, இருவருக்குள் ஏதோ களவொழுக்கம் தொடங்கி யிருத்தல் கூடுமென்று கருதி, தலைவியின் வாட்டத்திற்குக் காரணம் யாதெனக்கேட்டல், **வாட்டம் வினுதல்** என்னும் துறையாகும். தலைவன் வரவு இல்லாமலே, தலைவியின் வாட்டத்தைப் பாங்கி குறித்தறிந்து, தலைவனைப் பாங்கன் கேட்டது

போலத் தலைவியைப் பாங்கி வினுதல் முன்னுற உணர்தல் என்னும் பகுதியாகும். இங்ஙனம் இருவகையாக வாட்டம் வினுதல் ஏற்படும்.

---

## குறையுற வுணர்தல்.

தலைவி வாட்டத்தைக் குறிப்பானுணர்ந்ததை யுற்ற பாங்கியினிடம், தலைவன் சென்று, உங்களுக்கு ஆகவேண்டிய காரியம் ஏதாவது உண்டானால், அதனை நான் விரைவில் முடிப்பேனெனக் **குறையுற்று நிற்றல்** முதலியன குறையுறுதலென்னும் துறையின் பாற்படும். தலைவனது இத்தகைய செயல்களால், இவன்பால் தலைவிக்குக் காதலுண்டாயிருக்க வேண்டுமென்று பாங்கியறிதல், **அவன் குறிப்பறிதல்** என்னுந் துறையாகும். அவ்வாறே தலைவி குறிப்பறிதல் **அவள் குறிப்பறிதல்** ஆகும். இங்ஙனம் இருவர் நினைவுமொருவழி **யுணர்தல்** ஒரு துறை. இவை யெல்லாங் குறையுற வுணர்தல் என்னும் பகுதியுள் அடங்கும்.

---

## நாண நாட்டம்.

இருவருங் காதல் கொள்ளுவதைத் தெளிந்த பாங்கி இருவருக்கும் சேர்க்கை ஏற்பட்டதை யறிவதற்குத் தலைவிபாற் கூறுஞ் சொற்கள், தலைவி பாங்கி தனது களவொழுக்கத்தை அறிவதில் விருப்பமுடையளாய்த் தன் கருத்தறிவித்தற்கேதுவாகுங்காலை, நன்னிலை நாணம் என்னும் பகுதிக்கு துணைபுரிவதாகும். தலைவிக்கு அச்சம் வரும்படி பாங்கி கூறுஞ் சொற்கள், அகத்துறைக்குப் பொருந்துவனவல்ல.

பாங்கியைப் பிறை தொழும்படி சொல்ல, அவள் பிறை தொழாது, நாணித் தலைசாய்ந்து நிற்பதுகண்டு, அவள் நாணத்திற்குக் காரணத்தை நாடுமுகத்தால், பாங்கி உண்மை யுணர்தலுண்டு. **பிறைதொழு கென்றல்.** நாண நாட்டத்தின் ஒரு துறையாகும். பாங்கி தலைவியைச் சுனையாடும்படி வேண்ட அவள் தலைவனோடு சேர்ந்து மீண்டதுகருதி, பாங்கி அவளை வரைத் தெய்வத்திற்கு ஒப்பிட்டு **வேறு படுத்துக் கூறல்,** மற்றோர் துறை. தலைவி சுனையாடவில்லை யென்பதைப் பாங்கி குறிப்பாலுணர்த்தல், **சுனையாடல் கூறி நகைத்தல்** என்பதாகும். தலைவியின் சேர்க்கையைத்தான் அறிந்தமை குறிப்பித்தல் **புணர்ச்சியுரைத்தல்,** என்னுந் துறை. இருவருக்கும் மியல்பொன்றென்று பாங்கி தெளிதல், **மதியுடம் படுத்தல்** எனப் படும். இவையெல்லாம் நாண நாட்டம் என்னும் பகுதியுளடங்கும்.

---

## நடுங்க நாட்டம்.

தலைவியின் களவொழுக்கம் அறிதற் பொருட்டு, அவள் நடுங்கியஞ்சும்படி சிலகூறல், **நடுங்க நாட்டம்** என்னும் பகுதியாகும். அதற்கு ஒரு செய்யுளே திருக்கோவையாரிற் காணப்படும்.

---

## மடற்றிறம்.

மதியுடப்பட்ட பாங்கி, தன் பெருநாண் காரணமாகத் தலைவனுக்குத் துணை புரியாது காலந்தாழ்த்தல், அல்லது குறைமறுத்தல் செய்தவழி தலைவன்

மடலூர்ந்து தன் கருத்தை முற்றுவிப்பேனென்ற லும், அதற்குச் சார்பான துறைகளும் மடற்றிறம் என்னும் பகுதியின் பாற்படும். தலைவி பாங்கியென்னு மிருவருமுள்வழித் தலைவன் சென்று, நீங்கள் என் மீது அன்பு காட்டாவிடின், என் உயிர்போய்விடும் என்று கூறுதல், **ஆற்றுதுரைத்தலாகும்**. பின்னர் ஆடவர் தம்முள்ளமாகியமீன், மகளிர் கண்ணாகிய வலையிலகப்பட்டால், அதனைப் பெறுதற்கு மடலூர் தலுஞ் செய்வர், என்று கூறுதல் **உலகின்மேல் வைத் துரைத்தல்** என்னுந் துறையாகும். மடலேறுந் **தன்றுணிபுரைத்தல்**, தலைவியதுபடம் எழுதி **மடலே றும் வகை யுரைத்தல்**, அதுகேட்ட பாங்கி, தலைவனை நோக்கி மடலேறுதல் அருளுக்குப் பகையென்றலா கிய **அருளாலரிதேன விலக்குதல்**, தலைவியின் மொழி **யும் நடையும் எழுதலரிதேன விலக்கல்**, அவையவ **மெழுதல் அரிதேன விலக்கல்**, தலைவியைக் கேட்டுப் பாங்கி விடைபகரும்வரை, மடலேறு திருக்கவென்று **உடம்படாது விலக்கல்**, தலைவன் குறையை முடித்தல் தன்னால் கூடும், அதனால் மடலேறவேண்டாமென்று பாங்கி **உடம்பட்டு விலக்கல்** ஆகிய துறைகள் இப் பகுதியிலடங்கும்.

---

## குறைநயப்பித்தல்.

தலைவன் மடலேறுமைப் பொருட்டுத் தோழி (பாங்கி) தலைவியினிடம், தலைவன் கருத்தறிவித்து அவளை இணங்குவித்தல், குறைநயப்பித்தல் என் னும் பகுதியாகும். தலைவி கருத்தை அறிய முடியாத

தோழி தலைவியின் **குறிப்பறிதல்**, தலைவன் ஒருவன் வந்து போதலை **மென்மொழியாற் கூறல்**, தலைவனிலைமை ஆற்றொணாதென்று குறிப்பாகக் **விரவிக்கூறல்** தலைவன் ஒருவன் வடிவை நீ பார்த்து, அவனிலையை ஊகித்தல்நலமென்றுகூறித் தோழி தான் **அறியாள்போறல்**, உவமையால் தலைவனியல்பை மறைத்து **வஞ்சித்துக்கூறல்**, தான் சொன்னது ஒவ்வாதாயின் பிறரிடம் இதனையுரையாய் எனத்தோழி **புலந்து கூறல்**, தலைவன் மடலேறத் துணிந்தான், உனக்குத் தோன்றினதை நீ சொல், எனப் பாங்கி தலைவிக்கு **வன்மொழியாற் கூறல்**, இவையனைத்தும் பாங்கி கூற்றாக நிகழ, தலைவன் மடலேறுதற் காற்றாத தலைவி நெஞ்சை அவர்பால் தன்னீர்மை சொல்ல விடுத்தலாகிய **மனத்தோடு நேர்தல்** என்னும், இவையனைத்தும் குறைநயப்பித்தல் என்னுந் துறைகளாம்.

---

## சேட்படை.

தலைவியைக் களவிற்சேர்தலரிதாகலான், அவளை மணந்து கோடலே நலமெனத் தலைவனுக்கு உணர்த்தக் கருதும் பாங்கி, தலைவனைப் பலவகையால் களவொழுக்கினின்று விலக்க முயலுதல் **சேட்படை** என்னும் பகுதியாகும். இது மடற்றிறத்திற்கு முன் நிகழினும் நிகழும். தலைவன் பாங்கியிடம் தாற்கு சந்தனத் தழையாலாகிய ஆடைகொண்டு செல்லுதல், **தழைகொண்டு சேறல்** என்னுந்துறையாகும். அது புதியதொன்றாகலான் தலைவியுறவினர்க்கு ஐயப்பாடு உண்டாவதற்கேதுவாமாதலின், **சந்தனத் தழை தகாதென்று மறுத்தல்** பிறிதொரு துறை. தலைவன் வேறு

தழை கொண்டு செல்ல, அது எங்கள் நிலத்திலில லாமையால ஐயுறவிற் கேதுவாம், என்பது நிலத் தின்மைகூறி மறுத்தலாம்

தலைவன் தலைவி நிலத்துத்தழை கொண்டு பாங்கி பாற் செல்ல, பாங்கி தலைவியின் கருத்தறியாது அத னைப்பெறேனென மறுப்பது, நினைவறிவு கூறிமறுத்தல் எனப்படும். அவ்வாறே இத்தழை புதுமை பயப்பது ஆதலின் ஆகாதென படைத்து மொழியான் மறுத்தல் பிறிதொரு துறையாகும். தலைவன் கண்ணி கொண்டு செல்ல, முன்னுள்ள கண்ணிக்குமேல் இக் கண்ணி யணிந்தால் அது ஐயுறுதற் கேதுவாமாதலின், இசையாமை கூறி மறுத்தல், தலைவி கண்ணி சூட நாணுவளென்று கூறி நாணுரைத்து மறுத்தல், தலைவி க்கு நேரமில்லையென்று செவ்வியிலளென்று மறுத்தல், பெற்றோர் காவல் மிகுதியென்று காப்புடைத் தென்று மறுத்தல், பாங்கி தான் குற்றேவன் மகளாதலின், தலைவனை நீயே கூறென்று மறுத்தல், தலைவனை நோக்கி நீர் பெரியிர் யாஞ் சிறியேம் நீர் எம்மிடம் இது கருது தல் தகாதென்று குலமுறை கூறி மறுத்தல், நீர் எங்கள வர்களோடு பொருது வெல்லும் என்று கூறி நகை யாடி மறுத்தல், தலைவன் பெருமைக்கேலாதென இரக்கத்தோடு மறுத்தல், தலைவியிடத்தின்மைபற்றி சிறப்பின்மை கூறி மறுத்தல், தலைவியின் இளமை கூறி மறுத்தல், இவ்வாறு மறுக்கும் பாங்கியைவிட்டு, வேறு வழியாகத் தலைவன் தலைவியை நாடக் கருதி யதை யறிந்து, வேறுவழியில் தலைவியை அடைய முடியாமை மறைத்தமை கூறி மறுத்தல், பாங்கி ஒரு வாறு இணங்கினதாக எண்ணி தலைவன் மகிழ, அவன்

**நகை கண்டு மகிழ்தல்**, *தலைவனைப் பார்த்து பலதோழி களுள், யாரை நீ பெறக் கருதுகின்றாயென்று வினாத லாகிய* **அறியாள் போன்று நினைவு கேட்டல்**, *அதற்கு விடையாகத் தலைவன் தலைவியின்* **அவயவங் கூறல்**, **கண்ணயந் துரைத்தல்**, *தழையை ஏற்றுக்கோடலாகிய* **தழை யெதிர்தல்**, *தழை ஏற்ற தோழி தலைவியின்* **குறிப்பறிதல்**, *தலைவியின் குறிப்பினைப் பாங்கி*, **குறிப் பறிந்து கூறல்**, *குறைமுடித்தல் வேண்டுமென எண்ணி தழையேற்றல் ஒரு காரணத்தால் தகாதெனினும் அவசியம்பற்றி ஏற்றல் வேண்டுமென்று* **வகுத்துரைத் தல்**, *தலைவியிணக்கமறிந்து* **தழையேற்பித்தல்**, *தலைவி, தழையேற்ற செய்தி தலைவனுக்குரைப்பதாகிய* **தழை விருப்புரைத்தல்**, *ஆகிய துறைகளெல்லாம், சேட் படைப் பயனாவனவாம்.*

---

## *பகற்குறி.*

*தழையேற்ற தலைவியைக் காணவேண்டின், பக லில் இன்ன இடத்திற்கு வாவென்று தலைவனுக்குப் பாங்கிகூறல்* **குறியிடங்கூறல்** *எனப்படும். தலைமகளை ஆடிடத்திற்கு அழைத்துச் செல்லுதலாகிய* **ஆடிடம் படர்தல்**, *அதன்பின்*, **குறியிடத்துக்கொண்டு சேறல்** *நிகழும்.* **இடத்துய்த்து நீங்கல்** *அதன் பின்னுள்ள துறை. தலைவன் தலைவியை அவ்விடத்திற்கண்டு* **உவந்துரைத்தல்**, *தலைவன் உவந்துரைப்பக் கேட்ட தலைவி நாணி ஒருமருங்கொதுங்கி நின்றாளை மார் பொடு தாங்கி* **மருங்கணைதல்**, *பாங்கியைத் தலைவனறி ந்தமை தலைவிக்குக் கூறலாகிய*, **பாங்கியறிவுரைத்தல்**, *தலைவி இணக்கமறிந்து, தலைவன்* **உண்மகிழ்ந்துரைத்த**

ல், *பின்னர்த் தலைவியை* **ஆயத்துய்த்தல்**, தோழி வந்து கூடல், ஆடிடம் புகுதல், *தோழி, தலைவனைக் கண்டு அருந்துவன கொடுத்துப் பொருந்துவன கூறலாகிய* **தனிகண்டுரைத்தல்**, *தலைவன் வரைவு விரும்பி, தலைவியின் பருவங் கூறி*, **வரவு விலக்கல்**, *வரைவுவரை களவு நிகழ்த்தக் கருதுந் தலைவன்* வரைவுடம் படாது மிகுத்துக் கூறல், *பாங்கி வரைவின் அவசியதனைக் குறிப்பால்* உண்மை *கூறி* வரைவு கடாதல், *தலைவியின்* வருத்தங்கூறி வரைவு கடாதல், தாயச்சங் கூறி வரைவு கடாதல், *தலைவியை வெளியே செல்லவிடாது, பெற்றோர்* இற்செறிவித்தமை யறிவித்து வரைவு கடாதல், *தமர் காப்பமைக்கக் கூடுமென அறிவிப்பாள்* தமர் நினைவு கூறி வரைவு கடாதல், *வரவைப் பெற்றோரும் விரும்புவர் என்பதாக* எதிர் கோள் கூறி வரைவு கடாதல், *பெற்றோர் ஏறு தழுவு வார்க்குத் தலைவியைக் கொடுக்க நினைந்தமையாகிய* ஏறு கோள் கூறி வரைவு கடாதல், *பிறர் தலைவியை மணம் பேசுதல் கூடுமென* அயலுரை யுரைத்து வரைவு கடாதல், *தினைக்காத்தல் இனிய வசியமின்மை என்று தினை* முதிர்வு கூறி வரைவு கடாதல், பகல்வரல் விலக்கி வரைவு கடாதல், *தினையறுப்பு முடிந்தபின் தினை* யோடு வெறுத்து வரைவு கடாதல், *வேங்கை மரம் அரும்பிய ஞான்றே கொய்தோ மின்றென* வேங்கை யோடு வெறுத்து வரைவு கடாதல், *தினைப்புனம் இலா மை பற்றி* இரக்கமுற்று வரைவு கடாதல், தினை கொய்தமை கூறி வரைவு கடாதல், *வீட்டை விட்டுப் பிரி* வருமை கூறி வரைவு கடாதல், *மயிலை விளித்து* மயிலோடு கூறி வரைவு கடாதல், *என்பன நிகழ, தினைப்புனம் வறும்புனமாயிருத்தல் கண்டு தலைவன்*

வறும்புனங்கண்டு வருந்தல், தலைவி பதியை நோக்கிச் செல்ல முடியாமை கருதி தலைவன் பதிநோக்கி வருந்துதல் முதலியன பகற்குறிச் சார்பாய துறைகளாம்.

---

## இரவுக்குறி.

தோழியிடஞ் சென்று தலைவன் இரவில் தலைவியைக் காணவேண்டி இரவக்குறி வேண்டல், தோழி வழியருமை கூறி மறுத்தல், தலைவன் நெஞ்சுடைந்து நிற்றல், தோழி இடம் அமைக்க இணங்கி எதிர்மறைச் சொல்லால் இரவுக்குறி நேர்தல், எவ்வேடங்கொண்டு தான் வரவேண்டுமென்று தலைவன் பாங்கியை உட்கோள் வினுதல், தலைவி யூரினர்வேடம் பூண்ட தலைவன். அவ்வூரினர்க்குரிய மலர், சாந்து, முதலியவற்றைப் பாங்கியினிடம் உட்கோண்டு வினுதல், தோழி குறியிடங் கூறல், இரவுக்குறியேற்பித்தல், தலைவிக்குத் தலைவன் இரவு வரவுரைத்தல், வழியருமை கருதித் தலைவி பாங்கியினிடம் ஏதங்கூறி மறுத்தல், குறை நேர்தல், தலைவனுக்குப் பாங்கி குறை நேர்ந்தமைகூறல், தலைவிக்குப் பாங்கி தலைவன் வரவுணர்ந் துரைத்தல், தலைவி இரவுக்குறி சேர்வான் கருதிப்பாங்கி தாய்துயிலறிதல், துயிலெடுத்துச் சேறல், இடத்துய்த்து நீங்கல், தலைவன் தளர்வகன்றுரைத்தல், மருங்கணைதல், முகங்கண்டு மகிழ்தல், பிரியுந் தலைவன் தலைவியைப் பள்ளியிடத்துய்த்தல், மீட்டுந் தலைவன் வரவு விலக்கல், தலைவன் ஆற்றுதுரைத்தல், இரக்கங்கூறி வரைவு கடாதல், தலைவன் மறுநாள் நிலவு வெளிப்பட வருந்தல், குறித்த இடத்தின் வேறிடத்துச் சென்று தலைவற் காணுமையால் தோழி அல்லகுறி யறிவித்தல், கடலிடை

வைத்துத் துயரறிவித்தல், தலைவி காமமிக்க கழி படர் கிளவி செப்பல், காப்புச் சிறப்புமிக்க கையறு கிளவி செப்பல், தோழி தலைவனிடம் ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி செப்பல், தலைவி தன்னுட் கையாறெய்திடுகிளவி, தலைவன் அதுகேட்டு, நிலைகண்டுரைத்தல், தலைவனைக் காணாது, தலைவி இரவுறு துயரம்கடலோடு சேர்த்தல், தோழி தலைமகனுக்கு அலரறிவுறுத்தல் ஆகிய துறைகள் இரவுக்குறிப் பகுதியாயடங்குவனவாம்.

---

## ஒருவழித்தணத்தல்.

அலர் காரணமாகத் தோழி தலைவனுக்கு சில நாள் நீங்கிப் பின்வாவென்னும் அகன்றணைவுரைத்தல், தலைவன் அவ்வாறு செய்யத் தலைமகள் பிரிவாற்றாது கடலோடு வரவு கேட்டல், கடலோடு புலத்தல், அன்னத்தைத் தூது விடுதலாகிய அன்னமோடாய்தல், தலைவனது தேர்வழி நோக்கிக் கடலோடு கூறல், கடல் தெய்வத்தை வாழ்த்தித் தலைவன் வருவானோவென்று குறி பார்ப்பதற்குத் தலைவி கூடலிழைத்தல், சுடரோடு புலம்பல், பொழுது கண்டு மயங்கல், பறவையோடு வருந்தல், பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல், அன்னத்தைப் பழித்து அன்னமோடழிதல், பாங்கி தலைவர் வரவுணர்ந்துரைத்தல், தோழி, தலைவியின் வருத்தமிகுதி கூறல் என்பன இப்பகுதியாய் அமைவனவாம்.

---

## உடன்போக்கு.

அலர் காரணமாக ஒருவழித் தணத்தல் நிகழாது உடன்போக்கு நிகழும். தோழி தலைமகள் மணத்திற் குரிய பருவம் எய்தினமையால், தலைவன் அவளை வரைதல் வேண்டுமெனப் **பருவங்கூறல்** ஒரு துறையாகும். அயலவர் **மகட்பேச்சுரைத்தல்,** அடுத்த துறை. தலைவியை மணம் பேச அயலவர் வருவதால் அவளை மணத்தல் அல்லது உடன் கொண்டு போதல் செய்யற்பாலது என்று தோழி தலைவனுக்குக் கூறுவதே அஃதாகும். அயலவர் தலைவிக்குப் பொன்னணி கொணர்ந்து மகட் பேசவந்தனர், உன் கருத்து யாதெனத் தலைவனைத் தோழி கேட்டல் **பொன்னணி வுரைத்தல்,** எனப்படும்.

தலைவிக்குப் பரிசப்பணம் எத்துணையாமெனக் கேட்ட தலைவனுக்குத் தோழி விலையருமை கூறலாகிய **அருவிலையுரைத்தல்,** தலைவன் அதுகருதி நெஞ்சை விளித்து நீ தலைவியை வேட்டல் தகாதென **அருமை கேட்டழிதல்,** தோழி தலைமகளது ஆற்றுமை கூறுவளாகி **தளர்வறிந்துரைத்தல்,** தோழி தலைவியின் உடன் போக்குக் குறிப்பைத் தலைவனுக்குக் கூறி **குறிப்புரைத்தல்,** உடன்போக்கி னருமையைத் தோழிக்குத் தலைவன் கூறுவதாகிய **அருமையுரைத்தல்,** உன்னோடு போனல் தலைவிக்கு வழி அருமை தெரியாதென்று தோழி தலைவனுக்குச் சொல்லும் **ஆதரங் கூறல்,** உடன்கொண்டு போகவில்லையானல் தலைவி சாவாள் என்று தோழி தலைவனுக்கு கூறும் **இறந்துபாடுரைத்தல்,** தலைவனேடு உடன்போவதே கற்பிற்கு நல்லதென்று தலைவி தோழியிடம் சொல்லி அவளை

உடன்போக்கிற்கு இசைவிக்கும் கற்புநலனுரைத்தல் தோழி தலைவனுக்கு தலைவி உடன்போக்கிற்குத் துணிந்தமை கூறல், உடன்போக்கிற்குத் துணிந்த தலைவி அதற்குக் காரணமென்னவென்று துணிவோடு வினவல், தோழி அதற்குக்காரணம் செப்பிப் போக்கறிவித்தல், உடன்போக்கிற் கிசைந்த தலைவி நாணிழந்து வருந்தல், தோழி தலைவனுக்குத் தலைவியின் துணிபெடுத் துரைத்தல், தலைவனைத் தோழி இன்ன இடத்திற்கு வரவேண்டுமென்று குறியிடங் கூறல், வழியின் கடுமை கருதி தலைவியின் அடியோடு வழிநினைந்தவனுளம் வாடல், குறிப்பிட்ட இடத்தில் தலைவனிடம தோழி தலைவியைக் கொண்டு சென்றுய்த்தல், தலைவனையும் தலைவியையும் தோழி வலஞ்செய்து எந்நாளும் பாதுகாப்பாய் என்று வேண்டி ஓம்படுத்துரைத்தல், தோழி இருவரையும் வழியனுப்பி வழிப்படுத்துரைத்தல், தலைவியைத் தலைவன் மெல்லக்கொண்டேகல், தலைவிக்குத் தலைவன் அடலெடுத்துரைத்தல், அயர்வகற்றல், வழியிலிருக்கும் ஊரவர்கள் தங்கள் ஊரில் தங்கிப் போகும்படிவேண்டி நெறிவிளக்கிக் கூறல், கண்டவர் மகிழ்தல், தலைவி தலைவனோடு வழி விளையாடல், தலைவிக்குத் தலைவன் நகரணிமை கூறல், நகர் காட்டல், பதி பரிசுரைத்தல், தலைமகளைச் செவிலி தேடல், செவிலிக்குத் தோழி உடன் போக்கறிவித்து அறத்தோடு நிற்றல், இவள் பருவத்திற்குத் தகாதென்று செவிலி கற்புநிலைக் கிரங்கல், கவன்றுரைத்தல், அடிநினைந்திரங்கல், நற்றாய்க் குரைத்தல், நற்றாய்வருந்தல், தலைவியின் கிளி அவளை அழைப்பதைக் கேட்டு தாய் வருந்தி கிளிமொழிக் கிரங்கல், கதிரவன் தலைவிக்கு வழியில் வெப்பம் உண்டாக்கக்கூடாது என்று

தாய் வேண்டி **சுடரோடிரத்தல், பருவ நினைந்து கவ றல், நாடத்துணிதல்,** கொடிக் **குறி பார்த்தல்,** செவிலி **சோதிடங் கேட்டல்,** செவிலி தேடச்சென்று, தலைவன் தலைவியின் அடிச் **சுவடு கண்டறிதல், சுவடு கண்டிரங் கல்,** அவர்களைப்பற்றி வழியில் செல்கின்ற மாதர்க ளாகிய **வேட்டமாதரிடம் கேட்டல்,** புறவைப்பார்த்து அவர்களை ஏன் தடுக்கக்கூடாது என்று கோபித்து **புறவோடு புலத்தல், குரவோடு வருந்தல், விரதியரை வினவல், வேதியரை வினவல், புணர்ந்துடன் வரு வாரைப் பொருந்தி வினவல்,** இருவரின் நலத்தைக் கேட்டறிந்து **வியந்துரைத்தல்,** எதிர் வருவார் இரு வரின் **இயைபெடுத் துரைத்தல்,** இருவரும் இடையூறில் லாமல் தலைவன் பதி சேருவர் ஆதலால் நீ திரும்பிப் போகலாமென்று எதிர் வருவார் செவிலிக்கு **மீள வுரைத்தல், உலகியல் புரைத்தல்,** வருந்தும் செவிலி க்கு ஆறுதல் கூறி எதிர் வருவார் திரும்ப அழைத் துக் கொண்டு **அழுங்குதாய்க் குரைத்தல்** ஆகிய துறை களெல்லாம் உடன்போக்கின் பாற்படும்.

---

## வரைவுமுடுக்கம்.

உடன்போக்கு நிகழாதாயின் வரைவு முடுக்கம் நிகழும். அதாவது விரைவில் மணஞ்செய்து கொள் வதைத் தலைவன்பால் தோழி வேண்டல். தோழி தலைவனை எதிர்படமுடியாத காரணத்தால் **வருத்த மிகுதிகூறி வரைவு கடாதல்,** தலைவியின் உயர் நிலைமை கூறித் தலைவன் வரைவு மறுத்தலாகிய **பெரும் பான் மைகூறி மறுத்தல்,** தோழி தலைவியின் இணக்கமறி விக்கும் **உள்ளது கூறி வரைவு கடாதல்,** தோழி தலை

வன் வரும் வழி முதலியவற்றின் ஏதங்கூறியிரவரவு விலக்கல், களவு ஒழுக்கத்தினால் வரும் பழிவர வுரைத்துப் பகல்வரவு விலக்கல், தோழி தலைவனை வரைவு வேண்டி தோழுதிரந்து கூறல், களவு ஒழுக்கத்தைத் தாயறிவு கூறல், தலைவி வரைவு வேண்டுதல் கூறி மந்திமேல்வைத்து வரைவு கடாதல், காவன் மேல் வைத்துக் கண்டுயிலாமை கூறல், பகலுடம் பட்டாள் போன்று இரவரவு விலக்கல், இரவுடம் பட்டாள் போன்று பகல் வரவு விலக்கல், இரவும் பகலும் வரவு விலக்கல், தலைவனுக்குத் தோழி காலங் கூறி வரைவு கடாதல், தலைவன் வரைவுக்கு உடன்படாமல் இருப்பத் தோழி தலைமகளுக்குக் கூறி நீயே அவரிடம் சொல்லென்றல் கூறுவிக்குற்றல், அதுகேட்ட தலைமகன் அவ்வாறு சொல்லுதற்கு இரங்கி சேலவு நினைந்துரைத்தல், தோழி தலைவனிடம் தலைவியின் போலி வழி வுரைத்து வரைவு கடாதல் முதலியன வரைவு முடுக்கத்தின் துறைகளாம்.

---

## வரைபொருட் பிரிதல்.

வரைவுக்கு உடம்பட்ட தலைமகன மணத்திற்கு வேண்டிய பொருளின் பொருட்டுப் பிரிதல வரைபொருட் பிரிதல் எனப்படும்.

தலைவன் பரிசம் எவ்வளவென்று கேட்டலுக்கு தோழி பதில் சொல்லுதலாகிய முலை விலை கூறல், தலைவிக்குக் கருப்பம் உண்டானல் இகழ்ச்சி வரும் என்று வருமது கூறி வரைவுடம் படுத்தல், தோழிக்குத் தலைவன் வரை பொருட் பிரிவுரை யெனக்கூறல்,

தோழி தலைவனை நோக்கி நீயே கூறென்றல், தலைவன் தலைவிக்குக் கூறாமல் தோழியிடம் பிரிவுரைத்துச் சொல்லாதேகல், தலைவிக்குத் தோழி தலைவன் பிரிந்தமை கூறல், தலைவி தன் நெஞ்சொடு கூறல், நெஞ்சொடு வருந்தல், ஆற்றுதல் காரணமாகத் தோழி தலைவி வருத்தங்கண்டுரைத்தல், தோழி தலைவியுந் தானும் வருந்துவதைப் பிறர் ஐயுறாதபடி வருத்தத்தை மறக்கவேண்டுமென்று வழியொழுகிவற்புறுத்தல், அதற்குத் தலைவி இணங்காமல் தனது வருத்தமிகுதி கூறும வன்புறை யெதிரழிந்திரங்கல், தலைவன் மீண்டு வருவது உண்மையன்று என்னும் தலைவிக்குத் தோழி வாய்மை கூறி வருத்தந் தணித்தல், தலைவி தேறாது புலம்பல், தோழி காலமறைத்துரைத்தல், தலைவிக்குத் தோழி ஒருவருடைய தூது வரவுரைத்தல், அது தலைவனது தூதன்று எனத் தலைவி தூதுகண்டழுங்கல், தலைவியின் மெலிவுகண்டு செவிலி கூறல், செவிலி தலைவியின் மெலிவு காரணம் யாதாவது ஒரு பேய்த் தெய்வத்தின் கோளென்று குறி கேட்பதாகிய கட்டு வைப்பித்தல், உண்மை தெரிந்துவிடுமோ என்று தோழி கலக்கமுற்று நிற்றல், குறி சொல்லுபவன் தலைவி மெலிவிற்குக் காரணம் முருகணங்கென்று கட்டுவித்தி கூறல், தாயர் அது நீக்கும் பொருட்டு வேலனுக்குப் பூசை இயற்றுவித்து வேலனை அழைத்தல், இது தவறென்று தலைவி வருந்தி இன்னலெய்தல், வேலனுக்கு வெறியாட்டுச் செய்வதைத் தலைவி விலக்கக் கருதி வெறிவிலக்குவிக்க நினைதல், முருகணங்கு முதலியயாதும்தனக்கு இல்லை என்று தலைவி தோழிக்குக் கூறி அறத்தொடு

நிற்றலையுரைத்தல், உண்மையைத் தமருக்கு வெளிப் படுத்தவேண்டுமென்று தலைவி தோழிக்கு அறத்தோடு நிற்றல், தோழி அவ்வாறு செய்தல் பிறரிகழ்ச்சிக்கு இடமாம் என்று தலைவியின் ஐயந்தீர வேலனை வெறி விலக்கல், செவிலிக்குத் தோழி அறத்தோடு நிற்றல், நற்றாய்க்குச் செவிலி அறத்தோடு நிற்றல், தலைவிக்குத் தோழி தலைவனின் தேர் வரவு கூறல், மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல், யாருடைய மணமுரசோ எனத் தலைவி ஐயுற்றுக்கலங்கல், தலைவிக்குத் தோழி தலைவனது நிதி வரவு கூறாநிற்றல் ஆகிய துறைகளெல்லாம் வரை பொருட் பிரிதல் என்னும் பகுதியினுள் அடங்கும்.

---

## மணஞ்சிறப்புரைத்தல்.

தோழி தலைவிக்குத் தலைவனின் மணமுரசுகூறல், தோழி மகிழ்ந்துரைத்தல், மணம் நிகழ்ந்தபின் தலைவனுக்குத் தலைவி இணக்கமாய் நடப்பதைத் தோழி செவிலிக்கு வழிபாடு கூறல், இருவரும் நடத்தும் இல்வாழ்க்கை நலத்தைக் கண்ட செவிலி அதன் தன்மையை நற்றாய்க்குச் சொல்லுதலாகிய வாழ்க்கை நலங்கூறல், தலைவனின் காதல் மிகுதியைச் செவிலி காதல் கட்டுரைத்தல், நற்றாய்க்குச் செவிலி தலைவியின் கற்பறிவித்தல், கற்புப் பயப்புரைத்தல், மறுவுதலுரைத்தல், கலவியின்பங் கூறல் என்னுந் துறைகள் மணஞ் சிறப்புரைத்தல் என்னும் பகுதிகளாம்.

---

## ஓதற்பிரிவு.

இல்லற நிலையில் தலைவன் மிகுந்த கல்வியை நாடு தற் பொருட்டும் தனது கல்வி நலனைப் பிறர்க்கு உணர்த்துதல் பொருட்டும் தலைவன் தலைவியைப் பிரிந்து போதல் ஓதற்பிரிவு எனப்படும். அதன் துறைகளாவன:—

தலைவன் தோழிக்குக் **கல்வி நலன் கூறல்,** தோழி தலைவிக்குத் தலைவன் கல்வியின் பொருட்டு **பிரிவு நினை வுரைத்தல்,** அதனைக்கேட்ட தலைவியின் மனக்கலக்கங்கண்டு தோழி தனக்குள் சொல்லிக் கொள்ளும் **கலக்கங் கண்டுரைத்தல்,** பிரியேனென்று தலைவன் சொல்லிய **வாய்மொழி** கூறி **தலைமகள் வருந்தல்** முதலியன அவைகள்

---

## காவற்பிரிவு.

தலைவன் எல்லா உயிர்களையும் பாதுகாக்கும் அரசனது கடமையின் பொருட்டு பிரிதல் காவற் பிரிவு எனப்படும்.

தோழி, தலைவிக்கு தலைவனது காவற் **பிரிவறிவித்தல்,** தலைவி, தலைவனின் **பிரிவு கேட்டிரங்கல்,** ஆகிய இரண்டு துறைகளும் காவற் பிரிவினுள் அடங்கும்.

---

## பகைதணிவினைப்பிரிவு.

அரசர்க்குள் சமாதானஞ் செய்தற் பொருட்டும் பிரிதல் பகைதணி வினைப்பிரிவு எனப்படும். தலைவிக்குத் தோழி **பிரிவுகூறல், வருத்தந்தணித்தல்** என்னும் இரண்டும் அதன் பகுதிகளாம்.

---

## வேந்தற்குற்றுழிப்பிரிவு.

அரசனுக்கு உதவியாகப் போரின் பொருட்டுத் தலைவன் பிரிந்தமையை தோழி தலைவிக்குப் பிரிந்தமை கூறல், தலைவி பிரிவாற்றுமை கார் மிசை வைத்தல், தலைவன் தலைவியை நினைந்து வானேக்கி வருந்தல், தலைவி கூதிர் கண்டு கவறல், தலைவி தாயினிடம் முன்பனிக்கு நொந்துரைத்தல், தலைமகன் பின்பனி நினைந்திரங்கல், தலைவி இளவேனிற் கண்டு இன்னலெய்தல், தலைவன் குறித்த காலத்து வருவானென்று தலைவிக்குத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தல், தலைவன் வராமையால் தலைவிக்குத் தோழி இது பருவமன்றென்று கூறல், அதனைத் தலைவி மறுத்துக் கூறல், தோழி தலைவனது தேர் வரவு கூறல், போர்முடிந்த பின் தலைவன் தலைவியை நினைத்தலாகிய வினைமுற்றி நினைதல், தலைவன் தலைவியின் நிலைமையை நினைந்து தேர்பாகனுக்குத் தேரை விரைவில் செலுத்தும்படி நிலைமை நினைந்து கூறல், தேர்க்கு முன் செல்லக் கூடாதென்று முகிலொடு கூறல், தலைவிக்குத் தோழி தலைவனின் வரவு எடுத்துரைத்தல், தோழிக்குத் தலைவன் தலைவியைப் பிரிவின்கண் மறவாமை கூறல் ஆகிய துறைகளெல்லாம் வேந்தற் குற்றுழிப் பிரிவு என்பதனுள் அடங்குப.

---

## பொருள் வயிற்பிரிவு.

பொருள் தேடுதற் பொருட்டு தலைவன் பிரிவதைத் தலைவிக்கு அறிவிக்கும்படி தோழியைத் தலைவன் ஏவுதலாகிய வாட்டங்கூறல், தலைவிக்குத் தோழி

தலைவனின் **பிரிவுநினை வுரைத்தல்,** தலைவி தலைவன் பிரிவு **ஆற்றாது புலம்பல்,** தலைவனுக்குத் தோழி தலைவியின் **ஆற்றாமை கூறல்,** பிரிந்து செல்வதால் பாலை நிலத்தவனாகிய தலைவனை மருத நிலத்தவனாக்கி தலைவி புலந்து கூறும் **திணை பெயர்த்துரைத்தல்,** தலைவன் பொருள்வயிற் பிரிவு திண்ணமென்று தோழி தலைவிக்குப் **பொருத்தமறிந்துரைத்தல்,** தலைவிக்குத் தோழி தலைவன் **பிரிந்தமை கூறல்,** தலைவியின் துயரத்திற்குத் தோழி வருந்தி **இரவுறுந் துயரத்திற்கிரங்கி யுரைத்தல்,** தலைவி தலைவனின் **இகழ்ச்சி நினைந்தழிதல்,** தலைவன் நினைவுகாரணமாக தலைவியின் **உருவுவெளிப்பட்டு நிற்றல்,** தலைவன் **நெஞ்சோடு நோதல், நெஞ்சோடு புலத்தல், நெஞ்சோடு மறுத்தல்,** தலைவியின் பொருட்டு தோழி **நாளெண்ணி வருந்தல்,** தலைவியின் பொருட்டு மீளுந்தலைவன் **ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தல்,** மீளுந் தலைவன் தலைவியின் பொருட்டு **பருவங்கண்டிரங்கல்,** தலைவன் **முகிலோடு கூறல்,** தலைவிக்குத் தோழி தலைவனது **தேர்வரவு கூறல்,** மீளுந்தலைவனை **இளையரெதிர் கோடல்,** மீண்ட தலைவன் தலைவியைக் **கண்டுள் மகிழ்ந்துரைத்தல்** என்னுந் துறைகள் பொருள்வயிற் பிரிவின் பாற்படும்.

---

## பரத்தையிற்பிரிவு.

தலைவனைப் பரத்தையர் சேரியிற் **கண்டவர் கூறல்** தலைவனைப் பரத்தையர் எதிர்கொண்டமை கேட்ட தலைவி தன் வருத்தத்தைப் புலப்படுத்தாமல் இருப்பதைக் கண்ட தோழி தலைவியின் தன்மையை உவந்து **பொறையுவந்துரைத்தல்,** தலைவி தன் வருத்தத்தைப்

பொதுப்படக் கூறி **வாடியழுங்கல்,** தலைவனை தலைவி கனவில் கண்டு சேராமல் ஊடினமை தலைவி தோழிக்குச் சொல்லுதலாகிய **கனவிழந்துரைத்தல்,** தலைவி விளக்கைப் பார்த்து நீயாவது பரத்தையிற் பிரிவு பொருத்தமில்லாதென்று தலைவனுக்குச் சொல்லக் கூடாதோ என வெறுத்துக் கூறுவதாகிய **விளக்கொடு வெறுத்தல்,** பரத்தையிற் பிரிந்த தலைவன் தலைவியினிடம் வாயில் வேண்ட வாயிலாக வந்தவர்களுக்குத் தலைவனைப் பரத்தையர்க்கே கொடுத்துவிட்டதாகக் கூறும் **வாரம் பகர்ந்து வாயின் மறுத்தல்,** பள்ளியறையில் தலைவி சேர்க்கைக் கிணங்காது தலைவனோடு ஊடுதலாகிய **பள்ளியிடத்தூடல்,** தலைவன் மீண்டும் பரத்தையர் பிரிவு தகாதென்று வீட்டிலுள்ளார் செவ்வணி விடுக்கக் கூறும் **செவ்வணிவிடுக்க இல்லோர் கூறல்,** தலைவி **அயலறிவுரைத்து அழுக்க மெய்தல்,** தலைவியின் தூது போன்ற செவ்வணிகண்டு அவற்றைத் தலைவன் ஏற்க வேண்டுமென்று வாயில்கள் கூறும் **செவ்வணி கண்ட வாயிலவர் கூறல்,** தலைவன் தலைவிபால் மீண்டு வரக்கண்ட வாயில்கள் தங்கருத்துக்கூறும் **மனைபுகல் கண்ட வாயிலவர் கூறல்,** தலைவி ஊடல் தணிந்து முகமலர்ச்சியடைந்ததைக் கண்டவர் கூறும் **முகமலர்ச்சி கூறல்,** ஊடல் தணியாவிடத்துத் தலைவிக்கு ஊடல் தணிதல் அவசியமென்று பக்கமிருப்பார் கூறும் **காலநிகழ் வுரைத்தல்,** தலைவன் தலைவியை ஊடல்நீக்கிச் சேர்ந்ததைப் பிறர் கூறும் **எய்தலெடுத்துரைத்தல்.** தலைவன் பரத்தையிற் பிரிதல் கூடுமென்றெண்ணித் தன்னையே சேர்தலை விரும்பி ஊடும் **கலவி கருதிப் புலத்தல்,** பள்ளியறையில் தலைவி தலைவன் பரத்தையிற் பிரியுங் குறிப்

பறிந்து தலைவி ஊடும் குறிப்பறிந்து புலந்தமை கூறல், தலைவனை வாயிலவர் வாழ்த்தல், ஆற்றிற் ஆடக்கூடிய வெள்ளம் வருவது கண்டு கூறும் புனல் வரவுரைத்தல், பரத்தையர் தலைவனது தேர்வரவுகண்டு மகிழ்ந்து கூறல், தலைவனைப் பற்றும் விருப்பத்தோடும் பரத்தையர் புனல் விளையாட்டிற்றம்முளுரைத்தல், பரத்தைத் தலைவி தலைவனுக்குத்தானே மனைக்கிழத்தி என தன்னை வியந்துரைத்தல், பரத்தைத் தலைவியை கற்புடைத் தலைமகள் நகைத்துரைத்தல், தோழிக்குத் தலைவன் செயலைக் கூறுவதற்குத் தலைவி நாணுதல் கண்டு மிகுத்துரைத்தல், தோழி தலைவிக்கு பாணன் வரவுரைத்தல், தலைவனை தோழியியற் பழித்தல், உழையரியற் பழித்தல், அவற்றை மறுத்தத் தலைவனைத் தாங்கி தலைவி இயற்பட மொழிதல், தலைவன், தலைவியை நினைந்து வியந்துரைத்தல், தலைவன் வாயிற் பெறுது மகன்றிற நினைதல், தலைவன் வாயிற் கணின்று தோழிக் குரைத்தல், தலைவன் வாயில் வேண்டித் தோழி கூறல், தலைவியை தோழி வாயில் வேண்டல், ஊடிய தலைவியை நகைத்து மனையவர் மகிழ்தல், தோழிக்குத் தலைவி வாயின் மறுத்துரைத்தல், தலைவி வாயில் வேண்டிய பாகனொடு வெகுதளுல், பாணன் புலந்துரைத்தல், இல்லோர் தலைவன் விருந்தோடு செல்லத் துணிந்தமை கூறல், தோழி தலைவியின் ஊடல் தணிவித்தல், தலைவன் பள்ளியிடத்துச் சேர்ந்தபோது தலைவி அணைந்தவழியூடல், பரத்தையைத் தலைவன் புனலாட்டு வித்தமை கூறிப்புலத்தல், கலவி கருதிப் புலத்தல், மிகுத்துரைத் தூடல், தலைவன் தலைவியின் ஊடனீடிவாடியுரைத்தல், தலைவி துனியொழிந் துரைத்

தல், தலைவன் பாராட்டிய புதல்வன் மேல் வைத்துப் புலவி தீர்த்தல், கலவியிடத்தூடல், தலைவன் முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல், தலைவன் தலைவியைச் சேர்ந்தபின் தலைவி பரத்தமையைக் கண்டமை கூறிப் புலத்தல், தலைவிக்குத் தோழி அருளினால் யாவருக்கும் தலைவன் நல்கும் ஊதியமெடுத்துரைத்தூடறீர்த்தல் என்பன பரத்தையிற் பிரிவு என்பதனுளடங்கும்.

இவ்வாறாக துறைகள் நானூறுக்கும் தெளிவு திருக்கோவையார் செய்யுள்கடோறும் பேராசிரியர் உரைக்கும் உரைத்திறத்தாற் கண்டு கொள்க.

# பழந் தமிழர் நாகரிகம்

## அல்லது

# தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து.

தொல்காப்பியமே இப்போதுள்ள எத் தமிழ் நூலுக்கு முற்பட்ட முழுத்தமிழ் நூலென்பது தமிழ் மாணவர் யாவரும் நன்கறிந்த தாகும். அந்நூற் பொருளதிகாரமானது பண்டைத் தமிழர் பழக்க வழக்கங்களையும், நூன் முறைகளையும், பிற சிறப்புக் களையும் ஆய்ந்தறிதற்குப் பேருதவி புரியும் பெற்றி வாய்ந்ததாகலின், அதன்கட்போந்த கருத்துக்களை அறிந்து கொள்ளுதல் தமிழ் கற்பார் கடமையாகும். அவைகள் எளிதின் விளங்குதற்பொருட்டு இவ் வுரை நடை நூல் இயற்றப்படுகின்றது.

தொல்காப்பியமானது குமரியாறு தமிழ் நாட்டின் தென்னெல்லையாக விளங்கிய காலத்தே தோன்றியது. 'குமரித் தீம்புனல்' என்பதைக் காக்கை பாடினியார் எல்லையாகக் குறித்தமை காண்க. குமரியாறு கடல் கொள்ளப்பட்ட பின் கடைச்சங்கம் நிறுவப்பட்டது. கடைச்சங்கத் தொடக்கமும், பாரத காலமு மொன்றெனலாம். பாரதப்போர் நடந்தது கி. மு. 1200-க்கு முன்னன்றிப் பின்னில்லை. அதற்கு முன் இராமாயணப் போர் நிகழ்ந்தது. வால்மீக ராமாயணத்துள், இடைச்சங்கமிருந்த கபாடபுரம் குறிக்கப்பட்டிருத்தல் முதலிய பல காரணங்களால், இடைச்சங்க காலமும் இராமாயண காலமுமொத்துள்ளன. இடைச்சங்க காலம், கி. மு. 2000 க்கு முற்

பட்டதென்ன இடமிருத்தலின், இடைச்சங்க நூலாகிய தொல்காப்பியமும், அத்துணை காலத்திற்கு முன்னே தொடங்கி யிருக்கவேண்டும். தொல்காப்பியத்தின் சில பகுதிகள் பிற்காலத்தனவென்னில், அப்பகுதிகள் பிற்காலத்தே சேர்க்கப்பட்டனவென்று கொள்ளுவதே பொருத்தமாம். அப்பகுதிகள் இயற்றப்பட்ட காலமே ஆதித் தொல்காப்பியத்தின் காலமென்பது பொருந்தாது. பாரத காலத்திலே வியாசர் வடமொழி வேதங்களை நான்காக வகுத்தனர். அவ்வகுப்புக்கு முன்னேயே தொல்காப்பியம் நிலவிற்றென்பது ஆசிரியர் நச்சினார்க்கினியர், தொல்காப்பியப்பாயிரத்துட் போந்த நான்மறை, வியாசர் வகுத்த இருக்கு, யசுர், சாம, அதர்வணமல்லவென்று தெரித்தமையால் விளங்கும். வடமொழியாளர் கலப்பு, இராமாயண காலத்திற்கு முன்னேயே ஏற்பட்டதாகும். அக்கலப்புக்குப் பின்னேயே தொல் காப்பியம் ஏற்பட்டிருத்தல் கூடும்

தொல்காப்பியர் காலத்து மக்கள் நாகரிகம், அவருடைய நூலால் நன்கு விளங்கும் எழுத்துக்கள் இருந்தன. நூல்கள் இருந்தன. கடவுள், உயிர், மெய், வினை என்னும் மெய்ந்நூற் கருத்துக்களை மக்கள் உணர்ந்திருந்தனர். மக்கள் நகர்களில் வதிந்தனர். தொழிற் பாகுபாடுகள் இருந்தன. உழவு, சிற்பம், ஓவியம், வணிகம், மருத்துவம், இசை, கடற்செலவு என்பன பண்டைத்தமிழர் நன்கறிந்தனவே. அரசர் இருந்தனர். போர் வாழ்க்கையும், இன்ப வாழ்க்கையும், சமய வாழ்க்கையும் நிகழ்ந்தன. இல்லறமுந் துறவறமும் கல்வியும் சிறந்திலங்கின. நூற்பொருள்களை அகம், புறம் எனப் பகுத்தாய்ந்தமை

யால், பண்டைத்தமிழர் மன அறிவு சான்றவரென்பது தெளிவு. இன்ப வாழ்க்கையாய அக வொழுக்கத்தைச் சிறப்பாகப்போற்றினமையால், அவர்கள் உணர்ச்சி (Emotion) யென்னும் உள்ளப் பான்மையைக் கூரியதாகப் பெற்றவர்கள் என்பது புலனும். இக்காரணம் பற்றியே, தத்துவ நூலினும், பாவகை யிலக்கியங்களே தமிழர்க்குட் சிறந்திலங்குகின்றன வென்ப.

பண்டைத்தமிழறிஞர், வாழ்க்கைக்கு நன்மை பயப்பனவற்றையும், உயிர்க்குறுதி பயப்பனவற்றையுமே இலக்கியங்களிலே நவிலப்பெறுதற்குரிய பொருளாகக்கொண்டனர். 'பொருள்' என்ற சொல், பல கருத்துக்களைக் குறிக்கும். ஐம்பொறிகட்குப் புலனுவன யாவும் பொருளே. மனத்தால் உணரப்படுவனவும் பொருளே. சொற்களின் பயனும் பொருளே. 'முப்பொருள்' என்ற விடத்து இறை, உயிர், தளை என்னு மூன்றாகிய பதி, பசு, பாசம் என்பன பொருளெனப்பட்டன. 'உறுதிப்பொருள் நான்கு' என்ற விடத்து, அறம், பொருள், இன்பம், வீடு என்பன குறித்தவாறாயிற்று. 'நாடிய பொருள் கைகூடும்' என்ற கம்பராமாயண நாந்திச்செய்யுட் பகுதியிலே, 'பொருள்' என்பது கல்வியுஞ் செல்வமுமாமெனை, ஆசிரியர் சிவஞான முனிவர் செப்பினர். உலகமே, சொல்லுலகம், பொருளுலகமென் றிருதிறப்படுமெனின், சொல்லிற்கு வேறாயுள்ள எதுவும் பொருள் எனப்படுமென்னலாம். அகப்பொருளிலக்கணத்துள், நிலமும் பொழுதும், முதற் பொருள் எனப்பட்டன. புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பன உரிப்பொருள் ஆமாதலின், செயல்களும்,

பொருளென்ற சொல்லாற் குறிக்கப்படுதல் காண்க. பொருளியலுள், பண்பு முதலியனவும் பொருளாகக் கூறப்பட்டன. இவற்றையெல்லாம் பொருள் என்பது பொதுவாகச் சுட்டுமாயினும், சிறப்பாகக் கருது மிடத்து, மண், பொன், நெல் முதலிய செல்வமே பொருள் எனப்படும்.

ஆசிரியர் தொல்காப்பியனார், பொருளதிகாரத் தொடக்கத்தே, பொருள் என்பது யாதென்று வரையறுத்தோதிற்றிலர். அகம், புறம் என்னுமிருவகைப் படும் உறுதிப்பொருளினையும், அவை கைவருதற் குரிய வாழ்க்கை வகையினையும், அவற்றைச் செய்யு ளுளமைத்துணர்த்து முறையினையும், செய்யுட்பய னுய மெய்ப்பாட்டினையும், கருத்தினை விளக்குதற் கருவியாய உவமையின் இலக்கணத்தையும், சொன் மரபினையும் ஆசிரியர் பொருளதிகாரத்துட் கூறிப் போந்தனர்.

உயிர்களெல்லாம் இன்பத்தை நாடுகின்றன. இன்பம், உலக இன்பமெனவும், கடவுளின்பமெனவும் இருவகைத்து. உலக வின்பம் நிலையில்லாததேயாயி னும், அதனை நுகர்ந்து கழித்தபின்பே, உயிர்கள் வீட்டின்பத்தை யவாவும். உள்ளத்தின் கண்ணே தோன்றுவதாய்ப் புறக் கண்ணிற்குப் புலனாகாத உணர்ச்சிகள் யாவும் '**அகம்**' என்ற சொல்லாற் சுட்டப்படுதற்குரியனவே. அவ்வுணர்ச்சிகளுட் சிறந் தது இன்ப வுணர்ச்சி. தம்முட் பொருத்தமிக்க காதலன் காதலி யென்பார் உடனுறைவாலுளதாம் இன்பமே, உலக இன்பங்களுட் தலைசிறந்ததாகலின், அதனையே அவ்வின்பங்காரணமாய் நிகழும் ஒழுக்க முறை கூறுவான் போந்த இலக்கண நூலுட் சிறப் பாக 'அகப்பொருள்' என்றார்.

அகவொழுக்க மியம்புவார் அதற்குச் சார்பாய பிற ஒழுக்கத்தையும் புகழுதலியல்பே. ஆதலின் தலைவன் தலைவியர்க்குள் ஒத்த அன்பின் வாழ்க்கையை ஐந்திணையினுள்ளும், ஒவ்வா அன்பினைக் கைக்கிளை பெருந்திணையுள்ளும் அமைத்து, ஆசிரியர் திணை ஏழென்றனர். அவற்றின் இயல்பினை, அகத்திணையியல் இயம்பும். அகப்பொருள் என்பது ஒற்றுமையை யுணர்த்துவது போலப் புறப்பொருள் என்பது, வேற்றுமை குறிக்கும் போர், துறவு முதலியன வாமாதலின், அவற்றினியல்பினைப் புறத்திணையியல் கூறுவதாயிற்று. அகத்திணையியல், அகவொழுக்கத்திற்குரிய உறுப்பிலக்கணங்களையும், நாற்றிணைக்கும் பொதுவாய பாலைத்திணைத் துறைகளையுங் கூறுகின்றது. அக வொழுக்கத்துறைகளைக் கூறுமியல்கள், **களவியல், கற்பியல்** என்பன. அவ் வொழுக்கம், களவு, கற்பென இரு பகுதிப்படுதலின், ஆசிரியர் இருவேறியல் அமைத்தார். இரண்டிற்குஞ் சார்பாயுள்ளவற்றைப் பொருளியலுட் பெய்துரைத்தார். அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் உணர்த்துஞ்செய்யுட்கு உயிராயுள்ளது மெய்ப்பாடு; பொருளுணர்த்தற்கருவி உவமை; செய்யுட்பகுதிகள் உறுப்பு. அப்பகுதிகளின் பகுதி மரபு வழாத சொற்கள். ஆதலின், மெய்ப்பாடு, உவமை, செய்யுளுறுப்பு, மரபுச்சொல் என்ற நான்கினையும், ஆசிரியர் வெவ்வேறியலுள் விதந்தோதினர். ஆகவே, **தொல்காப்பியப் பொருளதிகாரம், அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது பகுதிகளை உடைத்தாயிற்றென்றறிக.**

## அகத்திணையியல்.

**அகம்** என்பது புறத்தார்க்கு உரைக்கப்படாத காதல். திணை யென்பது ஒழுக்கம். ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உளதாய காதலொழுக்கமே அகத்திணை யெனப்படும். அது பண்டைத் தமிழ் மக்களால் மூவகையாகப் பகுக்கப்பட்டது. அவை, ஒருபாற் காதல், ஒத்த காதல், ஒவ்வாக்காதல் என்ற முத்திறச் சார்பாய ஒழுக்கங்களாம். ஒத்த காதல், ஐந்து பகுதியாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும், திணையென்ற பெயர் பெறுதலின், ஒத்த காதலொழுக்கம் ஐந்திணையெனப்படும். ஏனைய இரண்டு வகையும் இரு வேறு திணைகளாகவே, அக வொழுக்கம் எழு திணையாதல் காண்க.

**கைக்கிளை** யென்பது ஒரு பக்கத்திற் கிளைப்பதாய அன்பு. (கை-பக்கம், கிளை-கிளைத்தல், தோன்றுதல்.) காதலிக்கப்பட்டவளுக்குக் காதலன்பால் ஒத்த அன்பில்லாமையும், முற்றிலுமன்பில்லாமையும், அவ்வாறே காதலிக்கப்பட்டவனுக்குக் காதலி பால் உள்ள நிலையும் கைக்கிளைப்பாற்படும். காதலிக்கப் பட்டவள், காமவுணர்ச்சி தோன்றாத பருவத்தவளாக இருத்தல் கூடும். ஒருவன் காமஞ்சாலாத இளநங்கை பொருட்டிபாற் காதலுணர்தல், நகைப்புக்கிடமாயிருத்தலின், அதனைச் சிறந்த கைக்கிளை வகைகளுள் ஒன்றாகப்பேசினர். ஆசிரியர் தொல்காப்பியனார் (தொல்-அகத்திணையியற்சூத்திரம் 50) காமஞ்சாலாதாள்பாற் றோன்றிய காதலுக்கு மருந்தின்மையின் அக்காதல் கூர்வான், "ஏமஞ்சாலாவிடும்பை" எய்துவன் என்

ஞர். அவ்விடும்பை காரணமாக அவன அவளைக
குறை கூறுதலும், நகைவிளைவிப்பதே. தன்குறையை
உணராதவன், பிறரால் துன்பமெய்தியகாலைத் தன்
னைத் தவறிலனுக மதிப்பதியற்கை. காதலன் ஒரு
வன் காதலியல்பறியாத கன்னியிடைத் தன் துன்ப
முரைப்பின், அவள் அத்துன்ப இயல்பையே யுணரா
மையின், அவனுக்கு அவள் யாது கூறுதல் ஒண்
ணும்? தன் னெஞ்சு மாத்திரம் அறியும் வகையாக
அவன் ஏதாவது கூறிக்கொண்டால், அப்போதும்
அவன் பதில் யாதையும் எதிர்பார்க்க முடியாது.
பதில் யாதும் பெருவிடினும், தன்னெஞ்சின் துய
ரத்தைச்சொல்லால் வெளியிடுதல் ஆறுதலளிக்குமாக
லானும், தன் உணர்ச்சி தனக்கே நகை விளைத்தலா
னும், "சொல்லியின்புறுதல்" கைக்கிளைக்குறிப்பு
என்ருர்.

இனி, ஐந்திணையொழுக்கம் நிகழ்வதற்கு முன்
காதலியை விருப்பொடு காண்டல், அவளை இன்ன
ளென்று துணிதற்கு முன் ஐயுறல், இன்னளென்று
துணிதல், அவட்குக்குறிப்புரைத்தல் என்ற நான்கு
துறைகளும் கைக்கிளைப்பகுதிகளாமென ஆசிரியர்
நச்சினார்க்கினியர் அகத்திணையில் ஐம்பத்திரண்டாஞ்
சூத்திர உரையுட் கூறிப்போந்தனர். இனி, வட
நாட்டு மணமுறைகளுள், ஆசுரம், இராக்கதம், பைசா
சம் என்பவற்றையும் அவ்வாசிரியர் கைக்கிளைப்பாற்
படுத்தினர். அது களவியல் பதினன்காஞ் சூத்திர
வுரையுட்காணப்படும். இம்மூன்று வகையும் சிறப்
பில்லாத கைக்கிளையெனப்பட்டன. தமிழ் நாட்டிலே
முல்லை நிலத்தினர், ஏறு தழுவிய ஆண் மகனுக்குத்
தமது பெண்ணைக்கொடுக்கும் வழக்கமுடையராயிருந்

தனர். கொல்லுந்திறலுடைய காளை யொன்றினைத் தனது உடல் வலியாலும், உள்ள உறுதியாலும் தன் வயப்படுத்தித்தழுவ வல்ல ஒருவனுக்கு ஓரழகிய பெண்ணைக்கொடுத்தல் மரபு. இது **சுயம் வரம்** என்பதையொக்கும். இதனை வடநூலார் ஆசுரமென்ப. இப்போதும் ஏறுதழுவுதலை ஓர் விளையாட்டாக ஒவ்வொரு ஆண்டிலுஞ் சிற்சில இடங்களில் நம் நாட்டு மக்கள் நிகழ்த்துகிறார்கள். அதனால் மடிவாரும் பலர். ஆனால், அது இப்போது மகட்கொடையொடு சார்ந்து வழங்கவில்லை. **இராக்கதம்** என்பது காதலிக்கப்பட்டாளை வலிந்து தம் வசப்படுத்தி மணந்து கோடல். **பைசாசம்**மென்பது, மூத்தாளையும், துயின்றாளையும், கள்ளுண்டு மயங்கினாளையும் கூடுதல்.

கைக்கிளைச் செய்யுட்களெல்லாம், ஆண்பாலாராற்பெரும்பான்மையும் பாடப்பெறுவன. சிறுபான்மை, பெண் பாலாரும் தமது ஒருபாற்காதலைப் பாடுதல் காணப்படும். அவ்வாறு அன்னோர் பாடுதல் பரிசில் கொடுப்பானைப் புகழ்தல் போல்வதாகலின் அது புறத்துப்பாடாண்டிணை யென்பதனுள் அடங்குமேயன்றி அகத்திணையாகாதென்பாருமுளர். ஆயின், குறுந்தொகையாய அகத்திணை நூலுட் காணப்படும் வெள்ளி வீதியார் பாட்டினை அகமெனக்கொள்ளின், அகத்தும் **பெண்பாற் கைக்கிளை**யுண்டெனக் கோடல் வேண்டும்.

ஒருபாற்காமத்தால் வருந்தும் ஒருவன் மடன்மா ஏறுவலெனக் கூறுவதும், கைக்கிளையெனவே ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறிப்போந்தனர். பிற்காலத்தார் கருத்தின்படி, மடலேறுவன் என்று கூறுவது

பெண்பாற் கைக்கிளைக்கு மூண்டென்ப. கைக்கிளைக் கண். காதலைத்தானே சொல்லிக் கொள்ளுதலன்றிக் காதலி மாட்டுப்பயன் கொள்ளக்கருதுவதில்லையெனவும், பயன் கொள்ளின் அது பெருந்திணைப்பாற்படுமென்றுங்கூறுப. காதலிக்கப்பட்டாளை மணத்தற் பொருட்டு மடன்மாவேறின், அது பெருந்திணையாகும். கைக்கிளை, பிறதிணைக்கேதுவாய காதலுக்குத் தோற்றுவாய் செய்தலின், அதனை முதற்கண் வைத்தனரென்ப. அகப்பொருட்டுறைகட்குப் பேரின்பக் கருத்துக் கொள்ளுவார், உயிர்கள் கடவுளையறியும் பக்குவம் எய்தாப்பருவத்தே, கடவுள் அவைகளை உய்விக்கக்கருதி அருட்செயல் நிகழ்த்துதல் கைக்கிளை போல்வதென்பர்.

இனி, பெருந்திணை யென்பது ஒவ்வாக்காதலைக் குறிக்குமென்பர். தலைவன் தலைவியரிருவர்க்கும் ஒருதன்மைத்தாய் நிகழும் ஒத்தகாதல் உலகிற் சிறுபான்மையே காணப்படுதலானும், ஒவ்வாக் காதலை பெரும்பான்மையாக நிகழுதலாலும் அஃது பெருந்திணையெனப்பட்டது. காதல் இருபாலும் உண்மையின்மையை ஆயாது பிறர் கருத்துப்படி நிகழும் மணத்தைப் பெருந்திணையுள்வைத்தோதி வடநூலார் கூறும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்னும் மணங்களைப் பெருந்திணைப்பாற்படுமென்பர் "பின்னர் நான்கும் பெருந்திணைபெறுமே" என்ற தொல்காப்பியக்களவியற் சூத்திரம் அவற்றைக் குறிக்குமென்பர். அச் சூத்திரம் பிற்காலத்ததே. பிரமமாவது நாற்பத்தெட்டி யாண்டு பிரமசரிய நிலையில் நின்றவனுக்குப் பூப்பெய்திய பன்னிரண்டு ஆண்டு வயதுடைய பெண்ணை மணஞ்செய்விப்பது.

பிரசாபத்தியமென்பது தலைமகன் குடும்பத்தார் கொடுத்த பரிசத்தின் இருமடங்கு அதிகமாகப் பொருள் கொடுத்துப்பெண்ணை மணஞ்செய்விப்பது. ஆரிடமென்பது பசுவிற்கும் காளைக்கும் நடுவே ஒரு பெண்ணை நிறுத்தி யவளைத் தத்தஞ்செய்து கொடுப்பது. தெய்வமென்பது வேள்வி செய்விக்கும் ஆசிரியனுக்குக் காணிக்கையாக ஒரு பெண்ணைக் கொடுப்பது. இவைகள் தமிழ் நாட்டிற்கு உரியனவல்லவாகலின், ஆசிரியர் தொல்காப்பியனார் இவற்றைப்பெருந்திணையெனக் கருதவில்லை. அகத்திணையுள் பெருந்திணைக்குறிப்பை ஆசிரியர் கூறுமிடத்து, அதை மடலேறிய திறம், இளமை தீர்ந்த திறம், தெளிதலில்லாத காமத்துமிகு திறம், மிக்ககாமத்துமிடல் என்ற நான்கையும் விதந்தோதினர். காதலரிருவரும் இயைந்து வாழ இடர்ப்பாடுகள் நேரின் அப்போது அவர்கள் காதல் பொருந்துமாறில்லை மடலேறுதல் தலைவர்பாலுள்ள மிகுந்த காதலை நிறைவேற்றுதற்கு இடரேற்பட்டகாலை நிகழ்வது. செவ்விய வாழ்க்கை நடத்துதற்குரிய பருவமில்லாதார் கலந்து நடத்தும் வாழ்க்கையும் ஒருவாறு பொருந்தா இயல்புடையதே. அதனையே ஆசிரியர் இளமைதீர்திறமென்றார். காதலனைப்பார்க்கிலும் காதலி மிகுதியான வயதுடைமை அதன்பாற்படும். காதலி அளவுகடந்த வேட்கையால் தன்னினும் குறைவு பட்ட காதலையுடைய தலைவனை வலிதிற் பெறக்கருதிய நிலையும், அவ்வாறே காதலன் மிகுதிப்பட்ட வேட்கையால் காதலியை வலிதின் மணந்துகொள்ளக் கருதிய நிலையும் பெருந்திணையின்பாற்படும். இவற்றை முறையே மிக்க காமத்து மிகுதிறம் என்றும், மிடல் என்றும் கூறினர். இவற்றை ஒரு சிறிது விளக்குவோம்.

மடலேறுதலென்பது பனங்கருக்காற் செய்த குதிரைமேலேறுதல். கன்னிபொருத்தியைக் காதலித்த வொருவன், அவளைப்பெற இயலாதபோது நாற்சந்தியில் உடம்பெங்கும் நீறு பூசித் தன் கையா லெழுதிய காதலியின் ஓவியத்தைக் கைப்பிடித்து, அதன் கண் கருத்தை நிறுத்தி, தன்னுடற்பிற்கு வரும் ஊறுகளைப்பொருட்படுத்தாது மடலேறி நிற்றல். அப்பொழுது கண்டார் சோதனை தருதியோ என்று கேட்டகாலை, அவன் அதற்கிசைந்து மடற் குதிரையை இழுப்பித்தல் வேண்டும். அப்போது பனங்கருக்குப்பட்ட அவன் உடம்பினின்றுஞ்சுரக் குங்குருதியானது வெண்ணீராகத்தோன்றின், அவன் விரும்பிய மாதினை அவனுக்கே மணஞ்செய்வித்தலும், வெண்ணீர் தோன்றாது இரத்தம் தோன்றின் அவனை ஒறுத்தலும் நிகழற்பாலன. இதன் கண் காதலிக்கு அறவே விருப்பமில்லாவிடத்துக் கைக்கிளையே நிகழ்ந்ததெனக் கருதவேண்டும். காதலி அவ்வாறின்றி உடன் போக்கிற்கு ஒருப்படாமை அல்லது இயலாமை யேற்பட்ட காலை, காதலனது விழைவு அளவு கடந்து மடலேறுதற்குக் காரணமா குமாயின், அஃதே பெருந்திணையாகும். காதலொவ் வாக்காலை நிகழும் வரைபாய்தல் முதலிய தற்கொலைச் செயல்களும் இதன்கண் அடங்குமென்ப ''தீயில் வீழ்கிலேன் திண்வரைபுருள்கிலேன்'', என்ற திரு வாசகமுங்காண்க.

''இளமை தீர் திறம்'' என்பது இரு பாலார்க்கும் ஒக்குமென்ப. மூத்த பெண்ணை மணத்தல் போல, இளமை தீர்ந்த ஆடவனொருவன் இளநங்கை யொருத்தியை மணத்தலும் பெருந்திணைப்பாற்படு

மென்ப. இருவரும் முதிர்ந்த பருவத்தே துற வொழுக்கம் கைக்கொள்ளாது, இன்பவாழ்க்கை நடத் துவதையும் ஆசிரியர் நச்சினர்க்கினியர் இதன் கண் அடக்குவர். காதன் மிகுதியால் தெளிவடையாது கலங்குந்தன்மை பெரும்பான்மை பெண்பாலாரிடத் தும், மிக்க காமத்தால் வலிந்து கோடல் பெரும் பான்மை ஆண்பாலாரிடத்துங்காணப்படும். பேரன்பு காரணமாக முதல்வன் திருவடி கோடப்பெறாது அதனை நாடிநிற்கும் அடியார்நிலை பெருந்திணைபோலு மென்ப.

பெருந்திணைத்துறைகட்கு உதாரணங்கள் கலித் தொகையுட்காணப்படும். (கலித்தொகை 62. நெய்தற் கலி 25. பார்க்க)

கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும், நிலம், பொழுது முதலியவற்றை ஆசிரியர் விதந்தோதிற் றிலர். ஐந்திணை யொழுக்கத்திற்கே அவற்றைச் சிறப்பாகக்கொண்டனர். ஐந்திணைக்குரிய ஐவகை நிலங்களுக்குள் பாலையென்பது பிற நான்கு நிலங் களுக்கும் பொதுவானதொன்றுகலின் அதனை யாசிரி யர் நடுவணது என்றார். பொது என்ற பொருளில் நடு என்ற சொல் ஆதியில் வழங்கிற்று. பாலைக்குரிய பிரிவொழுக்கம் காதலர் புணர்தற்கும், தலைவி பிரிந் திருத்தற்கும் இடையே நிகழ்வதாதலாலும் பிரிவுக் குச்சிறந்த காரணமாகிய பொருள், அறம், பொருள், இன்பம் என்ற மூன்றின் நடுவேயமைதலானும், பாலை நடுவெனப்பட்டதென்பாருமுளர். ஐவகைநிலத்துள் நால்வகை நிலமே தனித்தனி சிறப்பனவாகலின் நில வுலகத்தை நானிலமென்று கூறும் மரபு ஏற்பட்ட

தாகும். அகத்திணையியலுள் ஆசிரியர் நால்வகை நிலத்திற்குமுரிய முதல் கரு உரிப் பொருள்களைக் கூறிய பின் பொதுவாகிய பாலைக்குரிய துறைகளை விதந்தோதினர், பண்டைத்தமிழர், உலகத்தை ஐந்து பகுதியாகப் பகுத்தாய்ந்தனர். அவையாவன. **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை,** என்பன. மலையும், மலைசார்ந்த இடமும் **குறிஞ்சி** யெனப்படும். காடுங் காடுசார்ந்த இடமும் **முல்லை** யெனப்படும். வயலும் நாடுங்கூடிய இடம் **மருதம்**. கடலும் கடல் சார்ந்த இடமும் **நெய்தல்**. **பாலை**யென்பது விளைவு மிகுதியில்லாத வெறுந்தரைப்பரப்பு. முல்லையுங் குறிஞ்சியுமே பாலையாதல் பெரும்பான்மை பற்றிச் சிலப்பதிகாரம் நாடுகாண்காதையில்,

"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுயருறுத்துப்
பாலையென்பதோர் படிவங்கொள்ளும்"

என்பது கூறப்பட்டது. விளைவில்லாத நெய்தல் நிலமும் பாலையே.

ஆதியில், நால்வகை நிலங்களுக்குப் பெயர்கள், அவ்வந்நிலத்திலுள்ள பூவின்பெயராகவே அமைந்தன. பின்னர் அவற்றினிகழும் ஒழுக்கத்திற்கும் அப்பெயர்களே வழங்கலாயின. ஆசிரியர் நச்சினார்க்கினியர், ஒழுக்கத்திற்கேமுதற்கண் அப்பெயர்கள் அமைந்தன வென்பர். பூவின் வைத்து, ஒரு நிலத்திற்குப் பெயர் ஏற்பட்டதாயின் அந்நிலத்திலுள்ள பிற பூக்களின் பெயர்கள் அதனைக்குறிக்கும் பெயர்களாக வராமைக் கேதுவென்னையெனின், ஏதாவது ஒரு பூவினைச் சிறப்பாகக்கொள்ளவேண்டிய காரணம்பற்றியே யென்க. இதைவடநூலார் **அசோகவன நியாயம்**என்பர்.

குறிஞ்சிப்பூ, மிகத் தழைத்த இடத்தில் வதிந்தோர், மலைக்கு இட்ட பெயரே, பின்னர்ப் பெருவழக்காய் வந்திருத்தலுங்கூடும். மருதமரம் மிகுதிபற்றி மருத நிலத்திற்குப் பெயர் வந்ததுபோலும். ஒவ்வொரு நிலத்தினியல்பிற்கும்வேறாகியபகுதிகாட்டுதல்பற்றிப் பாலையென்ற பெயரெழுந்த தென்ப ரொருசாரார். பாலையென்ற பெயருடைய மரமுமுண்டு. ஒத்த காத லொழுக்கத்தின் ஐந்துபகுதியும் முறையே ஐந்து நிலத்திலுஞ் சிறப்பனவென்று கோடல் காரணமாக வே, நிலத்திற்கும் காதலொழுக்கத்திற்குந் தொடர்பு ஏற்பட்டது. கைக்கிளை, பெருந்திணையென்னு மிரண் டிற்கும் அத்தகைய பகுதிகளை விதந்து பாராட்டும் மரபின்மையின், அவற்றோடு நிலத்தை இயல்நூலார் தொடர்புபடுத்தவில்லை.

ஆசிரியர் தொல்காப்பியனார் இயற்கை நிலத் தையும் இயற்கைப் பொழுதையுமே முதற்பொரு ளென்றனர். அதுபற்றி நச்சினார்க்கினியர் செயற்கை நிலனும் செயற்கைப் பொழுதுமுள்ளன என்றார். அவை இன்னவென்று நன்கு விளங்கவில்லை. இரண் டல்லது மூன்று திணைக்குரிய கருப்பொருள்கள் கலந்த நிலத்தைச் செயற்கைநிலமென்றும் இயற்கைத் தன்மை மாறியபொழுதைச் செயற்கைப் பொழுதென் றும் கூறுதல்கூடும். செய்குன்றினைச் செயற்கைக் குறிஞ்சியென்றும், சம வெளியில் வளர்க்கப்படும் செடிப் பரப்பினையும் புற்றரைகளையும் செயற்கை முல்லை யென்றும், நகர மாடங்களைச் செயற்கை மருத மென்றும், அலை வீசும் பெருங் குளக்கரைகளைச் செயற்கை நெய்தலென்றும, செயற்கை மணற்பரப்

மைச் செயற்கைப் பாலையென்றும் கூறுதல் கூடும். இருண்ட பொழுதை இரவென்றும் ஒளியுள்ள பொழுதைப் பகலென்றும் கூறுவது செயற்கையே. பாலைக்கு முதற்பொருள் பொழுது ஒன்றே. அதற்குத் தனி நிலம் கூறப்படவில்லை.

ஒரு செயல் நிகழ்வதற்கு இடமும் பொழுதுந் துணைக்காரணங்களாவன எனினும், அவற்றின் இன்றியமையாமை நோக்கி, அவை முதற்பொருளெனப் பட்டன. நிலமில்லாவிடத்து மக்கள் யாண்டு வாழ்வர்? மக்களின் பிறப்பையும் இறப்பையும் பிற செயல்களையும் வரையறுத்து நிற்பது காலந்தானே நிலவுலகில் ஓரெல்லைப்பட்ட காலத்தளவு வாழ்தலே மக்கள் வாழ்க்கையாமாதலின், காலத்தின் பெருமை வெளிப்படை. நிலமென்பது மாயை. பொழுது என்பது காலதத்துவமெனின், மாயைதானே முதற் காரணமாதல் பற்றி, நிலமுமுதற்காரணமெனப்படும். காலதத்துவம் துணைக்காரணத்துள் முதலெனப்படும்.

இனி பொழுது என்னும் முதற்பொருளையாராய்வோம். பெரும்பொழுது ஆறெனவும், சிறுபொழுது ஆறெனவும் கூறுப. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன பெரும்பொழுது. வேனிலை இரண்டாகப் பகுக்காவிடின் பெரும்பொழுது ஐந்தேயாகும். மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என ஆறு சிறுபொழுது கொண்டனர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். அவர் கருத்தின்படி எற்பாடு என்பது பகலில் இருபது நாழிகைக்கு மேற்பட்ட பொழுதாகும். ஆறு பொழுதிற்குந் தனித்தனிப் பப்பத்து நாழிகை அவர் கூறி

னர். ஆசிரியர் சிவஞான யோகிகள் வைகுறுவிடியல் என்பது ஒரு பொழுதெனவும், எற்பாடு என்பது விடிந்த பின்னுள்ள காலைப் பொழுதைக் குறிக்கு மெனவுங் கொண்டு சிறுபொழுது ஐந்தே யென்றனர். திணை ஐந்தேயாதல்போலப்பொழுதும் ஐந்தென்பது அவர் கருத்துப்போலும்.

பண்டைக்காலத்திலே ஆவணியை முதல் மாத மாகக்கொண்டு மாதங்களைக்கணித்தல் ஓர் வழக்க மாயிருந்தது. ஞாயிற்றுக்குரிய வோரை சிங்க வோரை யென்றும், அதற்குரிய திங்கள் ஆவணி யாதலின், ஆவணி தொடங்கி மாதங்களை எண்ணுதல் ஓர் முறை யென்றும், ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறினர் அம்முறை சுமார் 7000 ஆண்டுகட்கு முன் தொடங்கியிருத்தல் வேண்டுமென்பது விண்மீன் கலை யாற் (வானூலாற்) புலனுகின்றது. ஆவணி முதல் மாதமாதல் பற்றி அதில் மூத்த பிள்ளையார் வழிபாடு ஏற்பட்டது போலும்.

இனி, ஆசிரியர் காலவியல்பு பற்றி கூறுவார், முல்லைக்குக் காரும், மாலையும் உரியபொழுதென்றார். ஆவணியும், புரட்டாசியும் கார்காலம். முயற்சியின் பொருட்டு அயலூருக்குச்சென்ற தலைவர் மீளுங்காலம் அக்காலமே. மீளும் சிறுபொழுது மாலையாகும். அவ ரை எதிர்பார்த்திருக்குங் காதலியின் கற்பொழுக்கம் முல்லைக்குரியதாதலின் அப் பொழுதுகளை முல்லைக் குரியனவாகக்கூறினர். நாள்தோறும் வெளிவேலை முடித்துத் தலைவன் வீட்டிற்கு மீளுங்காலம் மாலையே. தலைவியும் வீட்டுவேலை முடித்து ஓரிடத்திலிருக்குங் காலம் மாலையாதல் காண்க. இருத்தலாகிய தொழிலை

முல்லை யோடிணைப்பதற்கு ஏது என்னையெனின் முல்லை நிலமானது மாலைக்காலத்தில் தங்கி பொழுது போக்குவதற்கேதுவாய புற்றரையும் அதன்பால் நிழல்வீசும் மரங்களுங்கலந்த இடமே யாதலினென்க. ஆங்கிலமுறைப்படி தற்காலப் பார்க்குகள் (Parks) அத்தகையவாதல் காண்க.

**குறிஞ்சி** நிலத்திற்குரிய பெரும்பொழுது கூதிர் காலம். அது ஐப்பசியுங் கார்த்திகையுமாம். களவொழுக்கத்தில் தலைவியின் அருமைக்குக் காரணமாயும், மாவும் புள்ளும் துணையை விட்டுப்பிரியாது இன்புற்று வதியுங் காலமாயுமிருப்பது கூதிர் காலமாகும். கூதிர்காலத்தே, உயிர்கள் உடனுறையுமெண்ண முடையனவென்பது.

"அளவில் காரிழி கூதிரின் பருவம்வந்தணைந்தாற்
றளர்வரென்பது தவம்புரிவோருக்குந்தகுமால்"

என்றமையாலறிக. வெளிப்போக வொட்டாது தடுப்பதற்குரியகாலமாய மழைக்காலமே, உடனுறைவிற்கு இயைந்த காலம். குறிஞ்சிக்குரிய சிறுபொழுது யாமமாகும். மாலைக்காலம் உரையாடற்கும் வழிபாட்டிற்கும்,உணவுகோடல்முதலியவற்றிற்குமே இயைந்த நேரம இரவு பத்து நாழிகைக்கு மேற்பட்ட இடை யாமமே குறிஞ்சியின் உரிப்பொருளுக்குச் சிறந்த பொழுதாகும். முன்பனிப்பருவமும் குறிஞ்சிக்குரியதே. அதுவும் வெளியே செல்வதற்கு இடையூறாய் உடனுறைவிற்கே இணக்கமாகும் காலம் எனவறிக.

**மருதத்திற்கும், நெய்தலுக்கும்** முறையே வைகறையும், எற்பாடும் உரியபொழுதெனு ஆசிரியர்

கூறினர். மருதத்திற்கும், நெய்தலுக்கும் பெரும்பொழுது கூறப்படவில்லை. யாமத்தில் பரத்தையர் பால் இன்பம் நுகர்வார் தம் தலைவியர்பால்மீளுங்காலம் வைகறையாதலால், அது தலைவி ஊடுதற்குரிய காலமாகும், மருத நிலத்தே பரத்தமை சிறத்தலின், ஆங்கு ஊடலுக்குக் காரணமுண்டு. மருதநிலத்தில் உறையுங்காலத்தே, பரத்தமை நிகழும். பிரிந்து அயல் நிலத்துறையுங் காலத்தே, பரத்தமை நிகழ்த்தல் இல்லையாகும் அல்லது புலனாகாது. ஊடலுக்குப் பெரும்பொழுது கூறாமைக்கேது வென்னையெனின், அது மருத நிலத்திற் சிறுபொழுது காரணமாக வருதலானென்க. நாடோறும் ஒரு பொழுது பிரிவின் பயனாக அது நிகழ்வது

வைகறைப்போது கழிந்த பின், காலையிலே இரவு பிரிவாற்றாமையான் வருந்திய துயரங்குறைந்து இரக்கமுறுதல் நிகழும். மாலையிற்றலைவன் வரின், புணர்ப்பு விருப்பமுள்ளதாகலின், ஊடல் நிகழாது. யாமப்பொழுது கழிந்தபின், விருப்பங்குறைபட்டுத் துயில் மிகுதலுங் கூடுமாதலின் ஊடலுளதாம். விடிந்த பின் தலைவன் வரின் அடங்கிய சினத்தோடு வீட்டு வேலைகளிலே தலைவி யுள்ளஞ் செல்லும். வராவிடின், தலைவிக்குக் கழிவிரக்கந் தோன்றும் அவ் விரக்கமானது, கடல் சார்ந்தவிடத்தே சிறக்கும். கடலலை போல உயர்ந்து தாழுமியல்பு மனதிற்குளதாம். தலைவன் பிரிவை நினைந்து சினமிகினும், அவன் வரவை விழைந்து இரக்கந்தோன்றும். சினஞ்செலுத்தற்குரிய பொருளின்மையாற் குற்றந் தோன்றாவிடத்தே இரக்கம் நிகழும். கடல் வழிச் சென்றாரை எதிர் பார்த்திருக்குமிடம் நெய்தல். அவ்விடத்தே இருக்

குங்காலத்தே, கடற்காட்சி இரக்க வுணர்ச்சியை விளைத்தலின், இருத்தலை, அதற்குப் பொருளாகக் கூறுது, இரக்கத்தை உரிப்பொருளாகக் கொண்டது நெய்தல் நிலம் என்ப. இதுவும் நாடோறும் நிகழ்தற் குரிய தாகலின் இதற்கும் பெரும்பொழுது கூறு தொழிந்தார்.

மழை யொழிந்த பின் பனிக்காலமும், வேனிற் காலமுமே அயலூர்க்குச் செல்வதற்கு இயைந்த காலம், தை மாதத்திற்குமேல் ஆவணித்திங்கள்வரை யுள்ள ஆறுமாதமும் பிரிவிற்கு உரிய காலமாதலின் பின் பனிக்காலமும், வேனிற்காலமும் பாலைக்குரியன வென்றார். வேனிற்காலத்தே நண்பகலாகிய சிறு பொழுது பிரிந்து செல்வார்க்குத் துன்பம் விளைக்கு மெனத் தலைவி நினைத்தற்கு இடமாதலாலும், உடன் போக்கில் தலைவிக்குத் துன்பம் விளைக்குமென அவள் இனத்தார் நினைத்தற்கு ஏதுவாமாதலாலும், வேனிலை நண்பகலோடு சேர்த்துரைத்தார். பின்பனிக் காலத் திற்குச் சிறுபொழுது கூறவில்லை. பின்பனிக் காலத் தில் நண்பகல் அத்துணைத் துன்பம் விளையாது பின் பனிக்காலம் கடற்செலவிற்கும் பொருத்தமாதல் பற்றி இருவகைப்பிரிவிற்கும் அது உரித்தென்றார். இருவகைப்பிரிவு இன்னதென்று ஆசிரியர் கூறவில்லை. உரை இயற்றினோர் காலிற் பிரிவென்றும், கலத்திற் பிரிவென்றும் இருவகை கூறினர். வேனிலுள் இள வேனிற்காலம் காதலரது முதற் காட்சிக்கும் உடன்போக்கிற்குமுரியதே. இருவகைப் பிரிவிற்கும் வேனிற்காலமுமுரியதே என்று கொள்ளவுமிடமுண்டு

ஒவ்வொரு நிலத்திற்கு ஒவ்வோரொழுக்கஞ் சிறப்பினும், ஒரு நிலத்திலேயே ஐவகையொழுக்கமும்

நிகழ்தல் கூடும். ஒரு நிலத்திற்குரிய பொழுது மாறுதலுங்கூடும். ஒரு நிலத்திலுள்ள கருப்பொருள் மற்றொரு நிலத்தில் விளைதலுங்கூடும். நிலத்தினியல்பு மாத்திரம் மாறுவதில்லை. அதாவது குறிஞ்சி, குறிஞ்சியாகவே யிருக்கும். நெய்தல், நெய்தலாகவே யிருக்கும். குறிஞ்சியும், நெய்தலும் அடுத்திருப்பன வன்றி, ஒரு நிலந்தானே ஒரே காலத்தில் ஈரியல்பு உடையதாகாது. ஒரு பொழுதிலே அதற்குரியதல்லாத பிரிதோரொழுக்கம் நிகழின் அது பொழுது மயக்கமாம். ஐந்திணையின் வேறாகிய கைக்கிளை யொழுக்கமும், பெருந்திணை யொழுக்கமும் ஐவகை நிலத்தும் நிகழுமென்பார் "உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே" என்றார். ஐவகையொழுக்கத்திற்குக்காரணமானவைகளும், அவ் வொழுக்கத்தின் பாற் படுவனவே. அவற்றை நிமித்தமென்பர். தலைவி தலைவனோடு உடன்போகுதலும், அங்ஙனம் போகாது தலைவி மனையிலிருந்து இரங்குதலும் பிரிவின்பாற்படு மென்பது ஆசிரியர் கருத்து. பாலைக்குரிய வேனிற் பொழுதிலே முதற்காட்சியும், இயற்கைப் புணர்ச்சியும் நிகழ்தலின் பாலைக்கட் குறிஞ்சி மயங்குமென்ற கருத்துப்பற்றி "கலந்தபொழுதும் காட்சியுமன்ன" என்றார். இனி கருப்பொருள்களைப்பற்றி ஆராய்வாம்.

ஆசிரியர் ஆராய்வான் எடுத்துக்கொண்டது காதலொழுக்கமாதலின் அவ்வொழுக்கத்தின் பகுதிகளே உரிப்பொருள் எனப்பட்டன. நிலமுங் காலமும் பற்றித் தோன்றி யியங்கும் இயற்கை செயற்கைப் பொருள்களனைத்தும் கருப்பொருள் எனப்பட்டன. இயற்கையிலே உளதாய், மக்கள் செயல்கள் யாவற்

றிற்கும் பயன் நல்கும் தெய்வ வழிபாடு பிற செயல்களினுஞ் சிறந்ததாதலின், அதனையே கருப்பொருள் கூறுமிடத்து முதற்கண் வைத்தார்.

ஆசிரியர் நால்வகை நிலத்தையுங் கூறுமிடத்தே அவற்றிற்குரிய தெய்வங்களையும் குறித்தனர். (அகத்திணையியல் சூத்திரம் 5.) காட்டிற்குத் தெய்வம் மாயோன் என்று பிற்காலத்தார் கருதினும் மாயோளாகிய கருநிறமுடைய அம்மையையே சிறப்பாகக் கொள்ளவேண்டும். "மாயோள் மேய காடுறையுலகமும்" என்ற பாடமே சிறந்தது. காடுகிழாஅள் என்றதுமது. நாட்டுப்புறங்களிலும்காடுகளிலும் பெருவழக்காக வழிபடப்படுந் தெய்வம் சத்தியின் வேகவடிவமாகிய காளியே பிற்காலத்தே மாபொற்றுமை பற்றிக் கோவலர் மாயோன் வழிபாட்டைக் கைக்கொண்டனர். மாயோளும் மாயோனும் உடன் பிறந்தார் என்னுங்கொள்கையுங்காண்க. மாயோனுக்கு மருகனாகிய முருகன் வழிபாடு குறிஞ்சி நிலத்திற் சிறப்பாக நிகழ்ந்தது ஆனைமுகக்கடவுளின் வழிபாடும் குறிஞ்சி நிலத்திற்கே உரியதாயினும் ஐந்திணைக்காதலொழுக்கத்திற்குச் சிறப்பாவது முருகவழிபாடேயாமென்பதுபற்றி முருகனையே குறிஞ்சிக்குத் தெய்வமென்றார்போலும்.

"வேந்தன் மேய தீம்புனலுலகம்" என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறினமையால் மருத நிலத்துத்தெய்வம் வேந்தன் என்பது வெளிப்படை. இந்திரனை வேந்தனென்பதற்குக்காரணம் அவன் மழைத் தெய்வமாதல்பற்றியும், வயலுக்கு நீர் இன்றியமையாததுபற்றியுமென்க. 'இன்திறன்' என்ற சொற்

ருடரே இந்திரனென மருவிற்றென்ப. மன்திறம் என்றது மந்திரம் என மருவியது போல. மருத நிலத்திற்குரிய நகரங்களில் முதன்மையாக வழிபடப் பட்டதெய்வம் சிவன் என்பது. "நுதல்விழி நாட்டத் திறையோன் கோட்டமுதலாக" என்ற சிலப்பதிகார அடியாற்புலனுதலின் வேந்தனென்பானைச் சிவனென் பாருமுளர்.

நெய்தல் நிலத்திற்குத் தெய்வம் வண்ணன் என்பது. வண்ணன் என்ற சொல்லே வருணனாயிற்று. வண்ணன் என்பது கடல்நிற வண்ணனாகிய திருமாலினைக்குறிக்குமென்ப. நீர்க்குத்தெய்வம் அவனாதல் காண்க. பாலை நிலத்திற்குத் தெய்வம் கதிரவன். துர்க்கை என்பாருமுளர். போர்க்குத் தெய்வம் துர்க்கையாதலாலும், போர் பெரும்பாலும் பாலையில் நிகழ்ந்தமையாலும் துர்க்கையைப் பாலைக்குத்தெய்வ மென்பர். துர்க்கையே கொற்றவைபோலும்.

கடவுளுடைய சத்தியைக் கோர வடிவத்தில் வழிபடுவது காளி வணக்கமெனவும், சாந்த வடிவத் தில் வழிபடுவது உமைவணக்கமெனவும் பெயர் பெற்றது. போரில் நிகழ்ந்த வழிபாடு கொற்றவை வணக்கமாயிற்று. கடவுட் சத்தியை ஆண் வடிவமாக வழிபடுவது மாயோன் வணக்கமாகும். இக்கருத்து சிவாகமத்துட் பேசப்படுகிறது. தேவாரம் வேத சாரம் 101ம் பக்கத்தில், "சிவபிரானுடைய ஒருசத்தி தானே விநியோக காலத்தில் நான்கு பிரகாரமாக வேறுபடும். போகத்திற் பவானியும், பௌருஷத்தில் விஷ்ணுவும், கோபத்திற் காளியும், போர்த்திறனில் துர்க்கையுமாம்" என்பது காண்க.

அம்மை வழிபாடு, ஆனைமுகன் வழிபாடு, முருகன் வழிபாடு, சிவ வழிபாடு, திருமால் வழிபாடு கதிரவன் வழிபாடு என்னு மறுவகைவணக்கமே பிற் காலத்திற்பேசப்பட்ட அறுசமயத்திற்கு ஆதாரமா யினவெனவறிக. அவ்வாறு தெய்வங்கட்குப் பூசனை புரிவோர் அறுவகைப்பட்டபார்ப்பனர் எனப்பட் டனர்.

தெய்வ வழிபாட்டின் இன்றியமையாமைபற்றி முதற்பொருளாகிய நிலத்தைக்கூறவந்த இடத்தேயே கருப்பொருளாகிய தெய்வ வழிபாட்டையும் ஆசிரியர் உடன் கூறினர்.

பண்டைத்தமிழரது வேறு பல கடவுளரைப் பற்றிச் சொல்லதிகாரம 57-வது சூத்திரத்தில் ஆசிரி யர் கூறிப்போந்தனர். அதனுள் காலம், பால்வரை தெய்வம், வினைத்தெய்வம், சோற்றெய்வம், பூதத் தெய்வம், ஞாயிறு, திங்கள் என்பன விதந்தோதப் பட்டன. காலக்கடவுளைக் காலமென்றார். அக்கடவுளை உருத்திரனென்பாருமுளர். பால்வரை தெய்வமென் பது எல்லாக்கு மின்பதுன்பத்திற்குக் காரணமாகிய இருவினையை வகுக்குங் கடவுள். இக்கடவுளை அய னென்பாருமுளர். வினைத் தெய்வமென்பது அறத் தெய்வமென்று சேனாவரையர் கூறியுள்ளார்.

உலகில் உயிர்கள் வாழுங்காலை வினை செய்யப் படுதலின், உயிர்களை உடம்பினில் நிலைபெறச் செய் யுங் காத்தற்கடவுளாகிய திருமாலை வினைத்தெய்வ மென்பாருமுளர். சொல்லென்பது நாத தத்துவத்தி லுள்ள சூக்குமை வாக்கையும், அதன் வடிவமாகிய ஓங்காரத்தையுங்குறிக்குமென்பாருமுளர். ஞாயிறென்

பது சூரியனையுந் திங்களென்பது சந்திரனையுங்குறித்தல் வெளிப்படை. பூதமென்பது பூதகணங்களையும் ஐம்பூதங்களையுங் குறிக்கலாம். ஐம் பூதங்களைக் குறிக்குமிடத்து அவற்றின் தெய்வங்களை கொள்ளப் படவேண்டும். நிலத்திற்குத்தெய்வம் **அயன்** நீர்க்குத்தெய்வம் **அரி**. தீக்குத் தெய்வம் **அரன்**. காற்றிற்குத்தெய்வம் **மகேசுரன்** (முதல்வன்). வானிற்கு தெய்வம் **சதாசிவன்** (அருட்சிவம்).

இனி, பொருளதிகாரம் புறத்திணை யியலுள் 81-வது சூத்திரத்தில் "அமரர் கண்முடியும் அறுவகையானும்" என்றமையால் வானவருட்பட ஆறுவகையாரை வாழ்த்துதல் பண்டை மரபாகவிருந்தது. அவர், **வானவர், முனிவர், ஆனினம், மழை, அரசன், உலகம்** என்ப. அதை "வாழ்க அந்தணர்" என்னுந் திருப்பாசுரத்துட்காண்க. புறத்திணையியல் 88-வது சூத்திரத்தில் **கொடிநிலை, கந்தழி, வள்ளி** என்ற மூன்றும் கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வருமென்றனர். கொடிநிலையென்றது ஞாயிற்றை. கந்தழியென்றது நெருப்பினை வள்ளியென்றது திங்களை. பல கோள்களாற் சூழப்பட்டமையின் ஞாயிற்றைக் கொடிநிலையென்றார். கொடி-தொகுதி, வரிசை, கந்தழி என்பது பற்றினதை யழிப்பது என்ற பொருளில் நெருப்பினை ஆதியில் குறித்து நின்று பிற்காலத்தில் குறியிறந்த முதல்வனைக் குறிப்பதாயிற்று. "ஆக்கி அளித்தழிக்குங் கந்தழியின் பேருருவே" யென்ற இன்னிலை வாக்கியமுங் காண்க. திங்களை வள்ளி யென்றது தேவர்க்கு அமுதம் வழங்குதல்பற்றி. கடவுளென்ற சொல் மனமொழிமெய் காணப்படுமுலகமெல்லாவற்றையுங்கடந்த முழுமுதற் பொருளைக்குறிக்கும் என

வறிக. இதுகாறுங் கூறியவாற்றால் பண்டைத்தமிழர் முழு முதற்கடவுளையும் அவர்க்கீழ் நின்று பிறரை இயக்கும் ஐம்பூதக்கடவுளரையும், நால்வகைப்படுஞ் சொல்லாகிய ஓங்கார ஒலி மூலத்தையும் படைத்துக் காத்தழிக்கும் முதல்வர் மூவரையும், அவர்கட்கிடமாகிய ஞாயிறு, திங்கள், நெருப்பு என்பவற்றையும் பற்றியாய்ந்திருந்தனரென்பதும், அவருள் அறிவர், அந்தணர் முதலியோரும், அறுவகைப்பட்ட பார்ப்பனரும் இருந்தனரென்பதும் அறியக்கிடப்பன.

இதுகாறும் தெய்வம் என்பதைப்பற்றிய ஆராய்ச்சி நிகழ்த்தப்பட்டது. பிறகருப்பொருள்களாவன. விலங்கு, பறவை, மரம், மக்கள், தொழில், பறை, யாழ் முதலியன. மக்கள் தொழிலென்பது உணவு தேடுதல் முதலிய செய்கைகளாம். உணவிற்கு ஊறு செய்யா வண்ணம் தடுக்கப்படுதற்குரியன விலங்கு, புள் என்பவைகள். மரம் பலபயன் தருவது. பூ, கனி, இலை, அணி, விறகு, நிழல் முதலியன மரத்தின் பயன்களாம். பறையும் யாழும் முறையே இசையுள் வன்மையும், மென்மையும் பயப்பன. பூவும் பறவையும் எந்நிலத்துள் தோன்றுகின்றனவோ அந்நிலத்திற் குரியனவென்று கொள்ளப்படும். வெவ்வேறு நிலங்களுக்குரிய கருப்பொருள்கள் உரைகளிலே கூறப்பட்டுள்ளன.

குறிஞ்சிநிலமக்கள் மலையில் விளையும் மூங்கிலரிசி தினை, ஐவன நெல் என்பவற்றை உணவாகக்கொள்பவர்கள். தேன் கூட்டை அழித்து தேனடை பிழிந்து எடுத்த தேனை, தினைமுதலியவற்றிற்குத் துணைப் பொருளாகக் கொள்வர். அவ்வாறே மலையில் விளையுங்

கிழங்குகளையும் அகழ்ந்தெடுத்துப் பயன் படுத்துதல் அவர்கள் தொழிலாகும். தினை விளையுமிடத்தே சிறு நங்கையர் கிளி முதலிய பறவைகளை யோட்டுவர். ஐவனமென்பது மலை நெல்லே. மலையிலே நீர், அருவியிலும் சுனையிலுமுள்ளது. அருவியாக விழும் நீர் சிற்றோடைகளாகச்சென்று சுனைகளில் நிறைதலாலும், அருவியில்லாத இடங்களில் தன்னூற்றாக சுனைகளில் நீர் பெருகுவதாலும், அருவியையுஞ் சுனையையுமே சிறப்பாகக் குறிஞ்சிக்கு நீர்நிலைகளாகக் கூறினர். சிற்றாறுகளும் மலையிலுள்ளனவே. மலையிலிருப்பவருக்குப் பேரிடையூறாய் இருப்பன புலியும், யானையும், கரடியும், பன்றியுமே. பெருமரங்கள் தேக்கு, வேங்கை, கோங்கு, சந்தனம், அகில், திமிக் முதலியன. மயிலுங்கிளியும் மலைக்குச்சிறந்த புட்கள். குறிஞ்சிப்பூ, வேங்கைப்பூ, சுனைக்குவளை யென்பன சிறந்த மலர்கள். பறை-தொண்டகப்பறை. யாழ்-குறிஞ்சி யாழ். மலையிலுள்ள ஊர்கள் சிற்றூர்களே. அவைகளுக்குக் குறிச்சியென்ற பெயருண்டு.

முல்லை நிலத்தில் புஞ்சைப்பயிரே மிகுதியுமுண்டாவன. வரகு, சாமை, கொள்ளு, கடலை, அவரை, துவரை முதலியன முல்லை நிலத்திற்குரியன. முல்லைநிலத்தில் காணப்படும் விலங்குகளாவன. முயல், புல்வாய், பசு, மான் முதலியன. காட்டுக்கோழியும், கவுதாரிமுதலிய புறா இனங்களும் அந்நிலத்திற்குரிய புட்களாகும். கொன்றையுங் குருந்தும் அந் நிலத்து மரங்கள். முல்லையும் பிடவுந் தொண்டியும் அந்நிலத்து மலர்களாம். காட்டாறு, புனற்குளம் முதலியன அங்குள்ள நீர் நிலைகளாம். ஆடுமாடுகளைக்

கூட்டுவிக்கும் பறையாகிய ஏறுகோட்பறை அந்நிலத்திற்குரிய பறையாகும். யாழ்-முல்லையாழ். அங்குள்ள மக்கள் தொழில், நிரை மேய்த்தலும், புன்செய்ப்பயிர் செய்தலுமாம். முல்லை நிலத்து ஊர்கள் பாடி, சேரி, பள்ளி என்ற பெயர்களால் விளங்குவன.

நாகரிகந்தோன்றாத காலத்தில் மக்கள், கனி காய்களைப் பொருக்கித் தின்றும், வேட்டையாடிக்கொன்ற விலங்கு, பறவைகளினூனைத் தின்றும் பிழைத்தனர். பின்னர் ஆடு மாடு முதலியவற்றை மேய்த்து அவற்றின் பால், தயிர், நெய் என்பவற்றை யுண்டனர். பின்னர் உழவினில் தலைபட்டனர். கடற்கரையிலுள்ளோர் மீன் பிடித்தும், உப்பெடுத்து விற்றும் பிழைத்தனர். ஒன்றும் விளையாத இடமாகிய பாலையில் வதிந்தவர்கள் வழிப்போக்கர்களுடைய பொருளைப் பறித்துப் பிழைத்தனர். வேட்டை வாழ்க்கைக்குரிய நிலம் குறிஞ்சிநிலம். ஆயர் வாழ்க்கைக்குரிய நிலம் முல்லை நிலம். உழவர்க்குரிய இடம் மருதம். நுளையர்க்குரிய இடம் நெய்தல். மறவர்க்குரிய இடம் பாலை.

மருத நிலத்திலுள்ளோரே நிலையாக ஓரிடத்தில் வாழ்ந்து நாகரிகத்தை வளர்த்தனர். மருத நிலத்திற்கு உணவு செந்நெல்லும் வெண்ணெல்லும் ஆம். மருத நிலத்திலுள்ள நீர் நிலை, ஆறும் பொய்கைகளும் வீட்டுக்கிணறுகளும். எருமை, நீர்நாய் முதலிய விலங்குகளும், தாரா, நீர்க்கோழி முதலிய புள்ளினங்களும் மருத நிலத்திற்குரியன. மரம், மருதமும் வஞ்சியுங் காஞ்சியும். பூ, தாமரை, செங்கழுநீர் முதலியன. மருதநிலத்து மக்கள் தொழில் நெற்பயிர்

செய்தலும் நெல்லரிதலும். நெல்லரி பறையும் மண முழவும் அந் நிலத்திற்குரிய பறைகள் யாழ்-மருத யாழ். ஊர் பேரூரென்ற பெயர்கள் மருத நிலத்தில் வழங்குவனவே.

நெய்தல் நிலத்தில் மீனுணவும், மீன் உப்பு முத லியவற்றை விற்றுப் பெறுமுணவுமுள்ளன. உப்புச் சுமக்கும் மாடு அந் நிலத்திற்குரிய விலங்காகும். சுறுமீனும் முதலையும் அந் நிலத்திற் பாராட்டப் படுவன. புன்னை, தாழை, குங்கும மரம் முதலியன நெய்தற்குரிய மரங்கள். தாழையும் நெய்தலும் அந் நிலத்திற்குரிய பூக்கள். அன்னம், அன்றில், அகன் றில் என்பன அங்குள்ள புட்கள். பறை-மீன்கோட் பறை. யாழ் - நெய்தல் யாழ். அங்குள்ள மக்கள் தொழில் மீன் படுத்தலும், உப்பு விற்றலும். உண் ணும் நீர் மணற்கேணியிலும், முழுகும் நீர் உவர்க் குழியிலும் இருப்பது. நெய்தல் நிலத்து ஊர்களின் பெயர் பட்டினம், பாக்கம் என்பது.

பாலை நிலத்திலே வழிப்பொருள் பறித்தனவும், கொள்ளை கொண்டனவுமே உணவிற்காதாரம். அங் குள்ள மக்கள் செயலுமவையே. அவர்கள் பறை பூசற்பறையெனவும், நிரைகோட் பறையெனவும் ஊர் எரிப்பறை யெனவுங் கூறப்படும். சூரைகோட்பறை யெனவுங்கூறுவர். பருந்து, கழுகு, புரு என்பன அந் நிலத்திற்குரிய புட்கள். வலியற்ற யானையும், புலி யும், செந்நாயும், அந்நிலத்து விலங்குகள். யாழ்-பாலை யாழ். மரம் இலுப்பை, ஓமை, உழிஞை, ஞெமை முதலியன. பூ மராவுங் குராவும் பாதிரியும். நீர்நிலை

வறுநீர்க்கூவலும், அறுநீர்ச் சுனையும். பாலை நிலத்து ஊர்களுக்குப் பறந்தலை யென்றும், கொல்குறும்பென்றும் பெயர்களுள்ளன.

ஐந்நிலத்துமுள்ள மக்களுக்குரிய பெயர்கள்பெயரினடியாகவும் வினையினடியாகவும் பிறப்பனவாய்ப் பொதுப்பெயர் சிறப்புப்பெயரென இருவகைப்படும். நிலத்திலுறையும் மக்களுக்குக் கூறுகின்ற பெயர் திணைப் பெயரெனவும், தலைவன் தலைவியர்க்குரிய பெயர் திணைநிலைப்பெயர் அல்லது நிலைப்பெயரென வுங்கொள்ளப்படும். வேட்டுவர், குறவர் முதலியன குறிஞ்சிநிலப்பொதுப்பெயராய்த் தொழில்பற்றி வந்தவை. குறத்தியரென்பது பெண்பாற்பெயர். குன்றவர் குன்றுவித்தியர் என்பன பெயர்பற்றிவந்த பொதுப்பெயர். இடையர், பொதுவர், இடைச்சியர் பொதுவியர் என்பன பெயர்பற்றிவந்த முல்லைநிலப் பொதுப்பெயர், கோவர் ஆயர் என்பன தொழில் பற்றி வந்த முல்லை நிலப்பெயர். பரதவர் பரத்தியர் நுளையர் நுளைத்தியர் என்பன நெய்தல் நிலப் பொதுப்பெயர். உழவர் உழத்தியர், கடையர் கடைச்சியர் என்பன மருதநிலப்பொதுப்பெயர். எயினர் எயிற்றியர் என்பன பாலை நிலப் பொதுப்பெயர். குறிஞ்சி, முல்லை என்பவற்றின் பொதுப்பெயர்களே ஒருமையில் நிலைப்பெயர்களாகவும் வரும். குறிஞ்சிக்கு நிலைப்பெயர் வெற்பன், சிலம்பன், பொருப்பன் கொடிச்சி யென்பன. முல்லைநிலச் சிறப்புப் பெயர் அண்ணல், தோன்றல், குறும்பொறை,நாடன்,மனைவி யென்பன. நெய்தற்குரியன கொண்கன், துறைவன், சேர்ப்பன், நெல்லம்புலம்பன், பரத்தி யென்பன.

மருதத்திற்குரியன மகிழ்நன், ஊரன், மனைபோவென வரும். பாலை நிலத்திற்குரியன மீளி, விடலை, காளை என்பன. எல்லா நிலத்திலும் பொதுப்பெயரே தலைவன் தலைவியரைக்குறிக்க வருதல் கூடும்.

ஐந்திணை யொழுக்கமாவது புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பன. அவை எந் நிலத்தும் நிகழற்பாலனவே யெனினும், அவை சிறத்தல் இன்ன இன்ன நிலத்தெனவோதுவார், அவவவ் வொழுக்கங்கட்கு அவ்வந்நிலப்பெயர்கொடுத் தனர். தலைவன் தலைவியை முதலிற்கண்டு இயற்கைப் புணர்ச்சி நிகழ்த்தற்குச் சிறந்த இடம் மரங்கள் செறிந்த மலைச்சோலையாதலின் புணர்தல் குறிஞ்சிக்கு உரிப்பொருளாகக்கூறினர். பிரிவாற்றாமையைமிகுதிப் படுத்துவது பாலையின் கடுவழியாதலால், பிரிதலைப் பாலைக்கு உரிப்பொருளாகச் சொற்றனர். தலைவனைப் பிரிந்தகாலை தலைவி, அவன் வரவை எதிர்பார்த் திருப்பதற்கு, ஊரின் புறவிடமாகிய முல்லை நிலமே சிறத்தலின், இருத்தலை முல்லைக்கு உரிப்பொருளாகக் கழறினர். ஊடற்குக் காரணமாகியபரத்தையர், மருத நிலத்திற் பிறந்து வாழ்தலின், ஊடலை மருதத்திற்கு உரிப்பொருளாகக்கூறினர். கடலலை உயர்ந்து தாழ்தல் மிகுந்த துயரம் குறைந்தகாலை ஏற்படும் இரக்கத் தினை ஒத்திருத்தலானும், கடல் முதலியவற்றைத் தலைவி கண்டபோது இரக்க உணர்ச்சியை அவை எழுப்பும் தன்மையன வாதல்பற்றியும் இரங்கலை நெய்தலுக்கு உரிப்பொருளாகக் கூறினர்.

'முதல், கரு, உரி' என்ற முறை வைப்பு நூல் களிலே தெளிவாகக் காணப்படுவதுபோல உலக

வழக்கிற் காணப்படுமாறில்லை. முதல், பொது; கரு, சிறப்பு; அதனினுஞ் சிறப்பு உரிப்பொருளென்று கொள்க. இவ்வொழுக்கம் உலக வழக்கினுமுள்ளதே. செய்யுளுள் மாத்திரம், புனைவுரையாகப் பேசப்படுவ தொன்றன்று. அதனை ஆசிரியர் நச்சினார்க்கினியர்;

"இஃது இல்லதெனப்படாது, உலகியலேயாம். உலகியலின்றேல், ஆகாயப்பூ நாறிற்றென்றுழி அது சூடக் கருதுவாருமின்றி மயங்கக் கூறினனென்று உலகம் இழித்திடப்படுதலின், இதுவும் இழித்திடப் படும். இச் செய்யுள் வழக்கினை நாடகவழக்கென மேற் கூறினார். எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது, உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தன் முதலாகப் புனைந்துரை வகையாற்கூறும் நாடக இலக்கணம்போல யாதானுமோரோ வழி ஒரு சாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமுங்காலமும் நிய மித்துச் செய்யுட்செய்த ஒப்புமை நோக்கி" என இனிது விளக்கிப் போந்தனர்.

முதல், கரு, உரி என மூன்றுந் திணையெனப் படும். அவற்றுள் முதற்பொருளாகிய நிலத்தின் ஆராய்ச்சி நில நூற்கு அடிப்படையானது. பொழுதி னாராய்ச்சி வான நூலுக்கு ஆதாரமானது. உரிப் பொருளாராய்ச்சி அறவொழுக்கத்திற்கு அடிப்படை யானது. கருப்பொருளினுள் தெய்வத்தை முதற் கண் வைத்தது, மெய்யறிவு பெறும் உணர்ச்சிக் கேதுவாகும். அது தத்துவநூல், போன்றவற்றிற்குத் தோற்றுவாய் செய்வது. உணவுப்பொருள்கள் பெரும் பாலும் வினைபொருளாகக்கூறப்பட்டமையால் அவை

உழவையே ஆதாரமாகக் கொண்டன. அவற்றினாராய்ச்சி உழவு நூலுக்கு அடிப்படையானது. மக்கள் தொழில்கள் பெரும்பாலும் உணவு தேடுதலையொட்டியே உரையாசிரியர்களா லாயப்பட்டன. அத் தொழில்களை வைத்தே மக்கள் வேறுபாடு ஆதியி லேற்பட்டதுபோலும். ஒவ்வொரு நிலத்திலுமுள்ள விலங்குகளிற்சில சுமை சுமப்பதற்கும், வண்டிகளில் மக்களைக்கொண்டுபோதற்கும் பயன்படுதல் கூடும். விலங்கு, புள் முதலியவற்றின் நுண்ணிய ஆராய்ச்சி விலங்கு நூல், புள் நூல், புள்ளின் நிமித்தநூல் முத லியவற்றிற்கேதுவாயது. மரங்களையும், மலர்களையும் பண்டைத் தமிழர் மிகவும் பாராட்டினர். அவற்றி ஞராய்ச்சி மரநூலுக்கு அடிப்படையாயிற்று. தெய்வ வழிபாடானது பெரும்பான்மையும் மர நிழலிலேயே ஆதியில் நிகழ்ந்தது. கனியும் பூவும் நீருமே பூசனைக்குப் பொருள்களாகப் பயன்பட்டன. ஒவ்வொரு தலத்திலும் புண்ணியமரமும் புண்ணிய தீர்த்தமுமேற்பட்டிருப்பதை இன்றுங் காணலாம். புனிதத்திற்கு நீரும், அழகிற்கு மலரும் உணவிற்கு கனியும் பயன் பட்டன. பூவில்லாவிடின் இலையைப்பயன்படுத்தினர். "யாவர்க்குமாம் இறை வர்க்கொரு பச்சிலை" என்ற திருமூலர் வாக்குங் காண்க. உருவமைத்தலறியாத காலத்தே தூண் போன்ற ஒன்றைக் கடவுள் வடிவமாக நாட்டி வழி பட்டனர். மக்கள் தத்தம் அறிவுக்கேற்றவாறு கடவுளை வழிபடுவர். மக்களுள் பெரியவர்களுக்குச் செய்யும் வழிபாட்டினையே இறைவர்க்கும் அவர்கள் செய்தார்கள். தாம் நீரில் குளிப்பது போலவே இறைவனுக்குத் திருமுழுக்காட்டி வந்தனர். தாம

ஊனுண்டால் இறைவனுக்கும் ஊனைப்படைத்தனர். கனியுண்டால் கனியைப் படைத்தனர். திருமுருகாற்றுப் படையுள் குறிஞ்சிநில மக்களின் வழிபாடு விரித்துரைக்கப்பட்டது. கொடி யெடுத்தல், நெய்யப்புதல், நறும்புகை காட்டுதல், குறிஞ்சிபாடுதல், மந்திரமுரைத்தல், முத்திரை காட்டுதல், பறையாற் பல்லோரை யழைத்தல், மலர் தூவிப் போற்றுதல், இன்னியமொலித்தல், குரவையயர்தலென்பன, அந்நூலுட் கூறப்பட்டுள்ளன. இவற்றின் விரிவே பிற்காலத்தில் **பெருவழிபாடாக** உருவெடுத்தது.

ஒவ்வொரு நிலத்திலும் பறை யொலிக்குந் தொழில் பறையனுக்கும், இசைத்தொழிலாகிய பண் பாடும் தொழில் பாணனுக்கும் அமைந்திருந்தன. துடியொலித்தல் பறையொலித்தலிலடங்கும். கடப்ப மரமானது குறிஞ்சியில் முருகன் நிலயமாய் விளங்கிற்று. 'புதுப்பூங்கடம்பும்' என்ற திருமுருகாற்றுப் படையுங் காண்க. கடப்பமரத்தினைக் காவல் காப்பான் கடம்பனுயினன். பாணன், பறையன், கடம்பன், துடியன் என்ற நால்வகைக்குடிகளும் பரம்பரையாக நிலைத்த குடிகளென்ற குறிப்பு, புறநானூற்றிற் காணப்படுகின்றது. ஒவ்வொரு நிலத்திலும் வெவ்வேறு யாழ் கேட்கப்படுதலின் **பண்டைத் தமிழர் இசைக்கலையில் மிகத் தேர்ச்சியுற்றோர்** என்பது விளங்கும். பெரும்பாலும் கடவுளர்க்கு அமைத்துள்ள வாகனங்கள் அவர்கள் வழிபடப்பட்ட நிலத்திற் காணப்படுவனவே. யானை மயில் என்பன மலையில் காணப்படுவன. அவை முருகனுக்கு வாகனமாக விளங்கும். காட்டிற்காணப்படும் புலி, சிங்க முதலியன காளிக்கு வாகனமாக வுள்ளன. நெய்தல் நிலத்தி

லுள்ள முதலை வருணனுக்கு வாகனம். மருதம், முல்லை என்பனவற்றிற் காணப்படும் காளை சிவபெருமானுக்கு வாகனம். பருந்தினமாகிய கருடன் திருமாலுக்கு வாகனம்.

ஐந்திணை யொழுக்கத்தில் தலைமக்களாய்விளங்குபவர்கள் அறிவுஞ்செல்வமுமுடைய நன்மரபினராவர். அன்னோர் கைக்கிளைப் பெருந்திணை யொழுக்கங்களிலீடுபடுதல் பொருந்தாமை பற்றி அவ் வொழுக்கங்களில் தலைமக்களாய்ப் பாடப்படுவோர் ஏவுந்தொழிலியற்று மரபினரும், அடிமை புரிவோராய் வாழ்பவருமேயாவர். பிறரை ஏவி வேலைகொள்ளுந் தலைமையுடைய மரபினரும் அத்தகைய தலைமையை முயற்சியாலெய்தியவரும் ஐந்திணையொழுக்கத்திற்குச்சிறந்தவராவர். நானிலவொழுக்கம் களவியல், கற்பியல், பொருளியல் என்பவற்றுட் கூறப்படுதலின் அகத்திணையியலுள் பொது நிலமாகிய பாலைக்குரிய துறைகளையே ஆசிரியர் சிறப்பாக எடுத்து விதந்தோதினர். கல்வியின் பொருட்டும், பகைதணிவித்தற் பொருட்டும், அரசரேவிய தூதின் பொருட்டும், அரசாங்க வேலையின் பொருட்டும், பொருளீட்டுதற் பொருட்டும் பிரிதல் ஏற்படுதல் கூடும். கல்வியின் பொருட்டும், அரசியற்றூதின்பொருட்டும் அறிவிலும் ஆண்டிலுஞ் சிறந்தோர் செல்வர். பகைவயிற் பிரிவின்பொருட்டு அரசன்தானே செல்லுதலும் தன் வகையாட்களைச் செல்லுவித்தலும் நிகழலாம். நால்கை நிலத்திலும் ஒழுக்கத்திற்றவறியவர்களையுங் கடமை செய்யத் தவறியவர்களையுந் திருத்துதற்கும் பொருளீட்டற்குஞ் செல்பவர்கள், கடவுட் பூசனை செய்வோர், வயதில் முதிர்ந்தவர், அரசர் என்பவரல்லாதவர்களே.

அக் காலத்தில் பெண்டிரைக் கப்பலிலழைத்துக் கொண்டு பொருளீட்டற் பொருட்டு அயல் நாடு செல்லுதல் வழக்கத்திலில்லை. அதனை "முந்நீர் வழக்க மகடூஉவோடில்லை" என்றதிற் காண்க. ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணையென்னும் எழுவகை யொழுக்கத்திலும் பெண்டிர்மடலூர்தல் தக்கதன்றென்று ஆசிரியர் குறித்துள்ளார்.

பாலைத்திணைக்குரிய துறைகளை ஆசிரியர் கூறுமிடத்து நற்றாய் புலம்பலை முதற்கண்ணேடுத்தியம்பினர். தலைவன் தலைவியைக் களவொழுக்கத்தின் முடிவிற் தன்னொடுகொண்டுபோதல் உடன்போக்கெனப்படும். தலைவி தலைவனோடு உடன்போயகாலை தலைவியின் பிரிவாற்றுமையால் நற்றாய் புலம்பல் நிகழும். நற்றாய் தன்மகளையுந் தலைவனையுந் தன்னையுங்குறித்து இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றின் சார்பாகவும், நற்குறி, நற்சொல், தெய்வத்தினருள் இவற்றை நாடி, தனது நல்வினையை வியந்துந் தீவினையை நொந்தும் தலைவி செல்லும் வழியில் அஞ்சத்தக்கனவற்றை யஞ்சியும், தலைவி சென்று சேருமிடத்தையும வந்துசேருமிடத்தையுங் குறித்தும், பிற கருத்துக்களின் சார்பாகத் தன் நெஞ்சிற்குந் தலைவியின்தோழிக்கும் தலைவன் தலைவியரைத் தேடிக் காணாது வந்தவர்களைக் கண்டபோது அவர்களிடத்திலும் சுற்றத்தார்களிடத்தும் நற்றாய் புலம்பிக் கூறுந் துறைகள் பலவாகும். கலித்தொகை முதலிய சான்றோர்செய்யுளுள் அவற்றிற்கு உதாரணங்காணப்படும். ஐங்குறுநூற்றின் 371-வது செய்யுளுள் தலைவனுடன் போதலே அறமென்றறிந்து சென்ற தன் மகள்

செல்லுங்காடானது மழையுடைத்தாய் இனியதாகுக வென்று நற்றாய் கூறிய பகுதியுள், இறந்தகாலச் செய்தியைக் குறித்து நற்றாய் தன் நல்வினையை வியந்து தன் நெஞ்சிற்கு மகிழ் வுரைத்தமை காணப் படும். ஐங்குறுநூற்றின் 376-வது செய்யுளுள் நற்றாய் உடன்போக்கிற்கு ஏதுவாய வினைப்பயனைத் தந்த பால்வரை தெய்வத்தைக்கடிந்த பகுதி காணப்படும். ஐங்குறுநூற்று 373-வது செய்யுளுள் தலைவியைப் புலி முதலிய விலங்குகளுள்ள அருஞ் சுரத்தே கொண்டுபோன தலைவனின் தாய் துன்புறுகவென்று நற்றாய் புலம்பியது அச்சமுணர்த்தியதாகும். அகம் 63-வது செய்யுளுள் ஆறலைப்பார் பகை கேட்டுத்தன் மகள் அஞ்சுவாளோவென்று நற்றாய் தன்னெஞ் சிற்குக் கூறியதும் அச்சமுணர்த்தியதே. அக நானூறு 15-வது செய்யுளுள் தலைவி சென்றுசேரும் ஊர் அறிவுடை மக்களல்லது அறிமுகமானவர்களுள்ள ஊர்களாகுக என்றாள் நற்றாய். அகநானூறு 194-வது பாட்டில் நற்றாய் வேலனைநோக்கித்தலைவன் தலைவியை உடன்போக்கின் மீண்டகாலை தன் வீட்டிற்குக் கொண்டு போவானோ என் வீட்டிற் கொண்டு சேர்ப் பானோ கூறுகவென்று வேண்டிக்கழங்கு பார்த்தல் காணப்படும். இவ்விரண்டு பாட்டிலுந் தெய்வத்தை வேண்டியதும் தெய்வச்சொல் கேட்டதுங் காண்க. ஐங்குறுநூற்று 391-வது பாட்டில் தலைவனும் தலைவி யும் மீண்டு வருவது குறித்துக் காக்கையைக் கரையும் படி வேண்டினமை நிமித்தத்தின்பாற்படும். தோழி தலைவியின் பிரிவாற்றாது வருந்துவதைப்பற்றிநற்றாய் கூறுதல் ஐங்குறுநூற்று 378-வது பாட்டில் காணப் படும். நற்றிணை 184ம் பாட்டுக்கு தன்னையாற்றும்

அறிஞரை நோக்கித் தனது ஒரே மகளைப் பிரிந்த துயரமாற்ற முடியாதென்று கூறியதும், அகம் 35னுள் தலைவன் தலைவிபால் மிகவும் அன்பு செய்க வென்று தெய்வத்தைப் பரவியதும், ஐங்குறுநூற்று 394-வது பாட்டில் தலைவி மீண்டு வந்ததைச் சுற்றத்தார்க்கு உணர்த்தியதை யியம்பியதும் ஆகப் பல துறைகள் நற்றாய் புலம்பலின்பாற்படும். தாய் புலம்புதல் மேலும் ஊரிலே தெருவின் கண்ணும், காட்டு வழியிலும் மனைவியைத்தேடி எதிர்ப்பட்டு வருபவர்களைத் தலைவியைக் கண்டீர்களோவென்று கேட்டுச் செல்லுதலுமுண்டு. பெரும்பாலுஞ் செவிலித்தாயரே அவ்வாறு செல்வர். தந்தை தமையன் முதலியோருந் தேடிச் செல்லுதல் மரபே. காட்டுவழி கடந்து பிறிதோரூர்க்குச் செல்லாது ஊரினுள்ளே பிறிதொரு வீட்டிற்குத் தலைவி சென்றாலும் அதுவும் பிரிவின் பாற்படுவதே.

பிரிவிற்கு நிமித்தமாகக் கூறுவன தோழிக்குரியன. தலைவியோடு நெருங்கிய நட்புடைய தோழி தலைவன் தலைவியை உடன் கொண்டு போகாவிடில் தலைவி துன்புறுவளென்று கூறுதலும், உடன் போக்கிற்கு இருவருமிசைந்த வழி பாதுகாவலுக்கேதுவாகிய உரைகள் பகர்தலும் தாய் முதலியோரை நீக்கி உடன்போக்கிற்கு வகை செய்வதில் தனக்கேற்பட்ட வருத்தங்கூறுதலும், தலைவியின் பின்சென்று அவளை மீள்விக்கக் கருதுந் தாயார்க்கு உடன்போக்கு அறமென ஆன்றோர் மொழியெடுத்துரைத்து மீட்டலைத் தடுத்தலும், தலைவியின் பிரிவாற்றாமையால் மிக்கு வருந்துந் தாயர்க்கு ஆறுதல் கூறி ஆற்றுவித்தலுஞ் செய்தற்குரியர். ஐங்குறுநூற்று 306-வதுசெய்யுளுள்

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றால் தலைவி குழலைப்பார்க்கினு மதிகமாக வருந்துவளென்று தோழி தலைவன்பாற்கூறியதும், அகநானூற்று 65-வது செய்யுளுள் தாயின் கண்டிப்பையும் ஊரார் அலரினையும் ஒழித்தற்கு உடன் போதலே தலைவிக்கு நல்லதென் றியம்பியதும் உடன்போக்கிற்கு நிமித்தமாவன. ஐங்குறுநூற்று 200-வது பாட்டில் தலைவியை உடன் கொண்டுபோகத் தலைவன் வந்தமையால் "நீ துயில் நீங்கி எழு" வென்று தோழி தலைவிக்குக் கூறியது போக்கற்கண் நிகழும் தோழி கூற்றும் என்பது. நற்றிணை 10-வது செய்யுளுள்

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்த னரையொடு முடிப்பினு
நீத்த லோம்புமதி பூக்கேழூர
............................................
............................................நின்
பிழையா நன்மொழி தேறிய விவட்கே"

என்றது தலைவியை உடன்போக்கில் விடுத்தற்கண் அவளைப் பாதுகாக்கவெனத் தோழி தலைவனுக்குக் கூறியதாகும்.

"அவளே,
யுடைமை ராயமொடோரை வேண்டாது
மடமான் பிணையின் மதர்த்த நோக்கமொ
டென்னினு நின்னினுஞ் சிறந்த தென்மொழி
யேதி லாளன் காதலி னுமது
பால்பாற் படுப்பச் சென்றன ளதனான்
முழவி மிழ்பந்தர் வினைபுனை நல்லில்

விழவயர்ந் திருப்பி னல்லதை யினியே
நீ யெவ னிரங்குழி யன்னை
யாயினுஞ் சிறந்த நோய்முந் துறுத்தே''

என்ற செய்யுளில் தோழி தாயை நோக்கி என்னினும் நின்னினுஞ் சிறந்த தலைவன் அன்பில் தலைவியின் ஊழ்வினையானது பொருத்த அவள் அவனோடு சென்றுளாதலின் இனி மணவிழவு செய்வதைத்தவிர அவளை மீட்பதற்காக இரங்கி வருந்துவது பயனில்லையென்று கூறியதுதாயின் போக்கைத்தவிர்ப்பதாகும்.

''அன்னை வாழியோ அன்னை நின்புகழ்

.......................................

வன் கண் செய்து சென்றனள்
புன்கண் செய்தல் புரைவதோ வன்றி''

யென்றவிடத்துத் தோழி தாய்க்கு ஆறுதல் கூறி வற்புறுத்தியது காண்க.

இனி உடன் போக்கில் நின்று மீண்ட தலைவனை நோக்கி நீ அவளை வரைந்தாயென நான் தாய்க்குச் சொன்னேன் என்பன போன்றதுறைகளும் இதன் கண்ணடங்கும்.

தலைவனுந்தலைவியும் உடன்போயகாலை அவர்களையிடைவழியிற்கண்டவர்கள் மாலைப்பொழுதில் வழியிலஞ்சத்தக்கனவற்றைக் கூறுதலும், இருவருஞ்செல்லுமூர் சேய்த்தாயிருப்பின் தம்மூரண்மையிலிருக்குமென்று கூறி அங்கே தங்கும்படி சொல்லுதலும், அணிமையில் ஊரில்வழி திரும்பிப்போம்படி வற்புறுத்துதலும், இருவரையுந்தேடிப்பின் சென்ற செவிலியைத் தடுத்தலும், மேற் செல்லவிடுத்தலும், நெடுந்

தூரஞ் செல்லும் இருவருடைய போக்கையும் வரவையும்பற்றிக் கூறுதலும் அவர்கட்குரிய துறைகளாகும்.

"எம்மூரல்ல தூர்நணியில்லை
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேர்ந்தனை சென்மோ பூந்தார்மார்ப
விளையண் மெல்லியண் மடந்தை
அரியசேய பெருங்கலாறே" என்ற

அருஞ் செய்யுளில் சுரத்துத்தலைவனொடு சென்ற தலைவியை நோக்கி எம்முடைய வூரைத்தவிரப் பக்கத்தில் வேறு ஊரில்லை. பொழுது மயங்கி விட்டது. தலைவி இளையவளாயும் மென்மைத்தன்மையுடையவளாயுமிருக்கின்றாள். பெரிய கல்வழியோ கடத்தற்கு அரியதாயும், நெடியதாயும் இருக்கிறது. ஆதலால் "ஊர்க்கு வந்துபோ" வென்று கண்டோர் சொல்லியவிடத்துப் பொழுதினச்சத்தையும், வழியினச்சத்தையும், தலைவி செல்வதால் உளதாங் குற்றத்தையும், ஊரது சார்பும் ஆர்வநெஞ்சமொடு கண்டோர்செப்பினமை காண்க.

"இதுநம்மூரே யாவருங்கேளிர்
பொதுவறு சிறப்பின் வதுவையுங்கண்டு
மீன்றேரெய்தாச்செய்தவம்
யாம்பெற்றனமான்மீண்டனை சென்மே"

என்ற செய்யுளுள் தலைவன் தலைவியரை நெடுந்தூரம் போகவிடாது அவர் செல்லும் வழியிலுள்ள வூர்க்காரர் மணமுடித்துக்கொண்டு மீண்டு செல்லும்படியவரை வேண்டியது காண்க.

"பெயர்ந்து போகுதி பெருமூதாட்டி
சிலம்பு கெழுசீறடி சிவப்ப
விலங்கு வேற்காளை யொடிறந்தனள் சுரனே"

என்ற செய்யுள் உடன்போக்கில் தலைவியைத்தேடிச் சென்ற செவிலியை மேற்செல்லவேண்டாமென்று தடுத்ததற்கு உதாரணமாகும்.

"சிறுவரையிறப்பிற்காண்டி செறிதளிர்ப்
பொன்னேர் மேனிமடந்தை யொடு
வென்வேலண்ணல் முன்னிய சுரனே"

என்ற ஐங்குறு நூற்றடிகளில் சிறிது தூரஞ் சென்றால் தலைவன் தலைவியரைக் காணலாமென்று கண்டோர் செவிலிக்குக்கூறி அவளைச் செல்லும்படி விடுவித்தது காண்க. கண்டோர் தலைவன் தலைவியர் செல்லுவதைப்பற்றித்தாம் கேட்டதைச் செவிலிக்குக் கூறுதலுமுண்டு. தலைவன் தலைவியர்க்குத் தீங்கிழைக்கக் கூறும் ஆறலைப்போருக்கு அவர்கள் பெண்டிர் தடுப்பதாகச் செய்யுள் செய்வதுமுண்டு. அது நெடுந்தூரஞ் செல்லுந் தலைவன் தலைவியர்க்குத் துணைபுரிந்து கூறியதாகும்.

"கடியான் கதிரெறிப்பக்கல்லளையில் வெம்பியவக் கலங்கற்சின்னீ
ரடியானுலகளந்த வாழியானுக்கிய வமிர்தென் [றெண்ணி
கொடியான் கொடுப்பக் குடங்கையிடங்கொண் [டிருந்து குடித்துச்சென்ற
வடியேர் தடங்கணவ்வஞ்சிக் கொம்பின்றாரிவ் [வருவார்போலும்"

என்ற செய்யுளில் காலையிற்சென்ற தலைவனுந் தலைவியும் மீளுங்காலை தலைவன் கொடுத்த கலங்கல் நீரை அமுதமெனத்தலைவி குடங்கையிலேற்றுக் குடிப்பதைக் கண்டோர்கள் அவர்கள் வரவைச் செவிலிக்கு அறிவுறுத்தியது காண்க.

> "சீர்கெழுவெண்முத்தமணிபவர்க்கல்லதை
> நீருளேபிறப்பினுநீர்க்கவைதாமென்செய்யுந்
> தேருங்காலுமகளுமக்குமாங்கனையளே"

என்பது போலவும் கண்டோர் செவிலிக்குக் கூறுவதுமுண்டு. இவ் வடிகளின் பொருளாவது சிறப்புப் பொருந்திய வெண்மையாகிய முத்தானது கடலிலே தோன்றினும் கடலுக்கு அதனால் என்பயன்? ஆராயுமிடத்து உம்முடைய மகளும் அத்தன்மையளே. அதாவது உம்மிடத்திற் பிறந்தாலும் உமக்குப் பயன்படாது அந்நியனாகிய கணவனுக்கே பயன்படுபவள் என்பது கருத்து.

தலைவி, தலைவனுடன் போவதற்கு தாயார் முதலியோரிசையாத விடத்தும் தலைவியை இற்செறித்தமையாலே கூட்டம் பெறுவதற்கு இயைபில்லாத காலத்தும், உடன் போக்கிற் செல்லுதற்குரிய வழியின் பொருத்த மின்மையைப் பற்றிப் பேச்சு நிகழுமிடத்தும், உடன்போக்கிற்கு இசைகின்ற தோழியினிடத்தே தலைவன் தலைவியிடத்தில் தனதுகருத்தைத் தெரிவிக்கக்கூறுமிடத்தும் உடன்போக்கிற்குத் தலைவனிசையாத விடத்தும், தலைவன் தலைவியை உடன் கொண்டு செல்கின்றவழியில் தமர் ஆயினோர் சென்று அவளை மீட்பிக்க முயன்றகாலை அவள் தலைவனோடு சேர்தலே கற்பிற்குப்பொருத்தமாவதென்று அவன் பாற்சார்ந்த காலையும், வாழ்நாளின் சுருக்கத்தையும்

இளமையின் அருமையையும், முயற்சியின் இன்றியமையாமையையும் தத்தம்நிலைமைக்கேற்பப்பொருள் செய்யவேண்டுந்தகுதியையும், வறுமையின் இழிவையுஞ்செல்வத்தின் சிறப்பையும், அன்பு நெடிது நிலைத்திருப்பதையும் பிரிவாற்றாமையையும் பற்றிப்பொருள்வயிற்பிரிவு காரணமாகப் பேசவேண்டுமிடத்தும், உண்மையாராய்ச்சியின் பொருட்டும், ஒழுக்கங்காரணமாகவும் பிற இடங்கட்குச் சென்று பேறு பெறக்கருதிய காலத்தும், புகழும் பெருமையையும் எய்தற்பொருட்டு அரசவேலையில் செல்லக்கருதிய காலத்தும் தூதின் பொருட்டுப்பிரிய வேண்டிய காலத்தும், நட்பினர்க்கு உற்றுழி யுதவும்படிப் பிரியுங்காலத்தும், அறத்தாற் பொருளீட்டிவந்து இன்பம் நுகரக்கருதிய காலத்தும், வேற்று நாட்டின் அரிய வாழ்க்கையைக் கூறிப் பிரிதற்கண்ணும், பகைவயிற் பிரிவின் கண்ணும் பகையை வென்றகாலத்துப்பாசறையினின்று தலைவியை நினைந்து புலம்புதற்கண்ணும், போன காரியம் முடிந்த பின்னர் விரைவில் மீளும் பொருட்டுத் தேர்ப்பாகனுக்குக்கூறுவன கூறுமிடத்தும் பகைக்கையன்றிக் குடிகளைக் காத்தற்பொருட்டுப் பிரியும் பிரிவின் கண்ணும், பரத்தையர்ப் பிரிவின் கண்ணும், அப்பிரிவினின்று மீண்டகாலை தலைவியை வேண்டற் கண்ணும், ஊடல் நீக்குதற்கண்ணும் தலைவனுடைய உரைகள் நிகழற்பாலன. உடன் போக்கிற்கு இசையாத தலைவியின் தமரைப்பற்றியும், வெளிச்செல்லுதற்கு ஒத்துவராத கடுங்கோடை முதலிய பருவத்தின் தன்மையைப்பற்றியும், நெடிய கல்வழியின் வருத்தத்தைப் பற்றியுந் தான் பொருட்படுத்த வில்லையென்பதைத் தலைவன் தோழிக்குக் கூறுவதை ஒரு துறையாகக்

கொள்ளவேண்டும். தலைவியையுடன்கொண்டுபோகாது விடுத்தல் இன்னொருதுறை. உடன்போக்கில் தலைவியை ஊக்கப்படுத்தல் அல்லது ஆறுதல் கூறுதல் பிறிதொருதுறை. பொருள்வயிற்பிரிதல், வேந்தன் தொழில்பற்றிப் பிரிதல், தூதிற் பிரிவு, பிறநாட்டில் தலைவியொடு வசித்தற்கு இயலாமை கூறுதல், பகைவயிற் பிரிதல் முதலியன தலைவியை யுடன் கொண்டுபோகாமைக்கேதுவாய துறைகள். பாசறைப் புலம்பல், பாகனொடுகூறல் முதலியன தலைவனது பிரிவாற்றாமையைக் குறிப்பன. தலைவி உருவெளித் தோற்றங்கண்டு உரையாடல் முதலியன அவற்றுளடங்கும். பரத்தையர்ப் பிரிவு தலைவிக்குப் பிரிவாற்றாமையை விளைவிப்பது.

"ஆறு செல்ல வருத்தவுஞ் சீறடி சிவப்பவுஞ்
சினை நீங்குதளிரின் வண்ணம் வாடவுந்
தான் வரத்துணிந்த விவளினு மிவளுடன்
வேய்பயிலழுவ முவக்கும்
பேதை நெஞ்சம் பெருந்தகவுடைத்தே."

என்ற செய்யுள் சுரத்தினருமையைத் தோழிக்குத் தலைவன் கூறித் தலைவியை வியந்ததற்கு உதாரணமாகும், இது **தோழியோடு வலித்தல்** என்னுந் துறைக்கு உதாரணம். இதன் பொருளாவது. வழிநடத்தல் தனக்குத் துன்பம் விளைப்பதையும், சிறிய அளவுடைய தன்னடி நடந்து சிவந்து போவதையும் மரக்கிளையினின்றுதிர்ந்த தளிர்போலத்தன்னிறம் வாடுவதையும் கருதாது என்னுடன் வரத்துணிந்த இவளைப்பார்க்கிலும் மூங்கிற்காடாகிய பாலைவனத்தில் நடப்பதை இவளுடன் இசைந்து வந்த இவளுடைய

நெஞ்சமானது மிகவும் பெருந் தன்மையுடையது என்றவாறு.

"நிழல் காண்டோறு நெடிதுவைகி
மணல் காண்டோறும் வண்டறைஇ
வருந்தாதேகுமதி வாலெயிற்றோயே
மாநனை கொழுதி மகிழ்குயிலாலு
நறுந்தண் பொழிலகானங்
குறும்பல்லூரயாஞ் செல்லுமாறே"

என்ற நற்றிணை 9-வது செய்யுளில் தலைவன் தலைவிக்குத்தாம் செல்லும்வழி தண்பொழிலுடைய தாயும் இடையிடையே பல சிற்றூர்களையுடையதாயு மிருப்பதால் நிழலிடங்களிலே தங்கி மெதுவாய்ச் செல்லலாமென்று ஊக்க வுரை பகர்தல் காண்க.

"அமர்வரி னஞ்சேன் பெயர்க்குவ
னுமர்வரின் மறைகுவன் மாஅயோளே"

என்றவிடத்துத் தலைவியின் தமர் வந்தால் தான் மறைந்துகொள்வதாயும் பிறர் வந்தால் அவருடன் பொருது வெல்வதாயும் தலைவன் தலைவிக்குக் குறிப் பித்தது காண்க

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற்பெயர்ந்த நங்காதலர்"

என்றவிடத்து அறம் பொருள் இன்பத்திற்குப் பொருள் துணையாதல் கருதியதற்காகத் தலைவன் பிரிந்தமையின் அது இளமை முதலியன கருதிப் பொருள்வயிற்பிரிதல் என்றதற்கும் உறுதிப் பொருள் மூன்றன் பகுதி என்றதற்கும் உதாரணம் காண்க.

"முல்லைநாறுங் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவமாஅயோயே
பாசறையருந்தொழி லுதவிநங்
காதனன்னாட்டுப் போதரும் பொழுதே"

என்ற ஐங்குறுநூற்றுச்செய்யுள் பாசறையி லிருக்குந்தலைவன், தலைவியை விளித்துக்கூறுவதாக இயற்றப்பட்டிருப்பதும் தலைவியின் உருவெளித்தோற் றத்தைக்கண்டு தலைவன் புலம்பியதற்கும் அது உதா ரணம். பாசறையினின்று பாணன் இளையோர் முத லியவர்களைத் தலைவன் தூது விடுதலுமுண்டு.

"சிறுவரைத் தங்குவையாயிற்
காண்குவை மன்னாற் பாணவெந்தேரே"

என்றது காண்க.

"திண்ணிதின் மாண்டன்று தேரே
யெண்ணுதற் காண்குவம்வேந்து வினைவிடினே"

என்ற அடிகள் பாகனொடு கூறுதலுக்கு உதா ரணமாகும். கலித்தொகை 88-வது செய்யுளுள்,

"ஆயிழாய் நின்கண்பெறினல்லாலின்னுயிர்வாழ்
வென்கணெவனோ தவறு" [கல்லா
"நீயுறும் பொய்ச்சூளணங்காயின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு"

என்றவடிகள் பரத்தையர்ப்பிரிந்து மீண்ட தலை வன் தலைவியை வேண்டுதற்குந் தேற்றுதற்கு முதா ரணமாகும்.

உடன்போக்கிற் போன தலைவியை நினைந்து செவிலி வீட்டிலிருந்து வருந்துதலும், சுரத்திற் சென்று யானையைக்கண்டும் கானவர் மகளைக்கண்டும்

புலம்புதலும், நெஞ்சொடு புலம்புதலும், குரவம் பாவையொடு புலம்புதலும், போக்கு உடன்பட்ட தலைவி தோழிக்கு அதனைத் தெரிவித்தலும், தனக்குக் காதல் மிகுதியால் நாண் நீங்கினமை தெரிவித்தலும், ஊராருடைய அலருக்குத்தான் அஞ்சாமை தெரிவிப் பதும் உடன்போக்கின் சார்பாய துறைகளாகும்.

"அளிதோ தானே நாணே
......................
......................
காமன் நெரிதரக் கை நில்லாதே"

"நடுநாள்வரூஉமியநேர்க்கொண்கனொடு
செலவயர்ந்திசினல் யானே
யலர்சுமந்தொழிகவிவ்வழுங்கலூரே"

என்பன தலைவி கூற்றுதல் காண்க. ஆயத் தோர்க்குந் தாய்க்குந்தன்னுடைய உடன்போக்கைத் தெரிவிக்குமாறு தலைவி அந்தணர் முதலிய கண்டா ரிடைக்கூறுவதும் அவ்வாறே, மீளுங்காலை தம் மர பினை ஆயத்தோர்க்குக் கூறுகவெனத் தமக்கு முன் செல்வாரைத் தலைவி வேண்டிக்கொள்ளுதலும், தலைவி மீண்டகாலைத் தோழிக்கு உரைப்பனவும், பிறவும் பற்பல துறைகளாகும். பிரிவிற்கு நிமித்தமாகத் தலை வன் நிகழ்த்திய சொற்களையும், செயல்களையும் தலைவி நினைந்து தோழிக்குக் கூறுவனவும், பிரிந்தகாலைத் தலைவியின்பால் நிகழ்ந்ததைத் தலைவன் நினைந்து கூறுவனவும் பலவகையாக விரிந்து பற்பல துறைக ளாகும். சில உதாரணங்கள் இங்கே குறிக்கின்றோம்.

"சேட்புல முன்னிய வசைநடை யந்தணிர்
நும்மொன் றிரந்தனென் மொழிவலெம்மூர்த்

தாய்நயந் தெடுத்த வாய்நலங் கவின்பெற
வாரிடை பிறந்தன ளென்மி
னேரிறை முன்கையெனுயத்தோர்க்கே''

என்ற செய்யுளில் தளர்ந்த நடையுடைய அந்தணர்களைப்பார்த்து யான் போகின்றமை ஆயத்திற்கு உரைமினெனத் தலைவி வேண்டியது காண்க.

''சுரநணிவார நின்றனளென்பது
முன்னுற விரைந்தனி ருரைமி
னின்னகை முறுவலென் னுயத்தோர்க்கே''

என்றஅடிகளில் தான் மீளுவதாக ஆயத்துக்குக் கூறும்படி தலைவிமுன்செல்வாரைவேண்டியதுகாண்க.

''அன்னுய்வாழி வேண்டன்னை நம்படப்பைத்
தேன்மயங்கு பாலினுமினிய வவர்நாட்
டுவலைக்கூவற்கீழ்
மானுண்டெஞ்சிய கலுழிநீரே''

என்ற செய்யுள் உடன் போய் மீண்ட தலைவி தலைவனது நாட்டுநீரைப்பற்றித் தோழிக்குக்கூறியதற்கு உதாரணமாகும்.

''நுண்ணெழின் மாமைச் சுணங்கணியாகந்தங்
கண்ணொடு தொடுத்தென நோக்கியுமமையாரென்
னொண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவ
ரெண்ணுவதெவன் கொலறியேனென்னும்''

இது தலைவன் பிரியுங்குறிப்புடன் செய்த செயல்களைத்தலைவி தோழிக்குக் கூறியதாகும். தலைவர் கண்ணிமையாமல் தனது தேமலழகினைப் பார்த்து நின்றதும், தனது ஒள்ளிய நெற்றியை நீவியதும்

யாது கருத்துபற்றியோவென்று தலைவி கூறுமிடத்துப் பிரியும் நிமித்தம் குறிப்பாக உணர்த்தப்படும்.

"மணியுருவிழந்த வணியழி தோற்றங்
கண்டே கடிந்தனஞ் செலவே யொண்டொடி
யுழையமாகவு மினைவோள்
பிழையலண் மாதோ பிரிதுநாமெனினே"

என்றவிடத்துத் தலைவன் தலைவியின் பிரிவாற்றாமையை நினைந்து செலவழுங்கினமை குறிக்கப்பட்டது. உடன்போக்கில் தலைவன் கூற்று நிகழ்வதற்குரிய இடங்கள் தலைவி கூற்றும் தோழிகூற்றும் நிகழ்தற்குரிய இடங்களாகவே இருத்தல் கூடும். கலித்தொகை 18ஆவது செய்யுளில் தோழி தலைவன் செலவழுங்குதற்பொருட்டுக் கூறிய காரணங்கள், பொருள்வயிற் பிரிவின் சார்பாகத் தலைவன் கூறுபவற்றிற்கு விடைகளாகும். வாழ்நாள் சுருக்கமாதலாலும், இளமைப்பருவம் நிலைப்பது அருமை யாதலாலும், உள்ளத்தின் ஊக்கத்திற்கேற்பவுந் தகுதியின் அமைதிக்கேற்பவும் பொருள் தேடக்காலந்தாழ்க்குமாதலாலும், மிக்க வறுமையுடையவர்க்கும் காதல் வாழ்க்கை இனிமை தருமெனின், போதிய செல்வமுடையவர்கள் பொருளீட்டச்செல்லுதல் வேண்டியதில்லையாதலாலும், பிரிந்து அன்பைப் பெருக்குவதிலும் ஒன்றியிருத்தலே நலமாதலாலும், பிரிவினால் தலைவிக்குவரும் நிறைவேறுபாட்டைக் கருதுதல் அவசியமாதலாலும் பிரிதல் கூடாதென்று தோழி வற்புறுத்தியது காண்க. இதனுள் **நாளது சின்மை, இளமையது அருமை, தாளாண்பக்கம், தகுதியதமைதி, இன்மையதிழிவு, உடைமையதுயர்ச்சி,**

**அன்பினது அகலம், அகற்சியதருமை** என எட்டும் வந்தமை காண்க.

"நந்நிலை யறியா ராயினுந் தந்நிலை
யறிந்தனர் கொல்லோ தாமே யோங்குநடைக்
காய்சின யானை கங்குற் சூழ
வஞ்சுவர **விறுத்ததானை**
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே"

என்றது தலைவன் பாசறைப் புலம்பியதைக் கேட்ட தலைவி கூறியதாகும். இன்னும் தலைவி ஆற்றுமை கண்டுழித் தலைவன் மீண்டு வந்ததாகத் தோழி கூறுவதும், பொருள் வயிற்பிரிந்து மீண்டு வந்து வரைவதாகச் சொலலிப் போய் தலைவியை நினைந்து வருந்திக் கூறுவனவும், மீண்ட தலைவன் தோழிக்குக்கூறுவனவும், தலைவன் செலவையும் வரவையும் பற்றிக் கண்டோர் கூறுவனவும்பிறவும் பாலைத் திணையின் துறைகளே.

"கோடுயர் பன்மலை யிறந்தன ராயினு
நீடவிடுமோ மற்றே நீடுநினைந்து
துடைத்தொறுந் துடைத்தொறுங் கலங்கி
யுடைத்தரும் வெள்ள மாகிய கண்ணே"

என்ற செய்யுளில் தலைவன் மீண்டானென்று தலைவிக்குத் தோழி குறிப்பா லுணர்த்தியது காண்க. இதனுள் நீடவிடுமோவென்றது மீண்டானென்ற குறிப்பு.

"திருந்திழை யரிவை நின்னல முள்ளி
யருஞ்செயற்பொருட்பிணிபெருந் திருவுறுகெனச்
செல்லாது பெயர்தந்தேனே"

இது மிகுதியாகப் பொருள்தேடாது நின்னலம் நயந்துவந்தேனெனத் தலைவன் தலைவிக்குக்கூறிய தாகும்.

"அளிதோ தானே நாணே யாள்வினை
யெளிதெனஉலோம்பன்மின றிவுடை யீரே
கான்கெழு செலவினெஞ்சுபின் வாங்கத்
தான்சென் றனவே தமியனதா அன்
றென்னுவதுகொ ருனே பொன் னுடை
மனைமாண் டடங்கிய கற்பிற்
புனையீரோதி புலம்புறு நிலையே"

இது தலைவன், தலைவியின் பிரிவாற்றுமையை நினைந்து நெஞ்சு பின் வாங்கத் தான்மாத்திரம் பொருளீட்டுமுயற்சியினுல் முன் சென்ருன் என்பதாகக் கண்டோர் கூறியதாகும். இதனுள் காதலின் தடையினுல் மானங்கருதிப் பொருளீட்டுமுயற்சியிற் செல்லுதல் எளிதன்றென்பது அறிவுறுத்தப்பட்டது.

கற்பினுள் தலைவி பிரிவாற்ருது என்னையும் உடன்கொண்டு செல்லுக எனக்கூறுவதும் தலைவன் உடன்போக்கு மறுப்பதும் பிறவும் இத்திணையிலடங்கும்.

"அன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு"

இது தலைவனிடம் தலைவி தன்னையும் உடன் கொண்டுபோகும்படியாக வேண்டியதாகும். தலைவன் உடன்போக்கு மறுத்தற்கு உதாரணம் வருமாறு:—

"எல்வளை யெம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியன் மேவந்த சீறடித் தாமரை
யல்லிசே ராயித ழரக்குத்தோய்ந்த வைபோலக்
கல்லுறி னவ்வடி கறுகுந வல்லவோ"

அகப்பொருட் டுறைகளமைந்த செய்யுட்களில் உவமைகள் **உள்ளுறையுவமம்** எனவும், **ஏனையுவமம்** எனவும் இருவகைப்படும். ஏனையுவமமென்பது வெளிப்படையான உவமையாகும். உள்ளுறையுவமமென்பது ஒரு நிலத்துக்கருப்பொருள் வர்ணனையாயமைந்து உவமேயத்தை வெளிப்படையாக விளக்காதுநின்று, திணைக்குரிய உரிப்பொருளைக்குறிப்பது. உள்ளுறையுவமையை விளக்குவதற்கு ஏனையுவமை பயன்படுவதுமுண்டு. உள்ளுறை யுவமத்திற்குரிய கருப்பொருள்களுள் தெய்வம் என்பது சேர்ந்ததில்லை. ஐந்திணைக்கருத்துக்களை ஆதியில் **கலிப்பாவினுலும் பரிபாடலினுலும்** பாடுவது மரபாயிருந்தது. ஐந்திணைக்குரிய பாடல்களுள் தலைவன் தலைவியர்க்குப் பொதுப்பெயர் கூறுதலன்றிச் சிறப்புப் பெயர் கூறுதல் மரபன்று. அவர்களைச் சார்ந்தோர்களின் சிறப்புப்பெயர் பாடலுட்பயினுதல் காணப்படும்.

கைக்கிளை, பெருந்திணை என்பவற்றுள்ளும், அகத்திணை சார்ந்த புறத்திணையுள்ளும், தலைவன் தலைவியர்க்குச் சிறப்புப் பெயர் கூறுதலுண்டு உள்ளுறையுவமம் போலக்குறிப்புப் பொருள் பயப்பதாய்த் திணைக்குரிப் பொருள் குறியாததாய் வருவது **இறைச்சிப்பொருள்** எனப்படும். அதன் விரிவு பொருளியலில் கூறப்படும். உள்ளுறையுவமத்திற்கும், ஏனையுவமந்தழுவிய உள்ளுறையுமைத்திற்கும் ஆசிரியர் நச்சினார்க்கினியர்

உதாரணச்செய்யுள் கொடுத்து அவைகளை இனிது விளக்கியுள்ளார். அவை வருமாறு:—

"வீங்குநீரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர்மலர் சூழ்தந் தூர்புகுந்த வரிவண்டு
ஓங்குயர் செழில்யானைக் கனைகடாங்கமழ்நாற்ற
மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக்கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப்புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
பூப்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர"
என்பது.

இதனுள், வீங்குநீர் பரத்தையர் சேரியாகவும், அதன்கண் அவிழ்ந்த நீலப்பூ காமச்செவ்விநிகழும் பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத் தேரேற்றிக்கொண்டுவரும் பாணன் முதலியவாயில்களாகவும், அம்மலரைச்சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானையின் கடாத்தை, ஆண்டுறைந்த வண்டுகள் வந்த வண்டுக்கு விருந்தாற்றுதல்,பகற்பொழுதுபுணர்கின்ற சேரிப்பரத்தையர் தமது நலத்தை அத்தலைவனை நுகர்வித்தலாகவும், கங்குலின் வண்டுமுல்லையையூது தல், இற்பரத்தையருடன் இரவு துயிலுறுதலாகவும், பண்டு மருவிய பொய்கையை மறத்தல், தலைவியை மறத்தலாகவும், பொருள் தந்து ஆண்டு புலப்படக் கூறிய கருப்பொருள்கள், புலப்படக்கூறாத மருதத் திணைப்பொருட்கு உவமமாய்க் கேட்டோனுள்ளத்தே விளங்க நின்றவாறு காண்க.

"விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்ந்தாடி

வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுட்
டுனிசிறந் திழிதருங் கண்ணினீ ரறல்வார
வினிதமர் காதலனி றைஞ்சித்தன்னடி சேர்பு
நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம்போலப்
பனியொரு திறம்வாரப்பாசடைத்தாமரைத்
தனிமலர் தளைவிடூஉந் தண்டுறை நல்லூர"

என்பது, விரியுங் கதிரையுடைய இள ஞாயிறு விசும்பிலே பரவாநிற்க, விடியற்காலத்தே இதழ்கண் முறுக்குண்ட தலைகள் அமுமுறுக்குநெகிழ்ந்த செவ்விப் பூவிடத்துக் கள்ளை வண்டு நுகர்ந்து விளையாடி அதனானும் அமையாது, பின்னும் நுகர்தற்கு அவ்விடத்தைச் சூழ்ந்து திரியும். அச்செல்வ மிக்க பொய்கையுட் பசிய இலைக்கு ளூடனின்ற தாமரைத்தனிமலர் தனக்கு வருத்தஞ்செய்யும் பனி ஒரு கூற்றிலே வடியாநிற்கத் தான் மிகச்செவ்வியின்றி அலருந்துறையினையுடைய ஊர என்ற வாறு.

இதனுள், வைகறைக்காலத்து மனைவயிற்செல்லாது இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி, அதனானும் அமையாதுபின்னும் அவரைப் புணர்தற்குச் சூழ்ந்து திரிகின்ற இவ்வூரிடத்தே நின்னைப்பெறாது சுற்றத்திடத்தேயிருந்து கண்ணீர் வாராநிற்க நீ ஒருகால் அளித்தலிற் சிறிது செவ்வி பெற்றாளாயிருக்கும்படி வைத்த தலைவியைப் போல எம்மையும் வைக்கின்றாயென்றாமு, காமகிழத்தி உள்ளுறையுவமங் கூறினாள். துளி மிகுதலாலே பெருக்கு மாறாது வீழ்கின்ற கண்ணீர் காமத்தீயாற் சுவறி அறுதலைஉடைத்தாயொழுகஅவ்வருத்தத்தைக் கண்டு விரைந்து கணவன் அருளுதலிற் சிறிது மகிழ்

பவண்முகம்போல் என்ற ஏனையுவமந் தாமரைமலர் பனிவாரத் தளைவிடுமென்ற உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது.

மக்களைத் தலைவன் தலைவியராகக் கொண்டுவரும் அகத்திணைச்செய்யுளுள், அவர்களைச் சுட்டிக் காட்டுஞ் சிறப்புப்பெயர் வருதல் இல்லை. அப்பெயர், அகத் திணையைச்சார்ந்த பிறதிணைக்கண் வருதல் கூடும். சிறப்புப்பெயர்கள் சார்பாக வரலாம். பெருந்திணை, கைக்கிளை முதலியவற்றுள்ளும் வருதலியல்பே.

> "வெள்ளி வீதியைப்போல நன்றுஞ்
> செலவயர்ந்திசினால் யானே"

என்றவிடத்து அகத்திணைச்சார்பாகச் சிறப்புப் பெயர் வந்தது.

> "ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
> வேள்வி போற்றிய இராமன் அவனே"

என்றவிடத்துக்கைக்கிளைக்கண் சிறப்புப்பெயர் வந்தது.

> "பாண்டியன் மடமகள் பணைமுலைச்சாந்தம்
> வேறு தொடங்கிய விசய னெஞ்சத் (து)"

என்றவிடத்துப் பெருந்திணைக்கண் சிறப்புப் பெயர் வந்தது.

"முருகன் நற்போர் நெடுவேளாவி யாங்கண்" என்ற அடிவருத அகநானூற்றுச்செய்யுளில் கடவுள் பெயர் நிலக்கருப்பொருளாய் அகத்திற்கு வந்தது காண்க. பலதலைவர்கள் வருதலும் அகப்பாட்டுப்

புறத்திணையின் பாற்படும். 'கேள்கேடூன்றவும்' என்னும் அகநானூற்று 93-ம் பாட்டினுள் தலைவர் பலர் வந்தமை காணப்படும். புறநானூறு 158-வது பாட்டினுள் 'எழுவர் மாய்ந்தபின்னர்' என்றதுமது.

அகத்திணையியல் முற்றும்.

---

## களவியல்.

---

இவ்வுலகில் ஒருவனும் ஒருத்தியுங்கூடி வாழும் இன்ப வாழ்வானது, பண்டைத்தமிழரால் **களவு** என்றும், **கற்பு** என்றும் இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் கற்பென்பது வெளிப்படையாய் நிகழ்த்தும் இல்லறவாழ்க்கையாகும். களவென்பது பிறர் நன்கறியாதபடி நிகழ்த்தும் ஒழுக்க மெனவுந் தந்திரமாக நடத்தும் ஒழுக்கமெனவுங் கூறப்படும். அது உலகத்தோடொத்ததாகவு, மொவ்வாததாகவும் நூல்களிற்பேசப்படும். உரு திரு குலம் குணம் அன்பு முதலியவற்றால் ஒப்புமையுடைய தலைவனும் தலைவியும் ஊழ்வலியால் தாமே எதிர்ப்பட்டு, மனத்தாலாவது மெய்யாலாவது ஒன்றுசேர்ந்து நிகழ்த்தும் ஒழுக்கம், உலக வழக்கில் சிறுபான்மை யாதல் காணப்படுவதே. தலைவனுந்தலைவியும் பிணி மூப்பிறப்புக்களின்றி என்ஞான்றும் ஒரு தன்மையராய் வாழ்வரென்று கூறுதல் நூல்களிற் கூறப்படும் சிறப்பாமே யன்றி உலகியலிற் காணப்படுதலரிது.

ஆசிரியர் தொல்காப்பியனார் களவியலின் முதற் சூத்திரத்தில் களவினை இன்பம் பொருள் அறன் என்பனவற்றின் சார்புடையதாய் அன்பு கலந்த ஐந் திணை யொழுக்கத்தில் காதலாற்கூடுங் கூட்டம் எனக் குறிப்பித்தார். அது வடநூலார் கூறும் எண்வகை மணத்துள் கந்தருவ மணத்தின் இயல்புடையது என்றார். களவினைக் கந்தருவமணத்திற்குஒப்பிட்டது பிற்காலக்கருத்தாயிருக்கலாம். பிற்காலத்தே வடநூல் எதனையும் மறை என்று கூறுகின்ற வழக்கம் ஏற் பட்டது. வடநூலாரது எண்வகை மணம் போதாயன நூல் முதலியவற்றுள்ளே பேசப்படுகின்றது. ஒருவன் ஒருத்தி யென்பார்பால் காணப்படும் காதலொழுக்கத் தைத்தமிழ் நூலார் களவு, கற்பென இருவகையாகப் பகுத்துக்கூற வடநூலார் மணத்தை எண்வகையாகப் பகுத்தனர். அவை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தேய்வம், அசுரம், இராக்கதம், பைசாசம், கந்தருவம் என்பன.

கந்தருவரென்பாரைத் "துணைமையோ"ரென்று களவியல் முதற்சூத்திரத்திற் கூறினமையால் அவர்க ளுள் தலைவன், தலைவியர் பிரிவிலராகக் கருதப் பட்டனர். களவொழுக்கத்தில் பிரிவுங் கூறப்படுத லின் களவுப்புணர்ச்சி யொன்றே கந்தருவத்தோடு ஒத்ததாகும். தலைவன் தலைவியர் தாமே எதிர்ப்படு தலே கந்தருவமாதலின் களவினுட் காணப்படும் பாங்கற்கூட்டம், தோழியர் கூட்டம் முதலியன களவிற்கே சிறந்தன வெனக்கொள்க. புணர்ச்சியின் பின் தலைவனுந் தலைவியும் இல்வாழ்க்கை நிகழ்த்தின லொழியப் புணர்ச்சியை மாத்திரம் மணமென்று கூறுதல் தமிழ் வழக்கன்று. இராக்கதம், கந்தருவம்,

பைசாசம் என்பவற்றுள் புணர்ச்சிமாத்திரமே மணமெனக்கருதப்படின் களவிற்கும் கந்தருவத்திற்கும் உள்ள வேற்றுமை பெரிதாகும். களவு கற்பில் முடிவதே அறமாதலினென்க. கந்தருவர்க்கு கற்பின்றி அமையவும் பெறுமெனவும், கற்பின்றிக்களவு அமையாதெனவும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியது காண்க. களவொழுக்கத்திற்கு இன்றியமையாதது தலைவன் தலைவியரின் ஒத்த அன்பென்பதும், இன்பங்கருதியே ஒழுக்கந்தொடங்கிப் பொருட்டுணையால் வலியுற்றுப்பின்னர் இல்லற வாழ்க்கையாக நடைபெறுதற்குரிய தென்பதும் சூத்திரத்துள் வலியுறுத்தப் பட்டன.

எண்வகை மணத்துள்பிரம மென்பதைத்தமிழில் அறநிலை யென்பர். அதனுள் முதற்பூப்பெய்தினபின் மணம் நிகழ்வது காண்க. பிரசாபத்தியமென்பது மைத்துன கோத்திரத்தான் மகள் வேண்டிச்சென்றால் மறாது கொடுப்பதாம் என இறையனாரகப் பொருள் உரையாசிரியர் இயம்பினர். இக் கருத்து ஆசிரியர் நச்சினார்க்கினியரால் குறிக்கப்படவில்லை. இவ்வகை மணம் தமிழ் நாட்டிற் காணப்படுவதே. இதனை ஒப்பென்று கூறுவர். ஆரிடமென்பதைப் பொருள்கோளெனக்கூறுப. அதற்குக்காரணம் விளங்கவில்லை.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறிய பிரசாபத்தியத்தைப்பொருள்கோளென்றல் தவறாகாது. கந்தருவ மணத்தை யாழோர் கூட்டமெனவும், அசுரத்தை அரும்பொருள் வினையெனவும், பைசாசத்தைப் பேய் நிலையெனவும் கூறுதல் தமிழ் வழக்கு. கற்பு மணத்

தையே அறநிலை யென்பாருமுளர். அங்ஙனமாயின் அறநிலை, ஒப்பு, பொருள்கோள், அரும் பொருள் வினை, யாழோர் கூட்டம் என்பன தமிழ் நாட்டிற் காணப்படுவனவே. இழிந்த குலத்தாளை மணத்தல் பேய்நிலை யென்பாருமுளர். அங்ஙனமாயின் அதுவும் தமிழ் நாட்டிற் காணப்படுவதே. முறைப் பெண்ணை வலிந்து கோடல் இராக்கதத்துளடங்கு மெனில் அது வும் இந்நாட்டிலுள்ளதே. தெய்வக்காரியங்களுக்குப் பணிப்பெண்ணாகக் கொடுக்கும் வழக்கம் தெய்வமென் பதனுளடங்குமெனின் அதுவும் பண்டை வழக்கங் களுளொன்றே. எனவே களவு, கற்பு, ஒப்பு, பொருள் கோள், அரும்பொருள் வினை, வன்பு, பேய்நிலை, தெய்வம் என்னும் எட்டு முறையும் தமிழ்நிலத்திற் குரியனவாயிருந்தன வென்பது தவறாகாது.

களவிற்கு இன்றியமையாத அன்பினது இலக்கணம் இறையனாரகப் பொருள் உரையுள் இனிது விளக்கப்பட்டது. அதுதான் வேண்டப்பட்ட ஒரு பொருளின் கண் தோன்றும் உள்ள நிகழ்ச்சி. அது சில செயல்களாலேஉணரப்படும். அச்செயல்கள் பிறகாரணங்களால் நிகழாமல் அன்பினால் நிகழ்வதை ஆய்ந்தறிய வேண்டுமென்று ஆசிரியர் வற்புறுத்தி யுள்ளார். உதாரணமாகக் கணவன் இறந்தவுடன் மனை யாள் தன் உயிரை மாய்த்துக் கொள்ளுதல் சாவிற் சாதலென்னும் அன்பின் செயலெனப்படும். ஆனால் இச்செயல் பிறகாரணத்தினாலும் நிகழலாம். நோய் மிகுதியினாலும் புகழ் புண்ணியம் கருதியும் சாவிற் சாதல் நேரின் அது அன்பினால் நிகழ்ந்த தாகாது. அக்காரணங்கள் யாதுமின்றி அன்பின் காரணமாகவே

செயல் நிகழின் அன்புண்டென்று துணியப்படும். களவியல் இரண்டாவது சூத்திரத்துள் காதலர்காட்சிக் குரியகாரணத்தை ஆசிரியர் தொல்காப்பியனார்விளக்கு கின்றார்.

பிறப்பு முதலிய பலவகையால் ஒற்றுமையுடைய தலைவன் தலைவியர் மனம் ஒற்றுமைப்பட்டு அன்பு மிகுதற்கு ஏதுவாகிய ஊழ்வினைத் தெய்வத்தின் கட்டளைப்படி ஒருவரையொருவர் தாமாக எதிர்ப்படுவர். அவர்களிருவரும் ஓரிடத்திற் பிறந்து வளர்ந்தவரா யிருத்தலுங்கூடும். அவர்கள் குறிஞ்சி நிலத்திலுள்ள ஒரு பொழிலகத்தே எதிர்ப்படுவரென்பது நூன்மரபு. குறிஞ்சிநிலமன்றி வேறுநிலத்திலும் அவர்கள்சந்திக் தல் கூடும். இருவரும் வேறு நிலத்திற்குரியவர்களா யிருந்து குறிஞ்சி நிலத்திற் சந்தித்தலுங்கூடும். ஒரு வரையொருவர் சந்திக்கக்கருதிச் செல்லாமல்அவர்கள் சந்திக்கநேருதலும், எதிர்பாராதபடி உள்ளக்கவர்ச்சி ஏற்படுதலும் ஊழ்வினையின் பயனாகும். இளமை முதற்கொண்டே ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் ஓர் இடத்துறைந்து ஒருங்குபழகி தம்முள் விளையாட்டுச் சண்டைகள் விளைத்து அளவளாவியிருந்து பருவம் வந்த காலை ஊழ்வினை வலியால் காதல் முகிழ்த்ததற்கு உதாரணமாக குறுந்தொகை 229-ம் பாட்டினைப் பார்க்க. அதுவருமாறு:—

"இவனிவளைம்பால் பற்றவு மிவளிவன்
புன்றலையோரி வாங்குநள் பரியவுங்
காதிற்செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியக்

றுணைமலர்ப் பிணைய லன்ன விவர்
மணமகி ழியற்கை காட்டி யோயே''

என்பது.

தலைவனுக்கும் தலைவிக்கும் பத்து வகையாக ஒற்றுமை அமைதல் கூடுமென்று ஆசிரியர் மெய்ப் பாட்டியலுள் குறிப்பித்தார்.

''பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயி
னிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே''

என்றது காண்க.

குலத்திலும், ஒழுக்கத்திலும், முயற்சியிலும் வய திலும், உருவிலும், அடக்கத்திலும், இரக்கத்திலும், அறிவிலும், செல்வத்திலும், அன்பிலும், தலைவனுக் கும் தலைவிக்கும் ஒற்றுமை ஏற்படுதலே மிக்க சிறப்பா மெனினும் அன்பில் ஒப்புமையுடைமை முதன்மை யான ஒற்றுமையாகும். காதலானது உருவின் காட்சி வாயிலாக நிகழ்தலின் ''உருவு நிறுத்த காமவாயில்'' என்றார். பத்துவகை ஒப்புமைகளுள் சிலவற்றில் தலை வன் மிகுந்திருத்தல் தக்கதே தலைவன்வழி தலைவிநிற்க வேண்டுதலின் தலைவி இவற்றில் மிகுவதை ஆசிரியர் கூறிற்றிலர். தலைவி மிகுதல் ஐந்திணைக்கு ஆகாதென் பது கருத்து. தலைவன் தலைவியைக்காணும் முதற் காட்சியில் தலைவியின் உருவழகு மிகச்சிறந்திருப்ப தாயும் அவள் தெய்வ இனத்தளோ வென்று ஐயுறுவ தாயும் நூல்களிற் பேசப்படும். 'அணங்குகொலென்ற' திருக்குறளை உற்று நோக்குக. அங்ஙனம் நிகழ்ந்த ஐயத்தை கூந்தலில் வண்டுபயிலுதல், செயற்கை

அணிகலன்கள், உடம்பில் எழுதிய கொடிவரிகள், வாடும் பூ, இமைக்கும் கண் அச்சம் நாணம் முதலி யன கொண்டுகளைதல் மாபு. வியக்கத்தக்க சிறப்புத் தோன்றாத விடத்தும் ஐயம் நீங்கியவிடத்தும் தலை வன் காதலைக்குறிப்பித்த லொன்று. தெய்வத்தோற்ற த்தைச் சிறப்பெனவும், மக்கள் தோற்றத்தையும் மக் கள் காதலையும் இழிவெனவும் கூறுவது நூல்வழக்கு.

முதற்காட்சி நிகழுமிடம் ஒரு பொழிலென நூல் கள் கூறினும் பிறஇடமும் அதற்கு உரியதே யென் பது மிதிலைக் காட்சிப் படலத்தில் கம்பர், இராமன் சீதையை மிதிலை நகரில் ஒரு மாடத்தில் கண்டதாக வும், சீதை தெருவிற் செல்லும் இராமனைக் கண்டதா கவும் கூறியதா லுணர்க.

தலைவன் குறிப்பினைத் தலைவி யேற்றுத் தன் இணக்கத்தைத் தெரிவிப்பது அவளது இரு கண்ணி னாலுமே நிகழும். அவள் தன் கருத்தைத் குறிப்பு நோக்கால் உணர்த்துவ ளென்பது, "கண்ணொடு கண் ணிணை நோக்கொக்கின்" என்ற திருக்குறளா னறிக. காதல் ஒத்த பின் உள்ளப் புணர்ச்சியாதல் நிகழும். பெருமையும், உறுதியுமுடைய ஆடவர்க்கும், அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு என்பவற்றை யுடைய பெண்டிருக்கும் அக்குணங்கள் வழுவாதவிடத்து உள் ளப்புணர்ச்சியே நிகழற்பாலது. பெருமையென்பது 'சென்ற விடத்தாற் செலவிடாதீதொரீஇ நன்றின் பாலுய்ப்ப' தாகிய அறிவாகும். உறுதி யென்பது கொள்கையில் தவறாமை. மெய்யுறு புணர்ச்சியில் தலைவிக்கு விருப்பமிருப்பின் பலவகைமெய்ப்பாடுகள் நிகழும். இதுவரையுள்ள துறைகள் காட்சி, ஐயம்,

தெளிவு, குறிப்பறிதல், கூடல் விருப்பம், என்பன வாகும்.

அகப்பொருள் துறைகளுக்குப் பேரின்பக்கருத் துரைப்பார் காட்சியை அருட்குருவாய் வரும் இறை வன் திருமேனியைக் காண்டலெனவும், காட்சியின் புதுமையால் இறைவன் திருமேனியே யென்று தெளி தல் தெளிவென்றும், திருமேனியாற் பயன்பெறலா மென்றும், அவனிடத்திற்கருணை யுண்டென்றும் அறி தல் குறிப்பறிதலின் பாற்படுமென்றும், அருள் பெற விரும்புதல் புணர்ச்சிவிருப்பமென்றும் கூறுப. மணி வாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் இவையனை க்கண்டு ஐயுற்றுத்தெளிந்து அருள் பெற்றமை;

"புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானும் தேறினன் காண்க
அவனெனையாட்கொண்டருளினன் காண்க"

என்றமையால் விளங்கும். இதுநிற்க.

மெய்யுறு புணர்ச்சி விருப்பால் நிகழும் மெய்ப் பாடுகளை ஆசிரியர் மெய்ப்பாட்டியலுள் விரிவாக வுரைத்தனர். தலைவனுந் தலைவியுங்கூடு முன் நிகழும் மெய்ப்பாடுகளை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒவ் வொரு பகுதியையும் நன்னான்கு பிரிவுகளாக வகுத் தனர். தலைவன் தன்னைப்பார்த்தலைத் தலைவி விரும்பு வது அவளெதிர்நோக்குதலா லுணரப்படும். தலைவன் நோக்காதபோது தான் அவனை நோக்குதல் நாணத் தால் நிகழற் பாலது.

"யானோக்குங்காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்லநகும்"

என்ற திருக்குறள் காண்க.

தலைவன் காண்டலை விரும்புதல் **புகு முகம் புரிதல்** எனப்படும். தலைவன் தன்னை விருப்பொடு நோக்கிய காலை அச்சத்தாலும் நாணத்தாலும் தலைவி நெற்றியில் வியர்வையரும்புதல் **பொறிநுதல் வியர்த்தல்** என்னும் மெய்ப்பாடாகும். தலைமகன் நோக்கால் மறைத்தல் **நகு நயம் மறைத்தல்** என்னும் மெய்ப்பாடாகும். காதலினால் தோன்றும் உள்ளச்சிதைவினைப் பிறர்க்கு ப்புலனாகாதபடி செய்தல், **சிதைவு பிறர்க்கு இன்மை** யென்னும் மெய்ப்பாடாகும். இவைகள் மடமை யென்னும் பெண்மைக்குணத்தாலேற்படுவன. **மடமை** யாவது அறிவிக்க அறிந்து அறிந்ததைக் காட்டாமை, அதனை யாசிரியர் நச்சினார்க்கினியர், 'கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை' என்பர். இங்கே குறித்தநான்கு மெய்ப்பாடுகளும் முதற்பகுதி யெனப்படும். காதலொற்றுமையால், தலைமகன், தலைவியின் மெய்ப்பாடுகளையறிதல் கூடும். இந்நான்கு மெய்ப்பாடுகளையும் ஒருதலைவன் தன்னெஞ்சிற்குக் கூறியபாட்டு வருமாறு:—

''யான்றற் காண்டொறுந் தான்பெரிது மகிழாள்
வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி
மிசைவெளிப் படாது நகைமுகங் கரந்த
நன்னுத லரிவை தன்மனஞ் சிதைந்ததை
நீயறிந் திலையா னெஞ்சே
யானறிந் தேனது வாயாகுதலே''

இச்செய்யுளுள் பெரிது மகிழாளென்பது புகுமுகம் புரிதலாகும் நீயறிந்திலையாலென்பது சிதைவு பிறர்க்கு இன்மை. மற்றவை வெளிப்படை. இம்மெய்ப்பாடுகள் நிகழ்ந்த பின்னர், தலைமகன் தலைவியை, மெய்

தொட்டுப்பயிலுதல் நிகழும். தலைவியின், நெற்றியி லுள்ள வியர்வையைத் துடைப்பது போலவும், கவர் பட்ட ஓதியைத் திருத்துதல் போலவும், நுதலினை யும், ஓதியினையும் நீவுதல் **பொய் பாராட்டல்** எனப் படும். தலைவியின் நேர் நோக்கம் பெற்றுத்தழுவுதல் **இடம் பெற்றுத்தழால்** எனப்படும். தலைவனது இச் செயல்கள் நிகழ்ந்தவழித் தலைவியின்பால் தோன்றும் மெய்ப்பாடுகளை ஆசிரியர், இரண்டாவது பகுதியாக அமைத்தனர். பயிர்ப்பாகிய பெண்மைக்குணத்தால் கூந்தலவிழ்தல், காதிலிட்ட தோடுகளிலொன் றுநழுவு தல், வளை மோதிரம் இவைகளைத் திருத்துதல், நெகி ழும் ஆடையைப்பெயர்த்து உடுத்துதல் என்பன அவை.

இவற்றைத் தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிற்பதையுணர்த்தும் பாட்டொன்றினுள் காண்க.

''விண்ணுயர் விறல்வரைக் கவாஅ னொருவன்
கண்ணி னோக்கிய தல்லது தண்ணென
வுரைத்தலு மில்லை மாதோ லவனே
வரைப்பாற் கடவுளு மல்ல னதற்கே
யோதி முந்துறக் காதொன்று னெகிழ
நிழலவிர் மணிப்பூ ணுஞ்சொடு கழலத்
துகிலும் பன்முறை நெடிது நிமிர்ந் தனவே
நீயறி குவைய தன் முதலே
யாதோ தோழியது கூறுமா றெமக்கே.''

தலைவி தன் கையால் கண்ணை மூடிக்கொள்ளுத லும் கொம்பிலாவது கொடியிலாவதுபோய்ச்சார்தலும் **இடையூறு** எனப்படும். அவ்விடையூற்றினைத் தலைவன் கூறுதல் **இடையூறு கிளத்தல்** என்னுந் துறையாகும்.

கூடப்பெறாது பொழுது நீடித்த காலை தலைவன் வருந்துதல் நீடு நினைந்திரங்கல் எனப்படும்.

இனி, தலைவி தனது உடையைப் பாதுகாத்தற் பொருட்டு உடையின் முன் பகுதியைக் கையாற் போற்றுதல் **அல்குல் தைவரல்** எனப்படும். ஆடையைப் போற்றுவது போல அணிகளையும் போற்றுதல் **அணிந்தவை திரித்தல்** எனப்படும். தலைவன் கூட்டத்தைவிரும்பாதாள் போல தலைவனை விட்டு ஒதுங்கி வன்மைகாட்டுதல் **இல்வலியுறுத்தல்** எனப்படும் இம் மூன்று மெய்ப்பாடுகளும் நிகழ்ந்தவிடத்துத் தலைவன் வருந்துதலைக் கருதியும் காதல் மிகுதிபற்றியும் தலைவி நாணம் நீங்குதல் நிகழும். அப்போது புணர்ச்சி விருப்பால் தலைவி தலைவனைத் தழுவுதற்பொருட்டு இருகையும் ஏறப் பெறுதல், **இருகையும் எடுத்தல்** என்னும் மெய்ப்பாடாகும். அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல், இல்வலியுறுத்தல், இருகையும எடுத்தல் என்னும் நான்கும மூன்றாவது பகுதியாகும். இவற்றைத் தலைவி இயல்பு கூறும் தலைவன் பாட்டொன்றில் காண்க.

''உள்ளத்து உருகள் போல வல்குலின்
ஞெகிழ்நூற் கலிங்கமொடு புகுமிட னறியாது
மெலிந்தில ளாகி வலிந்துபொய்த் தடங்கவும்
யாமெடுத் தணைத்தொறுந் தாமியைந் தெழுதலி
னிம்மை யுலகத் தன்றியு நம்மை
நீளரி நெடுங்கட் பேதை யொடு
கேளறிந் தனகொலிவள் வெய்மென்றோளே''

இதுவரை கூறிய மெய்ப்பாடுகள் புணர்ச்சிக்கு முன் நிகழ்வன. இறைவன்பாற் பேரின்பம் பெற

விரும்பும் அடியார்களிடத்தே காணப்படும் அன்பின் மெய்ப்பாடுகளை இவற்றிற்கு ஒப்பிடுதலுண்டு. அது "மெய்தானரும்பி" முதலிய திருப்பாடல்களிற் காண்க. புணர்ச்சி நிகழ்ந்தபின் பெற்ற இன்பத்தை வியந்து நெஞ்சு, வண்டு என்பவற்றை விளித்து, அவற்றிற்குக் கூறல், **முன்னிலையாக்கல்** என்னுந் துறையாகும். அவற்றை உத்தரங்கூறுமாறு வேண்டுதல், **சொல் வழிப்படுத்தல்** எனப்படும்.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே"

என்ற பாட்டில் தும்பியாகிய வண்டினை விளித்ததும், நீ கண்டதை மொழிக வென்றதும், முன்னிலை யாக்கல், சொல்வழிப்படுத்தல் என்னுந் துறைகளின் பாற்படு மென்ப. தலைவியை விளித்தலும் தலைவிபாற் தான் சொல்லுவதற்கு மறுமொழியை விரும்புதலும் இத்துறைகளின் கருத்தென்பாருமுளர்.

"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமோ
டுடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே"

என்ற பாட்டினுள் பிரிவில்லா வாழ்க்கையின் சிறப்பைக் கூறினமை **நன்னய முரைத்தல்** என்னுந்

துறையின் பாற்படும். தலைவியினின்று பிரியக்கருதிய தலைவன் உன்னுடைய நட்பினை நான் இழக்கமாட்டே னென்று கூறி, தலைவியின் கருத்தையுணர்தல் ஒரு துறையாகும்.

"நீயே அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலையே
யானே குறுங்காலன்னங் குவவுமணற் சேக்குங்
கடல் சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழிலென்யா னின்னுடை நட்பே"

என்பது அதற்கு உதாரணம். தலைவர் பிரிவா ரென்று கருதி வருந்துந்தலைவிக்கு அவளுடைய மெலிவை நீக்குதற்பொருட்டுத் தன்னுடைய அன்பு நிலையானதென்று வற்புறுத்துதல் **மெலிவு விலக் குறுத்தல்** என்னுந்துறையின் பாற்படும். அதற்கு உதாரணம் வருமாறு:—

"யாயும் யாயும் யாரா கியரோ
வெந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"

தலைவியைப் பிரிந்திருத்தல் தனக்கு இயலாது என்று கூறுதல் **தன்னிலை யுரைத்தல்** என்னுந்துறை யின் பாற்படும். பன்முறை கூடுதலினாலே தான் என்னுயிர் உடலில் நீங்காது வாழுமென்றது. அதற்கு உதாரணம் வருமாறு:—

"பல்கால் வந்து நம் பருவரல் தீர
வல்கனும் பொருந்துவ மாகலின்
ஒல்கா வாழ்க்கைத் தாகுமென் னுயிரே"

தலைவியை கட்புலனாகிற தன்னுயிரே யென வியந்துரைத்தலுந் தன்னிலையுரைத்தலென்பதே அது தலைவியைப்பிரிந்தவிடத்து நிகழ்தலுங்கூடும் அதற்கு உதாரணம் வருமாறு:—

"காணு மரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅங் காண்டுமே யரும்பெற லுயிரே
சொல்லு மாடு மென்மெல வியலுங்
கணைக்கா னுணுகிய நுசுப் பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே"

தலைவி பிரிவாற்றாமையை நீக்குதற் பொருட்டுத் தான் அவளை நீங்குவதில்லையென்றும், நீங்கினால் தனக்குக்கேடு வருக வென்றும் தலைவன் தேற்ற உரை பகர்தல் **தெளிவகப்படுத்தல்** என்னுந் துறையின்பாற் படும். அதற்கு உதாரணம் வருமாறு:—

"மெல்லிய லரிவை நின் னல்லகம் புலம்ப
னிற்றுறந் தமைகு வெனாயி னெற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே".

புணர்ச்சிக்குப் பின் கூறப்பட்ட துறைகளெல்லாம் தலைவிக்குத் **தேற்ற முரைத்தல்** என்பதனுளடங்கும்.

உள்ளப்புணர்ச்சியாவது மெய்யுறு புணர்ச்சியாவது நிகழ்ந்த பின்னர் கற்பு மணம் நிகழும் வரை பிரிவு காரணமாக நிகழும் ஆற்றாமை யியல்புகளை ஒன்பதாக ஆசிரியர் வகுத்து வைத்தார். அதனைக் களவியல் 9-வது சூத்திரத்துட் காண்க.

அவை யாவன:—

"வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலிதல்
லாக்கஞ் செப்ப னுணுவரை யிறத்த
ஞேக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப"

இருவர்க்கும் ஒரு தன்மையாக நிலைபெறும் வேட்கை, இடைவிடாது ஒருவரையொருவர் நினைத்தல், அதனால் உடம்பு மெலிதல், ஏதாவது இடையூறு கேட்டபோது அதனை ஆக்கமாக நெஞ்சிற்குக் கூறுதல், காதல் மிகுந்தவழி நாணத்தை யிழத்தல் காண்பன வற்றை யெல்லாம் காதற் சார்பாக வுணர்தல், பிற தொழில்களை மறத்தல், செய்திறனறியாது மயங்குதல் சாவிற்கேதுவான வற்றைக் கூறுதலென்பனவாம். இவைகள் பேரின்ப நெறியிலும் காணப்படுதல் திருவாசகமுதலிய வற்றுட் காண்க.

தலைவனுக்குந் தலைவிக்கும் முதற் காட்சியின் கூட்டம் நிகழ்ந்து பிரியும் வரையுள்ள துறைகள் இயற்கைப் புணர்ச்சியென்னும் பகுதியின் பாற்படும். பின்னர் தலைவனுந்தலைவியும் முன் ஒருவரையொருவர் கண்ட விடத்தே கூடுதல் இடந்தலைப்பாடு என்னும் பகுதியின் பாற்படும். அவ்விடந்தலைப் பாட்டினுங் முற்கூறிய மெய்தொட்டுப்பயிறல், பொய்பாராட்டல், இடம் பெற்றுத் தழுவுதல், இடையூறு கிளத்தல், நீடு நினைந்திரங்கல், கூடுதலுறுதல், புணர்ச்சி, தேற்ற முரைத்தல் என்பன நிகழும். அவற்றுட் சிலவே நிகழினும் நிகழும். கூடிய பின்னர் கூட்டத்தின் நயத்தைப் பாங்கனுக்காவது நெஞ்சிற்காவதுபுகழ்ந்து உரைத்தல் பெற்றவழி மகிழ்ச்சி என்னுந் துறையின் பாற்படும். அதற்கு உதாரணம்.

"ஒடுங்கீ ரோதி யொண்ணுதற் குறுமக
ணருந்த ணீர ளாரணங் கினளே
யினைய ளென்றவட் புனையள வறியேன்
சில மெல்லியவே கிளவி
யணைமெல் லியள் யான் முயங்குங்காலே"

பிரிந்து சென்ற தலைவியை தலைவன் மறைந்து ஆயத்திடைக்கண்டு இனிக்கூடுதல் அரிதென்று கலக்க முறுதல் **பிரிந்த வழிக்கலங்கல்** என்னுந்துறையாகும். தலைவன் தலைவியை மறைந்து காண்பது போலவே தலைவனைத்தலைவி மறைந்து காண்டல் **மறைந்தவர்க் காண்டல்** என்னுந்துறையின் பாற்படும். பெற்றவழி மகிழ்தலும் பிரிந்தவழிக்கலங்கலும் தலைவிக்கும் கூறப் பட்டுள்ளன.

தலைவனின் களவொழுக்கம் அவன் துணைவனாகிய பாங்கனுக்குத் தெரிய நேரின் பாங்கற்கூட்டமென்பது நிகழும். தலைவனது ஆற்றாமையைக் கண்ட பாங்கன் அவனது களவொழுக்கம் தகாதென்று மறுத்துக் கூறுதல், **பாங்கன் கழற** லெனப்படும். உலகத்தில் நிலை நிற்கின்ற குணங்களைத் தலைவன்போற்ற வேண்டு மென்று பாங்கன் கழறுதல், **நிற்பவை நினைஇ உரைத் தல்** எனப்படும்.

தலைவன் கலக்கங்கண்டு பாங்கன் வினவுதலை ஆசிரியர் தொல்காப்பியனார் விதந்தோதிற்றிலர். பாங்கன் வினவுதலும், தலைவன் விடையளித்தலும், பாங்கன் கழறலுக்கு முன் நிகழ்வன. பாங்கன் கழற லுக்குப்பின் தலைவன் தன்னியல்பு உரைத்தல், **நிகழ் பவை உரைத்தல்** என்னுந் துறையின் பாற்படும். பாங்கன் கழறலுக்கு உதாரணம்.

"தேரோன் றெறுகதிர் மழுங்கினுந் திங்க
டெரா வெம்மையொடு திசைநடுக் குறுப்பினும்
பெயராப் பெற்றியிற் றிரியார் சீர்சால்
குலத்திற் றிரியா நாட்டமு முடையோய்
கண்டத னளவையிற் கலங்குதி யெனினும்
மண்டிணி கிடக்கை மாநில
முண்டெனக் கருதி யுணாலன் யானே"

தலைவன் நிகழ்பவை யுரைத்தலுக்கு உதாரணம்.

"எனுவ சிறூஅ ரோமமுறு நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்கடோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறு நுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற் றாலெம்மே"

தலைவனது ஆற்றாமை கண்டு அதை நீக்குதற் குரிய வழியைப்பாங்கன் நாடுதல் களவொழுக்கத்தின் ஒரு பகுதியாகும். தலைவியின் வடிவத்தையும் தங்குமிடத்தையும் தன்மையையும் தலைவனிடத்தில் பாங்கன் வினவுதலும், பாங்கனுக்குத் தலைவன் விடையிறுத்தலும் பாங்கன் தலைவியினிடத்தை நாடிச் செல்லுதலும், செல்லுங்கால் தலைவியைக்காண்டல்கூடுமோவென்று ஐயுற்றுக்கூறுதலும், பாங்கன் தலைவியைக் கண்ணுற்று அவளைக் காட்டிய தெய்வத்தை வணங்குதலும், அவள் அழகினை வியந்து நெஞ்சிற்குக் கூறுதலும், தலைவியைக் கண்டு தலைவன் காதல் கொண்டது இயற்கையென எண்ணி யுரைத்தலும், தலைவனுக்குத் தலைவி தன்மை யுரைத்தலும், தலைவனுக்குத்தலைவியினிடங் காட்டலும் பாங்கனுலாகுங்

கூட்டம் அல்லது **பாங்கற் கூட்டம்** என்ற பகுதியின் துறைகளாகும்.

பாங்கன் காட்டிய இடத்திற்சென்று தலைவியைக் கண்டு கலந்தபின், பாங்கனைத் தலைவன் பாராட்டலாகிய துறையும் பாங்கற்கூட்டத்துள் அடங்கும்.

தலைவன் தலைவியைப் பிரியுங்கால் இனி நீ தோழியோடுவருக வென்பது, பாங்கியின் சார்புக்குத் தோற்றுவாயாகும். தலைவியின் போக்கையறிந்து களவொழுக்கத்தை நீடிப்பதற்குத் தோழியின் உதவியைத்தலைவன் நாடுதலே இதன் நோக்கமாகும். இன்ன தோழி, தலைவிக்கு மிக நெருங்கியவள் என்பதை மறைந்து நின்று தலைவியுந்தோழியும் நெருங்கிப்பழகுகிற முறையைப் பார்த்துத் தீர்மானஞ் செய்தல் ஒரு துறையென்பது, குறுந்தொகை 222-வது செய்யுளால் அறியலாம்.

தோழியை நாடுபவன், தலைவி தோழியோடு உடன் நிற்கும்போதாவது, தோழி தனித்திருக்கும் போதாவது சென்று, ஊர், பெயர், தான் வேட்டையாடித்துரத்தி வந்த மான், அல்லது பிற விலங்கைக் கண்டசெய்தி, வழி என்பவற்றை வினவுவதுபோலத் தன் குறிப்பைத் தோழியுணரும்படி செய்வது மரபு. ஊர் வினவுவதைத் தெளிவாக உணர்த்தும் பாட்டாவது;

''கல்லுற்ற நோய்வருத்தக் காலும் நடையற்றேன்
எல்லுற்றி யானும் வருந்தினேன்-வில்லுற்ற
பூங்கண் இமைக்கும் புருவ மதிமுகத்தீர்
எங்கிதுவோ நும்முடைய வூர்''

மான்போனவழி வினவியதற்குப் பாட்டு வருமாறு:—

"கண்டனி ராயிற் கரவா துரைமின்
புள்ளி மான் கலைபோகிய நெறியே" என்பது.

தலைவியுந்தோழியும் உடன் நிற்கும்போது தலைவன் வருவதனாலேயே தோழி தலைவன் குறிப்பை யறிதல் கூடும். அல்லது அவனது குறிப்புரையால் அறிதலும் கூடும். தலைவனைக் களவில் தனியேகண்டபின், தலைவிக்குள்ள தோற்ற வேற்றுமை முதலிய வற்றாற் களவொழுக்க முண்மையைத் தோழியறித லுங் கூடும். ஊர், பெயர், வழிவினவுதல் போலக்கூறிப் பானன்றித் தெளிவர்கத்தலைவியைத் தலைவன் வியப்ப தால் தோழி தலைவன் குறிப்பை எளிதாக உணர்தல் கூடும். ஐங்குறுநூற்றுள்;

"குன்ற நாடன் குன்றத்துக் கவாஅற்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அஞ்சில் ஓதி அசையியற் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிதுஇவள்
தன்போற் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே"

என்றவிடத்து, குவளைப்பூ இவள் கண்போலு மலராது; இவள் சாயல் மயிலிடத்து மில்லையென்று தலைவன் தோழிக்குக் கூறுமுகத்தால் தலைவியை வியத்தல் காண்க.

"......................ஒளி பிழைமாதர்
அணங் காகும ஆற்ற எமக்கு"

என்றவிடத்துத் தலைவன் தன் கருத்தைத் தோழிக்கு வெளிப்படையாகக் கூறினன்.

"முதலில் இருவரும் இருக்குமிடத்தே தலைவன் செல்லாது தோழியைத் தனியே நாடி, அவளிடம் நல்ல மாலை முதலியவற்றைக்கொடுத்துத் தனக்கு ஒரு குறையை முடிக்கவேண்டுமென்று குறிப்பித்த பின், **இருவருமுள்வழிச் செல்லுதல்** நிகழும்" என்பது களவியலுரை யாசிரியர் கருத்து. அப்படிச்செல்லுதலால், தலைவிபால் அவன் குறையுள தெனத்தோழி அறிவதே **மதியுடம்படுத்தல்** எனப்படும். அங்ஙனம் தோழி உணர்ந்தபின்னும் தலைவன் குறையைத்தலைவிபால் தோழி தெரிவியாவிடின், தலைவன் தோழியிடம் தெளிவாகத் தன் கருத்தை யுணர்த்துதல் நிகழும். தோழி தலைவிபால் குறையிரத்தற்கு மறுத்தால், அவளை மிகவும் நயந்து தலைவன் மேலுமேலும், வேண்டுதலுமுண்டு. தலைவி காதில் தான் சொல்லுகிற சொல் கேட்கும்படியாகத் தலைவன் குறையிரப்பதைத் தலைவியுணர்ந்து, தலைவியேகளவொழுக்கத்தை நடத்துதலும் நிகழக்கூடியதே. தோழி மறுத்தகாரணத்தால், தலைவன் தன் நெஞ்சை நோக்கி, நீ இவ்வொழுக்கத்தை இனி விட்டுவிடு, நமதுமுயற்சியாற் பயனில்லையென்று தலைவன் கூறுதலுமுண்டு. அது கேட்டுத் தோழி இரக்கமுற்றுத் தலைவனுக்கு ஒத்தன செய்தல் கூடும். தலைவியைக் குறையிரக்க, தான் மறந்ததாகத் தோழி கூறுதலும், தன்னைக்காணாமையால், தலைவி வருந்துவதும், அவள் தன் எண்ணத்தை வெளிப்படுத்த நாணமுற்று அவள் தன் ஆற்றாமையைப் பொறுத்துக் கொண்டிருந்த தன்மையும், தலைவன் தோழிக்கு எடுத்துக் கூறுதல் ஒரு துறை. காவலின் கடுமையாலும், பிறகாரணங்களாலும், தலைவியைக் காண்டல் அரிதென்று தோழி தலைவனைநீக்கியபோது, அதனைத்

தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுதலும், தோழியி னிடம் தான் மடலேறுவதாகக் கூறுதலும், தோழி மடலேறுதற்குத் தடைகூறுதலும், வெவ்வேறு துறை களாகும்.

களவொழுக்கம் நிகழ்கின்றகாலை, பகலில் இரு வரும் சந்திப்பதற்குக்குறித்த இடம் பகற்குறி எனப் படும். இரவுக்குறி வீட்டிற்குள் அமையும். பகற்குறி யினும் இரவுக்குறியினும் தலைவி வருதற்கு இடைஞ் சல் ஏற்பட்டபோது, தலைவன் நெஞ்சிற்குக் கூறும் பரிவுரைகள் உண்டு.

தலைவியைப்புறத்தேசெல்லாமல்அவள்பெற்றோர் தடுத்துவிடுவது இற்செறிப்பு எனப்படும் அதனை உணர்ந்து தன் கவலையைத் தோழிக்கும் நெஞ்சிற் கும் தலைவன் கூறுதல் உண்டு. தலைவன் தலைவியை இரவுக்குறியிற் காணவரும் வழியின் கடுமையைத் தோழியுந் தலைவியும் தலைவற்குரைத்தபோது, தலை வன் அதனை மறுத்துக்கூறுதல் நிகழும். புலி, யானை, கரடி, பூதம் முதலியனவும் பிறவும், தலைவியின் அரிய நலத்தை நினைந்து வருங்கால், அச்சம் விளையாமல் பாதுகாப்பு ஏற்படுகின்றது என்று, தலைவன் கூறுவ தாக நற்றிணையுட் போந்த செய்யுள் வருமாறு:—

''குருதி வேட்கை யுருகெழு வயமான்
வலமிகு முன்பின் மழகளிறு பார்க்கும்
மரம்பயில் சோலை மலியப் பூழியர்
உருவத் துருவினள் மேய லாரும்
மாரி எண்கின் மலைச்சுர நீளிடை
நீநயந்து வருதல் எவன்எனப் பலபுலந்
தழுதனை யுறைபும் அம்மா அரிவை

பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதி ரிளவெயிற் றோன்றி யன்னநின்
ஆய்நலம் உள்ளி வரின்எமக்கு
ஏம மாகும் மலைமுதல் ஆறே''

ஆசிரியர் தொல்காப்பியனார் பிற்காலத்து அகப் பொருள் நூலுள் துறை கூறுவது போலக் களவு கற்பு என்பவற்றின் ஒழுக்கப்போக்கின் வைத்துத் துறையிலக்கணங் கூறாது, தலைவன், தலைவி, தோழி முதலியோர் கூற்று இன்ன இன்ன இடங்களில் நிகழும் என்பதறிவிப்பான் சூத்திரஞ்செய்துள்ளார். இதனால், களவு கற்பு முறைகளை யாவரும் பொது வாக அறிந்திருந்த காலத்து ஆசிரியர் நூலியற்றினர் எனவும், அம்முறைகளைத் துணைநூலால் அறிந்தபின் தன்னூல் கற்றலே பொருத்தமென்பது அவர்கருத் தெனவும் ஊகிக்க இடமுண்டு.

ஆசிரியர் காலத்தே ஆடவரும் பெண்டிரும் களங்கமில்லாமல் சமுதாயத்தில் அளவளாவியிருந் தமையும், தங்கள் பேச்சிலே வகைதெரிந்து சொல் லத்தக்கவற்றை முறையாகச் சொல்லுமரபு ஏற்பட் டிருந்தமையும், இதுவரை குறிப்பித்த பகுதிகளால் இனிது விளங்கும். நெஞ்சினை நோக்கிக் கூறுவன பல வும் அரியகருத்துக்களைத்தெரிவிப்பன. அகத்துறைப் பாடல்களால் பண்டைத் தமிழரின் உயர்ந்த மனப் போக்கினை ஊகித்தறிதல் நம்மவர் கடன். விரித்தல் மிகையாகும்.

இனி, தலைவியின் உரை நிகழும் இடங்களை ஆசி ரியர் குறிப்பிடுவதைக் கவனிப்பாம். களவொழுக்

கம் நிகழுங்காலத்தில், காதலனும் காதலியும் எதிர்ப்படும் இடத்தில் எதிர்ப்படாமை, குறி பிழைப்பு எனப்படும். குறித்த இடத்தில் காதலனை எதிர்பார்த்துச் சென்று காணப்பெறாத தலைவி, அதுபற்றி வருந்திக் கூறும் பாட்டு குறிபிழைப்பு என்னும் துறையின் பாற்படும். இரவிலும், பகலிலும் குறிப்பிடம் பிழைத்தல் கூடும். இரவு தலைவன் தேர் வருகிற ஒலி போன்ற பிறிதொரு ஒலிகேட்டு அவனை எதிர்பார்த்தும், அவன் வராமைகண்டு தூங்காதமைபற்றி தலைவி கூறுவாள்; குறுந்தொகை 30ம் பாட்டில்;

"முழவுமுதலறைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமட லிழைசிறுகோற் குடம்பைக்
கருங்கா லன்றில் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை யகவும் பானாட் கங்குல்
மன்றம்போழும் இனமணிநெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுதல் இசைக்கும் அரவமொடு
துயில்துறந் தனவால் தோழியென் கண்ணே."

என்றது காண்க.

ஊடாடங்காமை, தாய்தூங்காமை, முதலிய பல காரணங்களால், தலைவன் வரவு தாமதப்பட்டகாலையும் காத்திருந்து வருந்திய கவலையைப் பாட்டால் வெளிப்படுத்துதலுண்டு. காஞ்சுவகையிற் பொழுது நனி யிகத்தல் என்னும துறை இது. இது, இரவுத்தாமதமே குறிப்பது போலும். ஏனெனில் உதாரணங்கள் அதனையே குறிக்கின்றன. நிலவு தலைவன் வருதற்கு இடையூறென்பாள்:—

"எல்லி வருநர்க் களவிற்கு
நல்லையல்லை நெடு வெண்ணிலாவே" என்றாள்.

அகநானூற்றுச் செய்யுளொன்றில், (122) களவொழுக்கத்தில் இரவில் தலைவன் வருதற்குரிய பல இடையூறுகளும் தொகுக்கப்பட்டன.

"இரும்பிழி மகாஅர் இவ்வழுங்கல் மூதூர்
விழவின் றாயினும் துஞ்சா தாகும்
..........................அன்னை துஞ்சாள்
..........................அன்னை துஞ்சில்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
....... ....................ஞாளி மகிழும்
........................நிலாக் கான்று விசும்பில்
அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே
இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை
..........................குழறும்
மனைச்செறி கோழி மாண்குரல் இயம்பும்
எல்லா மடிந்த காலத் தொருநாள்
நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே"

என்பது காண்க.

தலைவி எதிர்பார்த்தநேரத்திற் றலைவன் வாராமையால், தலைவி குறித்த இடத்தை விட்டகன்றபின், தலைவன் வந்து, தான்வந்ததைக் குறிப்பதற்கு ஏதாவது ஒரு அடையாளம் வைத்துவிட்டுப்போக, விடியற்பொழுதில் தலைவி அதனைக்கண்டு தலைவனைக்கண்டேனில்லையே யென்று கவன்று ஒன்றுஞ்செய்ய முடியாநிலையில் ஆசைத்துயருற்றபோது தலைவிகூறும் கூற்று ஒரு வகைத்துறையாகும். தலைவி தலைவன் விரலடையாளம் மணல் மேலிருந்ததைத் தோழிக்குக் கூறும் பாட்டுக்களுண்டு.

வரையாதே உச்சிப்பொழுதில் வந்தவரை உண்பிக்கும் தலைவி குடும்பத்திலுள்ளவர்கள், தலைவன் ஒருவழிப்போக்கன், அல்லது அதிதிபோல் வந்தவனை வரவேற்ற செய்தியை தலைவி தோழிக்குக் கூறுதல் ஓர் அழகிய துறை. அது கலித்தொகை 51வது பாட்டில்,

"சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில் நாம்ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணும் நீர்வேட்டேன் எனவந்தாற்(கு) அன்னை
அடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா வென்றாள் எனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான் [றேனா
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி
[நகைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்"

என்றது காண்க.

அன்னை, தலைவனை வரவேலாமைக்காக தலைவி அன்னையைப் பழித்துக்கூறும் பாட்டுக்குறுந்தொகை 292-ல்

"பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்து செலிஇயரோ அன்னை

ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே.''

என வந்தமை காண்க.

தலைவனை விருந்தேற்கும்படி, தோழியைக்கூறுத லுண்டு. தோழி, தலைவனை விருந்தாய் வந்து தங்குக வென்று வேண்டுவள்: அது அகம், 299-ல் காணப் படும். களவொழுக்கம் நிகழுங்காலை தலைவன் அரசன் ஏவலால் வாள்நலங்காட்டப்பிரியும் பிரிவின்கண் தலைவி தலைவன் வரவை நாடிக்கூறும் கூற்று நிகழும். அது கலி 31-ல் காண்க. உடன்போக்கிலும், வரைவு (மணம்) வேண்டும்காலையும், தலைவி நாணத்தைக் கடந்து காதல் மேற்படுதல்பற்றித் தன் கற்பைப் பாதுகாத்தற்பொருட்டுத் தலைவி கூறுஞ் சொற்கள்ஏற்படும். வரைவு நிகழ்த்தற்கு முன் பொருள் தேடல் முதலிய காரணங்களாற் பிரிந்த தலைவன், குறிப்பிட்ட காலம் வராமைபற்றித் தலைவனைத்தோழி இயற்பழித்தலை மறுத்துத் தலைவி தலைவனைத் தாங்கிக் கூறும் பாடல்கள் உள்ளன. அவை தலைவி இயற்படமொழிவனவாம். தலைவன் வரைதற்குத்தமர் உடன்படவேண்டுமென்று தலைவி விரும்புவாள், அது காரணமாகக் கூறும் சொற்கள் ஒரு துறையாகக் கருதப்படும். அயலார் மணம் பேசவந்தகாலை அதனை மறுக்கும் வண்ணம் தலைவி தோழிக்குக் கூறுவதுடன், தலைவனை வரைந்து கொள்ள விரையும்படி அவனுக்குச்சொல்லும வண்ணம் தோழியைத் தலைவி ஏவுதலுண்டு. அதற்குஉதாரணம் கலித்தொகை 114-ம் பாட்டிற்காண்க. தலைவி நாணமும் அடக்கமும் உடையளாதலின், பெரும்பான்மையும் தன் கூற்றுக்களைத் தோழியினிடமே கூறுவள்.

இன்னும் தலைவிகூற்று நிகழும் இடங்களுமுள. அவை தலைவியின் காதல் மிகுதிபற்றி, தன்பாற்கற்பும் தலைவன்பாற் பரத்தைமையும் தலைவி குறிப்பது போலத் தோன்றுதலும் உண்டு. தலைவன் புணர்ந்து பிரிந்தபோது, தலைவி அவன் மறையும்வரை பார்த்திருந்து, அவன் மறைந்தமையும், அவன்தேர் மறைந்தமையும் இன்னவாறிருந்ததென்று தோழியினிடம் கூறல், மறைந்தவர்க் காண்டலின் சார்பாயது. தலைவி தன் மெலிவினைத் தலைவற்கு யாராவது உணர்த்தவேண்டுமென்று கருதிக்கூறும் சொற்கள், தற்காட்டுதல் எனப்படும். தலைவன் பரத்தைமையைத்தான் அறிவதாகக் கூறக் காதல் மிகுதியினால் தனக்கு இயலாது போயினும், தன் அணிகளும் கண்களும் அவனுக்குணர்த்தினவென்று தலைவி தோழிக்குக் கூறுதல், நிறைந்த காதலில் சொல்லெதிர்மழுங்கல், என்பதன்பாற்படும். தன்னைப் பிரிந்த தலைவனுக்குத் தான் வழிபாடு மறுக்க இயலவில்லையென்று தோழிக்குத் தலைவி கூறுதலுண்டு.

"உள்ளின் உள்ளம் வேமே உள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமஞ்
சான்றோர் அல்லர் யா(ம்) மரீஇயோரே"
(குறுந்தொகை 102)

என்ற செய்யுள் அதனை இனிதுணர்த்தும். தலைவனை எதிர்கொள்ளாதவிடத்து, நாண் நிலைக்கும், கற்பு நீங்கும்; கற்பே வேண்டற்பாலதாகலின், தலைவனை வழிபட தலைவி கருதுதல் ஒரு துறை.

பிரிந்த தலைவனுலேற்பட்ட தலைவியின் நோய் நீங்குவதற்கு, அவள் தாய் முதலியோர் வேலனுக்கு வெறியாடல் செய்யக்கருதவும், தலைவனே மீண்டும் வந்த காரணத்தால் நோய் தீர்ந்ததை தலைவி தோழிக்குக் குறிப்பித்தலும், தலைவி எதிர்ப்பட விரும்பாத காலை தலைவன் எதிர்ப்பட்டு தலைவியின் மனக்கலக்கம் தீர்த்தலைத் தோழிக்குக் கூறுதலும், பரத்தமை காரணமாக தலைவனை ஏற்றுக்கொள்ள தான் நாணுவதாக தலைவனுக்கு அவள் கூறுதலும், களவொழுக்கத்தில் தலைவன் தன்னூருக்குச் சிறிதுகாலம் பிரிந்துபோவதை தலைவி விரும்பாது தன் ஆற்றுமையை தோழிக்குத் தானே கூறுதலும், தலைவன் காண்பதற்கு அரியவனுதல் பற்றி தன்னை மறந்தானென தலைவி தோழிக்குக் கூறுதலும், அருமையாக வருதல்பற்றித் தலைவன்வந்தவிடத்து அவனைத் தான் இகழ்ந்திருந்தமை தலைவி தோழிக்குக் கூறுதலும், தனது களவொழுக்கத்தைப் பெற்றோர் அறியவேண்டுமென்ற விருப்புடன் தோழிக்குக் கூறினும், தோழி அதனை வெளிப்படையாக அதனை அவாகளுக்கு அறிவிக்கக் கூடாதென்று தெரிவித்தலும், தலைவன் வரைவு நீட்டித்தலால் அதற்கு வருந்தி அவனிடத்துள்ள நட்பிக்கை யொழிவதாக தலைவி தோழிக்குத் தெரிவித்தலும், தலைவன் சொற்படி வாராமையால் அவனைத் தெய்வம் வருத்துமோவென்றும், தனது தந்தையறிதல் அஞ்சித் தலைவன் வரவில்லையோ வென்றும், தனக்கும் தலைவனுக்கும் உள்ள தொடர்புக்கு இடையூறுக ஒன்றும் நிகழக்கூடாதேயென்றும், தலைவி அஞ்சுவதாக தோழிக்குக் கூறுவதும், தலைவன் பிரிந்தமைக்குக் காரணம் தலைவி யறியாது கலங்குவதை தோழிக்குஅவள் உரைத்தலும், வரைவுநீட்டித்த

காலை தலைவன் எதிர்ப்பட்டதை மகிழ்ந்துரைத்தலும், தலைவன் வருதற்குள்ள இடையூறுகளை தோழி முதலி யோர்கள் சொன்னபோது இடையூறில்லாத காலத்தி லும் தலைவன் வருவதில்லையென்று தலைவி கூறுதலும், குறைநயப்பித்த தோழி சொல்லைத் தலைவி நன்குமதி யாது கூறுதலும், காவல் மிகுதியால் தலைவனைக் காணப்பெறாது மனையிலகப்பட்டுக் கலங்கிய தலைவி தனது உட்கோளை தோழிக்கு உரைத்தலும், தலைவன் செய்தியொன்றையும் ஒருவரும் சொல்லாதவிடத்து, தனது ஆற்றாமை வெளிப்படுத்தும் சொற்களை தலைவி தானேயும் தோழியினிடத்துக் கூறுதலும், அயலவர் வருகையைக் கருதியபோதும், அதனை மாற்றுவதற் குத் தோழியிடம் தலைவி கூறுதலும, களவொழுக்க வுண்மையை தோழிக்கும் செவிலிக்கும் மறைத்துக் கூறுதலும், தலைவன் பெருமையும் தனது நாணமும் அடக்கமும் இன்னதன்மையாய் இருந்ததென்று குறை நயப்பித்த தோழிக்குத் தலைவி கூறுதலும், தலைவன் மடலேறக்கருதுவது கேள்விப்பட்டு பொய் யென்று விளையாட்டாகத் தலைவி இகந்துரைத்தலும் ஆற்றாமையால் தலைவி கண்ணீர்விட்டபோது, வெறி யாட்டு நடக்குங்காலை தலைவன் அறிந்து வரவு நீட்டிப் பானென்று தலைவி அஞ்சிக்கூறுதலும், சந்திக்கு மிடத்து தலைவன் அடையாளம் போன்ற வேறு அடையாளம் கண்டு சென்று அவனைக் காணாமையால் வருந்திய தலைவி கூறுதலும், தலைவன் மணக்கக் கருதியபோது முன் ஆற்றாமையைத் தலைவி கூறுத லும், களவொழுக்கம் பிறர்க்குத்தோன்றும்படி தலை வன் நடந்த காலை, தலைவி தன் கருத்தைக்கூறுதலும், சுற்றத்தார் தனக்குக் காவலேற்படுத்திய காலை தலைவன்

சந்திக்குமிடத்து வந்து தன்னைக்காணுமல் போனு னென்று தெரிந்தபோதும், தலைவனைப் பிறர்குற்றம் கூறியகாலை அதை மறுத்துக் கூறுதலும், நேரம் ஒவ் வாமையானும், வழிக்கண்உள்ள இடையூற்ருலும், தலைவனைச் சந்தித்தல் கூடாமையான் தலைவி காரணங் களை ஆராய்ந்துரைத்தலும், தன்காதல் மிகுதியையும் தலைவன் அன்பின் மிகுதியையும், களவொழுக்கத் திற்கு இடையூறில்லாமையும், தோழிக்குத் தலைவி மகிழ்ந்துரைத்தலும், குறிப்பால் பரத்தமையைதலைவி கூறுதலும் பிறவும் பல்வகைத் துறைகளாம்.

தலைவனைப் பிறர்பழித்தகாலை, தலைவி அவனைப் போற்றுதல் கலித்தொகையுள் காணப்படும். குறித்த காலத்தில் வராமையால் தோழி தலைவனைப்பழிப்பாள்;

''இலங்கு மருவித் திலங்கு மருவித்து
வானினி லங்கு மருவித்தே தானுற்ற
சூள்பே ணன்பொய்த் மான் மலை''

என்னவும்

தலைவி அதை மறுப்பாள்.

''பொய்த்தற் குரியனே பொய்த்தற் குரியனே
அஞ்சலோம் பென்றுரைப் பொய்த்தற் குரியனே
குன்றக னன்னுடன் வாய்மையிற் பொய்தோன்றிற்
றிங்களுட் டீத்தோன்றி யற்று''

(கலி 41) என்பது.

அயலார் மணம்பேசி முடிப்பதன்முன் தலைவன் மணமுடிக்கவேண்டுமென்று அவனை வேண்டியபடி தோழிக்கு ஒரு ஆயர்மகளாகிய தலைவி கூறுதல், கலித்தொகை 114-ஆம் பாட்டிற் காணப்படும். அது வருமாறு:—

"தருமணல் தாழப்பெய் தில்பூவ லூட்டி
யெருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமண மெல்லாந் தனித்தே யொழிய
வரிமணன் முன்றுறைச்சிற்றில் புனைந்த
திருநுத லாயத்தார் தம்முட் புணர்ந்த
வொருமணந் தானறியு மாயி னெனைத்துந்
தெருமரல் கைவிட் டிருக்கோ வலர்ந்த
விரிநீ ருடுக்கை யுலகம் பெறினு
மருநெறி யாயர் மகளிர்க்
கிருமணங் கூடுத லில்லியல் பன்றே"

என்பது.

தலைவி, தலைவன் பரத்தமை யுடையனெனக்கருதி அவனை ஏற்றுக்கொள்ளாது கூறுமாற்றத்திற்கு நற்றிணை (172-ல்) உதாரணங் காணப்படும். அது,

"நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்
றன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே"

எனவரும்.

களவினுள், தலைவன் தன்னூர்க்குப் போய்வருமளவும் தம்மாற்றாமை குறிப்பாள்;

"விரிநீர்ச் சேர்ப்பன் நீப்பின் ஒருநம்
இன்னுயி ரல்லது பிறிதொன்
றெவனோ தோழி நாம்இழப் பதுவே
(குறு 334) என்பது.

மடலூர்தல், தலைவனது அருட்குணத்திற்கு மாறு மென்று குறிப்பிக்குந்தலைவி;

"வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
அவையினும் பலவே சிறுகருங் காக்கை
அவையினும் அவையினும் பலவே குவிமடல்
ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூக்கணாங் குரீஇக் கூட்டுள சினையே"

என்றது காண்க.

தலைவன், கொடுமை செய்தானென்பதை ஒப்புக் கொண்டும், அவனையே தன்னுயிர்க்குறுதுணை யென்னும் தலைவி;

"அடும்பமனெடுங் கொடி யுள்புதைந் தொளிப்ப
வெண்மணல் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடிய னாயினு மாக
அவனே தோழி யென்னுயிர்க் காவலனே"

என்றது காண்க.

தலைவன், வழியின் கடுமை நோக்காது உவந்தருள்செய்யினும், வரைகின்றானில்லை என்று வருந்துந் தலைவி தன்னையே யிகழ்ந்தமை,

"உள்ளுநருட்குங் கல்லடர் சிறுநெறி
அருள்புரி நெஞ்சமொ டெஃகுதுணை யாக
வந்தோன் கொடியனு மல்லன் தந்த
நீதவ றுடையையு மல்லை நின்வயின்
ஆறு அரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே"

(அகம் 72) என்பது.

தலைவி, நாணங்கடந்து சொல்லும் சொற்களுக்குத்தக்க காரணம் குறிக்கும், ஆசிரியர்.

"உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

என்றார்.

களவொழுக்கத்தில், தோழிகூற்று நிகழுமிடங்களையெல்லாம் ஆசிரியர் ஒருபெரிய சூத்திரத்துள் (தொல் களவியல் 23) தொகுத்தனர்.

தலைவி, ஒரு தலைவனோடு களவொழுக்கம் உடையாள் என்றறிதற்குத் தோழி ஆராயும் வகைகள் பல. தலைவியது கூந்தலும் நெற்றியும் கத்தூரி முதலிய வாசனைப் பொருள்களால் மணத்தல், அவள் கண்கள் வெள்ளை நோக்காகிய பிள்ளை நோக்கின்றி, உள்ளம் கொள்வதைக் குறிப்பிக்கும் பார்வையுடைமை, தோளும், நகிலும், மெல்லியன வாய்ப்பருத்துக்காட்டல், அவள் தன் ஆயந்தோறும் சிறுவீடுகட்டி விளையாடுதல் முதலியவற்றை விரும்பாமை, பிள்ளைபோல் வலிதினூட்ட வுண்ணாது தன் கருத்துப்படி உணவு கொள்ளுதல், தலைவனை நினைந்துபேசுவதை மறைத்தல் தலைவியினடை சீர்பெற நிகழ்தல். தாயொடுபடுக்காது தனித்துப்படுத்தல் முதலிய தலைவியின் செயல் வேறுபாடுகளால், தோழி அவளது களவொழுக்கம் ஊகிப்பாள். அங்ஙனம் தெளிந்த பின்புதான் தோழி தலைவியினிடம் அதைப்பற்றி வினவுவாள். தோழி தலைவியின் களவொழுக்கம் பற்றி ஊகிப்பாள் கூறுவது:—

> "ஏனல் காவல் இவளும் அல்லள்
> மான்வழி வருகுவன் இவனும் அல்லன்
> நரந்தங் கண்ணி யிவனோ டிவளிடைக்
> கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே
> நம்முள் நாணுகர் போலத் தம்முள்
> மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
> உள்ளத் துள்ளே மகிழ்ப
> சொல்லும் ஆடுப கண்ணி னானே" என்பது.

உண்மையை, ஆய்வதற்கு முறை கவருதபடி பொய்யும் மெய்யும் தோழி கூறித்தலைவி கருத்தறிதலுண்டு. தோழி, நாம் பிறைச் சந்திரனைத் தொழுவோம்என்ற போது, தலைவி பிறையைத் தொழாவிடின்; உண்மை புலனும் இவ்வழியே ஒருவன் விட்ட அம்பு குளித்த யானை கண்டேன் என்றும், ஒருதக்கோன் தன்பெருமைக்கேலாத சொற்களைச்கூறிக் குறை விரும்பி நின்றான், அவனை நீயுங்காண வேண்டுமென்றும், தோழி தலைவிக்குக்கூறித் தலைவி கருத்தறிதலுண்டு. நடுங்க நாட்டம் அதாவது தலைவனுக்கு விலங்கு முதலியவற்றால் ஊறுவந்ததாகக் கூறும்பகுதி, அகப்பொருட்குப் பொருந்தாது அதை ஆசிரியர் வழிநிலைபிழைத்தல் என்பர்.

தோழி தலைவியைநோக்கி 'உன்கண் சிவப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்ப, தலைவி அது சுனையாடினமையால் வந்ததென்ன அப்படியாயின், யானும் சுனையாடிப் பார்க்கிறேனென்று தோழி சொல்லுதல் தலைவி விடையினை நம்பாமை குறிப்பதாகும்.

> "யானும் ஆடிக் காண்கோ தோழி
> வரைவயிறு கிழித்த நிழல்திகழ் நெடுவேல்
> திகழ்பூண் முருகன் தீம்புனல் அலைவாய்க்
> கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் களித்த
> ஒண்பொறி மஞ்ஞை போல்வதோர்
> கண்கவர் காரிகை பெறுதல்உண் டெனினே"

என்பது.

தலைவி, வாயிலாகக் களவொழுக்க முண்மையைத் தெளிந்த பின்புதான், தோழி தலைவன் குறைமுடிப்பல் என்பாள்; தோழி தலைவனைப் பலகாரணங்களால்

சேட் படுத்தல் உண்டு அங்கெல்லாம் தோழி கூற்று நிகழும். தலைவனை நோக்கி உன்பெருமைக்கு எம்பால் குறையிரத்தல் தகாதென்றும், வரைந்து கொள்ளலே உலகியலென்றலும், தலைவியைப் பெறுதல் கடினமென்றலும், நீயே தலைவியினிடம் கூறி உன் கருத்தைத் தெரிவித்துப் பின்னர்வாவென்றலும், தலைவன் இருவருமுள்வழிச்சென்று யானையொன்று இவ்வழிப்போந்ததோ வென்று வினவின்;

> "யானை யதருள்ளும் நிற்பவோ தண்புனத்
> தேனற் கிளிகடிகு வார்" என்றலும்

தலைவி மிக்க இளமையுடையவளென்றும், தான்புணர்ச்சியை அறியாததாகவும், அறிந்ததாகவுங் கூறுதலும், பெற்றோரை அஞ்சித்தலைவனை அச்சுறுத்துதலும், தமரையஞ்சுதல் கூறுதலும், தலைவியைத் தலைவனிருக்குமிடம் செல்விக்கக் கூறுதலும், தலைவன் ஒழுங்காக வாராமையால், தலைவி அரியளாயினளென்றலும், தலைவனைத் தோழி கூட்டத்தின்பின் வணங்கிக்கூறுதலும், தலைவன் குறையிரத்தலைத் தலைவிக்குத் தோழி கூறுதலும், தலைவி நாணமிகுதியால் உடம்படாமை கண்டு இருவருக்குமுள்ள களவொழுக்கத்தைத் தானறிவதாகக் கூறித்தலைவியை இசைவித்தற்குப் பல கூறுதலும், தலைவன் தழையைத் தலைவி ஏற்றுக்கொள்ளாவிடின் அவன் மடலேறுதலும் வரை பாய்தலும் கூறினனென்றலும், தலைவி இசைந்தவிடத்து அவளது இணக்கத்தைத் தலைவனுக்கு அறிவித்தலும், குறிப்பிட்ட இடத்தில் மறைந்துநின்று தலைவன் வருத்தங்காண விரும்புவதைத் தலைவிக்குக் கூறுதலும் தலைவன் புணர்வுவேண்டிய இடத்தும் அதனை வேண்டாவிடத்தும் கூறுவன கூறுதலும், தலைவனை மறைவாக

விருந்தோம்புவதைத் தலைவி வேண்டிய விடத்துக் கூறுவன கூறுதலும், தலைவனிடம் தலைவியின் காதற் சிறப்புரைத்தலும், உடன்போக்கில் ஓம்படைக்கிளவி மொழிதலும், தலைவனைத் தலைவிக்கு இயற்பழித்தலும், தலைவி வருந்தியகாலை அவனை ஆற்றுதற்பொருட்டுக் கழறலும், தலைவன் அன்பைத் தலைவிக்கு வற்புறுத்து தலும், பிரிந்ததலைவன் மீளுதல் குறிக்கும் நன்னிமித் தங்கூறித் தலைவியை ஆற்றுவித்தலும், தலைவன் வழி யின் கடுமையைப்பற்றித் தலைவி கலங்கியகாலை அவளை ஆற்றுவித்தலும், காப்பின் கடுமையின்கண் அவ்வாறு தலைவியை ஆற்றுவித்தலும், காப்பின் கடுமையைத் தலைவற்கு அறிவிக்கப் புட்களைத் தூது விடுத்தலும், தலைவன் வரைவு சார்பாகவும், குறியிடத்துச் சார்பாக வும் கூறியனவற்றையும், அவனது நாடு, ஊர், இல் லம், இனம், சிறப்பு முதலியவைப்பற்றித் தலைவிக்குக் கூறுவன கூறுதலும், பிறவும் தோழியின் உரை குறிக் குந்துறைகளாகும்.

தாய். களவொழுக்கத்தை ஐயுற்றவழி அந்த ஐயத்தை நீக்கும் உரைபகர்தலும், தலைவன் வரைவு வைத்துப் பொருட்பிரிவு, வேந்தர்க்குற்றுழிப்பிரிவு, காவற்பிரிவு, நிகழ்த்தியகாலைத் தலைவிக்குக் கூறுவன கூறுதலும், வெறியாடுபவர்க்கு அதுவிலக்கக் கூறுவன வும், அயலவர் வரையக் கருதியதைத் தோழி தலைவற் குந் தலைவிக்குங் கூறுவனவும், அதைமறுக்கத் தாயர்க் குக் கூறுவனகூறுதலும் வரைவு நீட்டியாதபடித் தலை வனை வேண்டலும் தலைவிக்கு உழுவலன்புமிக்கத் தோழியின் கூற்றாய் நிகழ்வன. செவிலி கூற்று நிகழுமிடங்கள் பின் வருமாறு:—

களவு, புறத்தார்க்கு வெளிப்பட்டு அலரானவிடத்தும், தலைவிபாற் காதலொழுக்க அடையாளங்கள் தெரியினும், தலைவியின் உறுப்புக்கள் அதனைமிகக்காட்டினவிடத்தும், தலைவன் இல்விடத்து வருதலையும் தலைவிபுறத்துப் போதலையும் காணினும், குறிசொல்லுவாரும் வேலன் ஆவேசமுடையாரும் அதனைக்குறிப்பித்த இடத்தும், வெறியாடல் முடிந்தபின் தலைவி நிலைமாறுதஇடத்தும், தலைவி காதன் மிகுதியால் துயிலாதபோதும்; செவிலி தோழியை வினவுதலும், தெய்வத்தை வாழ்த்தலும், உடன்போக்கின்பின் நற்றாய்க்கு அறத்தொடு நிற்றலும், உடன்போயது தெரிந்து பின் செல்லாத காலத்து அஃதுண்மையறிந்து கூறுதலும் தலைவி உடன்போக்கிற் கிசைந்ததனையறிந்து கூறுதலும், தலைவன் தலைவியினியல்பைப் பிறர்க்கு அறிவுறுததலும், செவிலிபால் நிகழ்வன. நற்றாயும செவிலி உணர்ந்தவாறுணர்ந்து அவள்போலக் கூற்று நிகழ்த்தலுமுண்டு. இருவர் ஒழுக்கமும குற்றமின்றி யிருத்தலைப் பெரியார்பால் தாயர் கேட்டறிதலு முண்டு.

பாங்கனும், தோழியுமில்லாது தலைவனும் தலைவியுமே களவொழுக்கம் ஒருவர்க்கொருவர் தூதாக நிகழ்த்தலுமுண்டு பின்னர் வரைதலும் நிகழும். இருவரும் எதிர்ப்படும் இடத்தைத் தலைவி தானே குறிப்பிடுவள். தலைவன், இவள் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லுவான். தோழியும் இடங்குறித்துத் தலைவனுக்குக் கூறுதலுண்டு. தலைவி பூப்புடைய மூன்று நாளுமல்லது பிறநாள்களிற் களவொழுக்கம் நிகழும். செவிலிக்கும் தோழிக்கும் களவொழுக்க இடத்தைத் தலைவி குறிப்பிடல் உண்டு. அவர்களால் அவள் காரிய முடியத் தக்கதாகலின், அரியமறைமுகமான செய்தி

களையும் கூறத்தக்கவளாதல் பற்றிச்செவிலியைத் தாயென்று நூலோர் சிறப்பிப்பர். செவிலியின் மகள்தான் தலைவியின் நெருங்கிய தோழி. அவள் தலைவிக்கு உற்றதுணையாவள். தலைவியின் தன்மையைத் தலைவன் குறையிரத்தலை அறிதலும், தலைவியின் மேனியின் அடையாளங்களை அறிதலும், தலைவியும் தோழியும் ஆகிய இருவருமுள்வழித் தலைவன் வந்து உசாவுதலானும், தோழி களவொழுக்கம் அறிவாள் அது, மதியுடம்படுத்தல் எனப்படும். மதியுடம்படுத்தலின் பின்னேதான் தோழி தலைவனது குறைமுடித்துத் துணைபுரிதற்குரியள். குறியென்பது, தலைவன் தலைவியை எதிர்ப்படுமிடம். இரவுக்குறி, வீட்டினெல்லைக்குள் உள்மனைக்குப்புறம்பான இடமாம். பகற்குறி வீட்டெல்லைக்கு அப்பாலுள்ளது. களவொழுக்கத்திற்கு நாளும் கோளும் தலைவன் பார்ப்பதில்லை. வழியின் கடுமையும், விலங்கு முதலியவற்றை அஞ்சுதலும் அவனுக்கில்லை. தலைவியின் பெற்றோர் குறிப்புக்களால் களவொழுக்கம் அறிதல்உண்டு. தலைவனால் சிலரறியும் அம்பலும் பலரறியும் அலரும் ஏற்படுதல் கூடும். அவையின்றி வரைவு நிகழ்தலும் அவைக்குப் பின் வரைவு நிகழ்தலுமுள்ளன. ஓதல், தூது, பகை காரணமாக வரைவிற்குமுன் பிரிதல் தலைவனுக்கு இல்லை பொருள் வயிற்பிரிவு முதலியன நிகழும் என்பது குறிப்பு.

களவியல் முற்றும்.

## கற்பியல்

தலைவனும், தலைவியும் முதன் முறை எதிர்ப் பட்டு உள்ளப்புணர்ச்சி நிகழ்த்தியபின்னாவது, களவொழுக்கம் நிகழ்த்திக் களவுவெளிப்படு முன்னாவது, வெளிப்பட்ட பின்னாவது, வரைதல் அல்லது மணம் செய்தல் நிகழும். மணம்நிகழுங்காலை, பெரியோர் கற்பித்தபடி ஒழுகும் ஒழுக்கம் கற்பொழுக்கம் எனப் படும். அதனைப்பற்றிய நூற்பகுதி கற்பியல் எனப் பட்டது. கற்பாவது, சடங்குடன் தலைவியைக் கொள்ளும் உரிமையுடைய தலைவன் கொடுத்தற்குரிமையுடையார் கொடுப்ப மணஞ்செய்து கொள்வதாம். உரையாசிரியர்கள் கூறுவதாவது; இவளை இன்னவாறு பாதுகாப்பாயெனவும் இவனுக்கு இன்னவாறே நீ குற்றேவல் செய்தொழுகு எனவும், சுடர்க்கடவுள் முன் மந்திரவகையால் கற்பிக்கப் படுதலின், அத் தொழிலைக் கற்பென்றார். தலைவியின், தாயொடு பிறந்தாரும் தன்னையரும் தாயத்தாரும் ஆசானு முதலியோர் கொடைக்குறியோர் என்பதும் அவர் கருத்து. அகநானூற்று 86-ஆம் செய்யுளில், காவணம் அமைத்து குளிர்ந்தமணல் விரித்து விளக்குவைத்து மாலை தொங்கவிட்டு மக்கட்பேறுடைய நான்குமகளிர் தலைவியைக் கற்பும், நன்மக்கட்பேறும் உடையளாகுக வென வாழ்த்தி ஈரிதழ்கலந்த நீரில் முழுகுவித்தல், புத்தாடை புனைவித்தல் மரபென்பது குறிக்கப்பட்டுள்ளது. தலைவி, ஒண்குழையணிதலும் கூறப்பட்டது. கொடைக் குரிய மரபினோர் கொடுப்பதில்லாமல் சடங்கு நடைபெறுவதுண்டு. அது உடன்போக்கில் நிகழ்வது. காணம்

அதாவது சடங்குகளில்லாமல் மணம் நிகழ்ந்த காலமு முண்டு.

தலைவன், தலைவியருள் பொய்ச்சொல்லும், வழுவிய செயலும் ஏற்பட்டபின் சடங்கு என்னுங் கட்டுப்பாட்டை குலத்தலைவர்கள் ஏற்படுத்தினர். வடநூலில் மிருதிகள் ஏற்படுமுன் வேதத்திற்கூறப்பட்ட சடங்கு எல்லா வருணத்தார்க்கும் ஒரேவகையாக இருந்தது. சடங்குக் காலத்தில் இருவர் கருத்திசைவையும், உசாவி, இணக்க மறிந்தபின் மணஞ்செய்வித்தல் கந்தருவ வழக்கத்தை உள்ளிட்டகற்பெனவும், களவில்லாமல், கற்பு நிகழுங்கால் அவ்வாறு இணக்கந்தெரிதல் நிகழுமெனவும் உரையாசிரியர்கள் கூறினார்கள். சடங்கு மூன்றுநாள் நிகழ அம்மூன்று நாளும், மதி, அங்கி, கந்தருவரை மகிழச்செய்யும் வகையால், உடனுறைவு இல்லாதிருத்தல் மரபென்பதும் அவர்கருத்து.

இனி, கற்பினுள் தலைவன்கூற்று நிகழும் இடங்களை ஆசிரியர் தொல்காப்பியனார் தொகுத்துக் கூறினார். வரைவிடைவைத்துப் பிரிந்த தலைவன் மீண்டு வந்து மணச்சடங்கு நிகழ்த்தியபின், தலைவியை மனக்குறைதீரச் சேர்ந்து கலந்த முடிவில், தலைவன் தனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பன். அதற்குதாரணம்;

''விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கட் பொன்போன் மேனி
மாண்வரி யல்குற் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலொ டெமக்கே''

(குறு 101) என்பது.

இல்லற வாழ்க்கையின்பம் ஒழியாது புதிது புதிதாக நுகரும் இடத்தும், தலைவன் அதனைப்பாராட்டுதல் ''அறிதோறும் அறியாமை கண்டற்றாற் காமஞ் செறிதோறுஞ் சேயிழை மாட்டு'' என்பதாற் காண்க. தலைவி அச்சத்துடனும் அன்புடனும் பணிந்து இல்லறம் நடாத்தலும், ஈகையிற் சிறத்தலும் முதலிய உரிமைச்செயல்கள் மிகுந்தஇடத்தும், தலைவன் சிறப்புரை நிகழும். வருவாயில்லாத காலத்தும், கடமை தவறாது தலைவி நடக்குமிடத்தும், பிறரால் குற்றங் கூறப்பட்ட களவொழுக்கமும் செவ்வனே அமைந்ததெனப் பிறர்க் கெடுத்துரைக்க வேண்டுமிடத்தும், களவுக்காலத்து அஞ்சத்தக்க இடையூறு வாராமற் காத்த தெய்வமுண்டெனத் தோழிசொல்ல அத்தெய்வத்திற்குப் பரவுக்கடன் செய்யப் பணிக்குமிடத்தும், துன்பம்வந்தபோது அதுதீர அன்புடன் தலைவிக்கு அறிவுரை பகருமிடத்தும், தலைவன் கைதொட்ட வேம்பும் அமிழ்தம் போலும்எனத் தலைவிகூறி இதற்குக் காரணம் வினவுவாள் சோற்றினையும் பூவினையும் தொட்டபோதும், துறவிகளாய அந்தணரிடத்தும் சான்றோரிடத்தும் எல்லையில்லாத சிறப்புடைய தேவர்களிடத்தும் ஒருமுறை இன்னதெனத் தலைவிக்குப் போதிக்குமிடத்தும், களவொழுக்கத்தில் சேர்க்கைக்கு ஏற்பட்ட இடப்பாடுகளை உள்ளமநினைந்து அவற்றின் காரணத்தைத் தலைவி உசாவிய போதும, ஆகாயத்திலெழுதிய எழுத்துப்போல் மறையும்படி ஏற்பட்ட குற்றங்கள்நீங்க ஒழுகுதலைக் கூறுமிடத்தும, தனக்கு இடர்வந்தபோது தலைவி வருந்தாமலும் தலைவனுக்கு இடர்வந்தபோது அஞ்சாமலுமிருத்தற்குக் கூறுவன கூறுமிடத்தும், தலைவன் தலைவிக்குத் தப்பு

இழைத்த காலத்தும், தாங்குதற்குரிய கடமையும் பெருமையுமுடைய கருப்பம் ஏற்பட்டுத் தலைவிக்கு மேனியில் அதற்குரிய அடையாளம் ஏற்பட்ட காலத்தில், நூலாராய்ந்தாரைக் கலந்து தலைவன் தன் தகுதிக்கேற்ற சடங்குசெய்யக் கருதியகாலையும், மகன் பிறந்தவுடன் செயற்பாலன செய்யும் காலையும், குழந்தை பிறந்தபின் தலைவி எண்ணெய் ஆடு தலை விரும்புமிடத்தும், முனிவர் சார்பாகவும் தேவர்கள் சார்பாகவும் செய்யத்தக்க பெருஞ் சிறப்புக்களைச் செய்புமிடத்தும், தலைவனை அவன் பரத்தமை காரணமாகச் சேரப்பெறாது படுக்கையில் அணையைத் தழுவிக்கிடந்த தலைவியை அடைந்து அவன் தன்னைச் சேரவேண்டுமென்று அவளை வேண்டிக்கொள்ளும்பொழுதும், பிறபெண்டிர் மூலமாகத் தலைவியின் ஊடலைத் தணிக்க முயலுமிடத்தும், ஊடல் தீர்ந்தவிடத்துக் கூறுவன கூறுமிடத்தும், மிகுந்த பிரிவினால் தலைவிக்கு ஏற்படும் நோயினைத் தலைவன் அஞ்சுமிடத்தும், ஊடல் தீர்ந்தபின் தலைவியைக் கூடக்கருதுமிடத்தும், ஊடியபின் கூடியதனால் காதல் சிறந்தவிடத்தும், ஊடல் நீங்காவிடத்துத் தலைவன் அஞ்சியதைத் தெரிவிக்குமிடத்தும், தலைவன் தலைவிக்கு மாறாக நடந்த நிலையிலும், தலைவன் தனது முயற்சிகாரணமாகப் பிரியக்கருதி அதனைத் தெரிவிக்குமிடத்தும், தலைவிதன்னை தலைவன் செல்லுமிடத்திற்கு உடன் கொண்டுபோம்படி வேண்ட அதுமுறையன்றென மறுக்குமிடத்தும், வேற்று நாட்டுக்குச் சென்ற இடத்தில் தலைவன் தானுற்ற இடர்க்காலத்தும், இடைச்சுரத்துத் தலைவியின் உருவெளித் தோற்றத்தைக்கண்டு மீளுதலைக் கருதியகாலத்தும், பிரிந்தவிடத்துக் காரியமுடித்து

வெற்றிபெற்ற சிறப்பைத்தலைவன் பாராட்டுமிடத்தும் தேர்ப்பாகனிடங் கூறுவன கூறுமிடத்தும், காமக் கிழத்தியும் தலைவியும் தனக்கு எதிரெதிர் கூறியதை மாற்றுதற்கண்ணும், பிரிந்து சென்ற இடத்தின் இடர்ப்பாடுகளை விளக்கி அவை நீங்கப்பெற்ற முறைமையை அவர்க்குக் கூறுமிடத்தும், முயற்சிமுற்றி மீளுந்தலைவனை வரவேற்கத் தலைவி கோலஞ்செய்வதை விரும்புமிடத்தும், தன்னை வரவேற்ற பெண்டிர் உறவினர் முதலியோர்க்கு உத்தரமாக நன்மொழி கூறுமிடத்தும், பிறவாயில்களுக்குக் கூறும் எதிர்மொழி நிகழுமிடத்தும், தலைவனது கூற்றுநிகழும். அவற்றிற்கு உதாரணங்கள் கூறப்புகின் விரியும்.

தலைவி வேப்பங்காயைக் கொடுத்தாலும் அது இனிக்குமென்று தலைவன் சொன்னதாகத் தோழி அவனிடமே கூறியபகுதி குறுந்தொகை 196-ஆம் செய்யுளில்;

"வேம்பின் பைங்காயென் றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனிர்"—என்பது காண்க.

இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தினாலாவது. ஆதலால் இருவரும் தங்கள் பெற்றோர் இன்னாரென்றறியாமை குற்றமல்லவென்று குறிப்பிப்பான் தலைவன்;

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே" என்றான்.

பரத்தையிற்பிரிந்த தலைவனிடம் ஊடிய தலைவிக்குத் தூரமாக நின்று நான்செய்யாததை நீ சொல்லிக் கோ

பியாதே, உன் கட்டளையை நான் மறுப்பதில்லையென்று சமாதானஞ் செய்வான்;

"ஏதப்பா டெண்ணிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேம்என் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவல்நின்
ஆணை கடக்கிற்பார் யார்"
(கலி 81) என்றது காண்க.

தலைவியைப் பிரிந்துவெங்கானிற் செல்பவன், தலைவி குணத்தை நினையவே சூடுமிக்கவழி குளிர்ந்து காட்டிற்று என்பதற்கு உதாரணமாவது;

"நெடுங்கழை முளிய வேனில் நீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயின முன்னே யினியே
ஒண்ணுதல் அரிவையை உள்ளுதொறும்
தண்ணிய வாயின சுரத்திடை யாறே"
என்பது.

பிரிந்ததலைவன் தலைவி பதிக்கருகே தேரில்மீண்டவுடன் ஏவலிளையர் சொல்ல சுற்றத்தார் தன்னைப் பேருவகையோடு எதிர்கொள்வர்; அதற்காக உன் குதிரையை வருத்திச் செலுத்துக என்பான்:—

"திருந்துங் காட்சிப் பெரும்பெயர்க் கற்பின்
நாணுடை அறிவை மாணகர் நெடுந்தேர்
எய்தவந் தன்றால் பாக நல்வரவு
இளையர் இசைத்தலில் கிளையோ ரெல்லாம்
சேயுயர் நெடுங்கடைத் துவன்றினர் எதிர்மார்
தாயரும் புதல்வரும் தம்முன் பறியாக்

கழிபே ருவகை வழிவழி சிறப்ப
அறம்புரி யொழுக்கம் காண்கம்
வருந்தின காண்கநின் றிருந்துநடை மாவே"
என்பது.

இங்குத்தலைவன் கூற்றிற்குச்சில உதாரணங்கள் காட்டப்பட்டன.

இனித்தலைவிகூற்றுக் கற்பொழுக்கத்தில் நிகழும் இடங்கள் வருமாறு:— தலைவனது அறிவு நலனை நன்றாக அறிந்ததலைவி தன்னை அன்புடன் தலைவன் ஏற்குமிடத்தும், அன்பை நிலைநிறுத்துமிடத்தும், தலைவன் தன்பெருமைக் கேற்ற உரிமைகளைத் தலைவிக்குக் கொடுத்த இடத்தும், தலைவன் முயற்சி காரணமாகப் பிரிந்தபோது தோழிக்குத் தனது பிரிவாற்றாமைத் தெரிவிக்குமிடத்தும், தலைவனால் இன்பமுந் துன்பமும் ஏற்பட்டவிடத்தும், புதல்வன் பிறந்து நெய்யணி கொண்டாடு மிடத்துத் தலைவனைப் பிரிவுகாரணமாக இகழுமிடத்தும், பரத்தையிற் பிரியக்கருதிய தலைவனை அக்கருத்தை மாற்றும்படி நயமாகப் புலந்து கூறுமிடத்தும், பரத்தையிற்பிரிந்துமீண்டதலைவனை நோக்கி உன் புகழுரைகளை என் தங்கையராகிய பரத்தையர்க் குரைக்க என்னுமிடத்தும், தலைவன் பரத்தையர் பாற் செல்லாத போதும் செல்லெனக் கூறுதலும், தலைவனது காமக்கிழத்தி தலைவியின் புதல்வனைத் தழுவி விளையாடின இடத்து அதனைத் தலைவி யறியாது தலைவன் நின்று கண்டதைத் தலைவி அறிந்த விடத்தும், மகனுந்தந்தை போல்வான் என்றுதலைவி சினக்கும் போதும், தலைவன் கொடுமை காரணமாகப் பாணர், கூத்தர், முதலியோரை இகழ்ந்து தலைவனை வாயில்

மறுக்குமிடத்தும், தலைவன் தன்னை மன்னிக்கும்படி வேண்டியகாலை இதனைப் பரத்தையர் காணவேண்டு மென்று தலைவி கூறவேண்டியவிடத்தும், பரத்தையர் தனது புதல்வனைத் தழுவி அணிசெய்ததனைச் சினந்து கூறுமிடத்தும், தன்புதல்வனைப் பிறர்பாற் செல்லாது தன்பாற் சிறை செய்யுமிடத்தும், மைந்தனைத் தலைவ னொடு சினந்து தலைவன்பால் நீக்குமிடத்தும், தலை வன் தனக்குக் கேடுபயக்கும் சபதம செப்புங்காலை யும், காமக்கிழத்தியரை இளமையியந்து தலைவனைக் குறைகூறுமிடத்தும், தலைவனுக்காகப் பேசும் தோழி யினிடம் முறைதவறாதபடி சினத்தல், மகிழ்தல், பிரி த்தல், சேர்த்தல் என்பதைத் தலைவி விரும்பியவிடத் தும், அவற்றின் சார்பாகவரும், தூதுவிடல், செல்லு தலை நிறுத்துதல், வழியருமைகூறல், குழலைப் பழித்தல், மதியைப் பழித்தல் முதலியனவும், கனவுநிலை முதலி யன உரைக்குமிடத்தும், அனைய பிறஇடங்களிலும் தலைவி கூற்று நிகழற்பாலன.

தலைவனது நிலைபெற்ற பெரிய அன்பைப் பாரா ட்டுவாள் தலைவி கூறுவது:—

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே"

என்றாள்.

காதல்மிக்க தலைவி யொருத்தி தன் தலைவனைக் காணாத விடத்து, தேய்ந்துதேய்ந்து இல்லாமற்போவதுபோல நசித்தல் தனக்கு நேரிடும் என்பாள்;

"காமந் தாங்குமதி யென்போர் தாமஃது
அறியார் கொல்லோ அனைமது கையர்கொல்
யாமெங் காதலர்க் காணேம் ஆயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே"
(குறு 290) என்றாள்.

தலைவர் பார்வை, மகிழ்ச்சி விளைப்பினும அவர் கலப்பு நம்மைப் பிரிந்து செல்வாரோவென்ற கவலையையும் விளைக்கிறதென்பாள்;

"இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு"
என்றாள்.

இது இன்பமும் இடும்பையும் ஒருங்குணர்த்தற்கு உதாரணம். பரத்தையிற் பிரிந்த தலைவனை விரும்பியதற்காக மகனைத்தலைவி குறைகூறுதற்கு உதாரணம்;

"தந்தை வியன்மார்பிற் பாய்ந்தான் அறனில்லா
அன்பிலி பெற்ற மகன்"
(கலி-86) என்பது.

தலைவன் பலபரத்தையரை நாடுவதைத் தலைவி குறிப்பாள்;

"தாதுண் வண்டினும் பலர்நீ
ஓதி ஒண் ணுதல் பசப்பித் தோரே"
(ஐங்-67) என்றாள்.

தன்னிடத்தன்பில்லாத் தலைவனோடு ஊடுவதாற் பயன் என் என்று தலைவனோடு வெறுத்துக்கூறுவாள்:— குறுந்தொகை 93-ம் பாட்டினுள்;

"நன்னலர் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினு முரைய லவர் நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி
புலவியது எவனோ அன்பிலங் கடையே"
என்றது காண்க.

தன் புதல்வனைத்தழுவிய பெண்யாரென, தலைவனைத் தலைவி வினவியதற்கு உதாரணம்:—

"உடலினேன் அல்லேன் பொய்யா துரைமோ
யார்அவள் மகிழ்ந தானே தேரொடு
தளர்நடைப் புதல்வனை யுள்ளிநின்
வளமனை வருதலும் வெளவி யோளே"
(ஐங்குறு- 66)

உடன்போக்கில் வழியருமை யறிந்ததலைவி பிரிந்த தலைவன் செல்லும் நெறியின் அச்சத்தையும் அதனால் தலைவன் மனதிலுண்டாகக் கூடிய கவலையையும் பற்றித் தோழியினிடம் கூறுதலுமுண்டு. தலைவன் செலவை நிறுத்துவதற்கு அவ்வாறு தோழியிடம் கூறுதலும் நிகழக்கூடியதே.

இனி, தோழிகூற்று நிகழுமிடங்களாவன. நிகழ்தற்கரிதெனத் தலைவனும் தலைவியும் நினைத்தமணம் தோழி முயற்சியால் நிகழ்ந்தபின் தலைவன் தோழியைப் புகழ்ந்து பாராட்ட அதைத் தன்றாழ்மைக் கேற்றமுறையில் மறுத்துக் கூறுமிடத்தும், களவுக் காலத்தில் பட்டவருத்தம் நீங்கிற்றென்று தோழி தலைவிக்கு மணம் உறுதியானபின் கூறுமிடத்தும், களவு வெளிப்படாது கற்புமணம் முடிந்தகாலை அதற்குக் காரணம் தெய்வத்தினருளென்று தோழி தலைவ

னுக்குக்கூறி அத்தெய்வத்திற்குப் பராவுக்கடன் ஆற்றவேண்டுமென்று சொல்லுமிடத்தும், தலைவிக்குச் செய்யவேண்டிய கடன் ஆற்றுது அறம்பொருள் காரணமாகவும் பிற இன்பங்காரணமாகவும் செல்லும் தலைவனைக் கழறுமிடத்தும், தலைவன் புறவொழுக்கங் காரணமாக அவனை நொந்த தலைவியை அவன் அத்தகையன் அல்லனென்று கூறித் தேற்றுமிடத்தும், பரத்தையின் மீண்ட தலைவனைக் குறைகூறித் தலைவியைத் திருப்திசெய்து ஊடல் தீர்க்குமிடத்தும், பரத்தையிற் பிரிவு கூடாதென்று பணிவான மொழியால் தலைவனுக்குத் தெரிவிக்குமிடத்தும், தலைவன் பரத்தையொடு விளையாடினமை தனக்குத் தெரியுமென்று அவனுக்குக் கூறுமிடத்தும், புதல்வனோடு தலைவியிடம் தலைவன் வருவதைத் தலைவிக்குத் தெரிவிக்குமிடத்தும், தலைவிமாணழகைத் தருவாயென்று தலைவனைக் கழறுமிடத்தும் பரத்தை தலைவியை மதியாமையைத் தலைவற்குத் தெரிவிக்குமிடத்தும், தலைவனது பேணு ஒழுக்கத்திற்குத் தலைவி நாணியதை அவனிடங் கூறுமிடத்தும், தலைவனது சூளுறவு பரத்தையை நாடேனென்ற சபதம் பொய்த்தல்கண்டு தலைவிவருந்துவதை அவனுக்குக் கூறுமிடத்தும், சபதம் பொய்த்தல் தவறு; பெரியோர் ஒழுக்கத்திற்குமாறுய் குழந்தையில்லாக்குற்றம் தருமென்று தலைவனிடம் சொல்லுமிடத்தும், அதுகாரணமாக ஊடிய தலைவிபக்கம் சார்ந்து அவள் ஊடலைத்தீர்த்தற்கு மொழிவனமொழியுமிடத்தும், தலைவிஊடல் தீராது மிகுதிப்பட்ட வழி தலைவன் பக்கம் சார்ந்து தலைவியைத்திருந்த உரைக்குமிடத்தும், களவுக்காலத்துத்தலைவிபெருமை பேணி அவள் எளியளாய்க் கிடைக்குங்காலத்து

அதனைப் பாராட்டாமை குறிப்பித்து அவர்க்கு உள நெகிழ்ச்சி உண்டாக்கு மிடத்தும், பாணர், கூத்தர், விறலியர் என்னும் இவர்கள் வாயிலாகப் புகுந்தகாலை மறுத்தல், நேர்தல் முதலியன குறிக்கவேண்டிய இடத்தும், தலைவன் புறவொழுக்கம் மிகுதிப்பட்டகாலை அதனைக்கடியுமிடத்தும், தலைவன் பிரியுமிடத்தும், அவன் பிரிவு மறுத்துக்கூறுமிடத்தும், அனைய பிற இடங்களிலும் தோழிகூற்று நிகழற்பாலது. சில உதாரணங்கள் வருமாறு:—

"எக்கர் ஞாழல் இகந்துபடு பெருஞ்சினை
வீ இனிது கமழுந் துறைவனை
நீஇனிது முயங்குமதி காத லோயே"
(ஐங்குறு 148) என்றது காண்க.

தெய்வக்கடன் நிகழ்த்துவது கூறுவாள்;

"நெஞ்சொடு மொழிகடுத் தஞ்சுவர நோக்குந்
தாய்அவட் டெறுவது தீர்க்க எம்மகளை
சிறந்த தெய்வத்து நிறையுறை குன்றம்
மறைந்துநின் றிறைஞ்சினம பலவே
பெற்றனம் யாமே மற்றதன் பயனே"

இல்லற மொழுகாத் தலைவனைக்கடிதற்கு உதாரணம்;

"கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிறும்
தேர்வண் கோமான் தேனூ ரன்னவிவ
நல்லணி நயந்துநீ துறத்தலிற்
பல்லோ ரறியப்பசந் தன்று நுதலே"
என்றது காண்க.

"இவள் நலம் புலம்பப் பிரிய
அனைநலம் உடையளோ மகிழ்ந நின்பெண்டே"

"நினக்கு மருந்தாகிய யான்இனி
இவட்கு மருந் தன்மை நோம்என் நெஞ்சே"

"தண்ணந் துறைவன் கொடுமை
நம்முள் நாணிக் கரப்பா டும்மே"

என்பனவும் காண்க.

தலைவி பக்கத்தளாய்ப் புலவி தீர்த்தல்:—

"உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்"

"மாணேக்கி நீயழ நீத்தவ னானாது
நாணிலன் ஆயின் நலிதந் தவன்வயின்
ஊடுதல் என்னோ இனி"

என்ற செய்யுட் பகுதிகளிற் காண்க.

தலைவன் பாற் சார்ந்து தலைவியின் புலவி தீர்த்தற்கு உதாரணம்:—

"பரத்தமை தாங்கலோ இலனென வறிதுநீ
புலத்தல் ஓம்புமதி மனைகெழு மடந்தை
யதுபுலந் துறைதல் வல்லி யோரே
செய்யோள் நீங்கச் சில்பதங் கொழித்துத்
தாமட் டுண்டு தமிய ராகித்
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுந ராகுத லறிந்தும்
அறியார் அம்ம அஃதுடலு மோரே".

என்பது.

களவுக்காலத்தருமையைத் தலைவன் மறந்ததைக் குறி ப்பிப்பாள்;

"வேம்பின் பைங்காய்என் தோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனிர் இனியே

பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே''

(குறு 196) என்றாள்.

பாணர் முதலியோரை மறுத்தல்:—

''புலைமக னாதலிற் பொய்ந்நின்வாய் மொழி
நில்லல் பாண செல்இனிப் பரியல்
பகல்எஞ் சேரி காணின்
அகல்வய லூரன் நாணவும் பெறுமே''

என்ற விடத்துங் காண்க.

காமக்கிழத்தியர், கூற்றுக்களாவன:—

காமக்கிழத்தியர், காதலுரிமைபூண்டு இல்லறம் நிகழ்த்துபவர்; தலைவனது இளமைப் பருவத்திற்-கூடி முதிர்ந்தோரும், அவன் தலைநின்று ஒழுகப்படும் இளமைப் பருவத்தோரும், இடைநிலைப்பருவத்தோரும், காமஞ்சாலா இளமைப் பருவத்தோரும் எனப் பலதிறப்படுவர். அவர் கூத்தும் பாட்டும் உடையராகிவரும் சேரிப்பரத்தையரும், குலத்தின் கண் இழிந்தோரும், அடிமைப் பெண்களும், வேலைத் திறனுடைய பெண்டிரும் ஆகியோர் மேற்கூறிய காமக்கிழத்தியரல்லர்.

தலைவன் காமக்கிழத்தியிடத்திற் சிலகாலும் தலைவியிடத்திற் சிலகாலும் சேர்ந்திருத்தலால் இருவரும் புலத்தலியல்பு. காமக்கிழத்தியர் புலவி காரணமாகக் கூறுதலுண்டு. தலைவனை வலிந்து கைக்கொள் வேனெனக் கூறியபாட்டு அகம் 76-ல் காண்க.

"ஆதி மந்தி பேதுற் றினையச்
சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகு
அந்தண் காவிரி போலக்
கொண்டு கை வலித்தல் சூழ்ந்திசின் யானே"

பிறபரத்தையர்பாற் செல்வதையறிந்து காமக்கிழத்தியர் புலப்பதுமுண்டு.

"கண்டேனின் மாயங்களவாதல்" என்னும் கலித்தொகை 90-ம் பாட்டினுட் காண்க.

தலைவன் வீட்டிலுள்ளோர் செயல் தனக்கு எதிரிடையாயிருப்பின் அவர்களை இகழ்ந்து காமக்கிழத்தியர் சில கூறுப. தலைவனது பலவேறு புதல்வரைக் கண்டு காமக்கிழத்தியர் மகிழ்ந்து சில கூறுவதுண்டு. மற்றும்,

"வழிமுறைத் தாயுழைப் புக்காற் கவலும்
மயங்குநோய் தாங்கி மகன்எதிர் வந்து
முயங்கினள் மூர்த்தினள் நோக்கி நினைந்தே
நினக்கியாம் யாரேம் ஆகுதும் என்று
வனப்புறக் கொள்வன நாடி யணிந்தனள்"
(கலி 82) என்பது.

தலைவனது களவொழுக்கம் அறிந்து அவன் களவித் தலைவியை மணத்தல் பொருது மனத்துயரெய்துங் காமக்கிழத்திகூறுவன வுமுள. முதிர்ந்த காமக்கிழத்தியர் இளமைத் தலைவியின் ஊடல் தீர்த்துத் தலைவனை அவளொடு கூட்டுதற்குச் சில சொற்கள் தலைவியினிடம், கூறுதலுண்டு.

நற்றிணை 290-ம் பாட்டினுள், காமக்கிழத்தி தலைவியைப் பார்த்து, நீநுகர்ந்த மிச்சிலைப் பிறர்தின்ப

தால் உனக்குக் குற்றமில்லை. 'தலைவன் வண்டு போல் வான் மனிதனில்லை' யென்பவென்றுங் கூறுதல்காண்க.

"வயல்வெள் ளாம்பற் சூடுதரு புதுப்பூக்
கன்றுடைப் புனிற்றா தின்ற மிச்சில்
ஒய்வுடை நடைப்பக டாரு மூரன்
தொடர்புநீ வெஃகினை யாயின் என்சொற்
கொள்ளன் மாதோ முள்ளெயிற் றோயே
நீயே பெருநலத் தகையே அவனே
நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தித்
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டென மொழிப மகனென் னாரே"

என்பது காண்க.

தலைவன், ஊடல் காரணமாகப் பலரைக் காமக்கிழத்தி மறுத்தபோது யாவரும் பார்த்து மகிழக்கூடிய புதல்வனுக்கு அணியணிவித்து அவனை வாயிலாகக்கொண்டு புகுந்தகாலை அவள் கூறுமொழிகள் ஒரு துறையாகக் கருதப்படும்.

"என்குறித் தனன்கொல் பாணநின் கேளே
வன்புறை வாயி லாகத் தந்த
பகைவரும் நகூஉம் புதல்வனை
நகுவது கண்டு நகூஉ மோரே"

என்பது காண்க.

காமக்கிழத்தி, தன்னை மனையாளுக்கு ஒப்பாகக்கருதிப் பிறமகளிரினுந் தன்சிறப்புக் குறித்தலுண்டு. அவள் ஆறு குளன் காவுமுதலிய இடங்களில் தலைவனொடு விளையாடுங்கால் அவள்கூற்று நிகழ்தலுமுண்டு.

தலைவியின் கற்பு, காதல், நல்லொழுக்கம், மென்மைத் தன்மை, பொறுமை, அடக்கம், விருந்தோம்

பல், சுற்றம் ஓம்புதல் முதலிய உயர் குணங்களையும் அவள் அடிசிற்றொழில், முதலிய செயல்களையும் தலைவற்கு எடுத்து மொழிதல் வீட்டினுள் பழகும் தோழி முதலிய வாயில்களின் கூற்றும். முக்காலத்திலும், நல்லவை உரைத்தலும், அல்லவைகடிதலும் செவிலிக் குரியனவாகும் என்ப. தலைவிக்கும் நற்றாய்க்கும் அவள் கூற்று நிகழும். எல்லார்க்கும் அறிவுரை கூறும்பகுதி அறிவர்க்குறியது. திருவள்ளுவனார் பொதுமறை அதற்குதாரணமாகும். தலைவனும் தலைவியும் நன்னெறியில் நிற்குமாறு இடித்துரைத்தலும் அறிவர்க்குரியதே. தலைவியின் ஊடல் அளவு மிகுந்தகாலை தலைவன் புலத்தலுமுண்டு. தலைவி, தலைவன் ஏவியது செய்யுங்கடமை தவறிய காலத்தும் தலைவன் சினங்கொள்வான். அக்காலங்களில் தேற்றங்கூறுதல் தோழிக் குரியகடமையாகும். தலைவன் பரத்தமையில் நீங்கவேண்டுந் தலைவி அவனை அன்பிலனாகவும் கொடியனாகவும் கூறுதலுமுண்டு. தலைவன் ஊடல் நீக்குவதற்குப் பணிந்தமொழி கூறதலும் உரியன். தலைவன் அருள் பிறத்தற் கேதுவாகிய கருத்தைையுள்ளடக்கிய மொழிகள் செப்புதல் தலைவி கடமையாம். தலைவனைக் கொடுமை கூறுஞ்சொற்கள் வாயில்களின் கூற்றுக்களில் நிகழ்வதில்லை. எல்லாவாயில்களும் தலைவனை நோக்கிப் பிறரைச்கூறுமாறு போலக் கூறுதல் கூடும். தலைவன் தலைவியின் பண்டை நிலைகூறலும், தலைவி நுகர்ச்சியைச் சிறப்பித்தலும் பலவகையாகவும் ஊடலைத் தணித்தலும், உறுதியான அறிவு இஃதென்று தலைவர்க்குப் போதித்தலும் இழிவான செயலின் கெடுதியை அவனுக் கெடுத்துரைப்பதும், நல்லொழுக்கத்திற்குரிய காரண முணர்த்துதலும், உதாரணங்

காட்டலும், அழகு செய்யு முறைகளைத் தெரிவித்தலும் கூத்தர்க்குரியன.

தலைவன், வேறிடஞ் செல்லல் மணங் கொள்ளுந் தருணம் என்பவற்றைத் தகுதிபெறக் கூறுதல் கூத்தர்க்கும் பாணர்க்கும் உரியதாம். உடன் போக்கிலாவது, தனிச் செலவிலாவது வழியின் தன்மை யிதுவென்று கூறுதலும், ஒற்றாகச் சென்றறிந்து காரிய முடிக்கும் வழிகூறுதலும், ஏவியவற்றை முடித்தலும், செய்வன இன்னவெனக் கேட்டலும், தலைவிக்குவேண்டியவற்றைத் தலைவன்பாற் செப்புதலும், நிமித்தங்களை உசாவியறிந் துரைத்தலும், உட்கோளமைந்த சொற்களால் மறைத்துத் தெரிவிக்கவேண்டிய கருத்துக்களைத் தெரிவித்தலும், இளையோர் எனப்படும் ஏவலர்க்குரிய கடமைகளாம். உழைத்துச் செய்யுந் தொழிலும், தலைவன் தலைவியர்க்குப் பாதுகாப்பாயிருத்தலும் அவர்கள் கடமையே. தலைவனது முதல் மனைவி அவனது பிறமனைவியரைப் பேணுதலும், புதல்வனைப் பேணுதலும் கண்டு அவளது சிறந்த அன்பினைக் கண்டு தான் பரத்தையர் பாலணைந் தொழுகிய தவற்றினை நினைந்து, தலைவன் மனங் கலங்குதற்குரியன். அங்ஙனங் கலங்கிய தலைவனைத் தாய்போலத்தேற்றித் தம்மோடொற்றுமைப் படுத்துதல் அறநிலை நின்ற இல்லாளுக்குரியதே. பின்மனைவிபெற்ற புதல்வனைத் தன் புதல்வனாகத் தழுவிநடத்தலும் தலைவியின் சிறந்த குணமே. படை வீட்டினுள் எதிரியை வெல்லு முறை யாயுந் தலைவன் தலைவியோடு சேர்க்கையை நாடுதல் மரபன்று. பெண் வேட்கையினியல்பையும் கலங்காது தெளிவடையும் வழியுணர்த்தலும், தலை

வனது குறிப்பறிந்து கூறுதலும், பசுவின் சார்பான நன்னிமித்தமுந் தீநிமித்தமுங் கூறித் தலைவனது செலவை ஆதரித்தலும் தடுத்தலும் அவைபோன்ற பிறவும் பார்ப்பார்க்குரியன. பிற என்றதனானே பாங்கனுக்குக் கடமை செய்தலும் அவர்க்கு உரியஎன் பாருமுளர். எல்லா வாயில்களும் தலைவன் தலைவியர்க்கு முடிவாக மகிழ்ச்சி உண்டாகத் தக்கமுறையிற் கூற்று நிகழ்த்தற்பாலர். அன்பு நீங்கியமொழியினை சிறைப் புறமாகவே அவர்கள் சொல்லுதற் குரியர். தாய்போற் றழுவுதலும், தலைவன் சோர்வு காத்தலும் அல்லாத விடத்து, தலைவன் முன் தன்னைப் புகழ்ந் துரைத்தல் தலைவிக்குரியதன்று. தலைவன், தன்னைப் புகழ்தல் காரிய முடித்தற்கு மாத்திரமே செய்யற் பாலது. பாங்கன் தலைவனுக்கு எதிர்விடை கூறுந் தகுதியுடையன். குறிப்பறிந்தெதிர்மொழிதல் அவன் கடமை. தலைவியின் தன்மையைத் தலைவன் நினைந் துரைத்தல் பிரிந்து செய்பு முயற்சிக் காலத்து நிகழற் பாலதன்று. காரியசித்தி பெற்றபின் தலைவியை அவன் நினைந்து கூறுவன கூறலாம். தலைவி பூப்புற்ற காலத்தின் பின் பன்னிரண்டு நாள்வரை அவளைத் தலைவன் பரத்தையிற் பிரிதல்கூடாது. கல்விக்காகப் பிரியும் பிரிவு மூன்று ஆண்டுகட்கு அதிகரித்தல் கூடாது. அரசன் தொழிலாகப் பிரிதல் ஒரு ஆண்டிற் குள்ளாதல் வேண்டும். மற்றக் காரணங்களாற் பிரியும் பிரிவு ஓராண்டிற் குட்பட்டிருக்கலாம்.

தலைவனும், தலைவியும் தம் ஊரினீங்கிப் போய் ஆறு, குளம், காவுகளிற்றங்கி யின்புறுதல் செய்யற் பாலதே. போர் முதலிய காரணத்தாற் பிரிந்து

மீளுங்காலத்துத் தலைவன் இடைவழியிற்றங்குதற்குரியன் அல்லன். தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், வழியிற்கண்ட நண்பர் என்போர் சிறந்த வாயில்களெனப்படுவர். காதலொழுக்கம் நிறைவுபட்ட பின் தங்கள் கடைசி வாழ்நாட்களைத் தங்களுக்குப் பாதுகாப்பாகிய மக்களோடு உடன்வாழ்ந்து தவத்திற்குத் துணையாகிய உறவினரோடு வீட்டின்ப நெறியில் தலைவனுந் தலைவியும் பயிலுதல் இல்லறவாழ்க்கையின் முடிவான பயனாகும்.

கற்பியல் முற்றும்.

---

# பொருளியல்.

---

(அகப்பொருளியல்களுக்கு வழுவமைதி
அல்லது புறனடை கூறுமியல்)

சொல்லிற்கு, இயற்கையாக வுள்ள பொருளுக்கு வேறாக அகப்பொருள் மரபில் சிறந்துவரும் கருத்தின் தன்மை கூறுதல் இவ்வதிகாரத்துள் காணப்படும். பேசக்கூடாததைப் பேசுநபோலவும், கேட்கக் கூடாததைக் கேட்பது போலவும் சொல்லுவதால், பொருள்களின் தன்மையை வேறுபடுத்துச் சொற்கள் வழங்கினாலும் அச் சொற்கள் அகப்பொருட்டுறைக் கமைந்த வழுவமைதியாகக் கொள்ளப்படும். ஆனால், அவை வழக்கு மாறி வழங்கப்படா. காதல், ஒழுக்கத் தொடர்பு விளங்கும்படி துயருறு நிலையிலும் இன்புறு

நிலையிலும் எண்சுவைப்பகுதிகள் புலப்படும்படி காதல் ஒழுக்கத்தின் சார்பாக உறுப்பில்லாததை உறுப்புடையதாகவும், உணர்வில்லாததை உணர்வுடையது போலவும், மறுததை மறுத்துரைப்பது போலவும் நெஞ்சொடு சொல்லியும், சொல்லாத இயல்புளவற்றைச் சொல்லொடு சேர்த்தும், தொழில் செய்யா மரபினவற்றைத் தொழிலைப் பொருந்துவதாகக் காட்டியும் பிறர்க்குநேருந் துன்பத்தைத் தமது துன்பமாகக் காட்டியும், மன அறிவும் ஐம்பொறி அறிவும் வேறு வேறாக நிலைசெய்து காட்டியும் அஃறிணையிருபாற்கண் உயர்திணை முப்பாலும் அமைவதாக உவமைகாட்ட வேண்டுமிடத்தில் உவமித்துக் காட்டியும் கூறுதல் தலைவன் தலைவி ஆகிய இருவர்க்குமுரிய செயலாகும்.

"வருந்தினை வாழியெ நெஞ்சே
..............................
செல்லினிச் சிறக்க நின்னுள்ளம்"

"வருக என்னுதி யாயின்
வாரா நெஞ்சம் வாய்க்கநின் வினையே"

"அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீயெமக் காகா தது"

என்ற விடங்களில் நெஞ்சை உறுப்புடையது போலவும், உணர்வுடையது போலவும், மறுத்துரைப்பது போலவும், இளிவரல் தோன்றக் கடிந்தும் கூறியது காண்க.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"

என்றவிடத்துஞ் சொல்லா இயல்புடைய வண்டைச் சொல்லுதாகவும்;

"ஆரஞ ருற்றுரை அணங்கிய வந்தாயோ"
(கலி 120)

என்று, மாலைப்போழுதைத் துன்பஞ் செய்ய வந்தாயோ என்று செய்யாததைச் செய்வதாகவும் கூறியது காண்க.

"பனியிருள் சூழ்தரல் பைதலஞ் சிறுகுழல்"

என்றவிடத்துக் குழல், தம்பிணிக்கு வருந்தியதாகக் குறிப்பித்தல் காண்க.

இவ்வாறு பொருள்களைப் புனைந்து கூறுதல் கனவிலும் நிகழற் பாலதே. உடன் போக்கில் செவிலியும் இங்ஙனங் கூறுதல் மரபே. தலைவன் தலைவியர்க்கு அறிவுரை சொல்லுவது தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் என்ற நால்வர்க்கும் உரியதே. அவர்கள் இருவரும் நட்பாக நடவாத போது கூற்று நிகழ்த்தற்பாலர். உயிர், நாண், மடமை யாகிய அடக்கம் என்னு மிவற்றை அவர்கள் பாதுகாத்தற் குரியர், பிரிவால் தலைவிக்கு நிறம் வேறு பட்டு பசப்பு ஏற்பட்ட போது தன் உறுப்புக்களை அறிவுடையன போல விளித்துரைத்தல் அவளுக்கு உரிய செயலே. உயிரும் உடம்பும் வாடிய போதும் இவைகள் எவ்வாறுயின வென்று கூறுத லொழிந்து தலைவனைத் தானே போயடைதல் தலைவிக் கில்லை. தலைவன் பற்றால் ஒரு சார்பு பற்றிய நெஞ்சத்தின் வேறாகத் தன்னை வைத்துக்கொண்டு நெஞ்சை வினவுங் காலம் ஏற்படுதலுமுண்டு. அவ்வாறே தோழியை வினுதல் முதலியனவும் நிகழும். தன்னிடம் தலைவன் உண்மையை மறைத்தலும் அவன் பாற் சேர்தலைத் தான் விரும்புதலும் ஆகிய இடங்கள் போலாத இடங்களி லெல்லாம்

தலைவி அடக்கம் பேணுதல் அவள் கடமையாகும். தலைவி களவொழுக்கத்தை தமர்க்கு அறிவிக்க எண்ணுங் காலம் ஒழிந்த பிறகாலங் களில் தமர்க்கு அதை யறிவித்தல் தோழி கடமை அன்று. தமர்க்கு அறத்தொடு நிற்கு முறை எழுவகைப்படும். அவையாவன:-

தலைவனை எளியனாக்கிக் கூறுதல், உயர்த்திக் கூறுதல், காதல்நிலை உரைத்தல், சில சொல்ல விரும்பிப் பிறரைக் கேட்டல், களவொழுக்கத்தைக் காரணவகையாற் குறிப்பித்தல், தலைவன் தலைவியர் காட்சி மாத்திர முரைத்தல், உண்மை கூறுதல் என்பன.

"எல்லும் எல்லின் றசைவுமிக வுடையன்
.........................................ஒருவன்"

என்பது, எளித்தல்.

"...........................................மற்றிவன்
மகனே தோழி என்றனள்" (அகம் 48)

என்பது, ஏத்தல்.

"பூணாக முறத்தழீஇப் போதந்தான்."

என்பது, வேட்கை யுரைத்தல்.

"விண்டோய் மாமலைச் சிலம்பன்
ஒண்டா ரகலமும் உண்ணுமோ பலியே"

என்பது, கூறுதலுசாவுதல்.

"புலிபுலி யென்னும் பூசல் தோன்ற
..............................நிற்றந் தோனே"

என்பது, ஏதீடு.

"பிறிதொன் றின்மை யறியக் கூறிக்
கொடுஞ்சுழி..........................................
.........................................னினக்கே"

என்பது, தலைப்பாடு.

"கன்மழை பொழிந்த அகன்கண் ணருவி
ஆடுகழை யடுக்கத் திழிதரு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவண்
மயங்கிதழ் மழைக்கண் கலுழ மன்னாய்"

என்றது, உண்மை செப்பல்.

தலைவியின், கற்புக்கு இடையூறு பிறர் வரைய முயலுதல் முதலிய காரணத்தான் நிகழ இருப்பின் அதை நீக்குதற்கு அறத்தோடுநிற்றல் தலைவி விருப்பம் பற்றித் தோழியால் முதன்முதல் நிகழும்.

அடக்கமும், மன அமைதியும் நீதியான முறை ஒழுகலும் உரியன கூறலும் நன்மை தீமை யறிதலும் கிட்டுதற் கரியராதலும் பெண்பாலார்க்குரியன. தலைவன் வரும்நேரம், தனக்கு ஏற்பட்டுள்ள காவல், வரும் வழி என்பவற்றின் பொருந்தாமை எடுத்துரைத்தல், இரவில் வந்தானை பகலில் வா, பகலில் வந்தானை இரவில் வா என்றலும், தலைவர் தனிவரவிற்கு ஏதம் வருமோ வென்றஞ்சித் தான் வருந்துதலும், இருநேரமும் வாராதே யென்பதும், நன்மை தீமைகளைப் பிறர்மேல் வைத்துக் கூறலும், குற்றம் நீங்கிய அனைய பிறவும் தலைவர் மணஞ்செய்து கோடலை உட்கருத்தாக வுடையன. விருப்பத்தை நேராக மறுத்துரைத்தல் ஐந்திணைக்குப் புறப்பக்கமாயுள்ள கைக்கிளைப் பெருந்திணையுள் நிகழ்வதாகும்.

"தடக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னு
செய்வது நன்றாமோ மற்று" (கலி-94)

"உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னின்
இழிந்ததோ கூனின் பிறப்பு" (கலி 94)

என்பன, அதற்குதாரணம்.

களவொழுக்கத்தில், தேரும் யானையும் குதிரையும் சிவிகை முதலியவற்றில் ஏறிச்செல்லுதலும் வழுவமைதி யாயமையும். உண்ணாதபொருளை உண்டதாக்க் கூறலும் அகத்துறையுள் மரபே.

"பசலையா லுணப்பட்டுப் பண்டை நீ
[ரொழிந்தக்கால்"

என்றவிடத்து அது காண்க.

தலைவி உறவினர் வரைவு நேராமைக்குக்காரணம் பொருளென்று தலைவனுக்குத் தோழி கூறுதலும் ஓர் வழுவமைதியே. தலைவிக்குக் காவல் மிகுதிப் பட்ட காலை அவ்வாறு கூறுதலுண்டு. அன்பு, அறன், இன்பம், நாண் என்பவற்றினீங்கி யொழுகுதல் காவல் மிகுதியுள் பழிக்கப் படுதலில்லை. காவலுள் அவை வேண்டப்படா.

உடன் போக்கின் பொருட்டு காட்டுவழி நடக்கத் தலைவி இணங்குவது கூறலும் பொருந்துவதே. உயர்ந்தோரும் கூறும் வாக்குகள் உலகவழக்கிலிருப்பதால் அவ்வழக்கிற்கியையச் செய்யுள் செய்தல் பொருந்துவதே. உலகவழக்கில் மிகக்கழிவான தென்னு முறைகள் காரியமுடித்தற்குப் பயன் படுமாயின் அகப்பொருட்டுறைகளுள் வழக்காக வழங்குதல் குற்றம் ஆகாது. அத்தகைய நிலையினும் தலைவியின் நாணத்

திற்கு மாறுபாடில்லாத சொற்களே அமைக்கற்பாலன. அன்புகாட்டும் பொதுச் சொல் முறைப் பெயருடன் சேர்த்து வழங்குதல் இருபாலார்க்கு முரியதே. எல்லா என்றசொல் அத்தன்மையதே. தலைவி உறுப்பு நலனழிதலைத் தன்னுறுப்பு நலனழிவதாகத் தோழி கூறல் பொருத்தமாவதே. ஒருபாலுக் குரிய சொல் எல்லாப் பாலிற்கும் வருதல் வழக்கி லுள்ளதே. எல்லா உயிர்களுக்கும் இன்ப மென்பது தான் விரும்பி ஏவிய தொழில்களைச் செய்யும் ஏவலின் கண் உளதாத லியல்பே. நானிலத்தார்க்கும் பரத்தை வாயில்கள் பொதுவாவனவே. வருத்த மிகுந்த காலை இரக்கந் தோன்றுதல் பொதுவாகும். மனைவி உயர்வும் தலைவன் பணிவும் ஊடலுள் உள்ளதே. காதல் மிகுதியால் புகழ்தல் இருவர்க்கு முரியதே. நேராகச் சொல்லும் பொருளுக்குப் புறமாக உட்கோட் பொருளெனப் படும் இறைச்சி தோன்றும். இறைச்சிப் பொருள் கருப்பொருள் கூறுமிடத்து அதற்குள்ளீடாக அமைதல் உண்டு

தலைவன், தலைவியைப் பாராட்டும் வாயிலாகத் தன் முயற்சிக்கு அவள் இடையூறுவாளோ வென்ற அச்சமும் முயற்சிக்காக (போரிற்காக) பிரியும் பிரிவும் உண்மையாக உணர்த்துவதாகும். கற்றவழி நிற்கும் மனைவி அல்லது காதலி கணவனது பரத்தையரைப் புகழுமிடத்து தனது உள்ளத்தில் ஊடல் குறிப்பது நிகழும். தலைவி பிற பெண்டிர்குணம் இவையெனை எடுத்து மொழிந்து தலைவன் கருத்தை அறிதற்கும் உரியள்.

மாலைப்பொழுதின் துயரால் செயலற்ற தலைவி உயிர்போனது போலக் கூறுஞ் சொற்கள் அடக்கம்,

ஆற்றாமை, வியப்பு, காதல் மிகுதி, என்பவற்றின் சார்பாக அமைவன. தோழி குறையுறுந் தலைவனை நீக்கி நிறுத்தற்பொருட்டுப் பொய்புனைந் துரைத்தல் வழக்கிலுள்ளதே. வாய்மை கூறலும் உண்டு. வாயில்கள் கருத்தை வெளிப்படையாகக் கூறுதல் மரபு. ஒன்றை யுள்ளடக்கி வெளிப்படாமற் கூறும் உள்ளுறை என்பது கருப்பொருளமைந்த இறைச்சியும், கருப்பொருளாற் கூறும் உவமமும் மற்றொன்றைச் சுட்டிக் கூறும் சுட்டும், நகையாடி ஒன்று நினைத்துப் பிறிதொன்று கூறுதலும், பொதுவாகக் கூறவேண்டியதை சிறப்பித்துக் கூறுதலும் என ஐவகைப்படும். அளவில்லாத சிறந்த அறமுறையாலெய்திய இன்பம் தலைவிதனக்கு வரும் பயனாகவுடையது, தலைவியின் உள்ளுறை மொழிகள்.

வாழ்த்துமொழியும் வசவுமொழியும், மாறுதவீரத்தில் பழி கூறுமொழியும் தலைவிபால் உளவாயினும் இடம்பற்றிக் கொள்ளப்படும். ஒரு பொருளைச் சிறப்பித்துக் கூறுமிடத்து, கோபம், தாழ்நிலை, பொறாமைக் குறிப்பு, செல்வமின்மை என்பன காணப் படலாம். தலைவனை என்னை யென்றலும், தலைவியுந் தோழியும் ஒருவர்க் கொருவர் அன்னை யென்றலுமுண்டு.

ஒப்புணர்ச்சி, உருவுணர்ச்சி, வெறுப்பு, கற்பு, எழுச்சி, அழகு, மென்மை, நாணம், அடக்கம், நோய், காதல், நுகர்ச்சி முதலியன நெஞ்சாலறியப் படுவதாய்க் காட்சிப்புலனாகாப் பொருள்கள்.

பொருளியல் முற்றும்.

# மெய்ப்பாட்டியல்.

உலகத்தார் உள்ள நிகழ்ச்சி உள்ளத்தில் நிகழ்ந்த வாறே புறத்துப் புலப்படுவதோர் வாயிலாக வெளிப் படுதல்; உடம்பின் வாயிலாக ஆதலான், மெய்ப்பாடு எனப்படும்.

இன்ப விளையாட்டிலே தோன்றிய முப்பத்திரண்டு பொருளும் பொருந்திய வெளிப்படைப் பகுதிகள் பதினாறாக வைத்தாயப்படும். எட்டுவகைச் சுவை தோன்றுதற்குரிய பொருளும், தோன்றுஞ் சுவையும், பதினாறெனப்படும். சுவைப் பொருளும், சுவைக்கும் பொறியுணர்வும், உள்ளத்துணர்வும், வெளிப்படையும் எட்டெட்டாக முப்பத்திரண்டு பகுதியாமென்பர் நூலோர். குறிப்பு என்பது, உள்ள நிகழ்ச்சி. விறல் என்பது உடலில் வெளிப்படும் உணர்ச்சி. வேம்பு, சுவைப் பொருளும், நாக்கு, சுவைக்கும் பொறியும் ஆகிய இரண்டும் கூடிய வழி பிறப்பது சுவை. உள்ளத்திற்றோன்றுவது வெறுப்பு, உடலிற் றோன்றுவது வெறுப்புணர்த்துந் தலைநடுக்கம், முகச்சுளிவு முதலியன. உள்ளத்திற்றோன்றும் எண்வகை யுணர்ச்சிகளே புறத்தே புலனாதலின், சுவை அல்லது மெய்ப்பாடு எட்டென்று கூறுதலுண்டு அவையாவன:—

நகைச்சுவை, அவலச்சுவை, (அழுகை) இளிவரலாகிய இழிவுச்சுவை, மருட்கையாகிய வியப்புச்சுவை, அச்சம், வெகுளி, பெருமிதம், (கெம்பீரம்) உவகை (மகிழ்ச்சி) என மெய்ப்பாடு எட்டு வகைப் படும். நடுநிலை, அல்லது அமைதி என்பது, நல்லது செய்யினும்

தீயது செய்யினும், விருப்பு வெறுப்பின்றி யிருத்தல். அதைச் சேர்த்துச் சுவை ஒன்பதென்பார் ஒரு சாரார்.

**நகைச் சுவை,** இகழ்தல் பற்றியும் இளமைபற்றியும், அறியாமை பற்றியும், அடக்கம் பற்றியும் எழுதல் கூடும். பகைவரை அரசரிகழ்ந்து நகைத்தல், 'நகுத்தக்கனரே நாடுமீக்கூறுநர்' (புறம்-72)என்பதிற் காண்க. தாய் தன்னை மதியாது மகள் இகழ்ந்ததை நினைத்து நகுதலும், ஒருதாரணமாகும். குழந்தை செயலைப் பார்த்து நகைத்தல் இளமை பற்றிய நகைச் சுவையாகும்.

"நகையா கின்றே தோழி....................

..........................................................

மம்மர் நெஞ்சினென் தொழுது நின்றதுவே"

என்னும் 56-வது அகப் பாட்டு பேதமை காரணமாக எழுந்த நகைக்கு உதாரணமாகும்.

தலைவி, அடக்கத்தால், கடைக்கண் பார்வையே;

"குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்" (குறள்)

ஆரியர் கூறுந் தமிழ் நகைப்புக் கிடனுவது, அவரது அறியாமை காரணத்தால் என்க. பிற காரணங்களாலும் நகை எழும்.

பிறர் இகழ்தலாலும், தனக்கு ஏற்படும் நட்டங்களாலும், நிலையிற்றாழ்தலாலும், எளிமை காரணமாகவும் **அவலச்** சுவை தோன்றும். தனக்காகவும் பிறர்க்காகவும் அவலம் ஏற்படும். உவகை பற்றி **அழுகை** ஏற்படுதலுமுண்டு.

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை முதலிய காரணத்தால் **இழிவுச்** சுவை தோன்றும். (Pathos)

"தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொல்
பெருமூதாளரே மாகிய எமக்கே" — என்ற

போது தன்கட்டோன்றிய மூப்புக் காரணமாக இழிவு தோன்றிற்று.

"மூத்துத்தலை யிறைஞ்சிய நின்னோ டியானே
போர்த்தொழில் தொடங்க நாணுவல் அதனால்"

என்றவிடத்தும், பிறன்கண் தோன்றிய மூப்பால் இழிவு பிறந்தது.

"நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே"

என்பது பிணி பற்றிய இழிவு.

"யான்ற னறிவன் தானறி யலனே"

என்றது தன்வருத்தம் பற்றி இழிவு கூறியது.

"வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்—"

என்றவிடத்து மென்மை பற்றிய இழிவுபுலனும்.

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம், என்பன காரணமாக வியப்பு நிகழும்.

"மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்"

என்றவிடத்து, மந்தி மருளும்படி புதிதாக மயிலாடிற் றென்பது கொள்க.

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று"

என்றவிடத்துப் பெருமை பற்றிய வியப்புக் காண்க.

"—அம்ம
கடையிற் சிறந்த கருநெடுங்கட் பேதை
இடையிற் சிறியதொன் றில்."

இது, சிறுமை பற்றிய வியப்புக் கேதுவானது.

"உறங்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழல்பயந் தாங்கு—"

என்பது ஆக்கம் பற்றிய வியப்பின் பாலது.

தெய்வம், விலங்கு, கள்வர், அரசர் முதலியவற்றின் சார்பாக **அச்சம்** தோன்றும். ஊடல் காரணமாகவும் பிற காரணமாகவும் அச்சந் தோன்றுதலுமுண்டு.

கல்வி, வீரம், புகழ், ஈகை காரணமாய் **பெருமிதம்** ஏற்படும். அஞ்சுதற்கஞ்சாமை **வீரம்** என்பர். புகழ், ஒழுக்கத்தாலேற்படுவது.

"கழியாக் காதல ராயினும் சான்றோர் [மது.
பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்" என்பது

உறுப்புக் கேடு, குடிக்குக்கேடு, வருத்துதல், கொல்லுதல் என்பவற்றாலேற்படும் வெறுப்பால் **வெகுளிச்** சுவை ஏற்படும்.

செல்வம், அறிவு, காதற்சேர்க்கை, விளையாட்டு என்பவற்றால் துன்பங் கலவாத **உவகை** தோன்றும்

பிற மெய்ப் பாடுகளாவன :— செல்வம், உடையால் வரும் மகிழ்வுணர்ச்சி, நடுவுநிலை, இரக்கம, அருள், குலத்தின் தன்மைகள், அடக்கம், வரையறைப் படுத்திய நெறி நிற்றல், அன்பு, ஒழுக்கக் கேடு, பிறர்க்குக் கேடு செய்தல், சூழ்ச்சி, மனத் தடுமாற்றம, வாழ்த்தல், நாணம், உறக்கம், தன் குறைகூறுதல், கனவில்

வாய் வெருவுதல், வெறுத்தல், அருளுங் கோபமு மின்றி இடை நிகர்த்தாக உணர்தல், விருப்புற்று நினைத்தல், அஞ்சாதன வற்றைக் கண்ட வழியும் அஞ்சி அச்சந் தீர்தலாகிய வெருவுதல், சோம்பல், மறந்ததனை நினைத்தலாகிய கருதுதல், ஆராய்ச்சி, விரைவு, ஒன்றைப் பெறுதவழிச் செயலறுதலாகிய நெட்டுயிர்ப்பு, செயலறுதல், மயக்க வகையாக உண்டாம் இரக்கம் (இடுக்கண்), பாதுகாத்து வரும்பொருளை மறைத்தலாகிய பொச்சாப்பு, பொறுமை, மனம் புழுங்குதலாகிய வியர்த்தல், ஐயத்தால் வரும் மனத் தடுமாற்றம், கல்லாமையுமிளமையுஞ் செல்வமுமொருங்கு சேர்தலால் வரும் அகந்தை மிகுதியாகிய மிகை, நடுக்கம், எனப்படும் மெய்ப்பாடுகளுங் கருதப்படும்.

இனி, அக வொழுக்கத்திற் பெரும்பான்மையான மெய்ப்பாடுகளை ஆசிரியர் தொகுத்தும் வகுத்தும் கூறுகின்றார். தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டது முதல் புணர்ச்சியளவும் மூன்று பகுதியவாகிய மெய்ப்பாடும், புணர்ச்சி முதல் களவு வெளிப்படும் வரை மூன்று பகுதியவாகிய மெய்ப்பாடும், ஒவ்வொன்று நன்னான்காக விரியும் வகையும் கூறப்படும்.

தலைமகன், தன்னை நோக்குதலைத் தான் விரும்புவது குறிப்பிக்கும் தலைவியின் நோக்காகிய புகுமுகம் புரிதலும், தலைவன் நோக்கிய வழி நாணங் காரணமாகத் தலைவி நெற்றியில் வியர்வை அரும்புதலும், தலைவன் விருப்பமறிவதாலுண்டாகும் நகைப்பை மறைத்தலும், உள்ளம் சிதைந்ததை மறைத்தலும் என்னும் இவை நான்கும் முதற்பகுதி.

கூந்தல் நெகிழ்ந்து விரிதல், காதில் இலேசாய்ப் பொருந்திய அணி கழலுதல், வளை திருத்தல், ஆழி திருத்தல் என்னும் ஊழணி தைவரல், உடையை அவிழ்த்துடுத்தல் என்பன இரண்டாம் பகுதி.

அரை முன்பக்கந் தடவுதல், அணிந்த உடைப் பாதுகாப்புகளைத் திருத்தல், புணர்ச்சி வேண்டாதாள் போலப்பொய்க்குறி காட்டல், இருகைகளையும் மேலே எடுத்தல் (தழுவுதற்கு எடுப்பது போலெடுத்தல்) என்பன மூன்றாம் பகுதி.

சேர்க்கையைப் பாராட்டுதலாகிய உள்ளக் குறிப்பு, சிறுமைப் பருவத்தறியாமை நீங்குதலாகிய குறிப்பு, தமர்கடிதலை யேற்று, அலர் நாணல், தலைமகனுற் கொடுப்பதை வாங்குங் குறிப்பு, என்பன நான்காம் பகுதி.

களவொழுக்கம், பிறர்க்குப் புலனுதலறிந்தும் அதற்குடம்படுங்குறிப்பு, தலைவனோடு தொடர்ச்சியாகப் பழகுவதை மறுத்தல், இற்செறிக்கப்பட்டு அடங்குங் குறிப்பு, தலைவனை அக்காலத்துக் கண்டபோது உவகை மீதூர்தல், என்பன ஐந்தாம் பகுதி.

பூ, சாந்து முதலியவற்றால் கோலஞ் செய்த போது, தலைவன் தொடர்பில்லாமை பற்றி உள்ளச் சிதைவு தோன்றல் அல்லது கோலஞ்சிதைத்தல், தனிமையுணர்ச்சி காட்டல், மனங்கலங்கி யுரைத்தல், செயலற்றநிலை தெரித்தல், என்பன ஆறும்பகுதி.

இவை போன்றன பிறவும், அவற்றினடக்கமான பகுதிகளும், நிலைபெற்ற காதலொழுக்கங் குறிப்பனவுமாய்க் கற்பொழுக்கத்திற்கு ஏதுவாவன வாம்.

உயிர் மெலிவினுற் சேர்க்கை ஏற்படுங் காலத்து இம்முறை மெய்ப்பாடுகள் நிகழாமலும், செயல்நிகழும். மேற்கூறிய மெய்ப்பாடில்லாவிடத்துக் கீழ்க் குறிப்பிடும் மெய்ப்பாடுகளும் உளவாம். அவையாவன:— இன்பந்தரும் யாழ், குழல், பூ, சாந்த முதலியவற்றை வெறுத்தல், துன்பந் தலைவனுக் கின்றித் தனக்கே யுள்ளதாகக் கூறுதல், தலைவன் உரு, தேர் முதலியவற்றை எதிர்கண்டாற்போல் நினைந்து வருந்திச் செயலறுதல், தலைவனையடைதற்கு இடையூறுகளை யாராய்தல், உண்ணவிரதம் பூணுதல், தலைவி உடலிற் பசலை பரவுதல், மிகக் குறைவாக உணவு கொள்ளுதல், உடம்பு நனி சுருங்கல், கண் துயில் மறுத்தல், கனவிற் கண்டு நனவிற் காணது மயங்குதல், பெற்ற இன்பம பொய்யாகக் கொள்ளுதல், பொய்யை மெய்யே என்றல், ஐயுற்று வருந்தல், தலைவன் தமரைக்கண்டு மகிழ்தல், அறக் கிழவனை அன்பு செய்து துதித்தல், அவ்வாறு செய்யுங்கால் நெஞ்சழிதல், எதையாவது தலைமகளோடு அதனை ஒப்பிட்டு நோக்கல், உவமிக்கத் தக்கதைக் கண்டு மகிழ்தல், தலைவன் பெரும்புகழ் கேட்டு மகிழ்தல், மனங்கலங்கிச் சொல்லததகாதன சொல்லுதல், சாவத் துணிதல் இவை ஏற்றவகை யானே தலைவனுக்குங் கொள்ளப்படும்.

களவொழுக்கமுடிவில், தலைவனை மணக்குங் கருத்துடன், அழிவில்லாத கற்பொழுக்கத்திற் கேதுவாக, களவொழுக்கத்துக்கு முட்டுப்பாடு கூறுதல், களவில் வெறுப்பைத் தலைவி புலப்படுத்தல், வெளிப்படை அஞ்சி நீங்குதல், சேர்க்கை மறுத்தல், புள், மேக முதலியவற்றை தூது விடுத்தலில் வெறுப்பின்மை,

(அல்லது தலைவன் தூதினைபேற்றல்) மனையகத்துப் பொய்த் துயில் கொள்ளுதல், (அஞ்சிச்சேர்தல்) காதல் அளவு கடத்தல், உரைமறுத்திருத்தல் என்பன தலைவியால் நிகழ்வன.

தலைமகன், குலதெய்வ முதலியவற்றைக் கற்பித்த வாறு அஞ்சிவழிபடல், தனக்கொத்த அறமுறையைத் தெளிவாக அறிதல், இல்லாததை உளதாக எண்ணி வெறுத்தல், உள்ளதைத் தெளியாது வெறுத்தல், சேர்க்கையால் உண்மை யுவகை கொள்ளல், பொழுது மறுப்புக் கூறி இணங்குதல், மிகுந்த அருளுடைமை, அன்பு மீக்கூர்தல், பிரிவாற்றாமை, களவில் மறைத்த வற்றை யுரைத்தல், தலைவற்கெய்தக் கூடிய பழியுரையை மாற்றுஞ் சொல் கூறுதல், என்பன கற்புக் காலத்துத் தலைவியால் நிகழ்வன. தலைவனுக்குந் தலைவிக்கும் பத்து வகைகளில் ஒப்புக் கூறப்படும். பிறப்பு, ஒழுக்கம், வீரம், வயது, உருவு, அன்பு, மனவடக்கம், இரக்கம், அறிவு, செல்வம் என்பன அவை (தலைமகன் பால்) பொறாமைக்குறிப்பு, கொடுமை தற்புகழ்ச்சி, புறங்கூறுதல், கடுஞ்சொற் கூறுதல், உறுதியின்மை, சோம்பல், தலைவி பிறப்பிகழ்தல், தான் பெரியனென்று தானே இன்புறுதல், வெள்ளறிவு, மறதி, தலைவியினும் பிறரை ஒப்பிட்டுச் சிறப்பித்தல் என்பன நிகழ்தல் கூடாது.

மெய்ப்பாட்டுக் குறிப்பு, கண் நோக்காலும் செவிக் கேள்வியாலும் திட்ப நுட்பத்தோடுங் கூடிய நுண்ணறிவுடையார்க் கல்லது நன்றாக விளங்கித் தெரியுந் தன்மை அல்லது ஆய்ந்தறிதல் அரிதாகும்.

மெய்ப்பாட்டியல் முற்றும்.

## உவமவியல்.

தொழில், பயன், வடிவு, நிறம் அல்லது வண்ணம் இந்நான்கினும் ஒப்புமைக் கெடுத்துக் கொண்ட பொருள் உவமப் பொருளாகும். புலி யன்ன மறவன், மாரி யன்ன வண்கை, துடி யிடை, பொன் மேனி என்பன முறையே அவற்றிற்கு உதாரணங்களாகும் இவைகள் கலந்து வருதலுமியல்பே. பிறை யன்ன எயிறு என்றபோது வடிவும், வண்ணமும் ஒத்திருத்தல் காண்க. உவமைப் பொருள் உவமிக்கப் படும் பொருட்கு உயர்ந்த தன்மைத்தா யிருத்தல் வேண்டும். சிறப்பு, அழகு, காதல், வலி என்ற நான்கினடியாக உவமை பிறக்கும். இழிபு காரணமாகவும் உவமை பிறக்கும். முதலுக்கும் சினையாகிய உறுப்பிற்கும் உவமந் தனித் தனி கூறப்படும்.

'வரையனைய களிறு', முதலுக்கு முதலுவமை. 'தாமரை புரையுங் காமர் சேவடி', சினைக்குச் சினையுவமை. 'நெருப்பன்ன சிறுகட் பன்றி', சினைக்கு முதலுவமை. 'தாமரைப் போது போன்றகுடை', முதலுக்குச் சினையுவமை 'விசும்பினன்ன சூழ்ச்சி', முதல்சினைத்தொடர்பில்லாத உவமை, என்பன கண்டு கொள்க உயர்திணைக்கு அஃறிணையும் அஃறிணைக்கு உயர்திணையும் உவமமாதலுண்டு. ஒப்பு இன்ன வகைத் தென்று கூறுமலும் உவமம் வரும். அதனைப் பொருந்து முறையால் ஒப்புக்கொள்ளவேண்டும். உவமையும் பொருளும் (உலகத்தார் மகிழும்படி) தகுதிபெற ஒத்திருத்தல் வேண்டும். உவமிக்கப்படும் பொருளை

உவமை யாக்கலுண்டு. 'முகமன்ன மதி' யென்பது அதற்கு உதாரணம். அங்ஙனங் கூறுதலும் உவமிக் கப் படும் பொருளின் உயர்வு சுட்டுதற்கே யென்க. மிகப் பெருமையும் மிகச் சிறுமையுங் காட்டும் உவமைகள் வரினும், சிறப்புணர்த்துந் தன்மையவாயின் அவை தழுவற்பாலனவே.

> "அவாப் போலகன்றத னல்குல்மேல் சான்றோர்
> உசாஅப் போல உண்டே நுசுப்பு"

> "யானை யனையவர் நட்பொரீஇ நாயனையார்
> கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்"

என்பன, பெருமைக்குஞ் சிறுமைக்கு முறையே உதாரணங்களாம்.

உவமைச்சொற்கள் அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப, என்ன, மான, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, என்ற, வியப்ப, எள்ள, விழைய, இறப்ப, நிகர்ப்ப, கள்ள, கடுப்ப, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப, புல்ல, பொருவ, பொற்ப, போல, வெல்ல, வீழ, நாட, நளிய, நடுங்க, நந்த, ஓட, புரைய முதலியன.

வினையுவமம் குறிப்ப, அன்ன, ஆங்க, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்கு என்பனவும் பிறவும் வரும். அவற்றுள் அன்ன வென்பது பிறவுவமைகள் குறிக்கவும் வரும். பயன் உவமை காட்டுவதற்கு, எள்ள, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ, என்பனவரும். மெய்யுவமங் காட்ட கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப என்பன வரும். வண்ணங் காட்டுவதற்குப் போல, மறுப்ப, ஒப்ப, காய்ப்ப, நேர,

வியப்ப, நளிய, நந்த, என்பனவரும். இவ்வேறுபாடு எல்லாச் சொற்களின் நுட்பப் பொருளால் உவம வுருபாயமைந்துள்ளன. நான்குவமமும் உருபுபெறுது தொக்கு நிற்றல், உருபு பெற்று விரிந்து நிற்றல், ஆகிய காரணத்தால் எட்டாக விரிதலு முண்டு. மெய்ப்பாடு எட்டின் அடியாகவும் உவமை பிறத்தல் கூடும். அப்போது அது பெருமை அல்லது சிறுமை உணர்த்துதல் கூடும். உவமையாலே பொருளின் தன்மை முழுதும் பல வகையாக ஆய்ந்தறியப் படுதற் கிடமுண்டு. உவமத்தின் பொருள் கொள்ளுமிடத்து வழக்கிற் பயின்று வந்த முறைப்படி அது கொள்ளப்பட வேண்டும். அடையும், அடை யடுத்த பொருளுமாக வரும் இரட்டைச் சொல் இரண்டு வழியாக உவமப் பொருளுணர்த்தல் கூடும். 'பொன் பதிந்த கற்போன்ற பூண் மார்பன்' என்ற போது பொன் பூணிற்கும், கல் மார்பிற்கும் உவமை யாதல் காண்க. உவமிக்கப் படும் பொருள் தோன்றாமல் நிலத்திற்குரிய கருப்பொருள்களை உவமைக் குறிப்புடன் கூறுவதின் வைத்து, ஊகிக்கக்கூடிய பொருளை உவமிக்கப் படும் பொருளாகக் கொள்ளுதல் உள்ளுறை உவமமாம் அதனைப் போலியுவமமென்பது முண்டு.

வினை, பயன், மெய், உரு, பிறப்பு, என்பதுபற்றி வரும் உவமப் போலி ஐந்தென்றார் ஆசிரியர். தலைவி, உவமங் கூறுமிடத்து அவள் அறியக்கூடிய பொருளின் வைத்துச் சொல் நிகழவேண்டும். தோழி, நிலத்திலுள்ள எல்லாப் பொருளின் வைத்துக் கூறுதற் குரியள். தலைவன் கூறும் உள்ளுறையுவமம் அவன் உடைமையின் சார்பாகக் கூறப்படும். பாங்கன், பாணன் முதலியோர்க்கு இடம் வரை யறைப்படுத்த

வேண்டியதில்லை. இன்ப முணர்த்துஞ் சொல்லும், ஊடல் உணர்த்துஞ் சொல்லும் உள்ளுறையுவமத்தோடு பொருந்திவரும். தலைவி கூறும உள்ளுறையுவமம் மருதம் நெய்தல் என்ற இரண்டின் 'சார்பாகக் கூறப்படும்.

தலைவனுக்கு அவ்வாறு நில வரையறை இல்லை. காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்துமாறு தோழியுஞ் செவிலியும் உள்ளுறையுவமங் கூறுதற்குரியர். உவமைக்கும் பொருட்கும் ஒப்புமையாமாறு படக் கூறுதலும், ஒப்புமை கூருது பெயர்ப் போலியானே மறுத்துக் கூறுதலும், ஒப்புமை மறுத்துப் பொருளை நாட்டிக் கூறுதலும், ஒப்புமை மறுத்தவழிப் பிறிதோருவமை நாட்டுதலும், முதலாகப் பல வகையாக வரும் உவமைகளை யெல்லாம் கூறிய இடத்திற்குத் தக்கபடி உள்ளுறையுவமமாகவும் ஏனையுவமமாகவுங் கொள்ளப்படும். ஒப்புமைபோல ஒவ்வாமை கூற உவமம் பயன் படுதலுமுண்டு. அவ்விடத்தில் முடிந்த பயன் நோக்கி உவமத்தன்மை கூறியவாறாம். இது உவமை இது உவமிக்கப் படும் பொருள், என்று தடுமாறும்படி உவமைகளை அமைத்தலும் ஆவதொன்றே. ஒன்றை மற்றொன்றோடுவமித்து அதற்குப் பிறிதோருவமத்தைப் பொருளாக அமைத்துக் கூறும் அடுக்கு அத்துணைச் சிறப்புடையதல்ல.

''மதியத் தன்ன வாண்முகம் போலும
பொதியவிழ் தாமரைப் புதுப்பூம் பொய்கை''

என்றதுபோல், வருவன சிறப்பாகா. உவமங்கள் முறைநிரல் நிறையாகவும் எதிர்நிரல் நிறையாகவும் வருவன கொள்க.

உவமவியல் முற்றும்.

# செய்யுளியல்.

---

மாத்திரையாகிய ஓசையளவு, எழுத்து, எழுத்தாலாகிய அசை, அசையாலாகிய சீர், சீராலாகிய அடி, அடித்தொடர்பாகிய யாப்பு, செய்யுள் வழக்கு, (விகார முதலியவை) மோனை, எதுகைச் சார்பாய சீர்த்தொடைப்பு, செய்யுட் பகுதியாகிய தூக்கு, செய்யுளோசையாகிய நோக்கு, பாட்டு, அதன் வரையறை (பாவகை) அகம் புறமென்ற திணை, களவு கற்பு முதலிய ஒழுக்கம், (கைகோள்) பொருட்பகுதி, (கூற்று) பாவினைக் கேட்டற்குரியர், பாவுளதாம் இடம், காலம், பயன், மெய்ப்பாடு, எஞ்சிநின்ற சொற்களைக் கொள்ளுதலாகிய எச்சவகை, குறிப்பு, (முன்னம்) பொருள், துறை, பொருள் கோள்முறை, (மாட்டு) சந்த வகையாகிய ஓசை விகற்பம், (வண்ணம) என்னும் இருபத்தாறு உறுப்பும் தொடர்நிலைச் செய்யுளின் (காப்பியம்) வகையாகிய அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எட்டுடன் முப்பத்து நான்கு பகுதியாகச் செய்யுள் இலக்கணத்தை, ஆய்ந்துரைத்தனர் பெரியோர்.

செய்யுள்வகையை ஆசிரியர், பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுமொழி என ஏழாகப் பகுத்துரைத்தார். அவற்றை யாப்புவகை யென்பர். அறம் பொருள் இன்பம் மூன்றும் செய்யுட்குரிய பொருள் என்றார் ஆசிரியர். வாழ்த்துக் கூறுதல் நால்வகைப் பாவினாலும் ஆகும். அது, வாயுறைவாழ்த்து அவையடக்கியல், செவியறிவுறூஉ என வாழ்த்து

மூவகைப்படும். முன் கைத்தும் பின் நயம் பயக்கும் வேம்புங் கடுவும் போல வெம்மையான சொல் பயிலாது நன்னெறிப் பயன் கருதிப் பாதுகாத்துங் கூறுங் கிளவியால் உண்மையை அறிவுறுத்துவது **வாயுறை வாழ்த்** தெனப்படும். தகுதியில்லாத சொல்லினும், அவற்றை ஆராய்ந்தாரை வழிபட்டுக் கூறும் உரை **அவையடக்க** மெனப்படும். பெரியோர் முன் பண்பாக அடங்கி நடத்தல் நன்றென அறிவுறுத்துதல் **செவியறிவுறூஉ** எனப்படும். புறநிலை முன்னிலை யென வாழ்த்தைப் பகுத்தாய்தலுமுண்டு. **அங்கதம்** என்பது, மறைத்துக் கூறும்வசை. புகழ்போன்று வசை யாவதும் அதுவே நேராக இகழ்வதும் வசை. பழி காத்துக் கூறுதலும் அங்கதமே. அடி வரையறையில லாச் செய்யுட்கள் **நூல், உரை, பிசி, முதுமொழி, மறைமொழி, குறிப்பு** என்பவற்றில் வரும்.

**நூலென்பது**, முதலுக்கும் முடிவுக்கும் மாறுபாடில்லாமல், தொகுத்தும் வகுத்தும் கருத்துக்களை விளக்குவதாய் அடங்கி நின்ற பொருளை விரித்துக் கூறுகின்ற சொற்றொடர்களோடு பொருந்தி நுட்பமாக அவற்றை எடுத்துக் காட்டுதல் என்னும் தன்மையுடையது. அது நான்கு வகைப்படும். அவையாவன:—**சூத்திரம், ஒத்து, படலம், பிண்டம்** என்பன **சூத்திரம்** என்பது, நூலினுள் ஒரு பொருளைப் பற்றி சொல்லிவருமு பெரிய பொருள், சிறிய கண்ணாடியில் தெரிவதைப் போல சுருக்கமாக தெளிவாக நன்கு விளங்கும்படி அமைக்கப் படுவதாம் இனமான ரத்தினங்களை வரிசையாக வைத்தாற் போல் ஓரினமான கருத்துக்களை ஒருங்கு தொகுத்துரைப்பது,

ஒத்து எனப்படும். பலவேறு வகைப்பட்ட கருத்துக்களை பொதுவான தலைப்பின்கீழ் ஒருங்கு சேர்த்துக் கூறுவது, படலம் எனப்படும். இந்த மூன்றின் தொகுதிபிண்டம் எனப்படும்.

உரை யாவது, பாட்டுக்களுக்கு (இலக்கியம்) இடை இடையே வைக்கப்படும் குறிப்பு, அப்படி வைக்கப்படாமல் தொடுக்கப் பட்ட சொற்கள், உண்மைப் பொருளொடு கலவாத பொய் வரலாறுகள், உண்மைப் பொருள் கூறுவதாய் நகைச் சுவை கலந்த வரலாறுகள் என நான்கு பகுதிப்படும். கதைகள் கூறுதல் செவிலிக்குரியது.

பிசி யென்பது, உவம வாயிலாகவும் உவமம் வெளிப்படாது ஒன்று சொல்ல ஒன்று தோன்றும் பண்ணத்தாலும் அமைக்கப்படுவதாம். "பிறை கவ்வி மலை நடக்க" என்றவிடத்து, உவமையால் யானை குறிக்கப்பட்டது. "நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யா னீராடி லூராடு நீரிற் காக்கை" என்றவிடத்து, குறிப்பால் நெறி என்பது உணர்த்தப்பட்டது.

முதுமொழி யென்பது, நுட்பமும், சுருக்கமும் உயர்ந்த கருத்தும் உடையதாய் எளிதாக விளங்கும்படி முடிவாகக் கூறப்படும் பொருளுக்கு உரிய காரணத்தை உணர்த்தி வருவதாம்.

"உழுத வுழுத்தஞ்செய் யூர்க்கன்று மேயக்
கழுதை செவியறிந் தற்றால்—வழுதியைக்
கண்டன கண்க ணிருகப்பப் பெரும்பணைத் தோள்
கொண்டன மன்னோ பசப்பு"

என்ற செய்யுளில், ஊர்க்கன்று உழுந்துவயலில் மேய

கழுதையின் காதை அரிந்தா லெப்படியோ, அது போல வழுதியைக் கண்ட கண்கள் நீர் சொரிய தோளானது பசப்புற்றது என்பது, பொருத்த மில்லாதது என்று குறித்தவாறாகும். எழுத்தோடும், சொல்லோடும் கலவாது சொல்லப் படும் பொருளிலிருந்து ஊகித்தறியப் படுவதாயுள்ள பொருளையுடையது **குறிப்பாகும்.** பாட்டுக்களில் வரக் கூடிய பொருளையுடையதாய் பாட்டும, உரையும் போல வருவது **பண்ணத்தி** யெனப்படும். சொன்ன சொல் கருதிய பயனைத் தரும்படி செய்யவல்ல பெரியோர்கள் இன்ன பயனைத் தருவதாக என்று விதித்து வெளிப்படையாகச் சொல்லாது இயம்புமொழி **மந்திரம்** எனப் படும். உரையாசிரியர் தொல்காப்பியத்துள் இலக்கணம் கூறப்பட்ட மந்திரம் தமிழ் மந்திரங்களென்றும் அவற்றை வல்லார்வாய்க் கேட்டுணர்கவென்றும் குறிப்பித்தார்.

> "ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
> காரியத்தால் காலக்கோட் பட்டானைச்—சீரிய
> அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
> செந்தமிழே தீர்க்க சுவா"

என்னும் இதனை உதாரணமாகக் கூறுவதுமுண்டு.

கைக்கிளை முதலாகவுள்ள எழுதிணையும் திணையாகும். **இயற்கைப் புணர்ச்சி, இடந் தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம்** என்ற நான்கும் மறைவாகிய களவொழுக்கமாம். **களவு வெளிப்படுதல், தமராற் பெறுதல், புணர்ச்சி மலிவு, புலவி, ஊடல், ஊடல் நீக்கம், பிரிவு** முதலியன கற்பொழுக்கப் பகுதிகளாம்.

பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி யென்போர் சிறப்பாகக் களவினுள் கூற்று நிகழ்த்தற் பாலர். பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்பாரோடும் மேற்கூறப்பட்ட அறுவரும் கற்பினுள் மொழி கூறற்பாலர். ஊராரும், அயலாரும், சேரியோரும், தந்தையும், அன்னையும் கூறியதாகப் பிறர் சில சொல்லுவதன்றி அவர்கள் நேராகக் கூற்று நிகழ்த்தற்குரியரல்லர். தலைவனோடும் தலைவியோடும் நற்றாய் கூறுதல், அதிகமாக இராது. தலைவன் தலைவியரைத் தேடும் மாதர் என்பாரிடம் கண்டோர் கூறுதல் நிகழும். இடைச் சுரத்தில் தலைவன், தலைவியினிடம் முறைவழுவாது கூறவேண்டியன கூறுதற்குரியன். தலைவன் தலைவியையொழிந்த பிறர், இன்னார்க் கின்னது தகுதியாமென்று அவர்கள் சார்பாகக் கூறுதற்குரியர். கண்டோர் அவர்களின் தகுதியைப்பற்றி இடைச்சுரத்தில் செவிலி பாற்கூறுதல் கோவை நூல்களிற் காணப்படும். இருவர் கூற்றையும் கண்டோர் கேட்டற்கு உரியரே. பார்ப்பார், அறிவர், என்பார் யாவரிடமும்உரை கூறத் தகுதியுடையர்.

ஒருவழியாக முடிக்கற் கேதுவாய செயல் நிகழ்ச்சிக்கு ஆதாரமாவது இடம் என்று கூறப்படும். பரத்தையரும் வாயில்களும் தலைவியைக் குறியாது சொல் நிகழ்த்துவதில்லை. வாயில்கள் தங்களுக்குள் தலைவியைப் பற்றி விசாரித்துக் கொள்ளுதல் உண்டு.

கதிரவன், திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரம், பொழுது, புள், நெஞ்சு முதலியவற்றை மரபுப்படி சொல்லுவது போலவுங் கேட்பது போல

வும் செய்யுளமைத்தலுண்டு. மூன்று காலமும் நிக ழும் நிகழ்ச்சி செய்யுளில் தெரியுமாறு அமைத்தல் **காலமாகும்.** இதனால் இந்த நற்பயன் உண்டாகு மென்று தொகுத்துக் கூறுதல் **பயன்** எனப்படும். ஆராய்ந்தறியாது கேட்ட துணையானே உள்ள உணர் ச்சி உடம்பிற் புலனும் வண்ணங் கருத்தமைத்தல் **மெய்ப்பாடாகும்.** அது சிறப்பாக எட்டு வகைப் படும். கூறாத சொல்லாலும் குறிப்பாலும் முடிவு கொள்ளும்படி சொல்லமைத்தல் **எச்சமாகும்.**

"இவ்விடத்திம்மொழி யிவரிவர்க்குரியவென்
றவ்விடத்தவரவர்க்குரைப்பது **முன்னம்"**

ஆகும்.

**வண்ண**மாகிய சந்தப்பாட்டு சிறப்பாக இருபது வகைப்படும். சிலமெல்லிய சொற்களால் வருவதாய் முப்பொருளும் இடையிட்டுவந்த செய்யுளிற் பயில்வ தாய் அடிகள் மிகுதிப்படாது இருப்பது **அம்மை**யென் னும் வனப்பாகும். அதற்குதாரணம் கீழ்க் கணக்குச் செய்யுட்களாம். இலக்கியத்திற்குரிய மொழிகளால் செம்மையாக அமைத்த செய்யுளின் வனப்பு **அழகு** எனப்படும். திரிசொற்பயிலாது செய்யுட்சீர்கள் செவ் விதின் அமைந்துள்ள அகநானூறு முதலியன, அழகு டைச் செய்யுட்களாம். உரைநடையாகவந்த பழைய வரலாறு கூறுந்தொடர்நிலைச்செய்யுள் **தோன்மை** என்னும் நயமுடைத்து. இனிய ஓசையுடைய மொழி யால் உயர்ந்த கருத்துக்களை உரைக்கும் செய்யுளும் விரிந்த சொற்களால் வரையறைப்படாத அடிகளை யுடைய பனுவல்களும் **தோல்** என்னும் நயமுடையன. தேவார திருவாசகங்கள் இந்நயமுடையன. ஆசிரி

யத்தானும், கலிப்பாவானும் பயின்று வரும் நூல்களைத் தோல் என்பாரும் உளர். புதிதாகக் கூறும் இலக்கியம் **விருந்தெனப்படும்.** ஞ, ண, ந, ம, ன என்னும் மெய்யீறுகளை இறுதியாகவுடைய நூல்கள் இயைபு என்னும் அழகுடையன. மணிமேகலை, கொங்கு வேண்மாக்கதை அதற்குதாரணங்களாம். உலகவழக்கு, சேரி மொழியாலே குறிப்பாகப் பொருளுணர்த்தும் நூல், **புலன்** என்னும் வனப்புடையது. விளக்கத்தால், கூத்து முதலிய நாடகநூல்கள் போல்வன அந் நயமுடையன. வல்லினமெய் மிகுதிபயிலாது, இரண்டுமுதல் ஐந்தடிவரையுடையனவாய் நெட்டெழுத்தும் மெல்லின இடையின ஓசையெடுப்பும் உடைய சொல்லாலமைக்கப்பட்ட நூல் **இழைபு** என்னும் வனப்புடையது. கலி, பரிபாடல் போன்ற இசைப்பாட்டு நயம் அஃதென்பர். இலக்கணத்தில் தவறியதாகத் தோன்றுவதை இலக்கணத்தோடு ஒக்கும்படி முடித்துப் பொருள்கோடல் அறிஞர்கடன்.

செய்யுளியல் முற்றும்.

## மரபியல்.

உலக வழக்கினும், செய்யுள் வழக்கினும், வழங்கும் சொற்பொருள் மரபும், முறைமையும் சுட்டுவது மரபியல் எனப்படும்.

பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி என்பன இளமை யோடு குழவித்தன்மை யுடையனவற்றைக் குறிப்பனவாம்.

ஏறு, ஏற்றை, ஒருத்தல், களிறு, சேவு, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், முதள், அப்பர், போத்து, கண்டி, கடுவன் முதலியன ஆண்பாற் பெயர்களாம்.

பேடை, பெட்டை, பெடை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, பந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி என்பன பெண்பாற் பெயர்களாம்.

பார்ப்பு, பிள்ளை என்ற சொற்கள் பறப்பனவற்றினும் தவழ்வன வற்றினும் இளமை யுடையனவற்றைக் குறிக்கும்.

மூங்கா, வெருகு, எலி, அணில் என்பனவற்றின் சிறியவற்றைக் குட்டி யென்று வழங்குவர். பறழ் என்று அவற்றைக் கூறலாம்.

நாய், பன்றி, புலி, முயல், நரி என்பனவற்றின் சிறியன குருளை யெனப்படும். குட்டி பறழ் என்ற சொற்களும் அவற்றோடு வழங்கும். நாயைத்தவிர மற்ற உயிர்களுக்குப் பிள்ளையென்று சேர்த்தலும் உண்டு.

ஆடு, குதிரை, நவ்வி, உழை, மோடு, புல்வாய், என்பவற்றின் குட்டி மறி எனப்படும்.

குரங்குக்குட்டி, மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என வழங்கும்.

யானை, குதிரை, கழுதை, கடமை, எருமை, மரை, மான், இவற்றோடு **கன்று** என்பது சேர்க்கப் படும். ஒட்டகம், கவரி, கராம் என்பவற்றையும் **கன்றெனப்படும்.**

. குஞ்சரத்திற்கு **குழவி** யென்பது சேர்க்கப்படும். ஆ, எருமை, கடமை, மரை என்பவற்றிற்குங் **குழவி** என்பது சேர்க்கப்படும். குரங்கு, முசு, ஊகம், என் பவற்றிற்கும் அது சேர்க்கப்படும்.

மக்களுக்கு **குழவி, மகவு** என்ற சொற்களே சேர்க்கப்படும். **பிள்ளை** என்பது பிற்கால வழக்கம் போலும்.

**பிள்ளை, குழவி, கன்று, போத்து** என்பன ஓரறி வுயிர்களின் இளமைப் பெயர். நெல்லுக்கும், புல்லுக் கும் அப்பெயர் சேர்க்கப்படா.

ஓரறிவென்பது, மெய்யினுல் தொட்டறிதல்; ஈரறிவென்பது, மெய்யினுலும் நாவினுலும் அறிதல்; மூவறிவு என்பது, அவ்விரண்டுடன் மூக்கினு லும் அறிதல்; நான்கறிவு என்பது, அம்மூன்றனே டும் கண்ணினுலும் அறிதல்; ஐந்தறிவென்பது, அந் நான்கனோடும் செவியினுலுமறிதல்; ஆறறிவு என்பது, அவ்வைந்தறிவினோடும் மனத்தினுலும் உணர்தல்; என நுண்ணறிவாளர் முறைப்படுத்தினர்.

புல்லும் மரமும் ஓரறிவுடையன. ஓரறிவுடைய பிறபொருள்களும் அவற்றின் சார்பாகத் தோன்று வனவுமுள.

நந்து, முரண் முதலியன ஈரறிவுயிர்கள். சிதல், எறும்பு முதலியன மூவறிவுடையன. நண்டு, தும்பி முதலியன நான்கறிவுடையன. விலங்கு, பறவை, மாக்கள் என்பன ஐயறிவுடையன. இவற்றின் சார்பாகத்தோன்றும் ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐயறிவுடைய பிறவு முள மக்கள் ஆறறிவுடையோராவர்; ஆறறிவுடைய பிறவும் உள.

யானை, பன்றி என்பவற்றிற்குக் களிறு என்று கூறுதலுண்டு. இது, யானைக்குப் பெரும்பான்மையும் கேழலுக்குச் சிறு பான்மையும் வரும். புல்வாய், புலி, உழை, மரை, கவரி, காரா என்பவற்றோடு ஒருத்தல் என்ற சொல்லைச் சேர்த்துச் சொல்லுதல் மரபு.

யானை, பன்றி, எருமை என்பவற்றிற்கும் அச்சொல் வழங்கும். பன்றி, புல்வாய், உழை, கவரி, எருமை, மரை, எருது என்பவற்றை ஏறு என்று சொல்லுதல் மரபு. கடல் வாழ் சுறவும் ஏறு எனப்படும். காளை, எருமை, புலி, மரை, புல்வாய் என்பன போத்து எனப்படும். நீர்வாழ் உயிர்கள் அறுவகைப்படும். அவை சுறாமீன், முதலை, இடங்கர், கராம், வரால், வாளை என்பனவாம். இவையும், மயிலும், எழாலும் போத்தெனப்படும். புல்வாயென்பதை இரலை, கலை என்னும் சொற்களால் கூறுவர். கலை என்ற சொல் மானிற்கும் உரியது. முசுவிற்கும் அச்சொல் உரியதே. ஆட்டிற்கு, மோத்தை, தகர், முதள், அப்பர் என்ற சொற்கள் வழங்கும். மயில்

தவிர மற்றைப் பறவைகளில் ஆண்பாலுக்கும் சேவல் என்ற பெயர் உரியது. ஆற்றலால் சிறந்த ஆண்பாலுக்கெல்லாம் ஏறு என்ற சொல் உரியது. பிடி என்ற சொல் பெண்யானைக்குரியது. ஒட்டகம், குதிரை, கழுதை, மரை என்பவற்றிற்குப் பெட்டை என்பது கொள்ளப்படும். கோழி, கூகை இரண்டிற்கும் அளகு என்றசொல் உரியது மயிலுக்கும் அச்சொல் உரியதே. புல்வாய், நவ்வி, உழை, கவரி, என்பவற்றோடு பிணை என்பது கொள்ளப்படும். பன்றி, புல்வாய், நாய், என்னு மூன்றிற்கும் பிணவு என்ற சொல் கொள்ளப்படும். பிணவல் என்ற சொல்லும் அவ்வாறே கொள்ளப்படும். ஆ என்றசொல், எருது, எருமை, மரைஎன்ற மூன்றையுங் குறிக்கும். பெண், பிணா, என்ற சொற்கள் மக்களில் பெண் பாலைக் குறிக்கும். நாகு என்பது எருமை, மரை, பெற்றம், நீர் வாழ் நந்து என்பவற்றிற் குரியது. மூடு, கடமை, என்ற சொற்கள் ஆடு தவிர வேறொன்றிற்கும் உரியன அல்ல. பன்றிக்கும், நரிக்கும், நாய்க்கும் பாட்டி என்பது வழங்கும். மந்தி என்றசொல், குரங்குக்கும், முசுவிற்கும் ஊகத்திற்கும் உரியது. ஆண் குரங்கினைக் கடுவன் என்றும், மரம் பயில் கூகையைக் கோட்டான் என்றும், செவ்வாய்க்கிளியைத் தத்தை என்றும், வெவ்வாய் வெருகினைப் பூனை என்றும், ஆண் குதிரையைச் சேவல் என்றும் கூறப்படும். இருள் நிறப்பன்றியை ஏனம் எனவும், ஆண் எருமையைக் கண்டி எனவும் படும்.

அந்தணர்க்கு, நூல், கமண்டலம், முக்கோல், மணை என்பன உரியவாகும். அரசர்க்கு, படை,

கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார், (மாலை) முடி என்பன உரியவாகும். ஆறு, மலை இவைகளைச் சேர்த்து முடி நீக்கித் தசாங்கம் என்று கொள்வதும் உண்டு. நூல், மணை அரசர்க்கும் உரியதாகும். **நெடுந்தகை, செம்மல்** என்பன அந்தணாளர்க்கு உரியதாகும். **ஊர், பெயர், தொழில், கருவி** யாவர்க்கும் கூறப்படும். அரசர்க்கும், வணிகர்க்கும் **படை** கூறப்படும். வாணிக வாழ்க்கையர், **வணிகர்** எனப்படுவார். எண்வகைக் கூலமும் செய்து விளைத்தலும் அவர்கடன். சூடும் பூவாகிய **கண்ணியும்,** குலத்திற்கு உரிய மாலையாகிய **தாரும்** அவர்க்குரியன வாகும். **வேளாண்மாந்தர்க்கு,** உழுதுண்டு வாழ்தலே சிறப்பாகும். அரசியல் தொழில் செய்யும்போது **படையும், கண்ணியும்** அணிதல் அவர்க்குண்டு. அந்தணரும் அரசராயிருக்கலாம். **குறுநிலமன்னர்க்கு, வில்,** வேல், குழல், கண்ணி, தார், ஆரம், தேர், வாள் என்பன உரியனவாகும். இழிந்தோர்க்கு அவை இல்லை.

புறத்து வைரமுடையவற்றை **புல்** என்பர். உள் வைரமுடையவை **மரம்** எனப்படும்.

தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை என்பன **புல்லோடு** சேர்ந்து வரும். இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை முதலியன **மரத்தோடு** சேர்ந்ததாகும். காய், பழம், தோல், செதிள், வீழ், என்பனவும் **மரத்தோடு** சேர்ந்து வரும்.

நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்ற ஐந்தும் கலந்தகலவையே **உலகமாயது.** இரு திணை, ஐம்பால்

நெறிவழுவாமல், திரிபில்லாத சொல்லொடு வழக்குப் பொருந்தி வரவேண்டும். மரபுநிலை திரிதல் செய்யுட்கில்லை. மரபுநிலை திரியின் சொல்லும் பொருளும் விளங்கா. வழக்கெனப்படுவது உயர்ந்தோர் சார்பாய ஒழுக்கமாம்.

நூலெனப்படுவது, மரபு பிழையாது முதல், வழி என இருவகைப்படும். அவற்றுள், முதனூலாவது இயற்கையே வினையின் நீங்கினவனும் மெய்யுணர்வுடையவனுமான முன்னோனால் செய்யப்பட்டதாம். வழிநூலாவது, முதல்நூல் வழியைப்பற்றிச் செய்யப்படுவதாம். தொகுத்தல், விரித்தல், தொகை விரி, மொழிபெயர்ப்பு என வழிநூல் வகை நான்காகும்.

சில்வகை யெழுத்துக்களால் அமைந்து நுட்பமும், விழுப்பமும், துளக்கலாகாத் தன்மையும் துளக்கலாகாப் பொருளும் உடையது சூத்திரம். சூத்திரப் பொருளுக்கு இன்றியமையாது இயைபவையெல்லாம் பொருத்தமாகக் கூட்டியுரைப்பது உரையெனப்படும். வினாவிடைகளோடு பிறநூல் மேற்கோள்களுடன் ஐயந்திரிபு அகற்றல் உரையின் இயல்பாகும். கூறியது கூறல், மாறு கொளக்கூறல், குன்றக்கூறல், மிகை படக் கூறல், பொருளில்மொழிதல், மயங்கக்கூறல், கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதல், பழித்த மொழியால் இழுக்கங் கூறல், தன்னானொரு பொருள் கருதிக் கூறல், மனக்கோளின்மை முதலியன சிதைவினெனப்படும். இச்சிதை வெனுங்குற்றங்கள் முதல்வன் நூலினிடத்தே காணப்படாவாம். உத்திகள் முப்பத்திரண்டும் மரபியலுள் காணப்படும்.

மரபியல் முற்றும்.

# புறத்திணையியல்.

குறிஞ்சிக்குப்புறமாக உள்ளது வெட்சி என்னும் புறத்திணையாகும். களவொழுக்கம், கங்குற் கடுகினும், காவலர் முடுகினும், தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீளலும் போல்வன ஒத்தலின் வெட்சி, குறிஞ்சிக்குப் புறனென்றார்.

**வெட்சித்திணை**யாவது, களவாகப்பசுநிரை கொள்ளும் ஒழுக்கமாம். அரசன், அனுப்புகின்ற தண்டத் தலைவர், பகைநிலத்தே சென்று களவினாலே பசுநிரையைக்கொண்டுபோய்ப் பாதுகாத்தல்போல அதனைத் தொடங்குவதற்கு முன் நடைபெறும் நிரைமீட்டல் **கரந்தை** எனப்படும். அதனையும் வெட்சியில் அடக்கிக் கூறுவர் ஆசிரியர். நிரை கவர்வதற்கு எழுந்தபடை, ஊர்க்குவெளியேபோய்த் தங்கும் அரவம் கண்டு சொல்லுவோர் கூற்று ஓர் துறையாம். அதற்கு உதாரணம்:—

"வெவ்வாண் மறவர் மிலைச்சிய வெட்சியார்
செவ்வானம் செல்வது போல் செல்கின்றார்- [எவ்வாயும்
ஆர்க்கும் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்கும் துடியோடு புக்கு."

"அடியதி ரார்ப்பினர் ஆபெயர்த்தற் கன்று
கடிய மறவர் கமழ்ந்தார்—மடிநிரை
மீளாது மீளார் விறல் வெய்யோர் யாதாங்கொல்
வாளார் துடியர் வலம்"

என்பனவாம்.

இருதிறத்தாரும் புறப்பட்டுத்தங்கு மிடத்தில் நற்சொல் கேட்டு நிற்றல் பாக்கத்து விரிச்சி எனப் படும். அதற்கு உதாரணம்:—

"திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
நரைமுதியோன் இன்றுரைத்த நற்சொல்-
[நிரையன்றி
எல்லைநீர் வையம் இறையோர்க் களிக்குமால்
வல்லைநீர் செல்மின் வழி.

என்பதாம்,

ஒற்றர் உணராமல் நிரைகவர்வார்ச் செல்லுதலும் நிரையிருக்குமிடத்தைப் பற்றி துப்பறிந்து கூறுத லும், அப்படித் துப்பு சொன்னவர்களுக்குச் சிறப்புச் செய்துவிட்டு நிரைப்பக்கம் நிரைகவர்வார் தங்கு தலும், நிரைகாவலரைக் கொல்லுதலும், நிரையகப் படுத்தலும், தொடர்ந்தாரோடு சண்டைசெய்து வெல் லுதலும், நிரையை யின்புறுத்திக் கொண்டுபோதலும், நிரைகொண்டோரை வரவேற்றலும், நிரையைப் பாதுகாப்பில் நிறுத்துதலும், வேந்தன் ஏவலால் நிரை யைப் பகுத்துக்கொடுத்தலும், நிரைகொண்டார் மகிழ்ந்து விளையாடுதலும், நிரையை இரவலர்க்கு வரையாது கொடுத்தலும், பிறதுறைகளாம். கொற்ற வை பரவுதலும், நற்சொல் விரும்பாது வீரத்தோடு செல்லுதலும், நற்சொல் கூறுவார்க்கு நெல்லும் பூவும் கொடுத்தலும் ஆகிய துறைகள் பலவாக விரி யும். மறவர் துடிகொட்டிச் செல்லுதல், துடிநிலை எனப்படும். கொற்றவைப் பரவுதல், கொற்றவை நிலை எனப்படும். இவ்விரண்டும் வெட்சித்திணையைச் சேர்ந்ததாம்.

புறத்திணைக்குப் பொதுவாகிய துறைகள் இருபத்தொரு வகைப்படும். அகத்திணையுள் வருமு தெய்வத்திற்குச் செய்யும் கடன்களைச் சிறப்பாகச் செய்து முடித்து வலிவாங்கிய வேலன் ஆவேசம்பூண்டு காந்தள் பூவைச் சூடி ஆடுகின்ற காந்தள் துறையும், மூவேந்தர்க்குரிய பனைமாலை, வேப்பமாலை, ஆத்திமாலை என்பவற்றுள், வெற்றிகொண்ட படையினர், தமக்குரிய பூவைச்சூடி ஆடுதலும், பெண்பாலார் மிகுதியும் ஆடும் வள்ளிக்கூத்தும், வீரரால் புகழப்பெற்று, போர்க்களத்தை விட்டு ஓடாமல் துணிவொடு நின்ற குழந்தைப் பருவத்தானை, புகழ்ந்து சுட்டிய கழல்நிலைக் கூத்தும், வேந்தனுக்கு வெற்றிகருதி உன்னமரம் தளிர்க்க என்றுபடைகள் பரவும் உன்ன நிலையும், மாயோன் காத்தற் சிறப்பைப் புகழும், பூவை நிலையும், குறுநிலமன்னர் வேந்தரை வென்று ஓட்டுதலும், அவர்கள் நிரைமீட்டுத் தருதலும், வேந்தனுக்குரிய சிறப்புக்களைப் பிறர்க்கு ஏற்றிக்கூறுதலும், படையாளர் வஞ்சினங்கூறுதலும், எதிர்க்கும் சேனையை ஒருவனே நேராக எதிர்த்தல், எதிர்த்தோரைக் கொன்று தானும் மீளுதல் என்னும் இருவகைப்பட்ட பிள்ளை நிலையும், வாளினால் எதிர்த்து வென்றவனை, நாட்டினர் கொண்டாடும் பிள்ளையாட்டும், நிரைமீட்டோர் வெற்றியைக் கொண்டாடும் காந்தையும், வீரனுக்கு வழிபாடு செய்யும் பொருட்டு, கல்மிகுந்த காட்டிற்சென்று ஆராய்ந்து கற்காண்டலும், கற்கொண்டு வருதலும், கல்லினை நீரிலிட்டு சுத்திசெய்தலும், அதில்வீரனது பெயரும் பெருமையும், எழுதி நீராட்டுதலும், கல்லினை நடுதலும், சிறப்புக்களைப்

படைத்தலும், கல்லில் நிற்கும் வீரனை வாழ்த்து தலும், ஆகிய துறைகள் இவையென அறிக.

முல்லைக்குப் புறம் வஞ்சியாகும். காட்டில் போர் நடத்தலும், கார்காலமும், அந்நிலக் கருப்பொருளும், தலைவன் பாசறைக் கண் தலைவியைப் பிரிந்திருத்த லும், தலைவி பிரிந்து மனைவயினிருத்தலும், ஒப்பச் செல்லுதலின் முல்லைத் திணைக்குப் புறத்திணையா யுள்ளது வஞ்சி ஆகும். மண் வேட்கையாலே ஒரு அரசனை மற்றோரரசன் அச்சம் விளைக்கும்படி மேற் சென்று கொற்றங் கொள்வதைக் குறித்த திணை வஞ்சி யெனப்படும்.

செல்லுகின்ற படைகளின் ஆரவாரம் பகைவ ரிடத்தே தீப்பரவும்படி நெருப்பிடுதல், பிறவேந்தர் துணையாக எய்திய பெருமையும், படையாளர்க்குப் படைக்கலங் கொடுத்தலும், தந்திரமாகச் சென்று காவலரைக் கொல்லுதலும், வேந்தனுற்பரிசு பெற் றோர், கூறும் புகழுரையும், பகைவேந்தரை மதியாது செலுத்திய பேராண்மைத்திறனும், விரைவாகவரும் வெள்ளத் திணைக் கல்லணை தாங்கினாற்போலஒருவீரன், தன்மேல்வரும் பெரும்படையைத் தானே தடுத்த பெருமையும், அரசன் போரேற்றுக்கொண்டபின் படையாளரோடு உடன் திரட்டிப் பெருஞ் சோறு கொடுத்தலாகிய பெருஞ்சோற்று நிலையும், வென்று திறைகொண்டார் சிறப்பும், தோற்றோர் குறைவும், தோற்றான் நாடழிதற்கிரங்கிக்கூறும் கொற்றவள் ளையும், தங்கள் ஆயுதங்களாற்றடுத்துக் கொண்டு சிதை வுற்றவர்களைப் பாதுகாத்துத் தழுவிக்கொள் ளும் தழிஞ்சியும் ஆகிய துறைகள் பதின்மூன்றும்

வஞ்சிக்குரியன. புண்பட்டோரை அரசரும் பிறரும் புகழுதல், முதுமொழிவஞ்சி யெனப்படும்.

உழிஞை என்பது மருதத் திணைக்குப் புறமாகும். மருத நிலத்திலுள்ள கோட்டையை முற்றுகை யிட்ட போது, கோட்டையுள்ளிருப்போன் வெளிநின்று பொரும் வேந்தனுக்குக் கதவைத் திறவாமலிருப்பதும் மருதம்போற் பொழுதுடைமை யானும், மருதத் திற்குப் புறம் உழிஞை ஆகும். முக்கியமான கோட்டையைப் பகைவேந்தன் முற்றுகையிடுதலும், கோட்டையை உடையான் அதனைக் காத்தலும் உழிஞை யெனப்படும். முற்றியவேந்தன் கூறுகிய துறை நான்கும், அகத்தோன் கூறுகிய துறை நான்குமாக இத்திணை எட்டுத் துறையினையுடையது. பகைவர் நாட்டை வேண்டியோர்க்குக் கொடுத்தலாகிய கொற்றமும், நினைத்தலும்முடிக்கவல்ல வேந்தன், சீரியபடைத் தலைவர் முதலியோரைப் பாராட்டுதலும், கோட்டையை அழிக்கச் சொல்லுதலும், உள்ளிருப்போன் புறத்தாக்கினைத் தடுக்கும் தோற்கேடகம், கிடுகு, முதலியவற்றின் பெருக்கமும், அகத்தோன் செல்வ வளமும், முற்றுகையிட்ட புறத்தோனை, அகத்தோன் பொருது வருத்திய பக்கமும், அகத்தோன் அரணழிந்தவழி புறத்துப் போர்செய்யுஞ் சிறுமையும், பகைவரை மதியாதிருத்தற்கேதுவாகிய புறத்தரண் சிறப்பும், ஆகிய துறைஎட்டும் கண்டுகொள்க. மேற் கூறியவற்றை வகையாகக் கொண்டு துறை பன்னிரண்டு வேறு கூறுதலுண்டு.

குடிகாத்தற்கு எடுத்த குடைநாட் கொள்ளுதலும், எதிரிகேடுகருதிய வாள்நாட் கொள்ளுதலும்,

அகழின்மீது இடும்பலகையோடு சேர்த்துள்ள ஏணிமிசை நின்று இருதிறத்தாரும் போர் புரிதலும், புறத்தோன் புறமதிலைக் கைக்கொண்டு உண்மதிலை வளைத்த போர்முதிர்ச்சியும், அகத்தோன் நொச்சிசூடி மதில்காத்தலும், புறத்தோன் உள்மதிலை விரும்பிக் கொண்ட புது வெற்றியும், அல்லது அகத்தோன் இடத்தை மீட்டுக்கொண்ட புது வெற்றியும, நீர்ப்பாசி போல் அகழின் இருபுறமும் நின்று விடாதுபுரியும் பாசியு நிலையும், மதிலைக்கடந்து ஊரினுட் போரை விரும்பிய பாசிமறனும், இருவகை மதிலுங்கடந்து கோவில், மதில் முதலியவற்றினின்று புரியும் போரும், பட்டவேந்தன் பெயராலே முடிபுனைந்து நீராடுமங்கலமும், (மண்ணுமங்கலம்) வென்றவாளினைக் கொற்றவைமேல் நிறுத்தி நீராட்டும் வாண்மங்கலமும், படைகளுக்குச் சிறப்புச் செய்வான் படைகளை ஒருங்கு தொகுக்குந் தொகைநிலையும், ஆகிய பன்னிரண்டும் பொதுதுறைகள் என்பர். இவை உழிஞையில் இருதிறத்தார்க்கும் பொது ஆகும்.

தும்பையென்பது, நெய்தல் திணைக்குப் புறனாகவுள்ளது. வீரவெற்றியைக் கருதிப்படையெடுத்து வந்த வேந்தனைத் தாக்கி, மேற்சென்றழிக்கும் சிறப்புடையது **தும்பைத்திணையாம்.** போர் செய்தற்குறிய இடம் நெய்தலாகிய களரும் மணற் பாங்குமாம். அழிவுகண்டோர் இரங்குவதற்கேதுவாதலின், தும்பை மருதத்தோ டொத்த உரிப்பொருளுடையதாதல் காண்க.

ஒரு பெருவீரனை நெருங்குதற்கஞ்சி அவன்மீது விட்ட அம்பாலும்; வேலாலும் துணிபட்ட அவன்

உடம்பு, அல்லது தலை நிலத்தில் வீழ்ந்து கிடவாது ஆடும் அருநிலையுடையது தும்பைத்திணையாம். காலாட் படைநிலை, யானைநிலை, குதிரைநிலை, என்ற வலியிலாரஞ்சும் மூவகைப்படைச்சிறப்பும், முன்னணியிற்சென்று வேற்போர் செய்யும் வேந்தனை எதிர்த்த எதிரியை, வேந்தன் றுணைவன் உடன்சென்று தாக்கிய தார்நிலையும், தானைத் தலைவர் தம்முட்போர் புரிந்து விழும் தபுதிப்பக்கமும், தன்படையைத் தாக்கிய எதிரியைத் தான் எதிர்த்தோட்டித் தன் படையைப் பாதுகாக்கும் எருமைநிலையும், கைப்படைநீக்கி உடம்பின் வலியாற் போர்புரியும் ஏமமும், பகைவேந்தன் ஏறிய களிற்றினையும், அவனையும் பொருது தாக்கினோர் சிறப்பும், அப்போரில் வீழ்ந்திறந்த வேந்தனை வென்றவேந்தனது படையாளர் சூழ்ந்து நின்றாடும் அமலையும், இருதிறத்தாருள் பலரும் பட்டொழிந்த தொகை நிலையும், போரில் வேந்தனிறந்ததுகண்டு, சினங்கொண்ட பெரும் படைத்தலைவன் நெருங்கிப் போர்புரிந்த நற்புகழ்நிலையும், அவனை எதிரி வாளாற் றடிந்த நூழிலும், ஆகிய பன்னிரண்டு துறைகளை உடையது தும்பைத்திணை என்றவாறு.

வாகை பாலையின் புறத்திணையாகும். தனக்கென நிலமில்லாத பாலைபோல, புறத்திணை நான்கும் இடமாகவுள்ளது வாகைத்திணையாம். பிரிவு - பாலைத் திணைக்குரியது போல, இன்பங் கருதாது ஆள்வினையைச் சிறப்பாக நடத்துமியல்பு வாகைக்குரியதாகும். தத்தமக்குரிய தொழிலினும், ஒழுக்கத்தினும் பலபகுதிப்பட்ட சிறப்பமைதல், வாகைத்திணைக்குரிய பொருளாகும்.

அறுசமயத்திற்குரிய அறுவகைப்பட்ட பார்ப்பனர் பகுதியும், ஐவகை வழக்கமுடைய அரசர் பகுதியும், (ஐவகைக் கடமை பெரிய புராணத்துட் கூறப்பட்டது.) படைக்கலப் பயிற்சி, இறைகோடல், நீதி செலுத்தல், அழிகுடியோம்புதல், தக்கார் போற்றல் என்னும் ஐவகைக் கடமை கூறுவாருமுண்டு. உழவு, வணிகம், பசுக்காத்தல், அரசர் துணையான் நீதி புரிதல், அமைச்சராயிருத்தல், அறுவகைத் தொழிலுடைய மன்னர் பின்னோராகிய வேளாளர் பகுதியும், காமம் வெகுளி மயக்கமென்னும் குற்றமற்ற தவத்தை முக்காலத்திலும் முறைதவறாதியற்றும் அறிவர்ப் பகுதியும், எண்வகை யோகம்புரியும் தவத்தினர்ப் பகுதியும், தகுதியறிந்து கல்விப்போர் புரியும் அளவை நூலார்பக்கமும், மேற்கூறிய அறுவகையோரைச் சூழ்ந்து பயிற்சி நிலைநிற்கும் பகுதியும் என ஏழு தொகுதியாக வாகைத்திணையினர் வகுக்கப்படுவர்.

கூதிர்காலத்தும், வேனிற்காலத்தும் பாசறையில் போர்த்தொழிலையே கருதிய நிலையும், போர்க்கள வேள்விசெய்து பரிசிலர்க்கு எஞ்சிய யானை, குதிரை, முதலியன வழங்கலும், வென்றவேந்தன் போர்த் தலைவரோடு தேர்த்தட்டில் நின்று கைகோத்தாடுங் குரவையும், கொற்றவை கூளிச்சுற்றம் ஆடுங்குரவையும், பெரும் பகைவரை, நன்கு மதியாது ஒருவனை எதிர்க்கும் ஆற்றலும், உயிர்வாழ்க்கையைப் பொருட்படுத்தாத ஆண்மையும், பகைவர் நாணச் சூளுரைத்த படிசெய்து உயிரை அக்கினிக் கடவுளுக்கு அவியாகக் கொடுக்குஞ் சிறப்பும, பகைவரும், சுற்றமும், நச்சிய உதவியை நல்கிக்கொள்ளும் நட்பும், எருது, எருமை, யானை, குதிரை முதலியவற்றை ஆளுஞ் சான்றோர்

திறனும், அரசன் அரசவுரிமையைத் துறந்த பகுதியும், முன்னோர் நற்கருத்துப் போற்றுதல், கல்வி, நற்பழக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலை, பொறாமையின்மை, அவாவின்மை என்பதிற் சிறந்து, அவையில் முன்னிருக்கும் சிறப்பும், ஐம்பொறியடக்கம் தவவொழுக்கப் படிமையும், இடையறாத நிறைபுகழ்க் கொடையாலும் தமக்குக் குற்றஞ் செய்தோரைப் பொறுக்கும் பாதுகாப்பு நிலையும், பொருளின் வளமும், பிறவுயிர்பால்வைத்த அருளால் தன்னைப் பேணாத் துறவுள்ளமும், அதனால் பற்றறுதலாகிய நிலையும் ஆகிய பதினெட்டுத் துறைகளும் வாகைத் திணைக் குரியனவே.

காஞ்சி பெருந்திணைக்குப் புறனாகும். பொருந்தாக்காமம் போல உலகொடு பொருந்தாமையைப் பொருளாகவுடைய அதற்குக் காரணம் பாடாண் பகுதி கைக்கிளைப் புறனாகும். ஒரு பாற்காமம்போல ஒரு சாராரைப் புகழ்தல் பாடாண் பகுதிக் கருத்தாதல் காண்க.

தொல்காப்பியம் காஞ்சித் திணையின் இயல்பைப்

"பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும்
நில்லாவுலகம் புல்லிய நெறித்தே"

என்பது காண்க.

இணையற்ற வீட்டின்பம் ஏதுவாக பலவழியினும் நிலையாமையுடையஉலகத்தைப் பொருந்திய நெறி காஞ்சித் திணை யெனப்படும். தடுக்கமுடியாத யமன் வருவானென்று சாற்றுவது பெருங்காஞ்சி யெனப்படும்.

"கணிச்சிக் கூரம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை இரங்குவீர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்" என்பது

அதற்குதாரணம். (புறம் 195)

இளமை கழிந்த முதியோர், இளமை கழியா தார்க்கு இளமை நிலையாமை கூறுவது முதுகாஞ்சி யெனப்படும்.

"நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய எமக்கே" (புறம் 243)

என்றவிடத்து அது காண்க.

போரிற்பட்ட புண்ணைக் கிழித்துக்கொண்டு, வாழ்க்கை நிலையாமை கருதி உயிர்நீத்துப் புகழ் கொள்வது மறக்காஞ்சி யெனப்படும்.

இரவில் போரிற் புண்பட்டோனை அமர்க்களத் திற் காப்பாரின்மையின் பேய்காத்தது, பேய்க்காஞ்சி யெனப்படும். சுற்றத்தாரின்மை கூறலிற் செல்வ நிலையாமையாயிற்று.

ஒருவன் இறந்தபோது, அவன் இத்தன்மைய னென்று கூறிப் பிறர் கூறுதல் மன்னைக்காஞ்சி யெனப்படும்.

"பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பினனே
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே"

இதனைக் கையறுநிலை யென்றுங் கூறுப.

இன்னது பொய்த்தால் இன்னவாறுவேனெனக் கூறுதல் வஞ்சினக் காஞ்சி. (புறம் 73-ல்) அதுகாண்க.

போரில் புண்பட்டோனது உடம்பைப் பேய்கள் தொடாதபடி, மனைவிகாத்துத் தீண்டாதிருத்தல் தொடாக் காஞ்சியாம். இறந்த கணவனுக்கு ஏற்பட்ட வேல்வடுவைப் பார்த்து மனைவி அஞ்சியது, ஆஞ்சிக் காஞ்சி யெனப்படும். இவைகள் யாக்கை நிலையாமை குறிப்பன. வலிந்து பெண்கோடலை மறுத்த முதுகுடிமக்கள் மகள் கொடுக்க அஞ்சியது, மகட்பாற் காஞ்சி யெனப்படும். மனைவி இறந்த தலைவனைத் தன்மீது சார்த்திக்கொண்டு இறந்தமுடிவுநிலை, ஆகக் காஞ்சிபத்து வகைப்படுமென்பர். மேலும் பெரும் புகழோடிறந்தவனைச் சுற்றிய சுற்றம் அழுது கூக்குரலிடுவதும், மனைவியர் துயரைக் கண்டோர் ஆற்றாமையும், மனைவியுடனிருத்தலைக் கண்டோர் வருந்திக் கூறும் மூதானந்தமும், கணவனை இழந்த மனைவி தன்றனிநிலை யுணர்த்தும் முதுபாலையும். ஆயத்தாரும் பரிசில் பெறும் விறலியரும் தனிப்படருழந்த கையறுநிலையும், மனைவியைக் கணவனிழந்த தபுதார நிலையும், காதலனையிழந்த மனைவிதவம் புரியுந்தாபத நிலையும, கணவனையிழந்த மனைவி தான் எரிபுகுவதைத் தடுப்பாரை நோக்கிக்கூறும் புறங்காட்டு நிலையும், மகனையிழந்ததாய் சாவத்துணிந்து மகனைக்கூடும் நிலை

யும், பிறந்தோரெல்லாம் இறக்க நிலையாகவுள்ள புறங் காட்டை வாழ்த்துதலும் ஆகிய பத்தும் வேறாக, ஆண்பாற்காஞ்சி, பெண்பாற்காஞ்சியென இருவகைப் படுதலுமுடையது காஞ்சியென்பர்.

பாடாண்றிணை எட்டுவகையுடையதென்ப. பரி சில் வேண்டுபவன் புகழ்தல் இதன்கருத்து. இருவகை வெட்சி, பொதுவியல், வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி எழுவகையும், பொருட் பகுதி பலவுங் கலந்து வரும் பாடாண்டிணை எட்டுவகைப் பொருளு டையது.

தேவர்கள் வந்துமுடியும் அறுமுறை வாழ்த்து (உதாரணம் வாழ்க அந்தணர்) விரும்பிய பொருளைத் தேவர்பால் வேண்டிக்கூறும் பகுதி, என்பதைப் பாடாண்டிணை பொருந்தும், ஒரு தலைவன் வாழ்த்தலை யும் புகழ் கலையும் விரும்பியவிடத்தும், அறம் பொருள் இன்பச்சார்பாக முன்னோர் கருத்துரைக்குமிடத்தும், செந்துறை எனப்படும். பாடாண்டிணை, வண்ணப்பாவி னத்தாலமைக்கப்படலாம். காமப் பகுதியைக் கடவு ளரிடத்திலும், பிறர்பாலும் நீக்கப்படாது. இறைவன் உமையாளை ஊடலுணர்த்துவதாகக் கூறல் அதற்கோ ருதாரணம்.

"நல்கெனின் நாமிசையாள் நோமென்னுஞ் [சேவடிமேல்
ஒல்கெனின் உச்சியாள் நோமென்னும்-மல்கிருள்
ஆடல் அமர்ந்தாற்கரிதால் உமையாளை
ஊடலை உணர்த்து வதோரா று" (பு. வெ. மாலை)

முத்தொள்ளாயிரச் செய்யுட்களுள் இதற்குதாரணம் காணப்படும். குழவியினிடம் அன்புவைத்துப் பாடுவதும் உரியதாகும். பிள்ளைத்தமிழ்ப் பகுதிகள் இதன்பாற்படும். ஊர் பிறப்பு முதலியன கூறிப் புகழ்தலுமுண்டு. உலா அதன் பாற்படும்.

செய்யுள் வழக்கொடு பொருந்திய முறையெல்லாம் கொள்ளப்படும். உலக வழக்கொடு பொருந்துவனவுங் கொள்க. சுட்டிப் பெயர்கூறும் பக்கம் பாடாண்டிணைக்குரியது. ஒருபெயரைச் சார்ந்து கூறப்படுவனவுங் கொள்க.

கொடிநிலையாகிய கதிரவன் மண்டிலம்பற்றியதை அழிக்குங் கந்தழியாகிய நெருப்பு மண்டிலம், அமுதம் வழங்குவதால் வள்ளியாய தண் கதிர்மண்டிலம். என்ற குற்றமற்ற சிறப்பையுடைய பலவற்றிற்குக் காரணமாதலின் முதற்றன்மையுடைய மூன்றும் கடவுள் வாழ்த்தொடு பொருந்துமிடத்தேவரும். கொற்றவள்ளை மக்கட்கே கூறப்படுமென்பர். கொடுப்போரைப் புகழ்ந்து கொடாதாரை இகழ்தலும், தலைவனையடுத்து அவன் செய்தியையும், அவன் குலத்தோர் செய்தியையும், அவன் மேலேற்றிப்பாடுதலும், இயன்மொழி வாழ்த்துப்பாடுதலும், நெடுந்தூரம் வந்த வருத்தம் நீங்க என் வரவினைத் தலைவனுக்குக்கூறெனச் சான்றோர் வாயில் காவலர்க்குக் கூறும் கடைக் கண்ணிலையும், அரசரும் அவர்போல்வாரும் நெடுந்தூரம் தூங்காதபோது அவர் கண்துயில் கொள்ளுதலைக் கருதி அமைச்சரும், மருத்துவர் முதலியோரும் கூறும் கண்படை நிலையும், கபிலைப்பசுவை ஈயக்

கருதிய கொடைநிலை கூறுதலுப், வேல்போல ஓங்குகவென வாழ்த்தலும், விளங்குநிலையும், வாயுறை வாழ்த்தும், செவியுறை வாழ்த்தும், பாட்டுடைத் தலைவன் முன்னிலையாகக் கடவுளைப் படர்க்கையின், வாழ்த்தும் புறநிலை வாழ்த்தும், கைக்கிளை வகையில் வாழ்த்தும் பாடாண் பகுதிக்குரிய வென்ப.

பாசறைக்கண் இருந்த அரசர்க்குக் கூறும் துயிலெடை நிலையும், ஆடன் மாந்தரும், பாடற் பாணரும், சிலம்பு முதலிய கருவிப் பொருநரும், ஆடுவாராகிய விறலியரும், தாங்கள் ஒருதலைவன்பாற், பெற்ற பெருஞ் செல்வத்தைப் பெறுதார்க்கு அறிவுறுத்திப் பெறுதற்கு வழியீதெனக்கூறும் ஆற்றுப்படைப் பகுதியும், வீட்டுநெறி செலுத்தும் ஆற்றுப்படைப் பக்கமும், அரசர் சிறைசெய்தல், செருச்செய்தல், கொலைபுரிதல் முதலியவற்றை நீக்கி பிறந்த நாளிற் செய்யும் பெருமங்கலமும், எவ்வுயிர்க்கும் அருள்புரிவதற்கு வெள்ளையாடை அணியும் வெள்ளணியும், அரசர் முடி புனைந்து நீராட்டும் மண்ணுமங்கலமும் மிகுதியாகப் புகழப்படும். அரசனது குடை நிழற்பாராட்டும் (அது உலகர்க்கு நிகழ்ந்தது காப்பது) பேய் முதலியோர் வாழ்த்தும் வாண் மங்கலமும், பகைவர் நிலத்தையழித்து நீராடுமங்கலமும் (கழுதையேரால் உழுது வெள்வரகும் கொள்ளும் விதைத்கல்.) பரிசில் தரநீட்டித்தோனைப் பரிசில் கடாவும் நிலையும் கடைவாயிலின் நின்று கருதிய கரும முடிக்கும் கடைகூட்டுநிலையும்,பரிசில் பெற்றுப் புகழ்ந்து விடைபெறுதலும், தலைவனுக்கு நாள்,

கோள், முதலியவற்றால் கெடுதியஞ்சிவாராமற்றடுக்கும்பாதுகாப்புரை பகர்தலும்,(ஓம்படைநிலை) மூன்று காலத்திலும் நிகழும் உலகவழக்கின் சார்பாகக் கூறும் உரைகள் பலவும் பாடாண்டிணையிற் பொருந்தி வருவனவே.

புறத்திணையியல் முற்றும்

---

பழந்தமிழர் நாகரிகம்

அல்லது

தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து முற்றிற்று.

## பிழையும் திருத்தமும்

## (திருக்கோவையார் துறை விளக்கம்.)

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 13 | அது, | அவை, |
| 8 | 6 | குறிப்பானுணர்ந்தைத | குறிப்பானுணர்ந்தை |
| 11 | 4 | குறிப்பாகக் | குறிப்பாக |
| 16 | 22 | துரைத்த்ல், | துரைத்தல், |
| 20 | 21 | பிரிதல | பிரிதல் |
| 22 | 4 | நிற்றல், | நிற்றல், ஐயந்தீரக்கூறல் |
| 23 | 24 | பொருட்டும் | பொருட்டுப் |
| 27 | 3 | ஆற்றிற் | ஆற்றில் |
| ,, | 22 | பாகனொடு | பாணனொடு |
| 28 | 5 | பரத்தமையைக் | பரத்தையைக் |

## பிழையும் திருத்தமும்.

## (பொருள்திக்ரகக் கருத்து.)

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 20 | விளங்கும் | விளங்கும். |
| 5 | 3 | புகழுதலியல்பே. | புகலுதலியல்பே. |
| ,, | 24 | உவகை, | உவமை. |
| 9 | 25 | பர் | பார் |
| ,, | 27 | குறிக்குமென்பர். | குறிக்குமென்றார். |
| 13 | 5 | விதந்தோதினர், | விதந்தோதினர். |
| 15 | 7 | பொருளுந் | பொழுதுந் |
| 17 | 22 | நேரம் | நேரம். |
| 18 | 6 | மாகும், | மாகும். |
| 18 | 14 | நிகழ்வது | நிகழ்வது. |
| 19 | 3 | இருத்தலே, | இருத்தலே, ஆசிரியர் |
| ,, | 4 | கூறாது, | கூறிற்றிலர். |
| ,, | 20 | விளையாது | விளையாது. |
| ,, | 28 | முண்டு | முண்டு. |
| 20 | 10 | பிரிதோரொழுக்கம் | பிறிதோரொழுக்கம் |
| 21 | 14 | காளியே | காளியே. |
| 24 | 20 | நெருப்பினை | நெருப்பினை. |
| ,, | 22 | வரிசை, | வரிசை. |
| 26 | 5 | நெல்லே | நெல்லே. |
| ,, | 14 | திமிக் | திமிசு |
| ,, | 21 | முண்டாவனே | முண்டாவன. |
| 27 | 8 | பொருக்கித் | பொறுக்கித் |
| 28 | 3 | பறைகள் | பறைகள். |
| ,, | 18 | என்பது. | என்பன. |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 28 | 22 | நிறைகோட் | நிரைகோட் |
| ,, | 23 | எரிப்பறை | எறிபறை |
| ,, | ,, | சூரை | சூறை |
| 29 | 17 | பொதுப்பெயர், | பொதுப்பெயர். |
| ,, | 20 | கடைச் | கடை |
| 30 | 10 | அவவவ் | அவ்வவ் |
| 32 | 11 | புள்ளின் | புள், விலங்கு இவற்றின் |
| 35 | 10 | முதற்கண்ணே | முதற்கண்ணெ |
| 36 | 30 | பாட்டுக்கு | பாட்டுள் |
| 37 | 10 | மனைவியைத்தேடி | தலைவியைத் தேடிப்போய் |
| ,, | 29 | செய்தர்குரியர். | செய்தற்குரியள். |
| 38 | 24 | ராயமடோரை | ராயமொடோரை |
| 39 | 3 | ஞிரங்குழி | ஞிரங்குதி |
| ,, | ,, | நின்புகழ் | நின்மகள் |
| 40 | 4 | தூர்நணியில்லை | தூர்நணித்தில்லை |
| ,, | 7 | மெல்லியண் | மெல்லியன் |
| ,, | 18 | சார்பும் | சார்பையும் |
| 41 | 14 | வித்தது | த்தது |
| 42 | 28 | ஆவளை | அவளை |
| 44 | 22 | மாகும். | மாகும். |
| ,, | 23 | பொருளாவது. | பொருளாவது, |
| 45 | 15 | பெயர்க்குவ | பெயர்க்குவெ |
| ,, | 29 | காண்க. | ஆதல் காண்க. |
| 46 | 21 | நீயுறும் | நீகூறும் |
| 47 | 11 | கை நில்லாதே'' | கைந்நில்லாதே'' |
| 48 | 4 | முள்கை | முன்கை |
| ,, | 10 | முறுவலென் ஞ | முறுவலெம் மா |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 51 | 8 | தான்சென்றனவே | தான்சென்றனனே |
| 52 | 5 | கறுககுந | கறுக்குந |
| ,, | 24 | கூறுதலுண்டு | கூறுதலுண்டு. |
| 55 | 24 | யாங்கன்'' | யாங்கண்'' |
| 58 | 5 | கந்தருவர்க்கு | களவு கந்தருவர்க்குக் |
| ,, | 6 | கற்பின்றிக்களவு | அகவொழுக்கத்தார்க்குக் கற்பின்றிக்களவு |
| ,, | 10 | ஒழுக்கங் | களவு ஒழுக்கங் |
| 59 | 27 | புண்ணுயம் | புண்ணியம் |
| 60 | 27 | காதிற்செவிலியர் | காதற்செவிலியர் |
| ,, | 29 | மெல்லியக் | மெல்லியற் |
| 62 | 3 | கண் அச்சம் | கண், அச்சம். |
| ,, | 4 | மாபு. | மரபு. |
| 63 | 12 | இவைவனை | இறைவனே |
| 64 | 13 | காட்டாமை, | காட்டாமை. |
| 65 | 19 | லவனே | வவனே |
| 69 | 18 | ணிற்றுறங் | நிற்றுறங் |
| 70 | 30 | உதாரணம். | உதாரணம்:— |
| 71 | 29 | ,, | ,, |
| 72 | 9 | ,, | ,, |
| 78 | 3 | எதிர்ப்படாமை, | எதிர்ப்படாமை. |
| ,, | 20 | என்றுது காண்க. | என்றது காண்க. |
| 80 | 19 | [றேணு | [றேனுல் |
| 83 | 19 | தோழி அதனை | தோழி |
| 84 | 21 | ஆற்று-போது.வெறி | ——— ———-வெறி |
| 89 | 6 | புலனும் | புலனும். |
| ,, | 11 | அதாவது | என்பது |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 89 | 12 | கூறும் பகுதி. | கூறும் பகுதி. |
| ,, | 13 | பொருந்தாது | பொருந்தாத |
| 92 | 22 | த்தலுமுண்டு | த்தலுமுண்டு. |
| 92 | 27 | நாளுமல்லது | நாளுமல்லாத |
| 94 | 19 | கொடைக்குறியோர் | கொடைக்குரியோர் |
| 96 | 22 | ஒருமுறை | ஒழுகுமுறை |
| 101 | 27 | விடத்து, | விடத்து நீர் நுரை |
| 103 | 5 | எவனே | எவனே |
| ,, | 8 | வினவியதுதற்கு | வினவியதற்கு |
| 105 | 23 | ரன்னவிவ | ரன்னவிவள் |
| 107 | 13 | காமக்கிழத்தியர், | காமக்கிழத்தியர் |
| ,, | 19 | அவர் கூத்தும் | கூத்தும் |
| ,, | 27 | தலைவனை | அவர் தலைவனை |
| 108 | 17 | மூர்த்தினள் | மூத்தினள் |
| 110 | 9 | அறிவர்க்குறியது. | அறிவர்க்குரியது. |
| ,, | 19 | கூறதலும் | கூறுதலும் |
| 114 | 15 | வாழியெ | வாழிய |
| 115 | 17 | குரியர். | குரியர். |
| 118 | 23 | தோரும் | தோர் |
| 120 | 14 | பயனாகவுடையன. | பயனாகவுடையன, |
| ,, | 16 | வாழ்தது | வாழ்த்து |
| ,, | 26 | தாய்க் | னவாய்க் |
| 121 | 5 | படுதல்; | படுதல் |
| 122 | 17 | பார்வையே, | பார்வையால் நகைக் குறிப்புணர்த்துவள், |
| 128 | 18 | அவை | அவை. |
| 131 | 2 | இவ்வேறுபாடு | இவ்வேறுபாடு குறிக்கும் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 131 | 3 | சொற்களின் | சொற்களும் |
| ,, | 27 | பொருளின் | பொருளினும் |
| 134 | 13 | அதுவே | அதுவே. |
| ,, | 23 | ஒத்து, | ஓத்து, |
| ,, | 25 | பற்றி சொல்லிவரும் | பற்றிய கருத்து |
| ,, | 27 | படுவதாம் | படுவதாம். |
| 142 | 10 | முள | முள. |
| 143 | 10 | பிணை | பிணை |
| ,, | 28 | மூக்கோல், | முக்கோல். |
| 144 | 5 | மணை | மணை என்பன |
| ,, | 6 | தாகும். | னவாகும். |
| ,, | 10 | செய்து | செய்யுள் |
| 147 | 29 | சேர்ந்ததாம். | சேர்ந்தனவாம். |
| 148 | 15 | புகழும், | புகழும் |
| 150 | 16 | நினைத்தலும் | நினைத்ததை |
| ,, | 27 | கூறுதலுண்டு. | கூறுதலுமுண்டு. |
| 151 | 10 | பாசியு | பாசி |
| ,, | 24 | குறிய | குரிய |
| 153 | 2 | பட்ட் | பட்ட |
| 154 | 7 | தவ | ஆகியதவ |
| ,, | 8 | கொடையானும் | கொடையும் |
| ,, | 16 | பொருளாகவுடைய | பொருளாகவுடைமை |
| ,, | ,, | கிரணம் | காரணம். |
| 156 | 29 | சாவததுணிந்து | சாவத்துணிந்து |
| 157 | 2 | இறக்க | இறக்க, |
| ,, | 12 | வந்துமுடியும் | ஈறுகமுடியும் |
| ,, | 14 | என்பதைப் | என்பவற்றைப் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 157 | 15 | பொருந்தும், | பொருந்தும். |
| ,, | 27 | ஊடலை | ஊடல் |
| 158 | 5 | ஊர் பிறப்பு | ஊர், பிறப்பு |
| ,, | 12 | மண்டிலம் | மண்டிலம், |
| ,, | 13 | மண்டிலம். | மண்டிலம், |
| ,, | 14 | கதிர் மண்டிலம். | கதிர் மண்டிலம், |
| 159 | 3 | விளங்கு, | விளக்கு, |
| ,, | 11 | ஒருதலைவன்பாற், | ஒருதலைவன்பாற் |
| ,, | 20 | புகழப்படும். | புகழப்படும் |

## எமது வெளியீடுகள்.

ரூ. அ.

1. இன்பவொழுக்கம் அல்லது
அகத்திணையியல் விளக்கம். 0—8

2. பழந்தமிழர் நாகரிகம் அல்லது
தொல்காப்பியப்
பொருளதிகாரக் கருத்து. 1—8

3. மொழிநூற் கொள்கையும்
தமிழ் மொழி அமைப்பும். 1—0

## வெளியிட இருக்கும் நூல்கள்.

1. தொல்காப்பியம் - சொல்லதிகாரம்.
கல்லாடர் உரை
(ஏனைய உரையாசிரியர் குறிப்புகளுடன்.)

2. தொல்காப்பியம்-பொருளதிகாரம்
இயல் விளக்கங்கள். (தனித்தனி)

3. பொதுமறைப் பாயிர விளக்கம்.
(திருக்குறட் பாயிரம்)

**தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம்,**
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.